துணை ஆணையர் (கல்வி) அவர்களின் *25.05.2022* நாளிட்ட உத்தரவின் அடிப்படையில், மற்றொரு தொண்டு நிறுவனத்தின் வாயிலாக சென்னை தொடக்கப்பள்ளி, மஞ்சகொல்லை பள்ளியில் இரண்டு வகுப்பறைகளுக்கு மாண்டிசோரி உபகரணங்கள் வழங்கவும் மற்றும் பயிற்சி மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது மொத்தம் 32 சென்னை மழலையர் பள்ளிகளுக்கு மாண்டிசோரி உபகரணங்கள் வழங்கவும் மற்றும் பயிற்சி மேற்கொள்ளவும் இரண்டு தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது,

எனவே, மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 31 சென்னை மழலையர் பள்ளிகளுக்கு ஒரு தொண்டு நிறுவனத்தின் வாயிலாகவும், மஞ்சகொல்லை, சென்னை தொடக்கப்பள்ளியில் இரண்டு வகுப்பறைகளுக்கு மற்றொரு தொண்டு நிறுவனத்தின் வாயிலாகவும் மொத்தம் 32 சென்னை மழலையர் பள்ளிகளுக்கு மாண்டிசோரி பயிற்சி மேற்கொள்ளவும் மற்றும் உபகரணங்கள் நிறுவுவதற்கும், நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"16.06.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். *06/2022*, நாள்.*16.06.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."
>
> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.44/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

க.துநக.எண்.அ1/4034/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.175/2022 **பொருள் எண்.33**

பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - 2022 - 2023 ஆம் கல்வியாண்டில் சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள 29,132 மாணவ/மாணவியர்களுக்கு சென்னை மாநகராட்சி சார்பில் விலையில்லா திட்டத்தின் கீழ் அரசு நிறுவனமான கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்தில் சீருடைகள் (இரண்டு செட்) கொள்முதல் செய்ய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 9, 10, 11 (ம) 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் விலையில்லா திட்டத்தின் கீழ் சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது. 12.11.2020 நாளிட்ட ஆணையர் அவர்களின் அனுமதியின் படியும் மற்றும் சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண் : 924/2020, நாள்: 16.11.2020 ன்படி, 2020 – 2021 ஆம் கல்வியாண்டில் 9, 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் பயின்ற 20,978 மாணவ / மாணவியர்களுக்கு கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் சீருடைகள் கொள்முதல் செய்து மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்பட்டது.

தற்போது, 2022 – 2023ஆம் கல்வியாண்டில் சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவ / மாணவியர்களுக்கு சீருடைகள் கொள்முதல் செய்யப்பட உள்ளது.

மேற்குறிப்பிட்ட சீருடைகள் கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து 19.05.2022 நாளிட்ட விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

38 சென்னை உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் 9ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை

வ. எண்.	பள்ளியின் விவரம்	9ம் வகுப்பு (ம) 10ம் வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை	9ம் வகுப்பு (ம) 10ம் வகுப்பு மாணவியர்களின் எண்ணிக்கை	மொத்தம்
1	சென்னை உயர்நிலைப் பள்ளிகள்	2,874	1,924	**4,798**

32 சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை

வ. எண்.	பள்ளியின் விவரம்	மாணவர்களின் எண்ணிக்கை	மாணவியர்களின் எண்ணிக்கை	மொத்தம்
1	சென்னை மேல்நிலைப் பள்ளிகள் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை	11,798	**12,536**	**24,334**

70 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மொத்த மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை விவரங்கள்

வ. எண்.	பள்ளியின் விவரம்	மாணவர்களின் எண்ணிக்கை	மாணவியர்களின் எண்ணிக்கை	மொத்தம்
1	38 சென்னை உயர்நிலைப் பள்ளிகள்	2,874	1,924	**4,798**
2	32 சென்னை மேல்நிலைப் பள்ளிகள்	11,798	12,536	**24,334**
மொத்த மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கை		**14,672**	**14,460**	**29,132**

தமிழ்நாடு கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளி விவரங்கள்

வ. எண்.	மாணவ / மாணவியர்களின் விவரம்	பெறப்படும் சீருடைகளின் எண்ணிக்கை	ஒரு செட் சீருடையின் விலை (ரூ.)	மொத்த விலை விவரம் (ரூ.)
1	மாணவர்கள் - 14,672	29,344 (2 செட் வீதம்)	ரூ. 376.11	1,10,36,571.84
2	மாணவியர்கள் - 14,460	28,920 (2 செட் வீதம்)	ரூ. 610.32	1,76,50,454.40
மொத்தம்				**2,86,87,026.24**

மேற்குறிப்பிட்ட விவரங்களின் அடிப்படையில் சென்னை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 29,132 எண்ணிக்கையில் உள்ள மாணவ/மாணவியர்களுக்கு 2 செட் (29,132 x 2 செட்) 58,264 சீருடைகள் தமிழ்நாடு அரசு நிறுவனமான கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்யலாம் என்ற கருத்து தெரிவித்து கொள்ளப்படுகிறது.

எனவே,

1 2022-2023 ஆம் கல்வியாண்டில் சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள 29,132 மாணவ / மாணவியர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் விலையில்லா திட்டத்தின் கீழ் இரண்டு செட் சீருடைகள் (29,132 x2 செட்=58,264) ரூ.2,87,00,000/- தொகையில் கொள்முதல் செய்வதற்கு அனுமதியும்,

2 இச்சீருடைகளை அரசு நிறுவனமான கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்தில் வழங்கியுள்ள விலைப்புள்ளி மூலம் கொள்முதல் செய்வதற்கு அனுமதியும்,

3. மேற்குறிப்பிட்டுள்ள ரூ.2,87,00,000/- தொகையில் கொள்முதல் செய்யப்படுகின்ற மொத்த தொகையில் இருந்து 50 சதவிதம் தொகையான ரூ. 1,43,43,513/-னை முன்பணமாக கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்திற்கு 80-82-01, 460-50-01-19 முன்பணக் குறியீட்டில் காசோலை வழங்குவதற்கு அனுமதியும்,

4. இச்செலவினத்தை துறை குறியீடு - E பிரிவு எண் : 80-82-01, 230-11-02-02 கல்விச் செலவினம் (உயர்நிலை / மேல்நிலைப்பள்ளி) என்ற நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 7,50,00,000/-ன் கீழ் செலவு மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"16.06.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.*07/2022*, நாள்.*16.06.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

> *"24.6.20*22 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.45/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

க.து.ந.க.எண்.அ1/3393 /2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.176 / 2022 **பொருள் எண்.34**

பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - 2022-2023ஆம் கல்வியாண்டில் சென்னை தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்படும் உடனடி பணிச் செலவுகளுக்கு மாண்புமிகு மேயர் அவர்களின் 2022-2023ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை எண்.9ல் அறிவிக்கப்பட்டுள்ளது - அனைத்து சென்னைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கும் - அவசர செலவின நிதி (Imprest Amount) வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி.

மாண்புமிகு மேயர் அவர்களின் 2022-23ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை அறிவிப்பு எண். 9ல் சென்னைப் பள்ளிகளில் ஏற்படும் சிறு சிறு பழுதுகளை உடனடியாக சீர் செய்வதற்கு அந்தந்த தலைமை ஆசிரியர்களுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தி வந்த நிலையில், அவற்றை உடனடியாக தீர்க்கும் வகையில் சிறு தொகைகளை இருப்பில் வைக்க வேண்டியது அவசியமாவதால், சென்னைப் பள்ளிகளுக்கு அவசர செலவின நிதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அறிவிப்பில் சென்னைப் பள்ளகளில் குடிநீர் வழங்கும் குழாய்களில் ஏற்படும் பழுது, மின்சாதனங்களில் ஏற்படும் பழுது மற்றும் கழிவறைகளில் ஏற்படும் சிறு சிறு பழுதுகளை மாணவர்களின் நலன் கருதி உடனடியாக சரி செய்து கொள்வதற்கு 119 சென்னை தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ.25,000/- வீதமும், 92 சென்னை நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ. 30,000/- வீதமும், 38 சென்னை உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 50,000/- வீதமும் மற்றும் 32 மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.50,000/- வீதமும் ஆக 281 தலைமையாசிரியர்களுக்கு ரூ. 92.35 இலட்சம் மிகாமல் செலவு மேற்கொள்வதற்கு அவசர செலவின நிதி (Imprest Amount) வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை தொடக்கப்பள்ளி	119 x ரூ. 25,000 =	ரூ. 29,75,000
சென்னை நடுநிலைப்பள்ள	92 x ரூ. 30,000 =	ரூ. 27,60,000
சென்னை உயர்நிலைப்பள்ளி	38 x ரூ. 50,000 =	ரூ. 19,00,000
சென்னை மேல்நிலைப்பள்ளி	32 x ரூ. 50,000 =	ரூ. 16,00,000
		ரூ. 92,35,000

மேற்குறிப்பிட்ட அறிவிப்பினை செயல்படுத்துவதற்கு பள்ளிகளுக்குத் தேவையான அவசர செலவின நிதி (Imprest Amount) பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு வழங்குவதன் மூலம் பள்ளி வளாகத்தை சுத்தம் செய்வதற்கும், குடிநீர் வழங்கும் குழாய்களில் ஏற்படும் பழுது, மின்சாதனங்களில் ஏற்படும் பழுது மற்றும் கழிவறைகளில் ஏற்படும் சிறு சிறு பழுதுகளை உடனடியாக சரி செய்து கொள்வதற்கும், அவசர செலவின நிதியினை பயன்படுத்தி இப்பழுதுகளை மாணவர்களின் நலன் கருதி உடனடியாக சரி செய்ய இயலும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. 2022-2023ஆம் கல்வியாண்டில் சென்னை தொடக்க, நடுநிலை, உயர்நிலை (ம) மேல்நிலைப்பள்ளிகளுக்கு பள்ளிகளில் ஏற்படும் சிறு சிறு பழுதுகளை உடனடியாக சரி செய்து கொள்வதற்கு பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அவசர செலவின நிதி (Imprest Amount) வழங்குவதற்கும்,

2. அவசர செலவின நிதியாக (*Imprest Amount*) தொடக்கப்பள்ளிகளுக்கு ரூ.*25,000/-* வீதமும், நடுநிலைப்பள்ளிகளுக்கு ரூ. 30,000/- வீதமும், 38 சென்னை உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.*50,000/-* வீதமும் மற்றும் 32 மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.*50,000/-* வீதமும் ஆக 281 தலைமையாசிரியர்களுக்கு ரூ.*92,35,000/-* (ரூபாய் தொண்ணூற்று இரண்டு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) வழங்குவதற்கு அனுமதியும்,
3. மேற்குறிப்பிட்ட அவசர செலவின நிதியினை 450-*11-00-00 (General Imprest Control Account*) என்ற கணக்குத் தலைப்பில் பெற்று செலவினம் மேற்கொள்ளப்பட்ட உடன் அதற்கான இரசீதுகள் பள்ளிகளில் இருந்து பெறப்பட்டு தொடக்க கல்வி நிதியினை 80-*82-06*, *230-51-04*-01 தலைப்பிலும், நடுநிலைப்பள்ளிக்கான நிதியினை 80-*82-07*, *230-51-04*-02 என்ற தலைப்பிலும், உயர்நிலைப்பள்ளிக்கான நிதியினை 80-*82-01*, *230-51-04*-03 என்ற தலைப்பிலும் மற்றும் மேல்நிலைப்பள்ளிக்கான நிதியினை 80-*82-01*, *230-51-04*-04 என்ற கணக்குத் தலைப்பிலும் நேர் செய்வதற்கும், செலவு செய்யப்பட்ட தொகையினை திரும்பவும் *Recoupment* செய்து வழங்குவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"16.06.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். *01/2022*, நாள்.*16.06.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.46/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

E.D.C. No.AEO -8/3253/2022

முதன்மைசெயலர்மற்றும்ஆணையர் அவர்களின்*04.06.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.177/2022 **பொருள் எண்.35**

Greater Chennai Corporation - Education Department - Formation and implementation of Youth Parliament in all High & Higher Secondary schools (2022-2023) - Submitted for the approval of the Council– Regarding.

The Hon'ble Mayor, Greater Chennai Corporation in the Special Scheme announcement 2022-2023 (Announcement No-11) stated that Youth Parliament is to be set up in all High & Higher Secondary Schools from the academic year 2022-2023.

Youth Parliament (YP) is an innovative concept of modelling Parliament and parliamentary activities amongst high school and higher secondary school students. It is typically conducted for a group of students, wherein various Parliamentary roles are assigned to them, and they have to recreate the Parliamentary procedures over a given number of sittings. The activities include an orientation on the procedures**,** practices of the Parliament, assigning ministries, assigning topics for debate, question hour and conducting the YP sessions.

The objective of Youth Parliament is to strengthen the roots of democracy, inculcate healthy disciplinary habits, tolerance of the others view and to enable the student community to learn about the practices and procedures of the Parliament. Apart from the above objectives, conducting Youth Parliament also helps to develop various skill sets in students including leadership, public speaking, communication, critical thinking, writing, research, time management, decision making and organisational abilities.

The Youth Parliament focuses on empowering students and improving their oratorical skills and enhance their confidence. Framing of guidelines and schedules are necessary to make this scheme successful.

Primarily the below guidelines are framed to set up Youth Parliament to develop the leadership skills, participation in debates and to solve various issues in schools and needed requirements for their school development. After having exposure at school level challenges, students will be trained to deal with the issues related to education in State Level, National Level and other common issues also in the forth coming years.

SCHEDULE FOR THE YOUTH PARLIAMENT

S.NO	TIMELINE	TASK	GUIDELINES / PROCEDURE
1	**1st week of July 2022**	Formation of the Staff Committee for Youth Parliament (SCYP) headed by the HM.	● SCYP will consist of HM + AHM + 4 Teachers (PG Assistants/BT Assistants/TPTs/SG Assistants)
		(SCYP and YP-selection should be made without any gender bias)	● Nodal Teacher will be one among the 4 teachers and will be selected by the HM.
2	**2nd Week of July 2022**	Training for Nodal Teachers of 70 Chennai schools (CHS & CHSS)	● Half-a-day Training sessions will be arranged by the Education Department, GCC. ● The training will be on implementing this program including the selection,

			execution process up to the finals (Inter-school competition). ● The Youth Parliament (YP) program focuses on the holistic development of the schools and welfare of the society.
3	**3rd Week of July 2022**	Circular will be sent to all the Class Teachers by the HM after the discussion with SCYP members for selecting the participants for YP (Youth Parliament)	● Members for the YP will be selected by analysing the Problem-Solving Skills and Creativity of the students through class-level (prelims) Debate/Group Discussion on any topic. ● Students from 8th, 9th and 11th should be preferred for selection. ● If required the students of 6th, & 7th standard can also be selected based on the recommendations of the SCYP.
4	**4th week of July 2022**	Formation of 5 ministries and selection of members for the YP. The various Ministries to be formed in school are: • **Ministry of Health & Welfare** • **Ministry of Discipline & Safety** • **Ministry of Education** • **Ministry of Environment & Climate Change** • **Ministry of Sports**	The SCYP will be selecting 17 or 27 members of the Youth Parliament from the preliminary rounds based on their Leadership skills and Critical Thinking through General Knowledge assessment, Instant Speech Competition and Case Study. **(suggested strength could be 17 or 27)** The SCYP should request their ward councilors to observe the YP Sessions held at schools, depending on availability.
5	**1st week of Agust 2022**	Selection of Leader of the House, Leader of the Opposition, Speaker, Deputy Speaker, Ministers and allocation of departments to the members of the Parliament by the SCYP. Allocation of one Teacher to each Ministry from SCYP. Roles & Responsibilities of SCYP & member of the YP will be informed by the HM on the same day.	● The highest and the second-highest scoring student will be nominated as Leader of the House &Leader of the Opposition, respectively.17 or 27 YP members will be including the Speaker and Deputy Speaker, 10+5 or 15+10 respectively as the ruling & opposition benches. ● All the Leaders of the House & Opposition of 70 schools will get an opportunity to come and

			observe the council meeting conducted at GCC headed by the Honorable Mayor, in batches. ● The Ministers and the members of YP will be appointed for various Ministries based on their knowledge in each sector by the SCYP. ● Teachers from SCYP will be allocated a Ministry by the HM to guide the students.
6	**2nd&3rd Week of August 2022**	The Orientation & Induction Program for the Members of the Youth Parliament will be conducted by the SCYP.	The Program will be conducted based on Roles & Responsibilities, Timeline, Expectations and guidelines of the program. Ministries and related topics will be discussed at the end of the training.
7	**1st Week of September 2022**	**Parliamentary session -1** ● Ministry of Health & Welfare ● Ministry of Discipline & Safety	● Each parliamentary session will last for one hour (after the school timings) and the topic of discussion will be provided the previous week to the respective Ministry. ● The topics to be discussed should only pertain to school development. ● The SCYP should make sure that political topics and controversial topics leading to criticisms are strictly avoided. ● Any member of the YP can voice their opinions on school issues and provide solutions. ● The respective Ministry is responsible for proposing a solution for the issues analysed. ● The SCYP will evaluate the performance of each member and will maintain a record of every parliamentary session. ● After each Parliamentary
8	**2nd Week of October2022**	**Parliamentary session -2** ● Ministry of Education ● Ministry of Environment & Climate Change	
9	**4th Week of October2022**	**Parliamentary session -3** ● Ministry of Sports ● Ministry of Health & Welfare	
10	**2nd Week of November 2022**	**Parliamentary session -4** ● Ministry of Discipline & Safety ● Ministry of Education	
11	**4th Week of November 2022**	**Parliamentary session - 5** ● Ministry of Environment & Climate Change ● Ministry of Sports	

			session, the Speaker will either pass/reject the bill based on the results of open voting. ● After every parliamentary session, a report will be filed and submitted to the Nodal Teacher by the Speaker and Deputy Speaker. ● The report should be submitted in the prescribed format (attached). ● SCYP should ensure that the students are made aware that the intent of the Bills is only for YP and does not mandatorily imply that it will be adopted in the schools. ● Upon the discretion of SCYP, some solutions may be considered at school level for school development.
12	**1st week of December 2022**	**Inter School Competition** Selection of Host School Selection of Participants for Interschool Competition. • The YP participants from the host school, excluding the Speaker, Deputy Speaker and 3 best performers, would be considered as the organizing team as well as audience for the interschool competition .	● A date will be announced by the Education Officer (a day in 1st week of January 2023) to all AEOs to conduct the Interschool competition among their CHS & CHSS. ● AEO will select the host school under their purview by a Lot system, and this would happen on a rotation basis every year. ● The HM of the host school will organize the Inter-school competition with the help of their Youth Parliament members and the SCYP. ● Based on their performance record, the best three members from each Youth Parliament will be selected to participate in the Interschool competition. ● The HMs of all the schools should submit the list of 3 students who are participating in the competition to the AEO and the host school HM within 2 days after the

			announcement of the host school. ● The 3 selected students should be accompanied by one of the SCYP teachers. ● Certificates may be provided by the printing press at GCC through the Mechanical Department.
13	**1 st Week of January 2023**	Inter School Competition will be of 2 rounds. **Event 1: Youth Parliament (9.30 am to 12.15 pm)** **Introduction & Question Hour** ● The participants will be allocated to the various ministries, ruling and opposition benches based on Lot method. (9.30 am to 10.00 am) ● Once the Teams have assembled, 15 minutes will be provided for preparation of speech by Ministers & questions by Opposition. ● After 10 minutes, when all the Ministries are back to their seats, the Speaker and Deputy Speaker will organize the Parliament. ● Each Ministry will be given 5 minutes to present their report. This will be followed by the questioning for 15 minutes. Turns for each Ministry to be allotted by Speaker. (Total 100 mins) ● The issue given to each ministry will be a real-life scenario concerning their Department. For example, The Ministry for Discipline may receive: "A student has been irregular for over a month." **Event 2: Conventional Debate (1pm to 3pm)** ● The entire parliament will be divided into two groups by drawing a lot. One group will be the ruling bench, and the other will be the opposition (again by lot) ● The Speaker will reveal the	● The Speaker & the Deputy Speaker of the host school will act as the Speaker & Deputy Speaker for the inter-school competition. Further 3 students of the host school would be allowed to participate in the competition as per the norms. ● The SCYP of the host school & SCYP teachers accompanying the participants can determine the number of participants for the ruling and opposition benches. ● A panel of 3 judges may be drawn by a lot method. Two judges may be chosen from the SCYP teachers who will be accompanying the participants and one from the host school SCYP ● Points will be awarded based on clarity of speech, cohesion, presentation, language, relevant questioning and innovation. ● Use of vulgar or offensive language and unnecessary political statements will lead to immediate disqualification. ● Deviation from the given topic and exceeding time limit will lead to a reduction in scores. ● The best three participants will be shortlisted by the Judges and the Best Performance certificate can be issued to them. ● The winning team will be selected by the judges based on the individual

		topic and will give a preparation time of 5 minutes. ● Topics must pertain to student-related issues. For example: "With blended forms of learning becoming more prominent, should schools allow students to bring mobile phones to class." ● The Speaker will invite each member to deliver their speech (3minutes).	performances of students of each team. Certificates can be issued to the winners and runners by GCC.

Post implementation of this model we will also explore the formation of Model United Nation in select Chennai schools.

Estimated Funding Requirement for Youth Parliament:

ITEM	ESTIMATED COST PER UNIT(RS)	TOTAL NUMBERS	TOTAL ESTIMTAED COST(RS)
Badges	Rs70	1890 (27 YP members x 70 Schools)	Rs1,32,300
Refreshment& Training Expenses for 70 Nodal teachers	Rs30	100**(70 Nodal teachers+10 AEO's+ EO +Training Team+unexpected participants)**	Rs3000
Transport charges**(to and fro)** for students-Inter-School Competition & Leaders of the House and opposition from 70 Schools to observe council meeting conducted at GCC	Rs.100 (some school YP students have to travel in two buses maximum charge in the Deluxe bus is upto Rs45.If there is no accessibility through bus then need to take students by auto. in such cases the transport charges may exceed Rs 100 for some schools).	**180+140=320.** **180** (3 YP students from 60 schools) + **140** (Leaders of the House and opposition from 70 Schools) Students will be accompanied by the teacher from SCYP	Rs32000
Refreshment for Inter-school Competition-Event 1 & 2 (2 times tea, biscuit/snacks)	Rs60	600 (**240** no's from 60 schools---3 YP participants from each school along with a teacher from SCYP &**330** no's from 10 host schools-270 YP members & 60 SCYP , judges, experts and guests-**30** no's-including)	Rs36000
Misc Expenses (souvenirs, refreshment for trainers, guests, etc.)		16,700	Rs16700
TOTAL			**2,20,000**

Approximately two lakhs and twenty thousand rupees may be allocated towards badges, training for teachers, travel expenses and refreshment for the interschool competition& requesting the approval of the Council.

Hence,

1. For the formation and implementation of Youth Parliament as per the above guidelines in all high and higher secondary schools from the academic year 2022 -2023.
2. To conduct inter-school competition at each AEO level and to print certificates through GCC Printing press, Mechanical Department.
3. To accord sanction for the amount of Rs. 2,20,000(Rupees Two Lakhs and Twenty Thousand Only) towards the formation& implementation of Youth Parliament in the High & Higher Secondary of GCC, from the budget head 80-82-01, 230-11-01-01(Education expenses- special class expenses)

Sl. No. 1 to 3 above, Council approval is requested, through Standing Committee (Education) and Standing Committee (Taxation and Finance).

"16.06.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். *03/2022*, நாள்.*16.06.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"24.6.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.47/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

மஅ.1ந.க.எண்.ஆர்1/55/2022

முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 04.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.178/2022 **பொருள் எண்.36**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-1 -வருவாய் துறை - கோட்டம்-2 கத்திவாக்கம் வணிக வளாகத்தில் காலியாக உள்ள 6 கடைகள் - ஒப்பந்தம்/ ஏலம் முறையில் ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு 07.04.2022 அன்று ஒப்ப திறப்பு நடைபெற்றது ஒப்பந்தபுள்ளிகள் எதுவும்பெறப்படாத நிலையில் பொது ஏலத்தில் கலந்து கொண்டு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரிய நபர்களுக்கு வணிக வளாக கடைகளை ஒதுக்கீடு செய்ய அனுமதி.

முதன்மை செயலர்/ ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின், 14.11.2014 நாளிட்ட செயல்முறை ஆணையில், நிலம் மற்றும் உடைமைத்துறையில் இதுவரை பராமரிக்கப்பட்டு வந்த சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கடைகள் தொடர்பான நிகழ்வுகளை வட்டாரம் / மண்டலங்கள் மூலம் மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, வார்டு-2, கத்திவாக்கம் வணிக வளாகத்தில் உள்ள கடைகளுக்கு, மன்றத் தீர்மான எண்.071/2017, நாள்.18.02.2017ன்படி சதுரடி ஒன்றுக்கு ரூ30/- வீதம் உடன் சரக்கு சேவை வரி (GST) 18% என மாத வாடகை நிர்ணயம் செய்து காலியாக உள்ள 6 கடைகளான N01-NZSC1008-F6, F7, F18, F19, F20 மற்றும் F21 ஆகியவற்றுக்கு ஒப்படைக்கப்படும் நாளிலிருந்து முதல் மூன்று ஆண்டுகளுக்கு வாடகைக்கு விட ஒப்பந்த புள்ளி / ஏலம் கோர துணை ஆணையர் (வடக்கு) வட்டாரம் அவர்களின், 7.03.2022 மற்றும் 18.03.2022 நாளிட்ட குறிப்பில் ஆணை பெறப்பட்டது.

அதற்கான விளம்பர அறிக்கையினை 22.03.2022 அன்று தமிழ் தினசரி தினந்தந்தி நாளிதழ் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்த மலரில் விளம்பரம் செய்யப்பட்டது.

அதன்படி ஒப்பந்தம்/ஏலம் 07.04.2022 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்றது மேற்படி கடைகளுக்கு எவ்வித ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்படாத நிலையில் பொது ஏலம் முறையில் கடைகளை ஒதுக்கீடு செய்ய விருப்பம் தெரிவிக்கப்பட்டதின் பேரில் அவர்களிடம் கடை ஒன்றுக்கு வைப்பு தொகையாக ரூ5000/-க்கான வங்கி வரைவோலைகள் வருவாய் அலுவலர், சென்னை மாநகராட்சி என்ற பெயரில் பெறப்பட்டு பொது ஏலம் கோர அனுமதிக்கப்பட்டது. அதன்படி கீழ்கண்டவர்கள் பொது ஏலத்தில் கலந்துகொண்டனர். அவர்கள் கோரிய உயர்ந்த பட்ச ஏல தொகையினை பதிவேட்டில் பதிவு செய்யபபட்டுள்ள விபரங்கள் .

கடை எண்	ஏலத்தில் கலந்த கொண்ட நபர்களின் பெயர் மற்றும் முகவரி	வைப்பு தொகை செலுத்தியதற்கான விபரம்	ஏலத்தில் கோரிய ஏல தொகை	அதிகம்/ குறைவு
N01-N002-NZ1SC008-F6	1. திரு.ப.செந்தில் குமார், த/பெ. பத்மநாபன் எண்.75/163, நேரு நகர், கே,எச்,ரோடு, எண்ணூர், சென்னை 57	ரூ5000/-க்கான வங்கி வரைவோலை எண் 477530 நாள் 06.04.2022 யூனியன் பாங்க் ஆப் இந்தியா, எண்ணூர் கிளை	ரூ3050+ சரக்கு சேவை வரி(GST) 18%	
	2. திரு.ஜெ.சதீஷ் குமார் த/பெ ஜெயபிரகாஷ் எண்.4இ, எஸ்2 அன்சா	ரூ5000/- க்கான வங்கி வரைவோலை எண் 477529 நாள்	ரூ3100+ சரக்கு சேவை	அதிகபட்ச ஏலத் தொகை

	அபிநவ் அபார்ட்மெண்ட்ஸ் கிளாஸ் பேக்டரி ரோடு திருவொற்றியூர், சென்னை 19	06.04.2022 யூனியன் பாங்க் ஆப் இந்தியா, எண்ணூர் கிளை	வரி(GST) 18%	கோரியவர்
N01-N002-NZ1SC008-F7	1. திரு.ப.செந்தில் குமார், த/பெ. பத்மநாபன் எண்.75/163, நேருநகர், கே,எச்,ரோடு, எண்ணூர், சென்னை 57	ரூ5000/- க்கான வங்கி வரைவோலை எண் 477535 நாள் 06.04.2022 யூனியன் பாங்க் ஆப் இந்தியா, எண்ணூர் கிளை	ரூ3100+ சரக்கு சேவை வரி(GST) 18%	
	1. திரு.ஜெ.சதீஷ் குமார் த/பெ ஜெயபிரகாஷ் எண்.4இ, எஸ்2 அன்சா அபிநவ் அபார்ட்மெண்ட்ஸ் கிளாஸ் பேக்டரி ரோடு திருவொற்றியூர், சென்னை 19	ரூ5000/- க்கான வங்கி வரை வோலை எண் 477536 நாள் 06.04.2022 யூனியன் பாங்க் ஆப் இந்தியா, எண்ணூர் கிளை	ரூ3150+ சரக்கு சேவை வரி(GST) 18%	அதிகபட்ச ஏலத் தொகை கோரியவர்
N01-N002-NZ1SC008-F18	1. திரு.ராஜேஷ் எண்.11/5, பஜனைகோயில் தெரு, காட்டுக்குப்பம், எண்ணூர், சென்னை 57	ரூ5000/- க்கான வங்கி வரைவோலை எண் 354538 நாள் 06.04.2022 சிட்டி யூனியன் பாங்க் ஆப் இந்தியா,	ரூ3050+ சரக்கு சேவை வரி(GST) 18%	
	2. திரு.அருண்குமார் புதிய குடியிருப்பு பொற் காளியம்மன் தெரு, காட்டுக்குப்பம், எண்ணூர், சென்னை 57	ரூ5000/- க்கான வங்கி வரைவோலை எண் 354540 நாள் 06.04.2022 சிட்டி யூனியன் பாங்க் ஆப் இந்தியா,	ரூ3100+ சரக்கு சேவை வரி(GST) 18%	அதிகபட்ச ஏலத் தொகை கோரியவர்
N01-N002-NZ1SC008-F19	1. திரு.ராஜேஷ் எண்.11/5, ஜனைகோயில் தெரு, காட்டுக்குப்பம், எண்ணூர், சென்னை 57	ரூ5000/- க்கான வங்கி வரைவோலை எண் 354539 நாள் 06.04.2022 சிட்டி யூனியன் பாங்க் ஆப் இந்தியா,	ரூ3050+ சரக்கு சேவை வரி(GST) 18%	
	2. திரு.அருண்குமார் புதிய குடியிருப்பு பொற்காளியம்மன் தெரு, காட்டுக்குப்பம், எண்ணூர், சென்னை 57	ரூ5000/- க்கான வங்கி வரைவோலை எண் 354537 நாள் 06.04.2022 சிட்டி யூனியன் பாங்க் ஆப் இந்தியா,	ரூ3100+ சரக்கு சேவை வரி(GST) 18%	அதிகபட்ச ஏலத் தொகை கோரியவர்
N01-N002-NZ1SC008-F20	1. திரு.ஜெ.சதீஷ் குமார் த/பெ ஜெயபிரகாஷ் எண்.4இ, எஸ்2 அன்சா	ரூ5000/- க்கான வங்கி வரைவோலை எண் 477531 நாள்	ரூ3050+ சரக்கு சேவை	

	அபிநவ் அபார்ட்மெண்ட்ஸ் கிளாஸ் பேக்டரி ரோடு திருவொற்றியூர், சென்னை 19	06.04.2022 யூனியன் பாங்க் ஆப் இந்தியா, எண்ணூர் கிளை	வரி(GST) 18%	
	2, திரு.ப.செந்தில் குமார், த/பெ. பத்மநாபன் எண்.75/163, நேரு நகர், கே,எச்,ரோடு, எண்ணூர், சென்னை 57	ரூ5000/-க்கான வங்கி வரைவோலை எண் 477532 நாள் 06.04.2022 யூனியன் பாங்க் ஆப் இந்தியா, எண்ணூர் கிளை	ரூ3100+ சரக்கு சேவை வரி(GST) 18%	அதிகபட்ச ஏலத் தொகை கோரியவர்
N01-N002-NZ1SC008-F21	1. திரு.ஜெ.சதீஷ் குமார் த/பெ ஜெயபிரகாஷ் எண்.4இ, எஸ்2 அன்சா அபிநவ் அபார்ட் மெண்ட்ஸ் கிளாஸ்பேக்டரி ரோடு திருவொற்றியூர், சென்னை 19	ரூ5000/- க்கான வங்கி வரைவோலை எண் 477539 நாள் 06.04.2022 யூனியன் பாங்க் ஆப் இந்தியா, எண்ணூர் கிளை	ரூ+3050 சரக்கு சேவை வரி(GST) 18%	
	2, திரு.ப.செந்தில் குமார், த/பெ. பத்மநாபன் எண்.75/163, நேருநகர், கே,எச்,ரோடு, எண்ணூர், சென்னை 57	ரூ5000/- க்கான வங்கி வரைவோலை எண் 477534 நாள் 06.04.2022 யூனியன் பாங்க் ஆப் இந்தியா, எண்ணூர் கிளை	ரூ3125 + சரக்கு சேவை வரி(GST) 18%	அதிகபட்ச ஏலத் தொகை கோரியவர்

மேற்கண்டவர்கள் கோரிய உயர்ந்த பட்ச ஏலத்தொகை மன்ற தீர்மான எண்.071/2017ன்படி கத்திவாக்கம் வணிக வளாக சதுரடி ஒன்றுக்கு ரூ30/வீதம் 100 சதுரடி கொண்ட கடை ஒன்றுக்கு ரூ3000/-என ஆரம்ப விலையாக நிர்ணயம் செய்யப்பட்டதிலிருந்து அதிகபட்ச ஏலத்தொகை கோரியவர்களுக்கு கீழ்கண்டவாறு வணிக வளாக கடை ஒதுக்கீடு செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதன் விபரம்.

1. கடை எண் N01-N002-NZ1SC008-F6 உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியவர் திரு.சதிஷ் குமார்
2. கடை எண் N01-N002-NZ1SC008-F7 உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியவர் திரு.சதிஷ் குமார்
3. கடை எண் N01-N002-NZ1SC008-F18 உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியவர் திரு.அருண் குமார்
4. கடை எண் N01-N002-NZ1SC008-F19 உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியவர் திரு.அருண் குமார்
5. கடை எண் N01-N002-NZ1SC008-F20 உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியவர் திரு.செந்தில் குமார்
6. கடை எண் N01-N002-NZ1SC008-F21 உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியவர் திரு.செந்தில் குமார்

தேர்தெடுக்கப்பட்ட ஏலதாரர்கள் ஏலத்தொகை மற்றும் 18% சரக்கு சேவை வரி *(GST)* யும் சேர்த்து 12 மாத குத்தகை கட்டண முன் தொகையினை வசூல் செய்யவும், உரிய படிவத்தில் உடன்படிக்கை பத்திரம் பெற்றும், கடையினை 3 ஆண்டு காலத்திற்கு அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007ன்படி ஒதுக்கீடு செய்வதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.48/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.6.வ.து.ந.க.எண்.ஆர்2/3321/2019

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 15.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.179/2022 **பொருள் எண்.37**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 6 - வருவாய் துறை - பழைய வார்டு - 74 - வணிக வளாகம் - நம்மாழ்வார்பேட்டை சுப்புராயன் முதல் தெருவில் பழைய வணிக வளாக கட்டிடத்தை இடித்து - கட்டிடத்துறையால் - புதிதாக கட்டப்பட்டுள்ள மீன் அங்காடிக்கு வாடகை நிர்ணயம் செய்து ஏலத்திற்கு கொண்டுவர அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 6, பழைய வார்டு – 74ல், நம்மாழ்வார்பேட்டை சுப்புராயன் முதல் தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகம் இருந்தது. இந்த வணிக வளாகத்தில் 8 கடைகள் இருந்தன. அதன் ஒதுக்கீடுதாரர்களின் விவரம் பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

கடை எண்.1. திரு.பாபு

கடை எண்.2.திருமதி.வரதம்மாள்

கடை எண்.3. 4 மற்றும் 5. ரேஷன் கடை(பூங்கா நகர் கூட்டுறவு சங்கம்)

கடை எண்.6.திரு.கே.சுந்தரம்

கடை எண்.7. காலியாக இருந்தது

கடை எண்.8. திரு.ரங்கநாதன்

மேற்கண்ட வணிக வளாகம் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் அபாயகரமான நிலையில் இருந்ததால் இதனை இடிப்பதற்கும் ஒதுக்கீடுதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கவும் 21/02/2017 நாளிட்ட சிறப்பு அதிகாரி மன்றத்தின் தீர்மானம் பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஒதுக்கீடுதாரர்களுக்கு 21/02/2018 நாளிட்ட தாக்கீது வழங்கி கடையை காலி செய்து சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்குமாறு கோரப்பட்டது. ஒதுக்கீடுதாரர்களும் கடையை காலி செய்து சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைத்த நிலையில் ஆணையர் அவர்களின் 10/06/2017 நாளிட்ட ஆணை மற்றும் மன்ற தீர்மான எண்.393/17 நாள்.15/06/2017 பெறப்பட்டு பழைய வணிக வளாக கட்டிடம் இடிக்கப்பட்டது.

மேற்கண்ட வணிக வளாகம் இடிக்கப்பட்ட அதே இடத்தில் 5310 சதுர அடியில் அரசு மானியம் மற்றும் மூலதனநிதியில் ரூ.150 இலட்சம் மதிப்பில் கட்டிடத்துறையால் ஒரு மீன் அங்காடி கட்டப்பட்டுள்ளது என்றும், தலா 15 சதுர அடி கொண்ட 39 கடைகள் கட்டப்பட்டுள்ளது என்றும், இதனை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஏதுவாக வாடகை நிர்ணயம் செய்து கடைகளை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்குமாறும், மேற்பார்வை பொறியாளர் (கட்டடம்) அவர்களின் 06.11.2019 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கள ஆய்வின் போது மேற்கண்ட மீன் அங்காடியில் 13 வியாபார மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மேடையும் 3 பேர் அமர்ந்து வியாபாரம் செய்யும் வகையில் உள்ளது. ஒவ்வொருவருக்கும் தலா 15 சதுர அடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 13 மேடைகளிலும் 39 நபர்கள் வியாபாரம் செய்யும் வண்ணம் உள்ளது.

மண்டலம் – 6 வார்டு -70ல் உள்ள ஜமாலியா வணிக வளாகத்திற்கு சதுர அடிக்கு ரூ.25/- எனவும், வார்டு – 76ல் உள்ள கான்ரான்ஸ்மித் நகர் மற்றும் அங்காளம்மன் கோயில் தெருவில் உள்ள வணிக வளாகத்திற்கு சதுர அடிக்கு ரூ.20/- எனவும் வார்டு – 77 டிமலஸ் சாலையில் உள்ள வணிக வளாகத்திற்கு சதுர அடிக்கு ரூ.30/- எனவும், 21/02/2017 நாளிட்ட மன்றத்தீர்மானத்தின் அடிப்படையில் ஏற்கனவே வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது

இதனை தொடர்ந்து துணை ஆணையர் (வ(ம)நி) அவர்களின் 04/01/2017 நாளிட்ட சுற்றறிக்கையின் படி வணிக வளாக கடைகளுக்கான சந்தை விலை அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்வதற்காக மண்டல அலுவலர் -6 அவர்களின் தலைமையில் உதவி வருவாய் அலுவலர் (வார்டு – 70 முதல் 78 வரை), கணக்கு அலுவலர் – 6 மற்றும் உரிமம் ஆய்வாளர் (வார்டு – 74) ஆகியோர்களை உறுப்பினர்களாக கொண்டு குழு அமைக்கப்பட்டது. வார்டு – 74ல்

இந்த குழுவானது ஆய்வு செய்து கட்டிடம் அமைந்துள்ள பகுதியின் வழிகாட்டி மதிப்பு, மற்றும் அப்பகுதியில் செயல்படும் தனியார் வணிக நிறுவனங்களால் தனியாருக்கு செலுத்தப்படும் வாடகை, கட்டிடத்தின் பரப்பளவு, கட்டிடம் கட்டுவதற்கு ஆன செலவு மற்றும் அடிப்படை வசதிகளின் அடிப்படையில் மேற்கண்ட மீன் அங்காடியின் கடைகளுக்கு சதுர அடிக்கு ரூ.35/- முதல் ரூ.40/- (சேவை வரி தனியே) வரை வாடகை நிர்ணயம் செய்யலாம் என பரிந்துரை அளித்துள்ளது. இப்பரிந்துரையின் அடிப்படையில் அதிகபட்சமாக சதுர அடிக்கு ரூ.40/- என வாடகை நிர்ணயம் செய்யலாம்.

மேற்கண்டவாறு சதுர அடிக்கு ரூ. 40/- (சேவை வரி தனியே) என வாடகை நிர்ணயம் செய்து கடைகளை ஏலத்தில் கொண்டு வர 6வது மண்டல வார்டு குழு 003/2022 நாள் 07/05/2022ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே,

1 பழைய வார்டு - 74 நம்மாழ்வார்பேட்டையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மீன் அங்காடியில் உள்ள கடைகளுக்கு சதுர அடிக்கு ரூ. 40/- (சேவை வரி தனியே) என வாடகை நிர்ணயம் செய்து ஏலத்தில் கொண்டு வரவும்,

2 ஏற்கனவே பழைய வணிக வளாகத்தின் ஒதுக்கீடுதாரர்கள் புதிய வணிக வளாகத்தில் ஒதுக்கீடு கோரும் பட்சத்தில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதிமூலமாக) மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.49/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ.4.ந.க.எண்.பி3/1027/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.180/2022 **பொருள் எண்.38**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 4, பகுதி-9,10 (ம) 11, கோட்டம்-34 முதல் 48 வரை உள்ள சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறம் வகுப்பு அறைகள் மற்றும் கழிவறைகள் அகியவற்றை ஒப்பந்த அடிப்படையில் சுத்தம் செய்யும் 110 பணியாளர்களை தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் 11 மாத காலத்திற்கு (2022-2023) பணியமர்த்த அனுமதி.

பெருநகர சென்னைமாநகராட்சி, மண்டலம்-4, பகுதி-9, 10 (ம) 11, கோட்டம்-34 முதல் 48 வரையில் உள்ள சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பு அறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணியாளர்களை தேசிய நகர்புறவாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் இப்பணி கடந்த 01.09.2018 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்போது தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் பணிபுரிந்து வரும் 110 பணியாளர்களை கொண்டு பள்ளிகளில் உள்ள வகுப்பறைகள் மற்றும் சுற்றுப்புறங்களில் குப்பைகள் அகற்றுவதற்கு மற்றும் வகுப்பறைகள் சுத்தம் செய்வதற்கு 65 பணியாளர்கள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய 45 பணியாளர்கள் பணி புரிந்து வரும் நிலையில் அப்பணியாளர்களின் 2021-2022 ஆண்டிற்கான பணிக்காலம் 15.03.2022 அன்றுடன் முடிவடைவதால் அடுத்த 11 மாதங்களுக்கு 16.03.2022 முதல் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் ரூ.410/- தினக்கூலி விகிதத்தில் (Casual Labourer) ஒரு நாளைக்கு 410 X 23 நாட்கள் = ரூ.9,430/- என ஒரு மாதத்திற்கு ஒரு பணியாளர் வீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது மாற்றியமைக்கப்படும் குறைந்தபட்ச ஊதிய தொகையினை இப்பணியாளர்களுக்கு உயர்த்தி வழங்கிட மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது.

எனவே, கீழ்கண்ட பள்ளிகளில் (NULM) மூலம் தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களின் பின் வருமாறு.

வ. எண்.	வார்டு எண்.	பள்ளியின்பெயர்	வகுப்பறையை சுத்தம் செய்பவர்	கழிவறையை சுத்தம்செய்பவர்	மொத்தம்
பகுதி-9					
1)	34	சென்னைதுவக்கப் பள்ளி, சின்ன கொடுங்கையூர்	1	1	2
2)	35	சென்னைதுவக்கப் பள்ளி எருக்கஞ்சேரி	1	1	2
3)	35	சென்னைஉயர்நிலைப் பள்ளி, எருக்கஞ்சேரி	2	1	3
4)	35	சென்னைநடுநிலைப் பள்ளி, சின்னான்டிமடம்	1	1	2
5)	35	சென்னைஉயர் நிலைப்பள்ளி காமராஜ்சாலை	1	1	2

6)	35	சென்னைதுவக்கப் பள்ளி காமராஜ்சாலை	1	1	2
7)	36	சென்னைதுவக்கப் பள்ளி சர்மாநகர் 2வது பிரதானசாலை,	1	1	2
8)	36	சென்னைஉயர் நிலைப்பள்ளி சர்மாநகர் 2வது பிரதானசாலை,	2	1	3
9)	37	சென்னைதுவக்கப் பள்ளி எம்.ஜி.ஆர்.நகர்	1	1	2
10)	37	சென்னைதுவக்கப் பள்ளி மகாகவிபாரதிநகர், 14வது குறுக்குதெரு	1	1	2
11)	37	சென்னைதுவக்கப் பள்ளி உதயசூரியன்நகர் 4வது குறுக்குதெரு	1	1	2
12)	37	சென்னைதுவக்கப் பள்ளி ராஜரத்தினம்நகர்	1	1	2
13)	37	சென்னைதுவக்கப் பள்ளி கண்ணதாசன்நகர்	1	1	2
14)	37	அரசுமேல்நிலைப் பள்ளி, மகாகவிபாரதிநகர் 3வது பிரதானசாலை	2	1	3
15)	38	சென்னைதுவக்கப் பள்ளி பட்டேல்நகர்	1	1	2
16)	38	சென்னைமேல் நிலைப்பள்ளி பட்டேல்நகர்	2	1	3
		மொத்தம்	**20**	**16**	**36**
பகுதி-10					
வ. எண்	**வார்டு எண்.**	**பள்ளியின்பெயர்**	**வகுப்பறையை சுத்தம் செய்பவர்**	**கழிவறையை சுத்தம் செய்பவர்**	**மொத்தம்**
1)	39	சென்னைஆரம்பப் பள்ளி எண்.731, டி.எச்.சாலை	1	1	2
2)	39	சென்னைமேல்நிலைப் பள்ளி, எண்.731, டி.எச்.சாலை	3	1	4
3)	39	சென்னைஆரம்பப் பள்ளி (ம) உயர்நிலைப்பள்ளி CPT காலனி	2	1	3
4)	39	CUGPS, பொன்னுசாமிதெரு	2	0	2

5)	39	சென்னைதுவக்கப்பள்ளி (ம) உயர்நிலைப்பள்ளி, அர்தோன்சாலை புதுமார்கெட்பார்ம்	3	1	4
6)	40	சென்னை நடுநிலைப்பள்ளி, GPW காலனி	2	1	3
7)	40	சென்னைஆரம்பப்பள்ளி, திருவள்ளுவர் நகர்	1	0	1
8)	41	சென்னை நடுநிலைப்பள்ளி, கார்னேஷன்நகர்	3	1	4
9)	41	சென்னை ஆரம்பப்பள்ளி, எழில்நகர் (எம்.ஜி.ஆர்.நகர்)	1	1	2
10)	41	சென்னைஆரம்பப்பள்ளி, ஜெ.ஜெ.நகர்	1	1	2
11)	41	சென்னைஆரம்பப்பள்ளி, அண்ணாநகர்	1	1	2
12)	42	சென்னைஆரம்பப்பள்ளி, சேனியம்மன்கோயில் தெரு	1	1	2
13)	42	சென்னை மகளிர் மேல்நிலைப்பள்ளி, எண்.756/540, திருவொற்றியூர் நெடுஞ்சாலை	4	2	6
14)	43	சென்னை நடுநிலைப்பள்ளி, எஸ்.என்.செட்டிதெரு, (புதுமனைகுப்பம்)	1	1	2
15)	43	சென்னைநடுநிலைப் பள்ளி, விநாயகபுரம்பிரதான சாலை	1	1	2
16)	43	சென்னை நடுநிலைப்பள்ளி, கும்மாளம்மன் கோயில் தெரு	1	1	2
		மொத்தம்	**28**	**15**	**43**
பகுதி-11					
வ. எண்	**வார்டு எண்.**	**பள்ளியின்பெயர்**	**வகுப்பறையை சுத்தம்செய்பவர்**	**கழிவறையை சுத்தம்செய்பவர்**	**மொத்தம்**
1)	44	சென்னை நடுநிலைப்பள்ளி, புதுகாமராஜ்நகர்	1	1	2

2)	45	சென்னை துவக்கப்பள்ளி, கணேசபுரம்	1	1	2
3)	45	சென்னை உயர்நிலைப்பள்ளி, கணேசபுரம்	1	1	2
4)	46	சென்னை நடுநிலைப்பள்ளி, மூர்த்திங்கர்தெரு	1	1	2
5)	46	சென்னை / துவக்கப்பள்ளி, எஸ்.எம்.நகர்பிரதான சாலை	1	1	2
6)	46	சென்னைதுவக்கப் பள்ளி, மெஹசின்புரம்	1	1	2
7)	46	சென்னைமேல்நிலைப்பள்ளி, கல்யாணபுரம்	3	1	4
8)	47	சென்னைதுவக்கப் பள்ளி, ஹரிநாராயணபுரம்	1	1	2
9)	47	சென்னைநடுநிலைப் பள்ளி, ரங்கநாதபுரம்	1	1	2
10)	47	சென்னைநடுநிலைப் பள்ளி, புத்தாதெரு,	1	1	2
11)	47	சென்னைஉயர்நிலைப் பள்ளி, ஹரிநாராயணபுரம்	1	1	2
12)	47	சென்னைதுவக்கப் பள்ளி, OLK பகுதி	1	1	2
13)	48	சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, புத்தாதெரு	1	1	2
	48	சென்னை நடுநிலைப்பள்ளி, எண்.540, டி.எச்.சாலை	2	1	3
		மொத்தம்	**17**	**14**	**31**

தினசரி ஊதியம்/ நபர் ஒருவருக்கு - ரூ.410/- (சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறைந்தபட்ச ஊதிய ஆணையின்படி 2021-2022 ஆம்ஆண்டு)

1. ஒருமாதத்திற்கு - 1 பணியாளர் X 23 நாட்கள் X ஒருநாள்ஊதியம் ரூ.410/- = ரூ.9,430/-

2. 11மாதத்திற்கு மொத்த செலவு - 110 பணியாளர்கள் X 11மாதத்திற்கு X 23 நாட்கள் X ஒரு நாள் ஊதியம் ரூ.410/- = ரூ.1,14,10,300/- (ரூபாய் ஒரு கோடியே பதிநான்கு இலட்சத்து பத்தாயிரத்து முந்நூறு மட்டும்)

எனவே,

அ) மேற்கண்ட 110 பணியார்களை தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் மூலம் *(NULM)* பணியமர்த்த (2022-2023) 11 மாதத்திற்கான செலவினம் ரூ.1,14,10,300/-ற்கு நிர்வாக அனுமதிவேண்டியும்,

ஆ) மேற்கண்ட பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் *(NULM)* மூலம் பணியமர்த்திக் கொள்ளவும்,

இ) இக்குழுக்களை திட்ட மேலாண்மை இயக்குநரகம் மூலம் ஊதியம் வழங்கவும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"21.06.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.31/2022, நாள்.21.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.50/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ3.ந.க.எண்.சி1/2621/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 31.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.181/2022 **பொருள் எண்.39**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-3 மாதவரம் - பகுதி - 6 , 7 மற்றும் - 8 - விரிவாக்கப்பட்ட பகுதியில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட சாலை பணியாளர்கள், பூங்கா பணியாளர்கள், மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணியாளர்கள் ஆகியோரது (NULM) பணிக்காலம் 31.05.2022 உடன் முடிவடைகிறது - 01.06.2022 முதல் 31.05.2023 வரை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியாளர்களை பணியமர்த்த அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மாதவரம் மண்டலம்-3ல் பகுதி-6,7, மற்றும் 8 வார்டு-22 முதல் 33 வரை 40.55 சதுர கி.மீ. பரப்பளவுள்ள 12 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும் . இந்த மண்டலத்தில் 13 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 2549 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகரமயமாக்குதலுக்கு பின்னர் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி என்பதால் முக்கியமான தெருக்களை தவிர அனைத்து தெருக்களிலும் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள அவசரம் கருதி ஆணையர் அவர்களின் 29.07.2016 நாளிட்ட குறிப்பின் படியும், மன்ற தீர்மான எண். 422/2016, நாள். 30.07.2016ன் படியும் , தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் (NULM) தற்காலிக பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டலம்-3 , வார்டு 22 முதல் 33 வரை 12 வார்டுகளில் அனைத்து களப்பணிகளையும் திறம்பட மேற்கொள்ள ஏற்கனவே பணி புரிந்து வரும் நிரந்தர பணியாளர்கள் மற்றும் தொகுப்பூதிய துப்புரவு பணியாளர்களை தவிர்த்து துப்புரவு பணிக்கு 521 பணியாளர்கள், சாலை பணிக்கு 94 பணியாளர்கள், மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணிக்கு 44 பணியாளர்கள் மற்றும் பூங்கா பணிகள் மேற்கொள்ள 12 பணியாளர்கள் என கூடுதலாக 671 தற்காலிக (NULM) பணியாளர்களை பணி அமர்த்தி அனைத்து பணிகளையும் திறம்பட மேற்கொள்ளப்பட்டுவந்தது. 27-02-2021 முதல் துப்புரவு பணிகள் தனியார் வசம் ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட மன்றத்தீர்மானத்தின்படி 521 தற்காலிக NULM துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 28-02-2021 உடன் நிறைவடைந்ததால். மேற்படி 521 துப்புரவு பணியாளர்கள் தவிர்த்து சாலைப்பணியாளர்கள், மழைநீர் வடிகால் பணியாளர்கள், பூங்கா பணியாளர்கள், போன்றவர்களின் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு சாலைப்பணியாளர்கள் 49, மழைநீர் வடிகால் பணியாளர்கள் 41, பூங்கா பணியாளர்கள் 11 பேர் தேவைப்படுகின்றனர். இவர்களை NULMன் திட்டத்தின் கீழ் பணி அம்ர்த்தலாம்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ROC. C2/16317/2021 நாள்:14.07.2021ல் வரிசை எண்.64ன் படி, துப்புரவு மற்றும் சுகாதார பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.410/- எனவும், மேற்படி பணிகளுக்கு என பணியமர்த்தப்படும் சாலை பணியாளர்கள், மழைநீர் வடிகால்வாய் பணி, பூங்கா பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.410/- என நிர்ணயிக்காலம். மேலும், தேசிய நகர்புற வாழ்தார இயக்கம் மூலம் (NULM) 57 சாலை பணியாளர்கள், 44 மழை நீர் வடிகால் வாய் பணியாளர்கள் மற்றும் 12 பூங்கா பணியாளர்கள் என மொத்தம் 113 தற்காலிக பணியாளர்களை மண்டலம்-3 (மாதவரம்) பகுதி 6, 7 மற்றும் 8க்கு உட்பட்ட பகுதிகளில் சாலை பராமரிப்பு பணி, மழை நீர் வடிகால் வாய் பணி பூங்கா பராமரிப்பு பணிகளை 01.12.2021 முதல் 31.05.2022 வரை பணியமர்த்தி கொள்ள சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.947/2021 நாள்.29.12.2021 பெறப்பட்டது. தற்போது மேலும், இப்பணிகளை மேற்கொள்ள ஒரு வருட காலத்திற்க்கு அதாவது 01-06-2022 முதல் 31.05.2023 வரை (365 நாட்களுக்கு) பணியமர்த்தப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3ல் வார்டுகள் வரன்முறைபடுத்தப்பட்டபோது மண்டலம்-3ல் பழைய வார்டு-29 புதிய வார்டு-22 ஆக மாற்றம் செய்யப்பட்டு மண்டலம்-2ல் சேர்க்கப்பட்டுள்ளது. மண்டலம்-3ல் 12 வார்டுகளாக இருந்த வார்டுகள் தற்போது 11 வார்டுகளாக மாற்றப்படுள்ளது. வார்டு-1க்கு 8 நபர்கள் வீதம் 11 வார்டுகளுக்கு 88 சாலைப்பணியாளர்களும், மழைநீர் வடிகால்வாய் பணியாளர்களில் 44 நபர்களில் 3 நபர்கள் மண்டலம்-2ல் ஒப்படைப்பு செய்யப்பட்டது போக மீதம் 41 நபர்களும், பூங்கா பணியாளர்கள் 12 நபர்களில் 1 நபர் ஒப்படைப்பு செய்யபட்டது போக 11 நபர்களுக்கு 01.06.2022 முதல் 31.05.2023 ஒரு ஆண்டுக்கு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், தற்போது வார்டு-1க்கு 8 நபர்கள் வீதம் 11 வார்டுகளுக்கு 88 நபர்களில் பணிகள் மேற்கொள்ள அவசியமானது. இதில் மண்டலம்-3ல் 39 சாலைப்பணியாளர்கள் பணிமாற்று அடிப்படையில் தலைமையிடத்திலும், மண்டல அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் பணிபுரிந்து வருகின்றனர். நிரந்திர பணியாளர்கள் 39 நபர்களுக்கு பதிலாக NULM மூலம் 39 பணியாளர்கள் பணியமர்த்திகொள்ள கோப்பு இரண்டாக பிரிக்கப்பட்டு 01.12.2022 முதல் 31.05.2022 வரை ஆறு மாதம் ஆணை பெறப்பட்டுள்ளது.

வ. எ ண்	பணியளார் விவரம்		NULM பணியளார்	மண்டலம்-2க்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட நபர்கள்	மொத்த NULM பணிளார்கள்	தொகை
1	சாலை பணியாளர்கள்	நிரந்திர பணியாளர்கள் 39 நபர் பணிமாற்று அடிப்படையில் பணியாற்றி வருகிறார்கள்	57	8	49	(49x410x365) ரூ. 73,32,850/-
2	மழைநீர் வடிகால்வாய் பணியாளர்	-	44	3	41	(41x410x365) ரூ. 61,35,650/-
3	பூங்கா பணியாளர்	-	12	1	11	(11x410x365) ரூ. 16,46,150/-
					101	**ரூ.1,51,14,650/-**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, 49 சாலை பணியாளர்களுக்கு ரூ.73,32,850/-வும், மழைநீர் வடிகால்வாய் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 41 பணியாளர்களுக்கு ரூ. 61,35,650/-ம், 11 பூங்கா பணியாளர்களுக்கு ரூ. 16,46,150/-ம் ஆக மொத்தம் 365 நாட்களுக்கு ரூ. 1,51,14,650/-/- தோராய செலவு என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இப்பணிக்காக கணக்கு தலைப்பு எண். 20-21-07 கணக்கு குறியீட்டு எண்.210-100-603ன் கீழ் 2021-22 ஆம் நிதியாண்டிற்கு ரூ.2,50,00,000/- நிதி ஒதுக்கப்பட்டு தற்போது ரூ. 33,01,730/- செலவு செய்யப்பட்டு , ரூ. 2,16,98,270/- சம்பள தொகை மீதம் உள்ளது.

எனவே,

1 மேற்கண்ட நிகழ்வுகளை கருத்தில் கொண்டு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 49 சாலை பணியாளர்கள், 41 மழைநீர் வடிகால்வாய் பணியாளர்கள் மற்றும் 11 பூங்கா பணியாளர்கள் ஆக மொத்தம் 101 பணியாளர்களை மண்டலம்-3 (மாதவரம்), பகுதி 6,7 மற்றும் 8க்கு உட்பட்ட பகுதிகளில் சாலை பராமரிப்பு பணி, மழைநீர் கால்வாய் பணி மற்றும் பூங்கா பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஒரு வருட காலத்திற்கு 01.06.2022 முதல் 31.05.2023 வரை 365 நாட்களுக்கு பணியமர்த்தவும், 01.06.2022 அன்று முதல் அவசியத்தின் அடிப்படையில் இப்பணியை நீட்டிப்பு செய்ய அனுமதி வேண்டியும்,

2 மேற்கண்ட தொழிலாளர்களுக்கான (101 பணியாளர்கள்) குறைந்தப்பட்ச அடிப்படை ஊதியமாக ரூ. 410/- வீதம் 101 பணியாளர்களுக்கு ஆறு மாத காலத்திற்கு (365 நாட்கள்) ஆகும் செலவுத் தொகை 410 x 101 x 365 நாட்கள் = ரூ.1,51,14,650/- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தோரு இலட்சத்து பதிநான்காயிரத்து அறுநூற்றி ஐம்பது மட்டும்) ஆகும். இதற்கு மன்றத்தின் அனுமதி பெறவும், எதிர்வரும் காலங்களில் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் தமிழக அரசால் உயர்த்தி நிர்ணயிக்கப்படின் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தை வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.06.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.53/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"24.6.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.51/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ3.ந.க.எண்.சி1/2666/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 31.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.182/2022 **பொருள் எண்.40**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-3 மாதவரம் - பகுதி - 6 , 7 மற்றும் - 8 - விரிவாக்கப்பட்ட பகுதியில் நிரந்தர சாலை பணியாளர்கள் 39 நபர்கள் - தலைமை அலுவலகத்தில் அயற் பணியில் 16 நபர்களும், மண்டலம் மற்றும் வார்டு அலுவலகத்தில் 11 பேரும் உதவி / இளநிலை பொறியாளர்களுக்கு 12 பேரும் பணிபுரிகின்றனர். அவர்களுக்கு பதிலாக 39 நபர்கள் 01.06.2022 முதல் 31.05.2023 வரை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் பணியாளர்களை பணியமர்த்த அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மாதவரம் மண்டலம்-3ல் பகுதி-6,7, மற்றும் 8 வார்டு-23 முதல் 33 வரை 40.55 சதுர கி.மீ. பரப்பளவுள்ள 12 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 13 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 2549 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு அனைத்து சாலை பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகரமயமாக்குதலுக்கு பின்னர் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது.

3	மூன்றாம் ஆண்டிற்கான தொகை	*1,748*	*28,314*	*=((1,748 X 8) +28,314) =42,298*	*=1,26,89,400/-*
மூன்று ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான மொத்த தொகை (*GST* தவிர்த்து)					ரூ.3,47,15,400/-
					ரூ.3,47,20,000/-

இதற்கான செலவினத்தினை இயந்திரபொறியியல் துறை தலைமையிடம் பிரிவு குறியீட்டு எண் 40-*41*-01 மற்றும் கணக்கு குறியீட்டு எண்: *230-800- 300* என்ற தலைப்பின் கீழ் – *2022-2023, 2023-2024, 2024-2025* ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணத்தை (*Amphibian Equipment, Make : Aquamec Ltd Finland, & Model : Water Master Classic V C*4158) மூன்று ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு (டீசல் தவிர்த்து) பணிகளை ரூ.*3,47,20,000/-(GST* தவிர்த்து) (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்து ஏழு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) தோராய மதிப்பீட்டில் உபகரணத்தின் உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலமாக ஒப்பம் கோரி பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. ஆம்பிபியன் உபகரணத்திற்கு (*Amphibian Equipment*) மூன்று ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள கோரும் ஒப்பத்தில் கலந்து கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கு தகுதி வரம்புகளை நிர்ணயித்து *Tender Eligibility Criteria*–வில் ஒப்பம் வேண்டியும்,
3. இதற்கான செலவினத்தினை இயந்திரபொறியியல் துறை தலைமையிடம் பிரிவு குறியீட்டு எண்40-*41*-01 மற்றும் கணக்கு குறியீட்டு எண்:*230-800-300* என்ற தலைப்பின் கீழ் – *2022-2023, 2023-2024, 2024-2025* ஆம் ஆண்டிற்கான வரவு செலவுதிட்ட மதிப்பீட்டில், மேற்கொள்ளவும்,

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"23.06.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.63/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.61/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

இ.பொ.து.ந.க.எண்.ம.லா.நி/007/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.06.2022நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.192/2022 **பொருள் எண்.50**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மத்திய லாரி நிலையம் மற்றும் இதர பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்த 37 வாகனங்களை தொழில் நுட்பக்குழு அமைத்து பயனற்றவை என கழிவு செய்து மதிப்பீடு செய்யப்பட்டு ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள் M/s. MSTC Ltd, சேவை நிறுவனம் மூலம் 25.05.2022 அன்று மின்னணு ஏலம் நடைபெற்றதில் உயர்ந்த விலை (ரூ.54,25,666/-) கோரிய M/s. BM. Traders, நிறுவனத்திற்கு விற்பனை ஆணை வழங்க அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறையில் தூய்மை பணி மற்றும் இதர துறை சார்ந்த பணிகளுக்காக பல்வேறு வகையான வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றன. இவற்றில் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 37 வாகனங்கள் பல வருடங்களாக இயக்கப்பட்ட காரணத்தினாலும் வாகன உதிரிபாகங்களில் தேய்மானம் ஏற்பட்டு பெரிய பழுது ஏற்பட்டு நிறுத்தப்பட்டுள்ளது.

Sl.No	Vehicle No	Year of Purchase	Age of the Vehicle
HMV-COMPACTOR			
1	TN 04 AC 6144	2008	14
2	TN 22 BR 0468	2010	12
3	TN 22 BR 9649	2011	11
4	TN 04 AC 0577	2008	14
5	TN 04 AC 6118	2008	14
6	TN 04 AC 6342	2008	14
LMV-COMPACTOR			
7	TN 04 AD 3577	2009	13
8	TN 04 AD 3612	2009	13
9	TN 04 AD 1693	2009	13
10	TN 04 AD 2872	2009	13
LMV- TIPPER			
11	TN 22 AW 7344	2007	15
12	TN 22 AT 3540	2006	16
13	TN 22 BA 5562	2007	15
TAURUS			
14	TN 04 AD 3233	2009	13
15	TN 04 AC 9646	2008	14
TATA – ACE			
16	TN 18 Y 0934	2011	11
17	TN 07 BF 1462	2010	12
DOG-VAN			
18	TN 04 AD 3855	2009	13
ELECTRICAL LADDER			
19	TN 04 Q 0840	2006	16
20	TN 04 P 3207	2005	17

Sl.No	Vehicle No	Year of Purchase	Age of the Vehicle
SKID STEER LOADER			
21	TN 04 AF 1558	2009	13
Inspection vehicles (Car – Jeep)			
22	TN 04 AH 8721	2011	11
23	TN 22 BE 3576	2009	13
24	TN 04 AB 1816	2007	15
25	TN 04 AC 0513	2008	14
26	TN 02 AL 0001	2006	16
27	TN 04 AD 2338	2009	13
28	TN 04 AC 0522	2008	14
29	TN 04 AC 0472	2008	14
30	TN 04 AD 2314	2009	13
31	TN 04 AD 2336	2009	13
32	TN 04 AC 0493	2008	14
33	TN 04 AD 2287	2009	13
34	TN 04 AF 6411	2010	12
35	TN 04 AC 7654	2008	14
36	TN 04 AC 5532	2008	14
MOBILE -TOILET			
37	MOBILE TOILET		

மேற்கண்ட 37 வாகனங்கள் மத்திய லாரி நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நிவர்த்தி செய்வதற்கு ஏற்படக்கூடிய செலவீனம் அதிகமாக இருப்பதாலும் மற்றும் இவ்வாகனங்கள் 10 வருடங்களுக்கு மேலாக இயக்கப்பட்டு வருவதால் அடிக்கடி பழுது ஏற்படுவதாலும், மேற்கொண்டு பரமரிப்பது பொருளாதர ரீதியாக உகந்ததல்ல என்பதால் கீழ்கண்ட அலுவலர்களை கொண்ட தொழில்நுட்ப குழு அமைத்து, ஆய்வு செய்து பயனற்றவை என கழிவு செய்து சான்றிதழ் வழங்குவதற்கும் மற்றும் மதிப்பீடு நிர்ணயம் செய்வதற்கும் முதன்மை செயலாளர் /ஆணையர் அவர்களின் 28.02.2022 நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது.

1. துணை ஆணையர்(வருவாய் (ம) நிதி) - தலைவர்
2. தலைமை பொறியாளர்(தி.க.மே (ம) இயந்திரம்) - உறுப்பினர்
3. தொழில்நுட்ப மேலாளர், மாநகரபோக்குவரத்துக்கழகம், சென்னை - உறுப்பினர்
4. மேற்பார்வைபொறியாளர்(இயந்திரம்) - கூட்டுனர்

இதன்படி, தொழில்நுட்பகுழுவின் மதிப்பாய்வு அறிக்கை 12.04.2022 நாள் அன்று மேற்குறிப்பிட்ட தொழில் நுட்ப குழுவினர் ஆய்வு மேற்கொண்டு ஒவ்வொரு வாகனத்தையும் தற்போது இருக்கும் நிலையை ஆராய்ந்து, பயனற்ற வாகனத்தின் இன்ஜின், கியர்பாக்ஸ், ஸ்டியரிங், முன் அச்சு, பின் அச்சு, சக்கரம், கேபின், கூண்டு போன்ற பாகங்களின் நிலையை ஆய்வு செய்யப்பட்டது. மேலும், அரசாணை எண் G.O.(MS) No.2275 Home (Transport -E) Department நாள்.10.10.1990ல் அரசு துறை வாகனங்கள் கழிவு செய்வதற்கு நிர்ணயித்துள்ள வரையறையான 10 வருடம் காலம் மற்றும் 2.5 லட்சம் கி.மீ இயக்கப்பட்டு இருக்க வேண்டும் என்பதினை மேற்கண்ட 37 வாகனங்களும் பூர்த்தி செய்து இருந்ததால், 37 வாகனங்களையும் கழிவு செய்வதற்கு சான்றிதழ் வழங்கியும் மற்றும் 37 வாகனங்களையும் கழிவு செய்து தீர்வு செய்வதற்கு மொத்த விற்பனை தொகையாக ரூ.40,76,574/- என மதிப்பீடு செய்து உள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சியில் கழிவு செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் பொருட்கள் மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள்.MSTC Ltd., மூலம் மின்னணு ஏலம் நடத்தி தீர்வு செய்யப்பட்டு வருகிறது. அதன்படி, மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள். MSTC Ltd., நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்டுள்ள பணியாணையின்படி, மேற்கண்ட 37 பயனற்ற வாகனங்களை ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி விற்பனை செய்ய 25.05.2022 அன்று மின்னணு ஏலம் நடத்த மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள். MSTC Ltd., சேவை நிறுவனத்திற்கு மின்னணு ஏலம் நடத்த 06.05.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

இதன்படி,25.05.2022-ல் நடந்த மின்னணு ஏலத்தில் 26 ஏலத்தாரர்கள் மின்னணு ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோரியதில் திருவாளர்கள்.BM. Traders, நிறுவனத்தார் அதிக ஏலதொகையாக **ரூ.**54,25,666/- (GST & IT சேர்க்காமல்) கோரியிருந்தனர். இந்த ஏலத்தில் தொழில்நுட்பகுழு மேற்கண்ட 37 வாகனங்களுக்கு விற்பனை தொகையாக நிர்ணயித்திருந்த ரூ.40,76,574/- காட்டிலும் 33% உயர்வாக உள்ளதால் ஏற்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு.

வ.எண்	விவரம்	தொழில்நுட்ப குழு மதிப்பீடு செய்த தொகை	மின்னணு ஏலத்தில் கோரிய உயர்ந்த விலை (GST & IT சேர்க்காமல்)	உயர்ந்த விலை கோரியுள்ள ஏலத்தாரர்
1	37 பயனற்ற வாகனங்களை ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி விற்பனை செய்வது	ரூ.**40,76,574**/-	ரூ.**54,25,666**/-	M/s. **BM. Traders**.,

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைபடி 37 பயனற்ற வாகனங்களை ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி விற்பனை செய்ய கோரப்பட்ட மின்னணு ஏலத்தில் திருவாளர்கள்.BM. Traders., அவர்கள் கோரியிருந்த அதிக ஏலத்தொகையான ரூ.54,25,666/- (GST & IT சேர்க்காமல்) தொழில்நுட்ப குழு மதிப்பீட்டில் ஒப்பிடும்போது 33% கூடுதலாகும் என்பதால் ஏலத்தில் அதிக தொகை கோரியுள்ள திருவாளர்கள்.BM/Traders., நிறுவனத்தாருக்கு மேற்கண்ட 37 வாகனங்களையும் விற்பனை செய்ய பரிந்துரைக்கப்படுகிறது.

மேலும், ஏல விதிமுறையின்படி மின்னணு ஏலத்தில் திருவாளர்கள்.BM.Traders, நிறுவனத்தார் கோரியிருந்த அதிக விலைப்புள்ளியான ரூ.54,25,666/-யில் 25% தொகையான ரூ.13,56,417/-த்தை பாதுகாப்பு தொகையாக திருவாளர்கள். BM. Traders., நிறுவனத்திடமிருந்து, மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள். MSTC Ltd., நிறுவனம் பெற்றுக் கொண்டதாகவும், மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் உறுதிப்படுத்தல் கிடைத்த உடன் பாதுகாப்பு தொகையாக திருவாளர்கள். BM. Traders, நிறுவனத்தாரிடமிருந்து பெறப்பட்ட ரூ.13,56,417/-த்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்படும் எனவும் மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள். MSTC Ltd., நிறுவனம் தங்கள் மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளனர்.

எனவே, மேற்கண்ட 37 கழிவு செய்யப்பட்ட வாகனங்களை ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளதை விற்பனை செய்வதற்கு கோரப்பட்ட மின்னணு ஏலத்தில் அதிக தொகையாக ரூ.54,25,666.00 கோரியிருந்த ஏலதாரர் திருவாளர்கள். BM. Traders நிறுவனத்தாருக்கு விற்பனை செய்வதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின், திருவாளர்கள்.BM.Traders நிறுவனத்தாரிடமிருந்து மொத்த தொகையாக (ஏலத்தொகை ரூ.54,25,666.00) உடன் 18 சதவீதம் (GST) சரக்கு மற்றும்சேவை வரி ரூ.9,76,620/- மற்றும் 1 சதவீதம் (IT) வருமான வரி ரூ.64,023/- சேர்த்து) ரூ.64,66,309/-யினை மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள். MSTC Ltd., நிறுவனத்தார் மூலம் பெற்று பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திய பின் திருவாளர்கள். BM. Traders நிறுவனத்தாருக்கு விற்பனை ஆணை வழங்கலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள். MSTC Ltd.,க்கு 15.11.2018 அன்று வழங்கப்பட்ட பணியாணையின்படி, மேலே தெரிவிக்கப்பட்டுள்ள 37 கழிவு செய்யப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கு மின்னணு ஏலம் விடும் பணியை மேற்கொண்டதற்கு மொத்த ஏல தொகையான ரூ.54,25,666/-ல் 3 சதவிகித தொகை ரூ.1,62,770/- உடன் GST 18% தொகை ரூ.29,299/- சேர்த்து ஆக மொத்தம் ரூ.1,92,069/-யினை சேவை கட்டணமாக திருவாளர்கள். MSTC Ltd., வழங்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே,.

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறையில், தூய்மை பணி மற்றும் இதர துறை சார்ந்த பணிகளுக்காக பராமரிக்கப்பட்டு வந்த வாகனங்களில் கீழ்கண்ட 37 எண்ணிக்கையிலான பல்வேறு வகையான வாகனங்கள் 10 வருடங்களுக்கும் மேலாக பயன்படுத்தி வரப்பட்டு பொருளாதார ரீதியில் பழுது பார்த்து மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதால் அரசாணை எண் G.O.(MS) No.2275 Home (Transport -E) Department, நாள்.10.10.1990ல் அரசு துறை வாகனங்கள் 10 வருடம் காலம் மற்றும் 2.5லட்சம் கி.மீ இயக்கப்பட்டு இருந்தால் கழிவு செய்யலாம் என்று தெரிவித்துள்ளதின்படியும் மற்றும் தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரையின்படியும் கழிவு செய்ய அனுமதி வேண்டியும்.

Sl.No	Vehicle No	Year of Purchase	Age of the Vehicle
HMV-COMPACTOR			
1	TN 04 AC 6144	2008	14
2	TN 22 BR 0468	2010	12

Sl.No	Vehicle No	Year of Purchase	Age of the Vehicle
S.S. LOADER			
21	TN 04 AF 1558	2009	13
Inspection vehicles (Car – Jeep)			

3	TN 22 BR 9649	2011	11
4	TN 04 AC 0577	2008	14
5	TN 04 AC 6118	2008	14
6	TN 04 AC 6342	2008	14
LMV-COMPACTOR			
7	TN 04 AD 3577	2009	13
8	TN 04 AD 3612	2009	13
9	TN 04 AD 1693	2009	13
10	TN 04 AD 2872	2009	13
LMV- TIPPER			
11	TN 22 AW7344	2007	15
12	TN 22 AT 3540	2006	16
13	TN 22 BA 5562	2007	15
TAURUS			
14	TN 04 AD 3233	2009	13
15	TN 04 AC 9646	2008	14
TATA – ACE			
16	TN 18 Y 0934	2011	11
17	TN 07 BF 1462	2010	12
DOG-VAN			
18	TN 04 AD 3855	2009	13
ELECTRICAL LADDER			
19	TN 04 Q 0840	2006	16
20	TN 04 P 3207	2005	17

22	TN 04 AH 8721	2011	11
23	TN 22 BE 3576	2009	13
24	TN 04 AB 1816	2007	15
25	TN 04 AC 0513	2008	14
26	TN 02 AL 0001	2006	16
27	TN 04 AD 2338	2009	13
28	TN 04 AC 0522	2008	14
29	TN 04 AC 0472	2008	14
30	TN 04 AD 2314	2009	13
31	TN 04 AD 2336	2009	13
32	TN 04 AC 0493	2008	14
33	TN 04 AD 2287	2009	13
34	TN 04 AF 6411	2010	12
35	TN 04 AC 7654	2008	14
36	TN 04 AC 5532	2008	14
MOBILE -TOILET			
37	MOBILE TOILET		

2. மேற்கண்ட பயனற்ற 37 வாகனங்களை விற்பனை செய்வதற்கு மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள். MSTC LTD சேவை நிறுவனம் மூலம் மின்னணு முறையில் "இ" ஏலம் நடத்தப்பட்டதில் திருவாளர்கள். BM. Traders., அவர்கள் கோரிய உயர்ந்த விலை புள்ளி தொகையான ரூ.54,25,666/- (GST & IT சேர்க்காமல்) (ரூபாய் ஐம்பது நான்கு லட்சத்து இருபத்தைந்து ஆயிரத்து அறுநூற்று அறுபத்து ஆறு மட்டும்) ஏற்று திருவாளர்கள். BM. Traders., நிறுவனத்திற்கு மேற்கண்ட கழிவு செய்யப்பட்ட 37 வாகனங்களை ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்ய விற்பனை ஆணை வழங்கிட அனுமதி வேண்டியும்.
3. இனம் 1 மற்றும் 2 ஏற்பின், திருவாளர்கள். BM. Traders, நிறுவனத்தாரிடமிருந்து ஏலத்தொகையான ரூ.54,25,666/- (ரூபாய் ஐம்பது நான்கு லட்சத்து இருபதுஐந்து ஆயிரத்து அறுநூறு அறுபது ஆறு) உடன் 18 சதவீதம் (GST) சரக்கு மற்றும்சேவை வரி ரூ.9,76,620/- (ரூபாய் ஒன்பது லட்சத்து எழுபது ஆறுயிரத்து அறுநூறு இருபது மட்டும்) மற்றும் 1சதவீதம் (IT) வருமான வரி ரூ.64,023/- (ரூபாய் அறுபத்து நான்காயிரத்து இருபத்தி மூன்று மட்டும்) சேர்த்து மொத்த தொகையான ரூ.64,66,309/-யை (அறுபத்து நான்கு இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து முந்நூற்று ஒன்பது மட்டும்) அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமலில் உள்ள வரிக்கு ஏற்ப தொகையினை திருவாளர்கள். MSTC Ltd., நிறுவனத்தார் மூலம் பெற்று பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திய பின், திருவாளர்கள். BM. Traders, நிறுவனத்தார்க்கு மேற்கண்ட 37 வாகனங்களையும் உள்ளது உள்ளபடி நிலையில் எடுத்து செல்ல அனுமதி வழங்கிட ஆணை வேண்டியும்,

4. மேற்கண்ட 37 கழிவு செய்யப்பட்ட வாகனங்களை விற்பனை செய்து தீர்வு செய்வதற்கு மின்னணு ஏல பணியினை மேற்கொண்ட திருவாளர்கள். MSTC Ltd., நிறுவனத்தாருக்கு சேவை கட்டணமாக ஏலத்தொகையில் 3 சதவீத தொகையுடன் GST 18% சேர்த்து மொத்தம் ரூ.1,92,069/-யினை வழங்கிடவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.06.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.77/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"24.6.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.82/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

இ.பொ.து.ந.க.எண்.எம்1/1036/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.06.2022நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.193/2022 **பொருள் எண்.51**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி தூய்மை இந்தியா திட்ட சேமிப்பு நிதியின் கீழ் ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் (Amphibian) உபகரணம் ரூ.8.00 கோடி மதிப்பீட்டிலும், ஐந்தாண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி ரூ.9.19 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.17.19 கோடி தோராய மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய மின்னணு ஒப்பம் கோர அரசின் நிர்வாக அனுமதியினை பெற அனுமதி

தமிழக அரசு நடப்பு நிதியாண்டிற்கான (2022 – 2023) வரவு செலவு திட்டத்தை தாக்கல் செய்ததை தொடர்ந்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சம்பந்தப்பட்ட மானிய கோரிக்கையின் போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மை பணிக்காக ரூ.25.50 கோடி மதிப்பீட்டில் கீழ்க்கண்ட உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் கொள்முதல் செய்யப்படும் என அறிவித்திருந்தார்கள். அதன் விவரம் கீழ்வருமாறு.

உபகரணம்/ வாகன வகை	எண்ணிக்கை	மொத்த தொகை (கோடியில்)	உபகரணம்/ வாகன பயன்பாடு
ஆம்பிபியன் உபகரணம்	1	8.00	மழை காலங்களில் வெள்ள நீரை வெளியேற்ற ஏதுவாக 3.5 மீட்டருக்கும் அதிகமான அகலம் கொண்ட நீர்வழி தடங்களை சுத்தப்படுத்தும் பணிக்காக
ரோபோடிக் மல்டி பர்பஸ் எஸ்கவேட்டர் உபகரணம்	2	13.00	மழை காலங்களில் வெள்ள நீரை வெளியேற்ற ஏதுவாக 3.5 மீட்டருக்கும் குறைவான அகலம் கொண்ட நீர்வழி தடங்களை சுத்தப்படுத்தும் பணிக்காக
இயந்திர பெருக்கி வாகனம்	8	4.50	சாலைகளை தூய்மை படுத்தும் பணிக்காக

இதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் இருக்கும் முக்கிய ஆறுகளான அடையாறு ஆறு, கூவம் ஆறு மற்றும் பக்கிங்ஹாம் கால்வாய்களில் வந்து சேரும் நீரானது வங்கக் கடலுக்கு சென்றடைய ஏதுவாகவும், மிதக்கும் கழிவுகள் மற்றும் ஆயாகத் தாமரை செடிகள் படர்ந்து கொசு உற்பத்தியாகி சுகாதார சீர்கேடுக்கு வழிவகுக்காமல் இருக்கவும் இந்த நீர்நிலைகளை அவ்வப்போது தூய்மையாக வைத்திருக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத் துறை மூலம் மலேரியா பணியாளர்களை பணியமர்த்தி மிதக்கும் கழிவுகள் மற்றும் ஆகாயத்தாமரை செடிகளை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் உச்சநீதி மன்ற உத்தரவின்படி கழிவு நீர் உள்ள பகுதிகளை சுத்தம் செய்ய மனிதர்களை நேரடியாக பயன்படுத்தக்கூடாது என்ற ஆணையால், இப்பணிக்காக பொக்லைன் இயந்திரங்கள் வாடகை அடிப்படையில் பணியமர்த்தி ஆகாயத்தாமரை மற்றும் மிதக்கும் கழிவுகள் அகற்றப்பட்டு வந்தது. ஆனால், இந்த இயந்திரமானது நீரில் மிதக்கும் மற்றும் பயணிக்கும் திறன் இல்லாத காரணத்தினால் மிதவைகள் பொருத்தி நீர் நிலைகளில் கழிவுகள் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந் நீர்நிலைகளை இம்முறையில் சுத்தம் செய்யும்

பணிகளை மேற்கொள்வதில் நடைமுறை சிக்கல் இருந்ததால் இம்முறை கைவிடப்பட்டு இயந்திரங்கள் மூலம் நீர்நிலைகளை சுத்தப்படுத்தும் பணிமேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

மேலும், நீர் நிலைகளில் 3.5 மீ மேல் அகலம் அதிகமாக உள்ள கால்வாய்கள் மற்றும் ஆறுகளை பராமரிக்க மனிதர்களை பயன்படுத்தாமல் ஆம்பிபியன் *(Amphibian Equipment)* உபகரணத்தை பயன்படுத்தி தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

தற்பொழுது பெருநகர சென்னை மாநகராட்சி வசம் உள்ள இரண்டு ஆம்பிபியன் உபகரணங்கள் நகரின் முக்கிய நீர்வழித்தடங்களான, அடையாறு ஆறு, கூவம் ஆறு, பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவற்றில் வந்து இணையும் 3.5 மீட்டருக்கு மேல் அகலம் அதிகமாக உள்ள கால்வாய்களில் பணியமர்த்தப்பட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

கடந்த ஆண்டு பருவமழை வழக்கத்தை விட அதிகமாக பெய்ததால் பெரு வெள்ளம் ஏற்பட்டு பேரிடராக மாறி பல நீர்நிலைகளில் நீரோட்டம் தடைபட்ட போது ஆம்பிபியன் உபகரணம் பணியமர்த்தப்பட்டு, இடர்ப்பாடுகள் களையப்பட்டதன் காரணமாக கால்வாய்களில் நீர் கடத்தும் திறன் அதிகரிக்கப்பட்டது. இவ்வாறு ஆறுகளுக்கு வெள்ள நீர் விரைவாக சென்றடைய ஆம்பிபியன் உபகரணத்தின் பயன்பாடு மிகவும் உறுதுணையாக இருந்தது. மேலும், தற்பொழுது எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இவ்வகை சிறப்பு உபகரணங்களின் பயன்பாட்டின் தேவை மிக அதிகமாக உள்ளது.

எனவே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் 2022/23 ஆம் நிதி ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு எண் 34ன்படி ஒரு எண்ணிக்கையில் ஆம்பிபியன் உபகரணம் கொள்முதல் செய்ய ஆம்பிபியன் உபகரணத்தின் உற்பத்தியாளரான *M/s. Aquamec Ltd, Finland* நிறுவனத்தாரிடமிருந்து அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட இந்திய விற்பனையாளர்களான *M/s. Dharsan Dredging & Construction Pvt Ltd*, மூலமாக மேம்படுத்தப்பட்ட திறன் மற்றும் வசதிகளை கொண்ட ஆம்பிபியன் உபகரணத்தின் விலைப்பட்டியல் பெறப்பட்டுள்ளது. அதன்படி, இவ்வுபகரணத்தை கொள்முதல் செய்ய ரூ.8.00 கோடி (ரூபாய் எட்டு கோடி மட்டும்) (அனைத்து வரிகள் மற்றும் செலவினங்கள் உட்பட) ஆகும்..

இவ்வுபகரணம் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதாலும் மற்றும் உயர் தொழில்நுட்பத்துடன் செயல்படுவதாலும், இவ்வகை இறக்குமதி செய்யப்பட்ட அதிநவீன சிறப்பு உபகரணங்களை இயக்கவும் பராமரிக்கவும்போதிய தொழில்நுட்ப திறன்வாய்ந்த பணியாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் இல்லாத காரணத்தால், இவ்வுபகரணங்களை ஐந்து வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் சேர்த்து கொள்முதல் செய்ய தீர்மானிக்கப்பட்டு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புக்கான ஐந்து வருடத்திற்கான தொகை கணக்கிடப்பட்டு கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

Description	O & M Charges per Equipment			Total O & M Charge per Equipment (Rs.)	Total Amount for One Equipment per Year (365days) (Excluding GST)Rs.
	Operation Cost Per Hour (Rs.)	Operation Cost Per Day (8 hrs shift) (Rs.)	Comprehensive Maintenance Cost Per Day (Rs.)		
Ist Year O & M COST (2022 - 2023)	1,445	11,560	23,400	34,960	1,27,60,400/-
IInd Year O & M COST (2023 - 2024) (Escalation of 10% from 1st Year)	1,589.50	12,716	25,740	38,456	1,40,36,440/-
IIIrd Year O & M COST (2024 - 2025) (Escalation of 10% from 2nd Year)	1,748.45	13,987.60	28,314	42,301.60	1,54,40,084/-

IVth Year O & M COST (2025 - 2026) (Escalation of 10% from 3rd Year)	1,923.30	15,386.40	31145.40	46531.80	1,69,84,107/-
Vth Year O & M COST (2026 - 2027) (Escalation of 10% from 4th Year)	2,115.63	16,925.04	34,259.94	51,184.98	1,86,82,517.70
Total O & M Cost for 5 year (365 Days Per Year) for One Equipment Exclu.GST)					7,79,03,548.70
GST@18%					1,40,22,638.77
Total O & M Cost for 5 year (365 Days Per Year) for One Equipment inclu.GST)					9,19,26,187.47 Say 9.19 Cr

மேற்கண்ட அட்டவணையின்படி ஒரு எண்ணிக்கையிலான, ஆம்பிபியன் உபகரணத்திற்கான கொள்முதல் தொகை ரூ.8.00 கோடி மற்றும் ஐந்து வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புக்கான மொத்த தோராய மதிப்பீடு தொகை ஜி.எஸ்.டியுடன் சேர்த்து ரூ.9.19 கோடி என ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணத்தை ஐந்து ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியுடன் கூடி கொள்முதல் செய்வதற்கான தோராய மதிப்பீடாக ரூ.17.19 கோடி (ரூபாய் பதினேழு கோடியே பத்தொன்பது இலட்சம் மட்டும்) ஆகும். விரிவான கணக்கீட்டுத் தாள் நடப்பு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணம் ஐந்து வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்வதற்கான தோராய மதிப்பீடு ரூ.10.00 கோடிக்கு மேல் உள்ளதால் இப்பணிக்கான நிர்வாக அனுமதி அரசிடமிருந்து பெறப்படல் வேண்டும்.

இதற்கான கொள்முதல் செலவீனத்தை தூய்மை இந்தியா திட்டத்தின் சேமிப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளலாம் எனவும், இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவினை இயந்திரபொறியியல் துறை தலைமையிடம் பிரிவு குறியீட்டு எண். *40-41-01* மற்றும் கணக்கு குறியீட்டு எண்:*230-800-300* என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் 2022-23 ஆம் நிதி ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, தூய்மை இந்தியா திட்ட சேமிப்பு நிதியின் கீழ் ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் *(Amphibian)* உபகரண:த்தினை 5 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்வதற்கான தோராய மதிப்பீடு ரூ. 17.19 கோடி என்பதால் இப்பணிக்கான நிர்வாக அனுமதியினை அரசிடமிருந்து பெற அரசிற்கு குறிப்பு சமர்ப்பிக்கவும்

S.No	Details of Equipment	Approximate Project Cost (Including GST)	Source of Fund	SBM GOI Grant (35 %)	State Grant (55 %)	ULB (GCC) Share (10 %)
1	1 No of Amphibian Equipment	Rs. 8.00Cr-	SBM Fund	Rs.2.8 Crore	Rs.4.4 Crore	Rs.0.80 Crore
2	5 years Operation & Comprehensive Maintenance	Rs. 9.19Cr	Revenue Fund of GCC			
Total		Rs.17.19 Cr				

2. மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் *(Amphibian)* உபகரண:த்தினை, ரூ.8.00 கோடி (ரூபாய் எட்டு கோடி மட்டும்) *(G.S.T* மற்றும் அனைத்து வரிகள் மற்றும் செலவினங்கள் உட்பட) தோராய மதிப்பீட்டில் அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டவுடன் உபகரணத்தின் உற்பத்தியாளர் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் மூலம்பணி மேற்கொள்ள மின்னணு ஒப்பம் கோர அனுமதி வேண்டியும்,
3. ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணத்தை ஐந்து வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை மேற்கொள்ள (டீசல் நீங்கலாக) தோராயமாக ரூ.9.19 கோடி (ரூபாய் ஒன்பது கோடியே பத்தொன்பது இலட்சம் மட்டும்) *(G.S.T* சேர்த்து) செலவில் மேற்கொள்ள கொள்முதல் செய்ய கோரப்படவுள்ள ஒப்பத்துடன் சேர்த்து ஒப்பம் கோரி மேற்கொள்ளவும்,
4. இக்கொள்முதலுக்கான செலவீனத்தை தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் மேற்கொள்ளவும் ,
5. ஐந்து வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவினத்தை இயந்திரபொறியியல் துறை தலைமையிடம் பிரிவு குறியீட்டு எண் *40-41*-01 மற்றும் கணக்கு குறியீட்டு எண்*: 230-800- 300* என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"23.06.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.79/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.83/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

இ.பொ.து.ந.க.எண்.எம்1/1040/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.06.2022நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.194/2022 **பொருள் எண்.52**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - தூய்மை இந்தியா திட்ட சேமிப்பு நிதியின் கீழ் 8 எண்ணிக்கையில் 4 Cu.M கொள்ளளவு கொண்ட இயந்திர பெருக்கி வாகனங்கள் ரூ 4.50 கோடி மதிப்பீட்டிலும், ஏழு ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு ரூ. 6.74 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.11.24 கோடியில் கொள்முதல் செய்ய மின்னணு ஒப்பம் கோர அரசின் நிர்வாக அனுமதியினை பெற அனுமதி

தமிழக அரசு நடப்பு நிதியாண்டிற்கான (2022 – 2023) வரவு செலவு திட்டத்தை தாக்கல் செய்ததை தொடர்ந்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சம்பந்தப்பட்ட மானிய கோரிக்கையின் போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மை பணிக்காக ரூ.25.50 கோடி மதிப்பீட்டில் கீழ்க்கண்ட உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் கொள்முதல் செய்யப்படும் என அறிவித்திருந்தார்கள். அதன் விவரம் கீழ்வருமாறு.

வாகன வகை	எண்ணிக்கை	மொத்த தொகை (கோடியில்)	உபகரணம்/வாகன பயன்பாடு
ஆம்பிபியன் உபகரணம்	1	8.00	மழை காலங்களில் வெள்ள நீரை வெளியேற்ற ஏதுவாக 3.5 மீட்டருக்கும் அதிகமான அகலம் கொண்ட நீர்வழி தடங்களை சுத்தப்படுத்தும் பணிக்காக
ரோபோடிக் மல்டி பர்பஸ் எஸ்கவேட்டர் உபகரணம்	2	13.00	மழை காலங்களில் வெள்ள நீரை வெளியேற்ற ஏதுவாக 3.5 மீட்டருக்கும் குறைவான அகலம் கொண்ட நீர்வழி தடங்களை சுத்தப்படுத்தும் பணிக்காக
இயந்திர பெருக்கி வாகனம்	8	4.50	சாலைகளை தூய்மை படுத்தும் பணிக்காக

இதன்படி, 26.02.2022 அன்று நடைபெற்ற தூய்மை இந்தியா திட்டத்திற்கான மாநில உயர் அதிகார குழு கூட்டம் (U)2.0 நடவடிக்கை குறிப்பில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கென கீழ்கண்ட நிதி பங்களிப்பின்படி இயந்திரபெருக்கி வாகனங்கள் கொள்முதல் செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது.

Sl.No.	Details of Equipment	Project Cost	SBM GOI Grant (25%)	State Grant (16%)	ULB (GCC) Share (59%)
1	Purchase of 8 Nos. of 4.Cum capacity Mechanical Sweeper	4.50 Crore	1.125Cr	0.72 Cr	2.655 Cr

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குள் இருக்கும் பேருந்து வழித்தட சாலைகள் மற்றும் பிரதான சாலைகளில் சேகரமாகும் குப்பைகள் இயந்திர பொறியியல் துறை மூலம் வாகனங்கள் பணியமர்த்தப்பட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்த சாலைகளில் வாகனங்கள் செல்லும் பொழுது அவற்றில் இருக்கும் மணல் மற்றும் இதர தூசி துகள்கள் சாலையின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பில் சேகரமாகிறது

இவ்வாறு, சாலை மத்திய தடுப்பு மற்றும் ஓரங்களில் சேகரமாகும் தூசி மற்றும் மணல் துகள்களானது காற்றில் பறந்து மக்களுக்கு சுவாசம் சம்மந்தமாக கோளாறுகளை ஏற்படுத்துகிறது. மேலும், இரு சக்கர வாகன ஓட்டிகள் மற்றும் பயணிப்பவர்களின் கண்களில் விழுந்து வாகனங்களை இயக்குவதில் அதிக சிரமத்தை ஏற்படுத்துகிறது. மேலும், இதன் காரணமாக அவ்வப்போது விபத்துகளும் ஏற்பட காரணமாகிறது. எனவே, சாலையின் மத்திய தடுப்பு மற்றும் ஓரங்களில் சேகரமாகும் மணல் துகள்களை அவ்வப்போது அகற்றுவது மிகவும் அத்தியாவசியமான பணியாக உள்ளது.

இவ்வாறு, சாலை ஓரங்களில் சேகரமாகும் மணல் துகள்களை தூய்மை பணியாளர்களை வைத்து அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. பிரதான சாலைகளில் வாகனங்கள் வேகமாக செல்வதாலும், சாலைகள் முழு நேரமும் வாகன நெரிசலுடன் இருப்பதாலும், பணியாளர்களை பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ளும் பொழுது அவ்வப்போது விபத்து ஏற்பட்டு இரு சக்கரவாகன ஓட்டிகள் மற்றும் தூய்மை பணியாளர்கள் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டது.

எனவே, இதனை கருத்தில் கொண்டு பிரதான சாலைகள் மற்றும் பேருந்து வழித்தட சாலை ஓரங்களில் சேகரமாகும் மணல் துகள்கள் மற்றும் சிறு வகை குப்பைகளை அகற்ற பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இயந்திர பெருக்கி வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பேருந்து வழித்தட சாலைகள் மற்றும் பிரதான சாலைகளில் பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சி வசம் *16* எண்ணிக்கையிலான இயந்திர பெருக்கி வாகனங்கள் உள்ளது. இவ்வாகனங்களானது, தூய்மை பணி தனியார் மயமாக்கப்பட்ட மண்டலங்களை தவிர்த்து பெருநகர சென்னை மாநகராட்சியால் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படும் மண்டலங்களான 4, 5, 6, 7 மற்றும் 8ல் உள்ள பேருந்து வழிதட சாலைகள் மற்றும் பிரதான சாலைகளில் உள்ள மத்திய தடுப்பு மற்றும் சாலை ஓரங்களில் சேகரமாகும் மணல் துகள்கள் மற்றும் கழிவுகளை அகற்ற பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றில் 12 எண்ணிக்கையிலான இயந்திர பெருக்கி வாகனங்களின் ஆயுட்காலமானது அரசு வரையறையின்படி முடிவடைந்த பிறகும், தகுதி சான்றிதழ் புதுப்பிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இவ்வாறு பயன்படுத்தப்படுவதால், அதிக அளவிலான பயன்பாட்டின் காரணமாக, அடிக்கடி பழுது ஏற்பட்டு, துப்புரவு பணிகள் பாதிப்படையும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, தூய்மைப் பணிகளில் எந்தவித தொய்வும் ஏற்படாமல் இருக்க இவற்றுக்கு மாற்றாக புதிய வாகனங்கள் கொள்முதல் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

இதனை கருத்தில் கொண்டு மண்டலம் 4, 5, 6, 7 மற்றும் 8 ஆகிய பகுதிகளில் உள்ள பிரதான சாலைகள் மற்றும் பேருந்து வழித்தட சாலைகளில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள *4 Cu.M* கொள்ளளவு கொண்ட இயந்திர பெருக்கி வாகனங்கள் எட்டு எண்ணிக்கையில் கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, இயந்திர பெருக்கி வாகனங்கள் (*Mechanical Sweeper- Dry Type)* கொள்முதல் செய்வதற்கு வாகன விலையினை இயந்திர பெருக்கி வாகனத்தின் உற்பத்தியாளர்களான *M/s. TPS Infrastructure Pvt. Ltd, Pamtec Enviro Systems Pvt. Ltd, M/s. Roots Multiclean Ltd, M/s. Kam Avida Pvt. Ltd* அவர்களிடம் மேம்படுத்தப்பட்ட திறன் மற்றும் வசதிகளை கொண்ட இயந்திர பெருக்கி வாகனத்தின் விலைப்பட்டியல் பெறப்பட்டுள்ளது. அதன்படி, இவ்வுபகரணத்தை கொள்முதல் செய்ய ஒரு உபகரணத்திற்கு ரூ. *56,25,000.00/-* (ரூபாய் ஐம்பத்து ஆறு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) வீதம் எட்டு எண்ணிக்கையிலான இயந்திர பெருக்கி வாகனங்களுக்கு தோராய கொள்முதல் விலையாக ரூ.*4,50,00,000.00/-* (ரூபாய் நான்கு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) *G.S.T* மற்றும் அனைத்து வரிகள் மற்றும் அனைத்து செலவினங்கள் உட்படஆகும்.

இவ்வாகனமானது அதிநவீன தொழில்நுட்பத்துடன் செயல்படுவதால், இந்த வகை வாகனங்களை இயக்குவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும் போதிய தொழில்நுட்ப விவரங்கள் அறிந்த ஓட்டுநர்கள் மற்றும் பழுதாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் இல்லாத காரணத்தினால், இவ்வாகனங்களை ஏழு வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் சேர்த்து கொள்முதல் செய்ய தீர்மானிக்கப்பட்டு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புக்கான ஏழு ஆண்டுகளுக்கான தொகை கணக்கிடப்பட்டு கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

Sl.No	Description	O & M Charges		Total O& M charges per day (Rs.)	Total amount per year (300 days) (Rs.)
		Operation cost per day (8hours shift)	Maintenance cost per day (Rs.)		
1	I Year O & M COST (2022 – 2023)	1,550.00	1,370.00	2,920.00	8,76,000.00
2	II Year O & M COST (2023 – 2024) (Escalation of 5% from 1st Year)5%	1,630.00	1,440.00	3,070.00	9,21,000.00
3	III Year O & M COST (2024 – 2025) (Escalation of 5% from 2nd Year)	1,710.00	1,510.00	3,220.00	9,66,000.00
4	IV Year O & M COST (2025 – 2026) (Escalation of 5% from 3rd Year)	1,800.00	1,590.00	3,390.00	10,17,000.00
5	V Year O & M COST (2026 – 2027) (Escalation of 5% from 4th Year)	1,890.00	1,670.00	3,560.00	10,68,000.00
6	VI Year O & M COST (2027 – 2028) (Escalation of 5% from 5th Year)	1,980.00	1,750.00	3,730.00	1176,000.00
7	VII Year O & M COST (2028 – 2029) (Escalation of 5% from 6th Year)	2,080.00	1,840.00	3,920.00	11,76,000.00
Total O & M cost for 7 years (300 days per year) for one Equipment excl.GST in Rs.					71,43,000.00
Total O & M cost for 7 years (300 days per year) for Eight Equipments excl.GST in Rs.					5,71,44,000.00
GST @ 18%					1,02,85,920.00
Total O & M cost for 7 years (300 days per year) for Eight Equipments incl.GST in Rs.					6,74,50,000 Say 6.74 Cr

மேற்கண்ட அட்டவணையின்படி ஒரு எண்ணிக்கையிலான இயந்திர பெருக்கி உபகரணத்திற்கான கொள்முதல் தொகை ரூ.56,25,000/- வீதம் எட்டு எண்ணிக்கையிலான உபகரணங்களுக்கான மொத்த தொகை ரூ.4,50,00,000/- மற்றும் ஏழு வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு (டீசல், டயர், பேட்டரி தவிர்த்து) பணிக்கான மொத்த தோராய மதிப்பீடு ரூ.6.74 கோடி என எட்டு எண்ணிக்கையிலான இயந்திர பெருக்கி வாகனத்திற்கான ஏழு வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியுடன் கூடி கொள்முதல் செய்வதற்கான தோராய மதிப்பீடு ரூ.11.24 கோடி (ரூபாய் பதினொரு கோடியே இருபத்து நான்கு இலட்சம் மட்டும்) ஆகும். விரிவான கணக்கீட்டுத் தாள் நடப்பு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்படி 8 எண்ணிக்கையிலான இயந்திர பெருக்கி வாகனங்களை ஏழு வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியுடன் கூடி கொள்முதல் செய்வதற்கான தோராய மதிப்பீடு ரூ.10.00 கோடிக்கு மேல் உள்ளதால், இப்பணிக்கான நிர்வாக அனுமதி அரசிடமிருந்து பெறப்படல் வேண்டும்.

இதற்கான கொள்முதல் செலவீனத்தை தூய்மை இந்தியா திட்டத்தின் சேமிப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளலாம் எனவும் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவினை இயந்திரபொறியியல் துறை தலைமையிடம் பிரிவு குறியீட்டு எண் 40-41-01 மற்றும் கணக்கு குறியீட்டு எண்:230-800-300 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் 2022-23 ஆம் நிதி ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் எட்டு எண்ணிக்கையிலான இயந்திர பெருக்கி வாகனங்களை 7 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்வதற்கான தோராய மதிப்பீடு ரூ.11.24 கோடி என்பதால், இப்பணிக்கான நிர்வாக அனுமதியினை அரசிடமிருந்து பெற அரசிற்கு குறிப்பு சமர்ப்பிக்கவும்

S.No	Details of Equipment	Approximate Project Cost (Including GST)	Source of Fund	SBM GOI Grant (25 %)	State Grant (16 %)	ULB (GCC) Share (59 %)
1	8 Nos Mechanical Sweeper	Rs. 4.50 Cr	SBM Fund	**1.125Cr**	**0.72 Cr**	**2.655 Cr**
2	7 years Operation & Comprehensive Maintenance	Rs. 6.74Cr	Revenue Fund of GCC			
Total		Rs.11.24 Crore				

1. மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி எட்டு எண்ணிக்கையிலான இயந்திர பெருக்கி வாகனங்களை, ஒரு உபகரணத்திற்கு ரூ.56,25,000/- வீதம் எட்டு எண்ணிக்கையிலான இயந்திர பெருக்கி வாகனங்களை ரூ.4,50,00,000/- (ரூபாய் நான்கு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) (G.S.T மற்றும் அனைத்து வரிகள் மற்றும் செலவினங்கள் உட்பட) தோராய மதிப்பீட்டில் அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டவுடன் மின்னணு ஒப்பம் கோரி கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,
2. புதியதாக கொள்முதல் செய்யப்படவுள்ள எட்டு எண்ணிக்கையிலான இயந்திர பெருக்கி வாகனங்களை ஏழு வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை (டீசல், டயர் மற்றும் பேட்டரி நீங்கலாக) தோராயமாக ரூ.6.74 கோடி/- (ரூபாய் ஆறு கோடியே எழுபத்து நான்கு இலட்சம் மட்டும்) (G.S.T சேர்த்து) செலவீனத்தில் மேற்கொள்ள உபகரணம் கொள்முதல் செய்யும் பணிக்கென கோரப்படவுள்ள ஒப்பத்துடன் சேர்த்து ஒரே ஒப்பமாக கோரி பணி மேற்கொள்ளவும்,
3. இக்கொள்முதலுக்கான செலவீனத்தை தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் மேற்கொள்ளவும்,
4. ஏழு வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவினத்தை இயந்திரபொறியியல் துறை ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40-41-01 மற்றும் கணக்கு குறியீட்டு எண்: 230-800- 300 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்..

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.06.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.80/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"24.6.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.84/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 0167/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.06.2022நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.195 / 2022 **பொருள் எண்.53**

ஒப்பம் - பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்ய 5 எண்ணிக்கையிலான புல்டோசர்களை (D80 A12 of equivalent capacity) 3 மாதங்களுக்கு வாடகை அடிப்படையில் பணியில் ஈடுபடுத்த குறுகியகால மின்னணு ஒப்பம் கோரப்பட்டது - திருவாளர். Dayavu Engineering Enterprises அவர்களுக்கு ஒப்பம் வழங்கியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 9 முதல் 15 மண்டலங்களில் சேகரமாகும் குப்பைகள் அனைத்தும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்பட்டு வருகிறது. இக்குப்பை கொட்டும் வளாகத்தில் நாளொன்றிற்கு சுமார் 2000 மெட்ரிக் டன் குப்பைகள் கொட்டப்படுகிறது. இக்குப்பைகளை சமன் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மற்றும் வாடகை புல்டோசர்கள், *Hydraulic excavators (Poclain) and Front end loader* உள்ளிட்ட இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பைகளை கொட்டும் மண்டலங்களின் மூலமாகவும், திடக்கழிவு மேலாண்மைத்துறையின் மூலமாக வாடகை அடிப்படையில் மேற்கண்ட இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுவந்தது.

இந்நிலையில், மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) அவர்கள் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்யும் பணிக்காக இயந்திர பொறியியல் துறையின் மூலமாக வாடகை அடிப்படையில் மேற்கண்ட இயந்திரங்களை பணியில் ஈடுபடுத்த ஒப்பம் கோரி இயந்திரங்களை ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் 25.01.2022 நாளிட்ட குறிப்பில் கீழ்கண்ட இனங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

1. பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்யும் பணிக்காக 5 எண்ணிக்கையிலான புல்டோசர் இயந்திரங்களை வாடகை அடிப்படையில் மூன்று மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்த தேவைப்படும் செலவுத் தொகை ரூ.50,40,000/-க்கு நிர்வாக அனுமதியும்,
2. இயந்திர பொறியியல் துறையின் மூலமாக மேற்கண்ட பணிக்கான இயந்திரங்களை வாடகை அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தவும், வாடகை செலவினத்திற்கான பட்டியினை தீர்வு செய்து வழங்கவும்,
3. இப்பணியினை இயந்திர பொறியியல் துறை, திடக்கழிவு மேலாண்மைத்துறை அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட மண்டல செயற்பொறியாளர்கள் மூலமாக கண்காணிக்கவும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

வ. எண்	இயந்திரங்களின் வகை	எண்ணிக்கை	ஒரு மணி நேரத்திற்கான தொகை ரூ. (GST 18% உட்பட)	8 மணி நேரத்திற்கான செலவுத் தொகை ரூ.	3 மாதத்திற்கான செலவுத் தொகை ரூ. (GST 18% உட்பட)	குறிப்பு
1	புல்டோசர்	5	1,400/-	11,200/-	50,40,000/-	

இப்பணிக்கான ஒப்பம் ஒப்ப அறிவிப்பின்படி 25.02.2022 அன்று குறுகியகால மறு மின்னணு ஒப்பம் கோரப்பட்டு 10.03.2022 அன்று ஒப்பம் திறக்கப்பட்டது. இப்பணிக்கான ஒப்பத்தில் திருவாளர். *Dayavu Engineering Enterprises* என்கிற ஒரு ஒப்பந்ததாரர் மட்டும் பங்கு பெற்றார். இவ்வொப்பந்ததாரர் ஒப்பத்தில் கோரப்பட்ட அனைத்து ஆவனங்களையும் உரிய முறையில் சமர்ப்பித்ததன் அடிப்படையில், இவரது ஒப்பம் தொழில்நுட்ப தகுதி பெற்ற ஒப்பமாக கருதப்பட்டு 16.03.2022 அன்று நிதி ஒப்பம் திறக்கப்பட்டது. இப்பணிக்காக திருவாளர். *Dayavu Engineering Enterprises* அவர்கள் அளித்துள்ள விலை விவரம் பின்வருமாறு.

வ.எண்	ஒப்பந்ததாரர் பெயர்	பணியின் விவரம்	இயந்திரங்களின் எண்ணிக்கை	*1* இயந்திரத்திற்கு 1மணி நேரத்திற்கான விலை ரூ. (18% *GST* உடன்)	*1* இயந்திரத்திற்கு 3 மாதத்திற்கான மொத்த வாடகை தொகை ரூ. *(18% GST* உடன்)	*5* இயந்திரத்திற்கு 3 மாதத்திற்கான மொத்த வாடகை தொகை ரூ. *(18% GST* உடன்)
	திருவாளர். *Dayavu Engineering Enterprises*	பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்யும் பணிக்காக வாடகை அடிப்படையில் புல்டோசர் இயந்திரங்களை பணியில் ஈடுபடுத்தும் பணி.	*5*	*2,356.46*	*16,96,651.20 (2,356.46X8 X90)*	*84,83,256/-*

மேற்கண்ட விலை விவரங்களின் அடிப்படையில் ஒப்பந்ததாரர் திருவாளர். *Dayavu Engineering Enterprises* அவர்களுக்கு விலைகுறைப்பு செய்ய கோரி 16.03.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. ஒப்பந்ததாரர் திருவாளர். *Dayavu Engineering Enterprises* அவர்கள் *16.03.2022*ல் விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். அதன் விவரம் பின்வருமாறு.

வ.எண்.	ஒப்பந்ததாரர் பெயர்	பணியின் விவரம்	எண்ணிக்கை	1 இயந்திரத்திற்கு 1மணி நேரத்திற்கான விலை ரூ. (18% GST உடன்)	விலைகுறைப்பு பேச்சுவார்த்தைக்குப்பின் விலை ரூ. (18% GST உடன்)	இறுதி தொகை ரூ. (18% GST உடன்)	5 இயந்திரத்திற்கு 3 மாதத்திற்கான மொத்த வாடகை தொகை ரூ. (18% GST உடன்)
	திருவாளர். தயாவு இஞ்சினியரிங் எண்டர் பிரைசஸ்	பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்யும் பணிக்காக வாடகை அடிப்படையில் புல்டோசர் இயந்திரங்களை பணியில் ஈடுபடுத்தும் பணி.	5	2,356.46	2,356.40 . 957.46 =1,399/-	10,07,280/- (1,399X8X90)	50,36,400/-

மேற்கண்ட அட்டவணைகளின் படி, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்யும் பணிக்காக 5 எண்ணிக்கையிலான *(D80 A12 or equavalent dozing capacity)* புல்டோசர் இயந்திரங்களை வாடகை அடிப்படையில் நாளொன்றிற்கு 8 மணி நேரம் வீதம் 90 நாட்களுக்கு பணியில் ஈடுபடுத்த திருவாளர்.*Dayavu Engineering Enterprises* அவர்கள் அளித்துள்ள இறுதி ஒப்பத் தொகை ரூ.50,36,400/- (ரூபாய் ஐம்பது லட்சத்து முப்பத்தாராயிரத்து நானூறு மட்டும்) ஆகும். இத்தொகையானது இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.50,40,000/-ஐ விட (-) 0.07% குறைவு ஆகும்.

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உயர்மட்ட ஒப்ப சீராய்வுக் குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பபட்டு ஒப்ப சீராய்வு குழுவின் 21.03.2022 நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டது.அதன் அடிப்படையில், மன்றத்தின் அனுமதி வேண்டி குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டதில், மாண்புமிகு மேயர் அவர்கள்*"Process the file, Put up the file for Ratification Order "*என தெரிவித்திருந்ததன் அடிப்படையில் மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி திருவாளர்கள் *Dayavu Engineering Enterprises* நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கி 5 எண்ணிக்கையிலான *Bulldozer*

உபகரணங்கள் வாடகை முறையில் அமர்த்த நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்படல் வேண்டும்.

மேலும், ஒப்ப விதி, பிரிவு-7, 7.17ன்படி மேற்கண்ட பணியினை குப்பை கொட்டும் வளாக கள அலுவலர்கள், துப்புரவு ஆய்வாளர்கள், உதவி பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத்துறை (தலைமையிடம்) அலுவலர்கள் ஆகியோர்களின் பணித்தகுதி சான்றின் அடிப்படையில் இயந்திர பொறியியல் துறை (தலைமையிடம்) மூலமாக பட்டி தீர்வு செய்து வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இப்பணிக்கான செலவுத் தொகையினை இயந்திர பொறியியல் துறை, ஆய்வு வாகன பணிமனை பிரிவு கணக்குத் தலைப்பு எண்.40-41-10 மற்றும் கணக்கு குறியீடு எண். 230-800-300 வாடகை கட்டணங்கள் என்கிற தலைப்பில் 2022-23ம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி பெற்று நிதி ஒதுக்கீடு செய்து பட்டி தீர்வு செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்யும் பணிக்காக 5 எண்ணிக்கையிலான *(D80 A12 or equavalent dozing capacity)* புல்டோசர் உபகரணங்களை வாடகை அடிப்படையில் பணியில் ஈடுபடுத்த கோரப்பட்ட மின்னணு ஒப்பத்தில், குறைந்த விலைபுள்ளி அளித்த திருவாளர்.*Dayavu Engineering Enterprises* நிறுவனத்தார், ஒரு எண்ணிக்கையிலான புல்டோசர் உபகரணத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.1,399/- வீதம் *(GST 18%* உட்பட), நாளொன்றிற்கு 8 மணி நேரத்திற்கு, 5 எண்ணிக்கையிலான புல்டோசர் உபகரணங்களை 90 நாட்களுக்கு வாடகை முறையில் வழங்க தெரிவித்துள்ள இறுதி விலைப்புள்ளியான ரூ.50,36,400/- (ரூபாய் ஐம்பது லட்சத்து முப்பத்தாராயிரத்து நானூறு மட்டும்)ஐ ஏற்று 5 எண்ணிக்கையிலான புல்டோசர் உபகரணங்களை வாடகை முறையில் பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி திருவாளர். *Dayavu Engineering Enterprises* அவர்களுக்கு பணி ஆணை வழங்கியமைக்கும்,
2. திருவாளர். *Dayavu Engineering Enterprises* நிறுவனத்தாரிடமிருந்து மொத்த ஒப்பத் தொகையில் 2% பாதுகாப்பு தொகையாக பெற்றுக் கொண்டு இந்நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளவும்,
3. இதற்கான செலவீனத்தினை 2022-23ம் நிதி ஆண்டு ஆய்வுவாகனப் பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40-41-10 மற்றும் கணக்கு குறியீட்டு எண் 230-80-03-00 ன் கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைகுழு (பணிகள்) மற்றும் நிலைகுழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"23.06.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.81/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"
>
> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.85/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

இ.பொ. து.ந.க.எண்.எம்1/2845A/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.06.2022நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.196 / 2022 **பொருள் எண்.54**

ஒப்பம் - பெருநகர சென்னை மாநகராட்சி – இயந்திர பொறியியல் துறை - கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்ய 7 எண்ணிக்கையிலான புல்டோசர்களை (D80 A12 of equivalent capacity) 3 மாதங்களுக்கு வாடகை அடிப்படையில் பணியில் பணியமர்த்தி பணிமேற்கொள்ள குறுகியகால மின்னணு ஒப்பம் கோரப்பட்டது - திருவாளர். Dayavu Engineering Enterprises அவர்களுக்கு ஒப்பம் வழங்கியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 8 மண்டலங்கள், பம்மல், செம்பாக்கம் மற்றும் பல்லாவரம் நகராட்சிகள் மற்றும் கோயம்பேடு வணிக வளாகத்தில் சேகரமாகும் குப்பைகள் அனைத்தும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்பட்டு வருகிறது. இக்குப்பை கொட்டும் வளாகத்தில் நாளொன்றிற்கு சுமார் 2200 மெட்ரிக் டன் குப்பைகள் கொட்டப்படுகிறது. இக்குப்பைகளை சமன் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மற்றும் வாடகை புல்டோசர்கள், *Hydraulic excavators (Poclain) and Front end loader* உள்ளிட்ட இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பைகளை கொட்டும் மண்டலங்களின் மூலமாகவும், திடக்கழிவு மேலாண்மைத்துறையின் மூலமாக வாடகை அடிப்படையில் மேற்கண்ட இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுவந்தது.

இந்நிலையில், மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) அவர்கள் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்யும் பணிக்காக இயந்திர பொறியியல் துறையின் மூலமாக வாடகை அடிப்படையில் மேற்கண்ட இயந்திரங்களை பணியில் ஈடுபடுத்த ஒப்பம் கோரி இயந்திரங்களை ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

துணை ஆணையர் (வ (ம) நிதி) அவர்களின் 16.12.2021 நாளிட்ட குறிப்பில் கீழ்கண்ட இனங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

1. கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தை சமன் செய்யும் பணிக்காக 7 எண்ணிக்கையிலான புல்டோசர், 2 எண்ணிக்கையிலான *Hydraulic Excavator (Poclain)* மற்றும் 1 எண்ணிக்கையிலான *Front End Loader (JCB)* உள்ளிட்ட இயந்திரங்களை வாடகை அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தவும்,
2. இயந்திர பொறியியல் துறையின் மூலமாக மேற்கண்ட பணிக்கான இயந்திரங்களை வாடகை அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தவும், வாடகை செலவினத்திற்கான பட்டியினை தீர்வு செய்து வழங்கவும்,
3. ஏற்கனவே கோரப்பட்ட ஒப்பத்தை ரத்து செய்யவும், இயந்தி பொறியியல் துறையின் மூலமாக ஒப்பம் கோரவும்,
4. இப்பணியினை இயந்திர பொறியியல் துறை, திடக்கழிவு மேலாண்மைத்துறை அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட மண்டல செயற்பொறியாளர்கள் மூலமாக கண்காணிக்கவும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு தேவைப்படும் புல்டோசர்களின் விவரம் குறித்து திடக்கழிவு மேலாண்மைத் துறையின் மூலமாக துணை ஆணையர் (வ (ம) நிதி) அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு.

திடக்கழிவு மேலாண்மைத்துறைக்கு தேவைப்படும் புல்டோசர்களின் விவரம்.

வ. எண்	மண்டலம்	சேகரமாகும் குப்பைகளின் அளவு	தேவைப்படும் புல்டோசர்களின் விவரம்		
			நடைமுறையில் உள்ள விதிகளின் படி	ஏற்கனவே உள்ள வாடகை புல்டோசர் பயன்பாடு	வாடகை அடிப்படையில் தேவைப்படும் புல்டோசர்களின் விவரம்
1	1	175	2	---	1
2	2	40			
3	3	100			
4	4	430	2	---	1
5	5	470	2	---	1
6	6	345	2	1	1
7	7	360	2	1	1
8	8	470	2	1	1
9	இ.பொ.துறை	---	---	1	1
10	தி.க.மே.துறை	---	---	1	---
மொத்தம்		**2390**	**12**	**5**	**7**

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் 5 எண்ணிக்கையிலான 200 *Model Hydraulic Excavator* பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மண்டலத்தில் இருந்து கொண்டு வரப்படும் குப்பைகள் தனித்தனியே கொட்டப்பட்டு அந்தந்த மண்டலத்தைச் சார்ந்த திடக்கழிவு மேலாண்மைத்துறை பொறியாளர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தற்போது, மேற்கண்ட இயந்திரங்கள் பற்றாகுறை காரணமாக, குப்பைகளை சமன் செய்யும் பணிபாதிக்கப்பட்டு குப்பை கொட்டும் வாகனங்கள் சென்றுவர போதுமான வசதி இல்லாமல் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணிக்காக இயந்திர பொறியியல் துறையின் மூலம் 7 எண்ணிக்கையிலான *(D80 A12 or equavalent dozing capacity)* புல்டோசர், 2 எண்ணிக்கையிலான *Hydraulic Excavator (Poclain)* மற்றும் 1 எண்ணிக்கையிலான *Front End Loader (JCB)* உள்ளிட்ட இயந்திரங்களை வாடகை அடிப்படையில் பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி 7 எண்ணிக்கையில் புல்டோசர் உபகரணங்களை வாடகைமுறையில் அமர்த்தி பணிமேற்கொள்ள சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் மன்றத் தீர்மானம் எண்.046/2022, நாள். 17.01.2022ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

வ. எ ண்	இயந்திரங்களின் வகை	எண்ணிக்கை	ஒரு மணி நேரத்திற்கான தொகை ரூ. *(GST 18%* உட்பட)	8 மணி நேரத்திற்கான செலவுத் தொகை ரூ.	*3* மாதத்திற்கான செலவுத் தொகை ரூ. *(GST 18%* உட்பட)	குறிப்பு
1	புல்டோசர்	7	*1,400/-*	*11,200/-*	*70,56,000/-*	

இப்பணிக்கான சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஒப்புதலின் அடிப்படையில் 19.01.2022 ஒப்ப அறிவிப்பின்படி 10.02.2022 அன்று ஒப்பம் திறக்கப்பட்டது. இப்பணிக்கான ஒப்பத்தில் திருவாளர். *Dayavu Engineering Enterprises* என்கிற ஒரு ஒப்பந்ததாரர் மட்டும் பங்கு பெற்றார். இவ்வொப்பந்ததாரர் ஒப்பத்தில் கோரப்பட்ட ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பிக்காத காரணத்தினால் 24.02.2022 நாளிட்ட தலைமைப் பொறியாளர் (இ/தி.க.மே) அவர்களின்

ஆணைப்படி ஒப்பம் ரத்து செய்யப்பட்டு 25.02.2022 அன்று குறுகியகால மறு மின்னணு ஒப்பம் கோரப்பட்டு 10.03.2022 அன்று ஒப்பம் திறக்கப்பட்டது.

இப்பணிக்கான ஒப்பத்தில் திருவாளர். *Dayavu Engineering Enterprises* என்கிற ஒரு ஒப்பந்ததாரர் மட்டும் பங்கு பெற்றார். இவ்வொப்பந்ததாரர் ஒப்பத்தில் கோரப்பட்ட அனைத்து ஆவணங்களையும் உரிய முறையில் சமர்ப்பித்ததனால், இவரது ஒப்பம் தொழில்நுட்ப தகுதி பெற்ற ஒப்பமாக கருதப்பட்டு 16.03.2022 அன்று நிதி ஒப்பம் திறக்கப்பட்டது. இப்பணிக்காக திருவாளர். *Dayavu Engineering Enterprises* அவர்கள் அளித்துள்ள விலை விவரம் பின்வருமாறு.

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர்	பணியின் விவரம்	இயந்திரங்களின் எண்ணிக்கை	1 இயந்திரத்திற்கு 1மணி ரத்திற்கான விலை ரூ. (18% GST உடன்)	1 இயந்திரத்திற்கு 3 மாதத்திற்கான மொத்த வாடகை தொகை ரூ. (18% GST உடன்)	7 இயந்திரத்திற்கு 3 மாதத்திற்கான மொத்த வாடகை தொகை ரூ. (18% GST உடன்)
1	திருவாளர். *Dayavu Engineering Enterprises*	கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்யும் பணிக்காக வாடகை அடிப்படையில் புல்டோசர் இயந்திரங்களை பணியில் ஈடுபடுத்தும் பணி.	7	2,356.46	16,96,651.20/- (2,356.46x8x90)	1,18,76,558.40

மேற்கண்ட விலை விவரங்களின் அடிப்படையில் ஒப்பந்ததாரர் திருவாளர். *Dayavu Engineering Enterprises* அவர்களுக்கு விலைகுறைப்பு செய்ய கோரி 16.03.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. ஒப்பந்ததாரர் திருவாளர். *Dayavu Engineering Enterprises* அவர்கள் 16.03.2022ல் விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். அதன் விவரம் பின்வருமாறு.

வ. எண்	ஒப்பந்த தாரர் பெயர்	பணியின் விவரம்	எண்ணிக்கை	1 இயந்திரத்திற்கு மணி நேரத் திற்கான விலை ரூ. (18% GST உடன்)	விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்குபின் விலை ரூ. (18% GST உடன்)	இறுதி தொகை ரூ. (18% GST உடன்)	7 இயந்திரத்திற்கு 3 மாதத்திற்கான மொத்த வாடகை தொகை ரூ. (18% GST
1	திருவாளர் தயாவு இஞ்சினியரிங் எண்டர் பிரைசஸ்	கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பை களை சமன் செய்யும் பணிக்காக	7	2,356.46	2,356.40 (-) 957.46 =1,399/-	10,07,280 /- (1,399x8 x 90)	70,50,960/-

		வாடகை அடிப்படையில் புல்டோசர் இயந்திரங்களை பணியில் ஈடுபடுத்தும் பணி.					

மேற்கண்ட அட்டவணைகளின் படி, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்யும் பணிக்காக 7 எண்ணிக்கையிலான *(D80 A12 or equavalent dozing capacity)* புல்டோசர் இயந்திரங்களை வாடகை அடிப்படையில் நாளொன்றிற்கு 8 மணி நேரம் வீதம் 90 நாட்களுக்கு பணியில் ஈடுபடுத்த திருவாளர். *Dayavu Engineering Enterprises* அவர்கள் அளித்துள்ள இறுதி ஒப்பத் தொகை ரூ.70,50,960/- (ரூபாய். எழுபது லட்சத்து ஐம்பதாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) ஆகும். இத்தொகையானது இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.70,56,000/-ஐ விட (-) 0.07% குறைவு ஆகும்.

மேற்கண்ட விரங்கள் அனைத்தும் உயர்மட்ட ஒப்ப சீராய்வுக் குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்ப சீராய்வு குழுவின் 21.03.2022 நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டது. அதன் அடிப்படையில், மன்றத்தின் அனுமதி வேண்டி குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டதில், மாண்புமிகு மேயர் அவர்கள் *"Process the file, Put up the file for Ratification Order "* என தெரிவித்திருந்ததன் அடிப்படையில் மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி திருவாளர்கள் *Dayavu Engineering Enterprises* நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கி 7 எண்ணிக்கையிலான *Bulldozer* உபகரணங்கள் வாடகை முறையயில் அமர்த்த நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்படல் வேண்டும்.

மேலும், ஒப்ப விதி, பிரிவு-7, 7.17ன்படி மேற்கண்ட பணியினை குப்பை கொட்டும் வளாக கள அலுவலர்கள், துப்புரவு ஆய்வாளர்கள், உதவி பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத்துறை (தலைமையிடம்) அலுவலர்கள் ஆகியோர்களின் பணித்தகுதி சான்றின் அடிப்படையில் இயந்திர பொறியியல் துறை (தலைமையிடம்) மூலமாக பட்டி தீர்வு செய்து வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இப்பணிக்கான செலவுத் தொகையினை இயந்திர பொறியியல் துறை, ஆய்வு வாகனப் பணிமனை பிரிவு கணக்குத் தலைப்பு எண்.40-*41*-10 மற்றும் கணக்கு குறியீடு எண். 230-*800-300* வாடகை கட்டணங்கள் என்கிற தலைப்பில் 2022-23ம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி பெற்று நிதி ஒதுக்கீடு செய்து பட்டி தீர்வு செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்யும் பணிக்காக 7 எண்ணிக்கையிலான *(D80 A12 or equavalent dozing capacity)* புல்டோசர் உபகரணங்களை வாடகை அடிப்படையில் பணியில் ஈடுபடுத்த கோரப்பட்ட மின்னணு ஒப்பத்தில், குறைந்த விலைபுள்ளி அளித்த திருவாளர்.*Dayavu Engineering Enterprises* நிறுவனத்தார், ஒரு எண்ணிக்கையிலான புல்டோசர் உபகரணத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.1,399/- வீதம் *(GST 18%* உட்பட), நாளொன்றிற்கு 8 மணி நேரத்திற்கு, 7 எண்ணிக்கையிலான புல்டோசர் உபகரணங்களை 90 நாட்களுக்கு வாடகை முறையில் வழங்க தெரிவித்துள்ள இறுதி விலைப்புள்ளியான ரூ.70,50,960/- (ரூபாய் எழுபது லட்சத்து ஐம்பதாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்)-ஐ ஏற்று 7 எண்ணிக்கையிலான புல்டோசர் உபகரணங்களை வாடகை முறையில் பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

2. மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி திருவாளர். *Dayavu Engineering Enterprises* அவர்களுக்கு பணி ஆணை வழங்கியமைக்கும்,
3. திருவாளர். *Dayavu Engineering Enterprises* நிறுவனத்தாரிடமிருந்து மொத்த ஒப்பத் தொகையில் 2% பாதுகாப்பு தொகையாக பெற்றுக் கொண்டு இந்நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளவும்,
4. இதற்கான செலவீனத்தினை 2022-23ம் நிதி ஆண்டு ஆய்வு வாகனப் பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40-41-10 மற்றும் கணக்கு குறியீட்டு எண் 230-80-03-00 ன் கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.06.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.82/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"24.6.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.86/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

S.W.M.C.No.A7/1034/2018

ஆணையர் (பொ) அவர்களின் *09.06.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.197/2022 **பொருள் எண்.55**

Greater Chennai Corporation – Solid Waste Management – Bio-mining of Athipet Dump site –Zone 7- LOA issued to M/s. Srinivas Waste Management Services Private Limited – site handed over on 26.04.2019– legacy waste processing and Disposal of RDF delayed due to COVID -19 pandemic-Extension of contract period – For Orders.

As per the Detailed Feasibility Report submitted by TNUIFSL appointed consultant M/s IPE Global in 2017, the waste volume at Athipet site was 86,122 cubic meters] using the Total Station Survey method as per the ToR. Based on this report, GCC obtained approval for reclaiming Athipattu dump site via biomining under SBM funding vide SBM 7th State High Power Expert Committee approval dated 24.09.2018.

Subsequent to the above approval, the biomining project at Athipet was tendered out on 27.02.2019 and thereafter the Letter of Acceptance issued to M/s.Srinivas Waste Management Services Private Limited for Bio-mining of Athipattu dump site in Zone -7 on 08.03.2019 for a contract period of 24 months. For proper monitoring & evaluation, GCC appointed Anna University as PMC. The Contractor commenced Bio-mining project activity on 28.05.2019 and as per the agreement the time line for completion of work was on or before 28.05.2021.

At the time of commencement of Biomining operations, a drone survey was carried out to assess any change in volume of waste at Athipet site over the period of 2 years from the date of the initial legacy waste volume quantification survey. In this drone survey the legacy waste volume was found to be 1,07,811m3 vide letter from M/s.Srinivas Waste Management Services (P) Ltd dt: 18.03.2022. The increase in waste volume by 21,689 m3 (25.18%) over the period of 2 years can be attributed to the fact that the till the commencement of biomining operations, the Athipattu site was being used as a transfer station.

Post commencement of the project on 07.06.2019, the contractor was unable to do biomining at the site owing to the North east monsoon and national wide lockdown due to COVID-19 pandemic from November 2019 to August 2020.Thereafter the project got further delayed due to the onset of the second wave of Covid-19 and subsequent lock down. Hence the contractor was not able to complete the project as per the scheduled timeline and requested for extension of time to complete the work vide Letter from PMC (Anna University) Dated:04.04.2022.The contractor has processed 57,304 m3 of waste and balance 50,328 m3 waste is yet to be processed based on the report submitted by PMC 15.03.2022

Based on the request for extension letter submitted by Contractor vide Letter from PMC (Anna University) Dated:04.04.2022 and taking into consideration the points mentioned above pertaining to reasons for delay and accumulation of additional legacy waste at site, the PMC has recommended for providing extension to the contractor till 31.08.2022 to complete biomining of entire waste quantity 1,07,811m3 (86,122 m3 as per LoA + 21,689 m3 extra quantity accumulated over the two year gap). The additional cost to be incurred for this amounts to Rs.1,51,82,300/- calculated at the rate of Rs.700/- per cu.m.

Hence,

1. Extend the Contract period for Bio-Mining the entire quantity of the legacy waste dumped at Athipattu dump site up to 31.08.2022.
2. To permit the Contractor for Bio-mining the total quantity of legacy waste of 1,07,811 cum as recommended by the PMC (Anna University) and also to permit the additional expenditure of Rs.1,51,82,300/- for Bio-Mining the additional quantity of 21,689 cum under SBM savings amount.

Sl.No.1 and 2 above, approval of the council requested,

Commissioner (i/c) remarks dated.09.06.2022 as follows;
1 and 2 may be permitted subject to:
A volume of 107652.5 m3 may be kept as the upperlimit which is the +25% limit permitted as per TNTT Rule,2000.

Sl.No.1 and 2 above with Commissioner(i/c) remarks, approval of the Council requested through Standing Committee(Public Health) and Standing Committee(Taxation & Finance).

"21.06.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.39/2022, நாள்.21.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"24.6.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.67/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.நீ.வ.து.ந.க.எண்.பி2/1511/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *20.06.2022*நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.198/2022 **பொருள் எண்.56**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை - 2022ம் ஆண்டின் பருவகால மழையினை முன்னிட்டு தயார் நிலையில் இருத்தல் - மழைநீர் வடிகால் தூர்வாரும் பணி மற்றும் சிறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சியில், 2071 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த மழைநீர் வடிகால்கள் கேப்டன் காட்டன் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் கால்வாய், மாம்பலம் கால்வாய், நந்தனம் கால்வாய், ராஜ்பவன் கால்வாய், அடையாறு ஆறு, கூவம் ஆறு, பக்கிங்ஹாம் கால்வாய் ஆகிய நீர்வழி கால்வாய் மற்றும் ஆறுகளில் இணைக்கப்பட்டு, வெள்ளத்தின் போது மழைநீர் தங்கு தடையின்றி செல்ல வழிவகை செய்யப்படுகிறது. இந்த கால்வாய்களில் மிதக்கும் ஆகாயத்தாமரை மற்றும் வண்டல்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆம்பிபியன் இயந்திரம் மற்றும் ரோபோடிக் எக்ஸ்கவேட்டரின் மூலம் அகற்றப்பட்டு, வெள்ளநீர் தங்கு தடையின்றி செல்ல வழிவகை செய்யப்படுகிது. மேலும், புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள், நகரம் முழுவதும் பல்வேறு திட்டங்களில் நடைபெற்று வருகின்றன.

மழைக்காலத்தில் மழைநீர் தங்கு தடையின்றி செல்வதற்கு, நகரில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதைத் தவிர்க்கவும், இந்த மழைநீர் வடிகால் அனைத்தும் தூர்வாரி, சிறு பராமரிப்பு பணிகள் பருவ மழைக்காலம் தொடங்குவதற்கு முன் முடிக்கப்பட வேண்டும். கடந்த பருவமழை காலத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் அடிப்படையில், அனைத்து மழைநீர் வடிகால்களிலும் வண்டல் மண் மற்றும் சிறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அந்தந்த மண்டல அலுவலர்கள் விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடுகள் தயாரித்துள்ளனர்.

மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணியானது மண்டலம்-2, 3, 6 (பகுதி) மற்றும் 7-ல், கொசஸ்தலையாறு வடிநிலத் திட்டப் பணியில் 46-வது சிப்பத்தில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் புதிய முயற்சியாக மண்டலம்-4 மற்றும் 6ல் உள்ள மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகள் தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் தொழிலாளர்களை வைத்து தூர்வாரும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

மீதமுள்ள மண்டலங்களான 5, 8, 9, 10, 11, 12, 13, 14 மற்றும் 15 ஆகிய மண்டலங்களில் உள்ள மழைநீர் வடிகால் தூர்வாருதல் மற்றும் சிறு புனரமைப்பு பணிகள் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ள, மண்டலங்கள் மூலமாக 24 சிப்பங்கள் உள்ளடக்கிய 10 இனங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடுகள் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 10.05.2022 நாளிட்ட நிர்வாக அனுமதியும் மற்றும் மன்ற தீர்மான எண். 116/2022, நாள் 30.05.2022ன் படி மன்றத்தின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

இதில் முதற்கட்டமாக, மண்டலம்- 5, 8, 9, 10, 11, 12 ,13 மற்றும் 14ல் உள்ள பல்வேறு சாலைகளில்/ தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் சிறிய பழுதுகளை சரிபார்க்கும் பணி சிப்பம் -1, 2, 3, 4, 5, 7, 8, 9, 11, 13, 16, 17, 19, 21 மற்றும் 22 ஆகிய 15 சிப்பங்களுக்கான ஒப்ப ஏற்பு கடிதம் 03.06.2022 அன்று வழங்கப்பட்டது.

மேலும், இரண்டாம் கட்டமாக மண்டலம்- 11 மற்றும் 15ல் உள்ள பல்வேறு சாலைகளில்/ தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் சிறிய பழுதுகளை சரிபார்க்கும் பணி சிப்பம் - 15 மற்றும் 24 ஆகிய 2 சிப்பங்களுக்கான ஒப்ப ஏற்பு கடிதம் 07.06.2022 அன்று வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

சிப்பம் – 6, 10, 12, 14, 20 மற்றும் 23 ஆகிய 6 சிப்பங்களுக்கு மற்றும் சிப்பம் -18 குறுகிய கால மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி தகுதி வாய்ந்த ஒப்பங்கள் கோரி 02.06.2022 மற்றும் 04.06.2022 ஆகிய இரு தினங்களில் ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழான "டெக்கன் குரோனிகல் *(Deccan Chronicle)*", தமிழ் நாளிதழான "தீக்கதிர்" மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது. மேற்கண்ட பணியினை குறுகிய கால மின்னணு *(e-tender)* முறையில் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

இப்பணிகள் 6 சிப்பங்களாக 10.06.2022 அன்று மாலை 3.30 மணியளவில் திறக்கப்பட்டதில் சிப்பம்-20 ஒப்பத்தில் ஒப்பந்ததாரர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. மீதமுள்ள 5 சிப்பங்களுக்கு மட்டுமே ஒப்பப்புள்ளிகள் பெறப்பட்டன மற்றும் சிப்பம் – 18க்கான 14.06.2022 அன்று மாலை 3.30 மணியளவில் திறக்கப்பட்டதில் ஒப்பப்புள்ளி கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பப்புள்ளிகள் திறக்கப்பட்டன. ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டு ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 14.06.2022 மற்றும் 15.06.2022 அன்று திறக்கப்பட்டது, ஒப்பத்தில் கலந்துக்கொண்ட ஒப்பந்ததாரர்களின் விவரங்கள் பின்வருமாறு.

(அட்டவணை-I)

வ-எண்	கோப்பு எண்.	சிப்பம் எண்	ஒப்பத்தில் பங்கு அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் *(L1)*	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் *GST* சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (12 சதவீதம் *GST* சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் *2021-22* ஆண்டு அலுவலக விலைப் பட்டியலின் படி
1	B2/1511/2022	6	சிக்ரன் வர்டேஜ் ப்ராஜக்ட்ஸ்	19761050.03	20749102.53	(+) 5.00%
2.	B2/1515/ 2022	10	ஸ்ரீ லக்ஷனா பவுன்டேஷன்	14340147.23	17638381.09	(+) 23.00%
3.	B2/1517/ 2022	12	ஜெய ஸ்ரீ கான்ஸட்ரக்ஷன்	15930477.35	16392461.19	(+)2.90%
4.	B2/1519/ 2022	14	ஜெய ஸ்ரீ கான்ஸட்ரக்ஷன்	12381573.06	12740638.68	(+)2.90%
5.	B2/1528/ 2022	23	ஆர்.சுபாஷ்	16326072.58	16489333.31	(+)1.00%
6.	B2/1523/ 2022	18	ஸ்ரீ வெங்கடேஸ்வரா என்டர்பிரைசஸ்	16704938.25	17817487.14	(+)6.66%

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியானது 2021-22 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் இப்பணிகளுக்கு ஒப்ப சதவீதம் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த *(L1)* ஒப்பந்ததாரர்களிடம் விலைக்குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது.

அதன்படி மேற்குறிப்பிட்ட 6 சிப்பங்களின் ஒப்பந்ததாரர்களில் வ. எண்.1, 2 மற்றும் 6ல் ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு அளித்து கடிதம் அளித்துள்ளார்கள். மேலும் மீதமுள்ள

3 சிப்பங்களின் ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்ய இயலவில்லை என்று கடிதம் அளித்துள்ளார்கள். அதன் விவரம் கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, பேச்சுவார்த்தைக்குப்பின் *L1* ஒப்பந்ததாரர்கள் ஒப்புக்கொண்ட 6 சிப்பங்களின் பணிகளுக்குண்டான குறைந்த விலைப்புள்ளி ஒப்பத்தொகையின் விவரங்கள் பின்வருமாறு.

(அட்டவணை-II)

வ எண்	கோப்பு எண் /பணியின் பெயர்	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் (L1)	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத் தொகை 2021-22 அலுவலக விலைபடி	முதற்கட்ட பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் *2021-22* அலுவலக விலைபடி	முதற்கட்ட பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப தொகை 2021-22 அலுவலக விலைபடி
1	B2/1511/ 2022 சிப்பம்-6, மண்டலம்-08, பகுதி – 22 மற்றும் 23ல் உள்ள பல்வேறு சாலைகளில்/ தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் மற்றும் சிறிய பழுதுகளை சரிபார்க்கும் பணி	சிக்ரன் வர்டேஜ் ப்ராஜக்ட்ஸ்	19761050.03	20749102.53	(+)3.90%	20531730.98
2	B2/1515/2022 சிப்பம்-10, மண்டலம்-09, பகுதி-25 மற்றும் 26ல் உள்ள பல்வேறு சாலைகளில்/ தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் மற்றும் சிறிய பழுதுகளை சரிபார்க்கும் பணி	ஸ்ரீ லக்ஷனா பவுன்டேஷன்	14340147.23	17638381.09	(+)4.15%	14935263.34
3	B2/1517/ 2022 சிப்பம்-12, மண்டலம்-09, பகுதி – 26 மற்றும் 27ல் உள்ள பல்வேறு சாலைகளில்/ தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் மற்றும் சிறிய பழுதுகளை சரிபார்க்கும் பணி	ஜெய ஸ்ரீ கான்ஸட்ரக்ஷன்	15930477.35	16392461.19	(+)2.90%	16392461.19

4	B2/1519/ 2022 சிப்பம்-14, மண்டலம்-10, பகுதி – 30 மற்றும் 31ல் உள்ள பல்வேறு சாலைகளில்/ தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் மற்றும் சிறிய பழுதுகளை சரிபார்க்கும் பணி	ஜெய ஸ்ரீ கான்ஸட்ரக்ஷன்	12381573.06	12740638.68	(+)2.90%	12740638.68
5	B2/1528/ 2022 சிப்பம்-23, மண்டலம்-14, பகுதி – 42ல் உள்ள பல்வேறு சாலைகளில்/ தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் மற்றும் சிறிய பழுதுகளை சரிபார்க்கும் பணி	ஆர்.சுபாஷ்	16326072.58	16489333.31	(+)1.00%	16489333.31
6	B2/1523/ 2022 சிப்பம்-18, மண்டலம்-13, பகுதி – 38ல் உள்ள பல்வேறு சாலைகளில்/ தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் மற்றும் சிறிய பழுதுகளை சரிபார்க்கும் பணி	ஸ்ரீ வெங்கடேஸ்வரா என்டர்பிரைசஸ்	16704938.25	17817487.14	(+)4.10%	17389840.72

மேற்குறிப்பிட்ட 6 ஒப்பந்ததாரர்களில் வரிசை எண்.2ல் ஸ்ரீ லக்ஷனா பவுன்டேஷன் மற்றும் வரிசை எண்.6ல் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா என்டர்பிரைசஸ் அவர்களிடம் மீண்டும் விலைகுறைப்பு செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்ததாரர்கள் விலைகுறைப்பு அட்டவணை பின்வருமாறு,

(அட்டவணை-III)

வ. எண்	கோப்பு எண் /பணியின் பெயர்	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் (L1)	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத் தொகை 2021-22 அலுவலக விலைபடி	இரண் டாம் கட்ட பேச்சு வார்த்தைக் குப்பின் ஒப்பந்த தாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2021-22 அலுவலக விலைபடி	இரண்டாம் கட்ட பேச்சு வார்த்தைக்குப் பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப தொகை 2021-22 அலுவலக விலைபடி

2	B2/1515/2022 சிப்பம்-10, மண்டலம்- 09, பகுதி-25 மற்றும் 26ல் உள்ள பல்வேறு சாலைகளில்/ தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் மற்றும் சிறிய பழுதுகளை சரிபார்க்கும் பணி	ஸ்ரீ லக்ஷனா பவுன்டேஷன்	14340147.23	17638381.09	(+)3.89 %	14897978.96
6	B2/1523/ 2022 சிப்பம்-18, மண்டலம்-13, பகுதி - 38ல் உள்ள பல்வேறு சாலைகளில்/ தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் மற்றும் சிறிய பழுதுகளை சரிபார்க்கும் பணி	ஸ்ரீ வெங்கடேஸ்வரா என்டர்பிரைசஸ்	16704938.25	17817487.14	(+)3.82%	17343066.89

எனவே, மேற்குறிப்பிட்ட 6 சிப்பங்களின் பணிகளுக்கான குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்புக்கொண்ட ஒப்பத்தொகைக்கு பணி ஆணை வழங்க ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்கண்டவற்றின்படி, குறைந்த விலைப்புள்ளி அளித்த L1 ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்க 15.06.2022 மற்றும் 17-06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கி உள்ளது.

எனவே,

1. மூலதன நிதியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள 8, 9, 10, 13 மற்றும் 14 ஆகிய மண்டலங்களில் உள்ள மழைநீர் வடிகால்களில் தூர்வாருதல் மற்றும் சிறு புனரமைப்பு பணிகளுக்காக குறைந்த விலைப்புள்ளி அளித்த மேற்கண்ட அட்டவணை II வரிசை எண்.1 மற்றும் 3, 4 மற்றும் 5 ஒப்பந்ததாரர்களுக்கும் மற்றும் அட்டவணை IIIல் வரிசை எண். 2 மற்றும் 6ல் உள்ள ஒப்பந்ததாரர்களுக்கும், அவர்கள் அளித்த ஒப்பத் தொகைக்கு பணியாணை வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதியும்,
2. அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கியவுடன் பணி தொடங்க அனுமதியும்,
3. மேற்காணும் பணிகளுக்குண்டான செலவீனங்களை மூலதன நிதியின் கீழ் *"(Capital Fund)"* பட்டி தீர்வு செய்ய அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.06.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.74/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"24.6.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.72/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.நீ.வ.து.நக.எண்.பி1/0939/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.06.2022நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.199/2022 **பொருள் எண்.57**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை .. சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் (Phase-II) மண்டலம் 4, 5, 6, 9, 10, 13 மற்றும் 15ல் உள்ள பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்குவதைத் தடுக்க பழைய மழைநீர்வடிகால் இடித்து/புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்காக 10 சிப்பங்களுக்கு ஒப்பம் கோரப்பட்டது - அதில் குறைந்த விலைப்புள்ளி அளித்த 7 சிப்பங்களுக்குரிய பணிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது - தற்போது மீதமுள்ள 3 ஒப்பத்தில் 2 ஒப்பங்கள் திறக்கப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஏற்பு கடிதம் வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி

08.03.2022 அன்று கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் சென்னை மாநகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் வெள்ளம் ஏற்படுவதைத் தவிர்க்க *Advisory Committee* மூலம் பரிந்துரைக்கப்பட்ட பணிகளினை அரசுக்கு பரிந்துரைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்குறிப்பிட்ட செயல்பாடுகளின் பணிகளினை செயல்படுத்த 23.03.2022 அன்று நடந்த கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்பணிகளுக்கு முதற்கட்டமாக ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்து இப்பணியினை செயல்படுத்த அறிவிப்பினை வெளியிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அறிவிப்பினை தொடர்ந்து முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.04.2022 நாளிட்ட குறிப்பில் *Advisory Committee* பரிந்துரையின் அடிப்படையில் அவசரம் அத்தியாவசியம் கருதி பணிகள் துவங்குவதற்கு சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திடம் *(TUFIDCO)* கூர்ந்து ஆய்வு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும், இப்பணிகளினை துவங்குவதற்கு சிங்கார சென்னை *2.0* என்ற திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி, மழைநீர் வடிகால் துறையின் மூலமாக மண்டலம் 4, 5, 6, 9, 10, 13 மற்றும் 15ல் உள்ள பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்குவதைத் தடுக்க பழைய மழைநீர்வடிகால் இடித்து/புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்காக 10 சிப்பங்களாக ரூ.70 கோடி திட்ட மதிப்பீட்டில் குறுகிய கால ஒப்பம் கோரப்பட்டது

பணியின்மதிப்பு மற்றும் இப்பணிக்காக ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை விவரம் பின்வருமாறு

வ.எண்	கோப்பு எண்	பணியின் பெயர்	பணியின் மதிப்பு (ரூ.லட்சத்தில்)	இப்பணிக்காக ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்)
1	மநீவதுநகஎண் பி1/0937/2022	சிப்பம்-1, மண்டலம் 4ல் உள்ள சர்மா நகர் 3வது பிரதான சாலை மற்றும் 2 பிற தெருக்களில் பழைய மழைநீர்வடிகால் இடித்து / புதிய மழைநீர்வடிகால் அமைக்கும் பணி	249.52	264.00

2	மநீவதுநகஎண் பி1/0938/2022	சிப்பம்-2, மண்டலம் 4ல் உள்ள தியாகி பெருமாள் தெரு மற்றும்5 பிற தெருக்களில் பழைய மழைநீர்வடிகால் இடித்து / புதிய மழைநீர்வடிகால் அமைக்கும் பணி	245.74	260.00
3	மநீவதுநகஎண் பி1/0939/2022	சிப்பம்-3, மண்டலம் 6ல் கோட்டம் 45ல் உள்ள பிரகாஷ் ராவ் காலனி (புளியந்தோப்பு) மற்றும் 3 பிற தெருக்களில் பழைய மழைநீர்வடிகால் இடித்து / புதிய மழைநீர்வடிகால் அமைக்கும் பணி	366.72	388.00
4	மநீவதுநகஎண் பி1/0940/2022	சிப்பம்-4, மண்டலம் 10ல் உள்ள போஸ்டல் காலனி முதல் தெரு மற்றும் காமாட்சிபுரம் முதல் தெரு (மேற்கு மாம்பலம்) மற்றும் 3 பிற தெருக்கள் மற்றும் ஆர்ய கவுடா சாலை (மேற்கு மாம்பலம்) மற்றும் லஷ்மி தெரு, சுப்பிரமணிய சாலை மற்றும் 2 பிற தெருக்களில் பழைய மழைநீர்வடிகால் இடித்து / புதிய மழைநீர்வடிகால் அமைக்கும் பணி பழைய மழைநீர்வடிகால் இடித்து / புதிய மழைநீர்வடிகால் அமைக்கும் பணி	1404.49	1486.00
5	மநீவதுநகஎண் பி1/0941/2022	சிப்பம்-5 மண்டலம் 13ல் உள்ள காமராஜ் அவன்யு 2வது தெரு மற்றும் 6 பிற தெருக்களில் மற்றும் கே பி நகர் 4வது பிரதான சாலை மற்றும் 4 பிற தெருக்களில் பழைய மழைநீர்வடிகால் இடித்து / புதிய மழைநீர்வடிகால் அமைக்கும் பணி	1009.42	1068.00
6	மநீவதுநகஎண் பி1/0942/2022	சிப்பம்-6, மண்டலம் 13ல் உள்ள சிட்டி லிங்க் சாலை மற்றும் வேளச்சேரி பிரதான சாலை (ஐந்து பர்லாங் சாலை முதல் ராஜ் பவன் கால்வாய்) மற்றும் 4 பிற தெருக்களில்யில் பழைய மழைநீர்வடிகால் இடித்து / புதிய மழைநீர்வடிகால் அமைக்கும் பணி	1553.82	1644.00
7	மநீவதுநகஎண் பி1/0943/2022	சிப்பம் 7 மண்டலம் 13ல் உள்ள ஏஜிஎஸ் காலனி பள்ளி சாலை மற்றும் 6 பிற தெருக்களில் பழைய மழைநீர்வடிகால் இடித்து / புதிய மழைநீர்வடிகால் அமைக்கும் பணி	462.18	489.00
8	மநீவதுநகஎண் பி1/0944/2022	சிப்பம் 8, மண்டலம் 5ல் உள்ள பாந்தியன் சாலையில் பழைய மழைநீர்வடிகால் இடித்து / புதிய மழைநீர்வடிகால் அமைக்கும் பணி	426.26	451.00

9	மநீவதுநகஎண் பி1/0945/2022	சிப்பம் 9 மண்டலம் 9ல் உள்ள சிவசங்கரன் சாலை , எல்லையம்மன் கோயில் தெரு மற்றும் சொக்கலிங்கம் நகர் ஆகிய இடங்களில் பழைய மழைநீர்வடிகால் இடித்து / புதிய மழைநீர்வடிகால் அமைக்கும் பணி	442.33	468.00
10	மநீவதுநகஎண் பி1/0946/2022	சிப்பம் 10, மண்டலம் 15ல் உள்ள விப்ரோ சாலை மற்றும் பாரத்நகர் பிரதான தெரு ஆகிய இடங்களில் பழைய மழைநீர்வடிகால் இடித்து / புதிய மழைநீர்வடிகால் அமைக்கும் பணி	455.56	482.00
		மொத்தம்	**66.1604**	**7000.00 (70.00Cr)**

மேற்குறிப்பிட்ட பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள மண்டலம் 4, 5, 6, 9, 10, 13 மற்றும் 15ல் உள்ள பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்குவதைத் தடுக்க பழைய மழைநீர்வடிகால் இடித்து/புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்காக 10 சிப்பங்களுக்கு குறுகிய கால ஒப்பங்கள் 28.04.2022 அன்று மின்னணு முறையில் *(e-tender)* கோரப்பட்டது. அதில் குறைந்த விலைப்புள்ளி அளித்த 7 ஒப்பந்ததாரர்களுக்கு முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 16.05.2022 நாளிட்ட அனுமதியும் மற்றும் மன்ற தீர்மான எண் 114/2022 நாள் 30.05.2022ன்படி மன்றத்தின் அனுமதியும் பெறப்பட்டு, 17.05.2022 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

தற்போது மீதமுள்ள 3 சிப்பங்களுக்கு 09.06.2022 அன்று மறு ஒப்பம் கோரப்பட்டது. அவ்வொப்பம் சம்மந்தமாக 01.06.2022 அன்று இந்து தமிழ் நாளிதழிலும் மற்றும் தி இந்து ஆங்கில நாளிதழிலும் பிரசுரிக்கப்பட்டது. அதன்படி 09.06.2022 அன்று 3 சிப்பங்களுக்கு ஒப்பம் திறக்கப்பட்டது. அதில் சிப்பம்-2க்கு யாரும் பங்கேற்காத நிலையில் சிப்பம் 3 மற்றும் 9க்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் முன்னிலையில் 10.06.2022 அன்று நிதி ஆவணம் திறக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பணிக்கு ஒப்பம் கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விலைப்பட்டியல் கீழ் வருமாறு:

(அட்டவணை-I)

வ. எண்	கோப்பு எண்.	அரசாணையின் படி இப்பணிக்காக ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்)	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் **(L1)**	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த தொகை *(12* சதவீதம் *GST* சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் *2020-21* அலுவலக விலைபடி	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் *2021-22* அலுவலக விலைபடி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1.	பி*1/0939/2022* (சிப்பம்-*3)*	388.00	ஸ்ரீ லக்ஷனா பவுன்டேஷன்	*36672603.80*	*45107302.67*	*(+)23.00*	*(+)10.41*

2	பி1/0945/2022 (சிப்பம்-9)	468.00	ஸ்ரீ லக்ஷ்னா பவுன்டேஷன்	44234236.12	54408110.43	(+) 23.00	(+)10.21

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியானது 2020-21 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் இப்பணிகளுக்கு ஒப்ப சதவீதம் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு, குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த (L1) ஒப்பந்ததாரரிடம் விலைக் குறைப்பு கோரி 10.06.2022 அன்று கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

(அட்டவணை-II)

வ. எண்	கோப்பு எண்.	அரசாணையின்படி இப்பணிக்காக ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்)	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் (L1)	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	பேச்சுவார்தைக்குபின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2020-21 அலுவலக விலைபடி	பேச்சுவார்தைக்குபின்ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2021-22 அலுவலக விலைபடி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1.	பி1/0939/2022 (சிப்பம்-3)	388.00	ஸ்ரீ லக்ஷ்னா பவுன்டேஷன்	36672603.80	42906946.45	(+)17.00	(+)5.02
2	பி1/0945/2022 (சிப்பம்-9)	468.00	ஸ்ரீ லக்ஷ்னா பவுன்டேஷன்	44234236.12	51754056.26	(+) 1700 %	(+)4.84

பேச்சுவார்த்தைக்குபின் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியானது 2020-21 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் இப்பணிகளுக்கு ஒப்ப சதவீதம் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு, குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த (L1) ஒப்பந்ததாரரிடம் மீண்டும் விலைக் குறைப்பு கோரி 13.06.2022 அன்று கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர் இறுதி விலைக்குறைப்பு கடிதம் அளித்துள்ளார். ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

(அட்டவணை-III)

வ. எண்	கோப்பு எண்.	அரசாணையின்படி இப்பணிக்காக ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்)	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் (L1)	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்பத்தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	விலைக்குறைப்பிற்கு பின்ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2020-21 அலுவலக விலை படி	விலைக்குறைப்பிற்கு பின்ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2021-22 அலுவலக விலை படி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)

1.	பி1/0939/2022 (சிப்பம்-3)	388.00	ஸ்ரீ லக்ஷனா பவுன்டேஷன்	36672603.80	4266857 4.52	(+)16.35	(+)4.44
2	பி1/0945/2022 (சிப்பம்-9)	468.00	ஸ்ரீ லக்ஷனா பவுன்டேஷன்	44234236.12	51555002.20	(+)16.55	(+)4.43

மூன்றாம்முறை விலைகுறைப்பு பேச்சுவார்த்தைக்கு பின் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியானது 2020-21 ஆம் ஆண்டு அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் இப்பணிகளுக்கு ஒப்ப சதவீதம் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு, குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த (L1) ஒப்பந்ததாரரிடம் மீண்டும் விலைக் குறைப்பு கோரி 16.06.2022 அன்று கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர் இறுதி விலைக்குறைப்பு கடிதம் அளித்துள்ளார். ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

(அட்டவணை-IV)

வ. எண்	கோப்பு எண்.	அரசாணையின்படி இப்பணிக்காக ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்)	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் **(L1)**	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்பத்தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	விலைக் குறைப்பிற்கு பின்ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்ப சதவீதம் 2020-21 அலுவலக விலைபடி	விலைக் குறைப்பிற்கு பின்ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்ப சதவீதம் 2021-22 அலுவலக விலைபடி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1.	பி1/0939/2022 (சிப்பம்-3)	388.00	ஸ்ரீ லக்ஷனா பவுன்டேஷன்	36672603.80	42485211.50	(+)15.85	(+)3.99
2	பி1/0945/2022 (சிப்பம்-9)	468.00	ஸ்ரீ லக்ஷனா பவுன்டேஷன்	44234236.12	51267479.66	(+)15.90	(+)3.85

எனவே, மேற்குறிப்பிட்ட பணிக்கான குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களிடம் பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்புக்கொண்ட ஒப்பதொகைக்காக ஒப்பங்களுக்கு அனுமதி வழங்கி பணியாணை வழங்க உயர்மட்ட ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்கண்டவற்றின்படி, குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியாணை வழங்க உயர்மட்ட ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கி உள்ளது.

எனவே,

1) சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் *(Phase-II)* பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுபாட்டில் உள்ள மண்டலம் 6, 9ல் உள்ள பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்குவதைத் தடுக்க பழைய மழைநீர்வடிகால் இடித்து/புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்காக 2 சிப்பங்களுக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பங்களுக்கு ஒப்புதல் அளித்து அந்த ஒப்பந்ததாரர்களுக்கு பணிஏற்பு கடிதம் வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதியும்,

2) மேற்காணும் பணிக்கான ஒப்பந்ததாரருக்கு "சிங்கார சென்னை 2.0" *(Phase-II)* திட்டத்தின் கீழ் பட்டி தீர்வு செய்ய அனுமதியும்,

3) அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிகுட்பட்டு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கியவுடன் பணி தொடங்க அனுமதியும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"23.06.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.75/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.73/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.நீ.வ.து.ந.க.எண்.பி1/0967/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 02.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.200/2022 **பொருள் எண்.58**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை - மாநில வெள்ள நிவாரண நிதியின் கீழ் மண்டலம் 4, 12 மற்றும் 13ல் உள்ள பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்குவதைத்தடுக்க பழைய மழைநீர் வடிகால்களை இடித்து மற்றும் கூடுதலாக புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்காக 7 சிப்பங்களுக்கு மறு ஒப்பம் கோரப்பட்டது -- குறைந்த விலைப்புள்ளி அளித்த 3 சிப்பங்களுக்கான ஒப்பந்ததாரருக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி.

08.03.2022 அன்று கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் சென்னை மாநகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் வெள்ளம் ஏற்படுவதைத் தவிர்க்க *Advisory Committee* மூலம் பரிந்துரைக்கப்பட்ட பணிகளை அரசுக்கு பரிந்துரைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, மேற்குறிப்பிட்ட செயல்பாடுகளின் பணிகளை செயல்படுத்த 23.03.2022 அன்று நடந்த கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்பணிகளுக்கு முதற்கட்டமாக ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்து இப்பணிகளை செயல்படுத்த அறிவிப்பினை வெளியிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அறிவிப்பினை தொடர்ந்து, முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 04.04.2022 நாளிட்ட குறிப்பில் *Advisory Committee* பரிந்துரையின் அடிப்படையில் அவசரம் அத்தியாவசியம் கருதி பணிகள் செயல்படுத்துவதற்கு மாநில வெள்ள நிவாரண நிதியின் கீழ்திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளினை துவங்குவதற்கு மாநில வெள்ள நிவாரண நிதி திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி , மழைநீர் வடிகால் துறையின் மூலமாக மண்டலம் 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12 மற்றும் 13ல் உள்ள பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்குவதைத் தடுக்க பழைய மழைநீர் வடிகால்களை இடித்து மற்றும் கூடுதலாக புதிய மழை நீர்வடிகால் அமைக்கும் பணிக்காக 44 சிப்பங்களாக ரூ.291.36 கோடி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, 04.04.2022 அன்று 44 சிப்பங்களுக்கு ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது.

இவ்வொப்பந்தப்புள்ளி 05.04.2022 அன்று ஆங்கில செய்தித் தாளான "தி டைம்ஸ் ஆப் இந்தியா", தமிழ் செய்தித்தாளான "தினகரன், மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும், 44 சிப்பங்களுக்கு ஒப்பந்த புள்ளிகள் 39 சிப்பங்களாக 08.04.2022 அன்று தமிழ் செய்தித்தாளான "தினகரன் மற்றும் ஆங்கில செய்தித் தாளான "தி இந்து" ஆகிய செய்தித்தாள்களில் திருத்திய *(Errata)* ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனை தொடர்ந்து ஒப்ப இறுதி நாளான 28.04.2022 அன்று மாலை 3.30 மணி அளவில் 39 சிப்பங்களுக்கான ஒப்பங்கள், ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. அதில் ஒப்பத்தில் கலந்துக் கொண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில், தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டனர் மற்றும் சிப்பம் 3,4,12,19,27,36 மற்றும் 39 ஆகிய ஒப்பங்களில் ஒப்பந்ததாரர்கள் யாரும் கலந்துக் கொள்ளவில்லை. மேலும், தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் நிதி ஆவணம் திறக்கப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த 30 சிப்பங்களின் ஒப்பந்ததாரர்களுக்கு 18.05.2022 அன்று ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டது .

மேலும், சிப்பம் *3,4,12,19,27,36,39,40,41,42* மற்றும் 43 ஆகிய ஒப்பங்களுக்கு யாரும் கலந்துக் கொள்ளாத மற்றும் தகுதி பெறாத காரணத்தினால் 30.04.2022 அன்று மறு ஒப்பம் கோரப்பட்டது. 03.05.2022 அன்று தமிழ் செய்தித்தாளான "முரசொலி மற்றும் ஆங்கில செய்தித் தாளான "தி இந்து" ஆகிய செய்தித்தாள்களில் மறு ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனை தொடர்ந்து ஒப்ப இறுதி நாளான 12.05.2022 அன்று மாலை 3.30 மணி அளவில் 11 சிப்பங்களுக்கான ஒப்பங்கள், ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. சிப்பம் 4,19,41,42 மற்றும் 43 ஆகிய ஒப்பங்களில்

ஒப்பந்ததாரர்கள் யாரும் கலந்துக்கொள்ளவில்லை மற்றும் சிப்பம்-2,16 ஆகியவை மறு ஒப்பம் கோரப்பட்டுள்ளது. அதில் சிப்பம்-3,12,27,36,39 மற்றும் 40 ஆகிய சிப்பங்களின் ஒப்பத்தில் கலந்துக் கொண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில், தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மேலும், தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் நிதி ஆவணம் 23.05.2022 அன்று திறக்கப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த 6 சிப்பங்களின் ஒப்பந்ததாரர்களுக்கு 30.05.2022 அன்று ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டது .

மேலும், சிப்பம் *2,4,19, 41,42* மற்றும் 43 ஆகிய ஒப்பங்களுக்கு யாரும் கலந்துக் கொள்ளாத மற்றும் தகுதி பெறாத காரணத்தினால் 13.05.2022 அன்று மறு ஒப்பம் கோரப்பட்டது. 15.05.2022 அன்று தமிழ் செய்தித்தாளான "முரசொலி மற்றும் ஆங்கில செய்தித் தாளான "டெக்கான் க்ரோனிகல்" ஆகிய செய்தித்தாள்கள் , சென்னை மாநகராட்சி செய்தி மலரில் மறு ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டது மற்றும் சிப்பம் 16க்கு 21.05.2022 அன்று மறு ஒப்பம் கோரப்பட்டது. 22.05.2022 அன்று தமிழ் செய்தித்தாளான "முரசொலி மற்றும் ஆங்கில செய்தித் தாளான "டெக்கான் க்ரோனிகல்" ஆகிய செய்தித்தாள்கள் , சென்னை மாநகராட்சி செய்தி மலரில் மறு ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டது இதனை தொடர்ந்து ஒப்ப இறுதி நாளான 26.05.2022 அன்று மாலை 3.30 மணி அளவில் 6 சிப்பங்களுக்கான ஒப்பங்கள், ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு, சிப்பம் 2,19,41 மற்றும் 42 ஆகிய ஒப்பங்களில் ஒப்பந்ததாரர்கள் யாரும் கலந்துக்கொள்ளாததால் மறு ஒப்பம் கோரப்பட்டுள்ளது. அதில் சிப்பம்-4 மற்றும் 43 ஆகிய சிப்பங்களின் ஒப்பத்தில் கலந்துக் கொண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில், தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மேலும், தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் நிதி ஆவணம் 31.05.2022 அன்று திறக்கப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த 2 சிப்பங்களின் ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மேலும், சிப்பம் 16 ஒப்ப இறுதி நாளான 31.05.2022 அன்று திறக்கப்பட்ட தொழில் நுட்ப ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 01.06.2022 அன்று திறக்கப்பட்டது.

அதில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

(அட்டவணை-*I*)

வ. எண்	கோப்புஎண்.	ஒப்பத்தில் கலந்துக் கொண்ட ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் GSTசேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (12 சதவீதம் *GST* சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2020-21 அலுவலக விலைபடி	விலைப் புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் *2021-22* அலுவலக
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	ம.நீ.வ.து.பி1//0967/2022 சிப்பம்-*4*	அண்ணாமலை கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	29227070.89	34487943.65	(+)18.00%	(+)5.72%
2	ம.நீ.வ.து.பி*1/0979/2022* சிப்பம்-*16*	பி அண்டு சி ப்ராஜெக்ட்ஸ் பி லிட்	98572083.42	122229383.44	(+)24.00%	(+)10.05%
		ஸ்ரீநிக் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்		தகுதி பெறவில்லை		
3	ம.நீ.வ.து.பி*1/1394/2022* சிப்பம்-*43*	*B.*சுரேஷ்	20695121.51	24832076.30	(+)19.99%	(+)7.16%

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியானது *2020-21* ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் இப்பணிகளுக்கு ஒப்ப சதவீதம் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு, குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த *(L1)* ஒப்பந்ததாரர்களிடம் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது, அதன்படி ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். விலைக்குறைப்புக்கு பின் ஒப்பந்ததாரர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது,

(அட்டவணை-II)

வ. எ ண்	கோப்பு எண்.	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் (L1)	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	பேச்சுவார்த்தைக்குப் பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப தொகை	பேச்சுவார்த்தைக்குப் பின் ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்ப சதவீதம் 2020-21 அலுவலக விலைபடி	பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்ப சதவீதம் 2021-22 அலுவலக விலைபடி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	ம.நீ.வ.து.பி1//0967/2022 சிப்பம்-4 மண்டலம் 4ல் மணப்பாக்கம் தெரு மற்றும் இதர 4 தெருக்களில் மழைநீர் தேங்குவதைத் தடுக்க பழைய மழைநீர் வடிகால்களை இடித்து மற்றும் கூடுதலாக புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணி	அண்ணாமலை கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	29227070.89	33903402.23	(+)16.00%	(+)3.92%
2	ம.நீ.வ.து.பி1/0979/2022 சிப்பம்-16 மண்டலம் 13ல் இந்திராநகர் 16வது குறுக்கு தெரு மற்றும் இதர 19 தெருக்கள், சீனிவாசமூர்த்தி அவென்யூ தெரு மற்றும் இதர 5 தெருக்களில் மழைநீர் தேங்குவதைத் தடுக்க பழைய மழைநீர் வடிகால்களை இடித்து மற்றும் கூடுதலாக புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணி	பி அண்டு சி ப்ராஜெக்ட்ஸ் பி லிட்	98572083.42	115427909.69	(+)17.10%	(+)3.93%
3	ம.நீ.வ.து.பி1/1394 /2022 சிப்பம்-43, மண்டலம் 4ல் அழகிரிசாமி தெரு மற்றும் இதர 7 தெருக்களில் மழைநீர் தேங்குவதைத் தடுக்க பழைய மழைநீர் வடிகால்களை இடித்து மற்றும் கூடுதலாக புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணி	B.சுரேஷ்	20695121.51	24089121.44	(+)16.40%	(+)3.95%

மேற்கண்டவற்றின்படி, குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்க 02.06.2022 அன்று உயர்மட்ட ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கி உள்ளது.

எனவே,

1) மாநில வெள்ள நிவாரண நிதியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுபாட்டில் உள்ள மண்டலம் 4, மற்றும் 13ல் உள்ள பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்குவதைத் தடுக்க பழைய மழைநீர் வடிகால் இடித்து மற்றும் கூடுதலாக புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்காக 3 சிப்பங்களுக்கு அட்டவணை IIன்படி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பம் ஒப்புதல் அளித்தமைக்கும்,

2) அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிகுட்பட்டு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கியவுடன் பணி தொடங்க அனுமதியும்,

3) மேற்காணும் பணிகளுக்கான ஒப்பந்ததாரர்களுக்கு "மாநில வெள்ள நிவாரண நிதியின் கீழ் பட்டி தீர்வு செய்ய அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.06.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.64/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"24.6.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.62/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.நீ.வ.து.ந.க.எண்.பி2/1520/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *07.06.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.201/2022 **பொருள் எண்.59**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை - *2022*ம் ஆண்டின் பருவகால மழையினை முன்னிட்டு தயார் நிலையில் இருத்தல் - மழைநீர் வடிகால் தூர்வாரும் பணி மற்றும் சிறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்க அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சியில், 2071 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த மழைநீர் வடிகால்கள் கேப்டன் காட்டன் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் கால்வாய், மாம்பலம் கால்வாய், நந்தனம் கால்வாய், ராஜ்பவன் கால்வாய், அடையாறு ஆறு, கூவம் ஆறு, பக்கிங்ஹாம் கால்வாய் ஆகிய நீர்வழி கால்வாய் மற்றும் ஆறுகளில் இணைக்கப்பட்டு, வெள்ளத்தின்போது மழைநீர் தங்கு தடையின்றி செல்ல வழிவகை செய்யப்படுகிறது. இந்த கால்வாய்களில் மிதக்கும் ஆகாயத்தாமரை மற்றும் வண்டல்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆம்பிபியன் இயந்திரம் மற்றும் ரோபோடிக் எக்ஸ்கவேட்டரின் மூலம் அகற்றப்பட்டு, வெள்ளநீர் தங்கு தடையின்றி செல்ல வழிவகை செய்யப்படுகிது. மேலும், புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள், நகரம் முழுவதும் பல்வேறு திட்டங்களில் நடைபெற்று வருகின்றன.

மழைக்காலத்தில் மழைநீர் தங்கு தடையின்றி செல்வதற்கு, நகரில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதைத் தவிர்க்கவும், இந்த மழைநீர் வடிகால் அனைத்தும் தூர்வாரி, சிறு பராமரிப்பு பணிகள் பருவ மழைக்காலம் தொடங்குவதற்கு முன் முடிக்கப்பட வேண்டும். கடந்த பருவமழை காலத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் அடிப்படையில், அனைத்து மழைநீர் வடிகால்களிலும் வண்டல் மண் மற்றும் சிறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அந்தந்த மண்டல அலுவலர்கள் விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடுகள் தயாரித்துள்ளனர்.

மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணியானது மண்டலம்-2, 3, 6 (பகுதி) மற்றும் 7-ல், கொசஸ்தலையாறு வடிநிலத் திட்டப் பணியில் 46-வது சிப்பத்தில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், புதிய முயற்சியாக மண்டலம்-4 மற்றும் 6ல் உள்ள மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகள் தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் தொழிலாளர்களை வைத்து தூர்வாரும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

மீதமுள்ள மண்டலங்களான 5, 8, 9, 10, 11, 12, 13, 14 மற்றும் 15 ஆகிய மண்டலங்களில் உள்ள மழைநீர் வடிகால் தூர்வாருதல் மற்றும் சிறு புனரமைப்பு பணிகள் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ள, மண்டலங்கள் மூலமாக 24 சிப்பங்கள் உள்ளடக்கிய 10 இனங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடுகள் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதியும் மற்றும் மன்றத்தின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

இதில் முதற்கட்டமாக, மண்டலம்- 5, 8, 9, 10, 11, 12 ,13 மற்றும் 14ல் உள்ள பல்வேறு சாலைகளில்/ தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் சிறிய பழுதுகளை சரிபார்க்கும் பணி சிப்பம் -*1, 2, 3, 4, 5,* 7, 8, 9, 11, 13, 16, 17, 19, 21 மற்றும் 22 ஆகிய 15 சிப்பங்களுக்கான ஒப்ப ஏற்பு கடிதம் *03. 06. 2022* அன்று வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

24.05.2022 அன்று ஒப்பந்ததாரர்கள் யாரும் கலந்து கொள்ளாத காரணத்தால் சிப்பம் – *15, 18* மற்றும் 24 ஆகிய மூன்று சிப்பங்களுக்கான குறுகிய கால மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி தகுதி வாய்ந்த ஒப்பங்கள் கோரி 26.05.2022 அன்று ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழான "டெக்கன் குரோனிகல் *(Deccan Chronicle)*", தமிழ் நாளிதழான "தீக்கதிர்" மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது. மேற்கண்ட பணியினை குறுகிய

கால மின்னணு *(e-tender)* முறையில் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

இப்பணிகள் 3 சிப்பங்களாக 02.06.2022 அன்று மாலை 3.30 மணியளவில் திறக்கப்பட்டதில் சிப்பம்-18 ஒப்பத்தில் ஒப்பந்ததாரர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. மீதமுள்ள 2 சிப்பங்களுக்கு மட்டுமே ஒப்பப்புள்ளிகள் பெறப்பட்டன. கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பப்புள்ளிகள் திறக்கப்பட்டன அதில் சிப்பம் 24 ஒப்பந்தாரரின் நிதி ஆவணம் 02.06.2022 அன்று திறக்கப்பட்டது மற்றும் சிப்பம் 15ல் ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டு ஒப்பந்தாரரின் நிதி ஆவணம் 03.06.2022 அன்று திறக்கப்பட்டது, ஒப்பத்தில் கலந்துக்கொண்ட ஒப்பந்ததாரர்களின் விவரங்கள் பின்வருமாறு.

(அட்டவணை-*I*)

வ-எண்	கோப்பு எண்.	சிப்பம் எண்	ஒப்பத்தில் பங்கு அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் *(L1)*	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் *GST* சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (12 சதவீதம் *GST* சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2021-22 ஆண்டு அலுவலக விலைப் பட்டியலின் படி
1	B2/1520/2022	15	திரு.ஆர்.தங்கராஜ்	20570679.65	23738564.32	(+) 15.40%
2.	B2/1529/ 2022	24	திருவாளர்கள்.அக்ஷயா தீப் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்& பில்டர்ஸ்	1642566.50	1888951.48	(+) 15.00%

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியானது *2021-22* ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் இப்பணிகளுக்கு ஒப்ப சதவீதம் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த *(L1)* ஒப்பந்ததாரர்களிடம் விலைக்குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது.

அதன்படி, மேற்குறிப்பிட்ட 2 சிப்பங்களின் விவரம் கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, பேச்சுவார்த்தைக்குப்பின் *L1* ஒப்பந்ததாரர்கள் ஒப்புக்கொண்ட 2 சிப்பங்களின் பணிகளுக்குண்டான குறைந்த விலைப்புள்ளி ஒப்பத்தொகையின் விவரங்கள் பின்வருமாறு.

(அட்டவணை-*II*)

வ. எண்	கோப்பு எண் /பணியின் பெயர்	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் (L1)	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத் தொகை 2021-22 அலுவலக விலைபடி	பேச்சு வார்த்தைக் குப்பின் ஒப்பந்த தாரர் அளித்த ஒப்ப சதவீதம் *2021-22* அலுவலக விலைபடி	பேச்சு வார்த்தைக்குப் பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப தொகை 2021-22 அலுவலக விலைபடி

1	B2/1506/ 2022 சிப்பம்-15, மண்டலம்-11, பகுதி – 32 மற்றும் 33ல் உள்ள பல்வேறு சாலைகளில்/ தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் மற்றும் சிறிய பழுதுகளை சரிபார்க்கும் பணி	ஆர்.தங்கராஜ்	20570679.65	23738564.32	(+)3.99%	21391449. 77
2	B2/1529/2022 சிப்பம்-24, மண்டலம்- 15 பகுதி-44 மற்றும் 45ல் உள்ள பல்வேறு சாலைகளில்/ தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் மற்றும் சிறிய பழுதுகளை சரிபார்க்கும் பணி	அக்ஷயா தீப் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்& பில்டர்ஸ்	1642566.50	1888951.48	(+)3.90%	1706626.59

எனவே, மேற்குறிப்பிட்ட 2 சிப்பங்களின் பணிகளுக்கான குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்புக்கொண்ட ஒப்பத்தொகைக்கு பணியாணை வழங்க ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்கண்டவற்றின்படி, குறைந்த விலைப்புள்ளி அளித்த *L1* ஒப்பந்ததாரர்களுக்கு பணியாணை வழங்க 06.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கி உள்ளது.

எனவே,

1. மூலதன நிதியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள 11 மற்றும் 15 ஆகிய மண்டலங்களில் உள்ள மழைநீர் வடிகால்களில் தூர்வாருதல் மற்றும் சிறு புனரமைப்பு பணிகளுக்காக 2 சிப்பங்களுக்கு அட்டவணை- *II*ன்படி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு அனுமதியும்.
2. அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கியவுடன் பணி தொடங்க அனுமதியும் மன்றத்தின் பின்னேற்பு ஆணை பெறவும்,
3. மேற்காணும் பணிகளுக்குண்டான செலவீனங்களை மூலதன நிதியின் கீழ் *"(Capital Fund)"* பட்டி தீர்வு செய்யவும்,

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"23.06.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.65/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"24.6.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.63/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.நீ.வ.து.ந.க.எண்.பி2/1506/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *07.06.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.202/2022 **பொருள் எண்.60**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை - 2022ம் ஆண்டின் பருவகால மழையினை முன்னிட்டு தயார் நிலையில் இருத்தல் - மழைநீர் வடிகால் தூர்வாரும் பணி மற்றும் சிறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியாணை வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சியில், 2071 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த மழைநீர் வடிகால்கள் கேப்டன் காட்டன் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் கால்வாய், மாம்பலம் கால்வாய், நந்தனம் கால்வாய், ராஜ்பவன் கால்வாய், அடையாறு ஆறு, கூவம் ஆறு, பக்கிங்ஹாம் கால்வாய் ஆகிய நீர்வழி கால்வாய் மற்றும் ஆறுகளில் இணைக்கப்பட்டு, வெள்ளத்தின்போது மழைநீர் தங்கு தடையின்றி செல்ல வழிவகை செய்யப்படுகிறது. இந்த கால்வாய்களில் மிதக்கும் ஆகாயத்தாமரை மற்றும் வண்டல்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆம்பிபியன் இயந்திரம் மற்றும் ரோபோடிக் எக்ஸ்கவேட்டரின் மூலம் அகற்றப்பட்டு, வெள்ளநீர் தங்கு தடையின்றி செல்ல வழிவகை செய்யப்படுகிது. மேலும், புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள், நகரம் முழுவதும் பல்வேறு திட்டங்களில் நடைபெற்று வருகின்றன.

மழைக்காலத்தில் மழைநீர் தங்கு தடையின்றி செல்வதற்கு, நகரில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதைத் தவிர்க்கவும், இந்த மழைநீர் வடிகால் அனைத்தும் தூர்வாரி, சிறு பராமரிப்பு பணிகள் பருவ மழைக்காலம் தொடங்குவதற்கு முன் முடிக்கப்பட வேண்டும். கடந்த பருவமழை காலத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் அடிப்படையில், அனைத்து மழைநீர் வடிகால்களிலும் வண்டல் மண் மற்றும் சிறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அந்தந்த மண்டல அலுவலர்கள் விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடுகள் தயாரித்துள்ளனர்.

மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணியானது மண்டலம்-2, 3, 6 (பகுதி) மற்றும் 7-ல், கொசஸ்தலையாறு வடிநிலத் திட்டப் பணியில் 46-வது சிப்பத்தில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், புதிய முயற்சியாக மண்டலம்-4 மற்றும் 6ல் உள்ள மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகள் தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் தொழிலாளர்களை வைத்து தூர்வாரும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

மீதமுள்ள மண்டலங்களான 5, 8, 9, 10, 11, 12, 13, 14 மற்றும் 15 ஆகிய மண்டலங்களில் உள்ள மழைநீர் வடிகால் தூர்வாருதல் மற்றும் சிறு புனரமைப்பு பணிகள் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ள, மண்டலங்கள் மூலமாக 24 சிப்பங்கள் உள்ளடக்கிய 10 இனங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடுகள் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.947/2021 நாள்.*29.12.2021* மற்றும் *10.05.2022* நாளிட்ட முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதியும் மற்றும் மன்றத்தின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள இரு உறைகள் முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் கோரி 13.05.2022 அன்று ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழான "டெக்கன் குரோனிகல் *(Deccan Chronicle)*", தமிழ் நாளிதழான "தமிழ் முரசு" மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது. மேற்கண்ட பணியினை குறுகிய கால மின்னணு *(e-tender)* முறையில் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

இப்பணிகள் 24 சிப்பங்களாக 24.05.2022 அன்று மாலை 3.30 மணியளவில் திறக்கப்பட்டதில் சிப்பம் 15, 18, மற்றும் 24 ஒப்பங்களில் ஒப்பந்ததாரர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. மீதமுள்ள 21 சிப்பங்களுக்கு மட்டுமே ஒப்பப்புள்ளிகள் பெறப்பட்டன. கலந்து

தனியார் மயமாக்கப்பட்ட மண்டலங்களில், அதாவது மண்டலங்கள்-1, 2, 3 மற்றும் 9 முதல் 15 வரை உள்ள மண்டலங்களில் ஒப்பந்ததாரர்கள் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ள தங்களது தூய்மை பணியாளர்களுக்கு நலப் பொருட்கள் மற்றும் நவீனமயமாக்கப்பட்ட பிரதிபலிப்புடன் கூடிய தரமான சீருடைகள் அந்தந்த ஒப்பந்ததாரர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

தூய்மை பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை கருத்தில் கொண்டு, தனியார்மயமாக்கப்பட்ட மண்டலங்களில் பணியாற்றிவரும் தூய்மை பணியாளர்களுக்கு தனியார்

ஒப்பந்ததாரர்களால் வழங்கப்படும் சீருடைகளுக்கு இணையாக பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றிவரும் தூய்மை பணியாளர்களுக்கும் கைகளில் ஒளிரும் நாடா, இடதுபுறத்தில் லோகோவுடன் கூடிய இணைப்பு பாக்கெட்டுகள், சரிசெய்யக்கூடிய மூடலுக்கான நீட்டிக்கப்பட்ட இடுப்புப் பட்டை, பக்க சாய்வான பைகள், பின்புற நுகத்தடியில் கான்ட்ராஸ்ட் பேனல், பின்புறம் லோகோ, பின்புறம் / அணிந்தவரின் வலதுபுறத்தில் ஜிப் பாக்கெட் போன்ற பல அம்சங்களை உள்ளடக்கிய நவீனமயமாக்கப்பட்ட ஒளிரும் சீருடைகள் *(Reflective Uniforms comprising Reflective tape at Sleeves, Patch pockets with Logo at Wearers left, Extended waistband for adjustable closure, Side slant pockets, Contrast Panel at Back Yoke, Logo at back, Zip packet at back / wearer's right etc.)* வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியால் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் மண்டலம்-4, 5, 6, 7 மற்றும் 8ல் பணியாற்றிவரும் தூய்மை பணியாளர்களின் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

வ. எண்.	மண்டலம்	நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை	NMR பணியாளர்களின் எண்ணிக்கை	NULM பணியாளர்களின் எண்ணிக்கை	மொத்தம்
1	4	697	-	947	1,644
2	5	1,194	-	864	2,058
3	6	786	-	856	1,642
4	7	240	-	1,457	1,697
5	8	1,728	-	252	1,980
6	பிற மண்டலங்களில் கழிவறை சுத்தம் செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளும் தூய்மை பணியாளர்கள்	761	494	-	1,255
மொத்தம்		**5,406**	**494**	**4,376**	**10,276**

ஒரு சீருடையின் தோராயமான விலை ரூ.1,568/- (ரூ.1,400/- + ஜிஎஸ்டி 12%) ஆகும். பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலங்கள்-4, 5, 6, 7 மற்றும் 8ல் பணியாற்றிவரும் மேலே குறிப்பிட்டுள்ள 10,276 எண்ணிக்கையிலான தூய்மை பணியாளர்களுக்கு சீருடைகள் கொள்முதல் செய்து வழங்குவதற்கான மொத்த செலவுத் தொகை ரூ.3,22,25,536/- (10,276 பணியாளர்கள் x 2 எண்ணிக்கை ஒரு வருடத்திற்கு x ரூ.1,568/-) ஆகும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியால் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் மண்டலம்-4, 5, 6, 7 மற்றும் 8ல் பணியாற்றிவரும் தூய்மை பணியாளர்களுக்கு 20,552 எண்ணிக்கை (10,276 பணியாளர்கள் x 2 எண்ணிக்கை ஒரு வருடத்திற்கு) நவீனமயமாக்கப்பட்ட ஒளிரும் சீருடைகள் ரூ.3,23,00,000/- (ரூபாய் மூன்று கோடியே இருபத்து மூன்று இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் 2022-2023ஆம் நிதியாண்டில் கொள்முதல் செய்து வழங்க நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட செலவினத்தை கணக்கு தலைப்பு எண்210-20-04-04 (Uniform – Conservancy Works)ன்கீழ் மேற்கொள்ளவும்,

3. 2022-2023ஆம் நிதியாண்டில் கணக்கு தலைப்பு எண்210-20-04-04 (Uniform - Conservancy Works)ன்கீழ் திடக்கழிவு மேலாண்மை துறைக்கு (தலைமையிடம்) நிதி ஏதும் ஒதுக்கீடு செய்யப்படாததால், இக்கணக்கு தலைப்பின்கீழ் ரூ.3.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.06.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.36/2022, நாள்.21.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"24.6.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.66/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

வ.து.ந.க.எண்.ஜி1/6743/2008
முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 18.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.210/2022 **பொருள் எண்.68**

பொது சீராய்வு - பெருநகர சென்னை மாநகராட்சி - சொத்து வரி பொது சீராய்வு அரசாணை வெளியிடப்பட்டது - சொத்து வரி பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது - சொத்து வரி பொது சீராய்வுக்கான அறிவிப்புகள் சொத்து உரிமையாளர்களுக்கு வழங்குதல் - அவசர அவசியம் கருதி மத்திய அரசின் தபால் துறை மூலம் விநியோகம் செய்ய பணி ஆணை வழங்கியதற்கும் - தோராயமாக ஏற்படும் செலவினம் 1,75,00,000/- ஒதுக்கீடு செய்வதற்கும் மற்றும் மேற்கொள்ளப்படும் செலவினத்திற்கும் பின்னேற்பு அனுமதி.

அரசாணை (நிலை) எண். 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (M.A. IV) துறை, நாள் 30.03.2022-ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து பகுதிகளுக்கும் சொத்துவரி பொது சீராய்வு 01.04.2022 முதல் நடைமுறைப்படுத்திட மன்றத் தீர்மான எண்.63/2022, நாள் 30.05.2022-ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, மன்றத் தீர்மானத்தினை தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து பகுதிகளுக்கும் சொத்துவரி பொது சீராய்வு 1/2022-23 மேற்கொள்ளப்பட்டு, அனைத்து சொத்து உரிமையாளர்களுக்கும் வழங்குவதற்காக சொத்துவரி பொது சீராய்வு அறிவிப்பு (Notice-1) தயாரிக்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919, பிரிவு 374 (3)-ல் "Whenever in any bill, notice, form or other document served or sent under this act, a period is fixed within which any tax or other sum is to be paid or any work executed or anything provided, such period shall, in the absence of the express provision to the contrary in this act be calculated from the date of such service or sending by post registered".

மேற்குறிப்பிட்ட சட்ட பிரிவின்படி, சொத்துவரி சீராய்வு அறிவிப்புகள் (Notice-1) சொத்து உரிமையாளர்களுக்கு விநியோகித்து அவர்களிடம் ஒப்புதல் பெறவேண்டியது அவசியம் என்பதாலும், சொத்து உரிமையாளர்கள் சொத்துவரி பொது சீராய்வின்படி, நிர்ணயிக்கப்பட்டுள்ள அரையாண்டிற்கான (1/2022-23) சொத்துவரியினை அறிந்து செலுத்த வேண்டும் என்பதாலும், சொத்துவரி பொது சீராய்வு அறிவிப்புகள், சொத்துவரி உரிமையாளர்களுக்கு சார்வு செய்யப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் 13 லட்சத்திற்கும் மேற்பட்ட சொத்து உரிமையாளர்கள் உள்ளனர். அனைத்து சொத்து உரிமையாளர்களுக்கு புதிய சொத்துவரி அறிவிப்புகளை வருவாய் துறையை சார்ந்த களப்பணியாளர்களை கொண்டு சார்வு செய்வது இயலாத நிலையாகும். மேலும், இப்பணியில் களப்பணியாளர்கள் ஈடுபட நேரிடின் அன்றாட வசூல் பணிகளில் தொய்வும் மற்றும் கால விரயமும் ஏற்படும்.

சொத்துவரி பொது சீராய்வின் அறிவிப்புகள் சார்வு செய்திட ஏதுவாக, இவ்வலுவலக 25.05.2022 தேதியிட்ட கடிதத்தின் மூலமாக, மத்திய அரசு தபால் துறையிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில், மத்திய அரசு தபால் துறையின் 31.05.2022 தேதியிட்ட நேர்முக கடிதத்தில், அளிக்கப்பட்டுள்ள விலைப்புள்ளியில், சொத்து வரி பொது சீராய்வுக்கான அறிவிப்புகளை பதிவு அஞ்சல் மூலம் சார்வு செய்து, ஒப்புகையுடன் வழங்குவதற்கு, ஒரு அறிவிப்பிற்கு ரூ.25/-வீதம் கட்டணம் எனவும் மற்றும் ஒப்புகை பெறப்படாமல் வழங்குவதற்கு ஒரு அறிவிப்பிற்கு ரூ.22/-வீதம் கட்டணம் எனவும், விரைவு தபால் சேவை (Speed Post) மூலம், சொத்துவரி பொது சீராய்வுக்கான அறிவிப்புகளை சார்வு செய்து வழங்குவதற்கு (Without acknowledgement), ஒரு அறிவிப்பிற்கு ரூ.15/-வீதம் கட்டணம் (Without GST) எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தபால் துறையுடன் நடைபெற்ற முதனிலை கூட்டத்தில், பதிவு தபால் சேவை மூலமாக, சார்வு செய்யப்பட வேண்டிய சொத்துவரி பொது சீராய்வு அறிவிப்புகளை, விரைவு தபால் சேவை (Speed Post) மூலமாக சார்வு செய்திடலாம் என்றும், அவ்வாறு சார்வு செய்யப்பட்டதற்குரிய

ஒப்புகைகளை அறிய இணைய வழியாக வழிவகை செய்யப்படும் என்றும் அஞ்சல் துறையால் தெரிவிக்கப்பட்டது. இம்முறையில், இவ்வலுவலகத்திலிருந்து சார்வு செய்ய அளிக்கப்பட்ட அறிவிப்புகளுக்கு, சார்பு செய்யப்பட்டமைக்கு ஒப்புகை தபால் துறையால் அளிக்கப்படும். தபால் துறையால் சார்வு செய்ய இயலாத அறிவிப்புகள், பெருநகர சென்னை மாநகராட்சியிடம் திரும்ப ஒப்படைப்பு செய்யப்படும். இதனை "பயனர்" *(user ID)* மற்றும் "கடவுச் சொல்" *(password)* பயன்படுத்தி அறிய இயலும்.

மேலும், அஞ்சல் துறையால் விரைவு தபால் சேவை *(Speed Post)* மூலம், சார்வு செய்யப்பட வேண்டிய அறிவிப்புகளுக்கு ஏற்படும் செலவினங்கள், கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, தோரயமாக *10* லட்சம் அறிவிப்புகளுக்கு செலவினத் தொகை ரூ.*1.50* கோடி ஏற்படும் என்றும், இம்முறையில் சார்வு செய்வதன் மூலம் ரூ.*37.50* லட்சம் தள்ளுபடி கிடைக்கும் என்றும், முன்கூட்டியே எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்காக ரூ.*13.50* லட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும் என்றும் பட்டியலிடப்பட்டுள்ளது.

<u>அட்டவணை</u>

S No.	Particulars	Numbers/ Amount
A	No. of articles	10,00,000 (Ten Lakhs)
B	Speed post (upto 50gms) (within the municipality limit: 600001-600130)	Rs.15/-(without GST)-without acknowledgement card
C	Total tariff (10,00,000*15)	Rs.1,50,00,000/-(1.5 Cr.)
D	Discount applicable on the monthly (if soft copy given)	Rs.37,50,000/-
E	Premailing activities (app Rs. 1.35 per article)	Rs.13,50,000/-
F	Total tariff for 10 Lakhs articles (C-D+E)	Rs.1,26,00,000/-(without GST)

இது தவிர, சொத்துவரி பொது சீராய்வு அறிவிப்புகளை தபால் துறையின் மூலம் "*Book Now Pay Later*" – என்ற சேவையினை பயன்படுத்தி, அறிவிப்புகளை சார்வு செய்யும் பட்சத்தில், சார்வு செய்யப்பட்ட அறிவிப்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, தபால் துறையால் மாதம் ஒன்றிற்கு அளிக்கப்படும் செலவின தொகை விவரத்தை பெற்று கொண்டு, செலவின பட்டியினை தீர்வு செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், சொத்துவரி பொது சீராய்வு அறிவிப்புகள் விரைவு தபால் *(Speed Post)* மூலம் சார்வு செய்திடலாம் என கருதப்படுகிறது.

மேற்படி பணிக்கு, தபால் துறைக்கு செலுத்தப்பட வேண்டி சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து *(GST)* தளர்வு பெற, பெருநகர சென்னை மாநகராட்சி மூலம், அரசு சார்ந்த துறையின் நிகழ்வு என குறிப்பிட்டு, இவ்வலுவலகத்தால் சான்று <u>(CERTIFICATE)</u> தபால் துறைக்கு அளிக்கப்பட வேண்டும். ஏற்கனவே, சில அரசு துறைகளால் இவ்வகையில் தளர்வு கோரப்பட்டு, தபால் துறையால், சரக்கு மற்றும் சேவை வரி *(GST)*, செலுத்துவதிலிருந்து தளர்வு வழங்கப்பட்டுள்ளது.

எனவே,

1) மத்திய அரசின் தபால் துறை அளித்துள்ள விலைப்புள்ளியின்படி, சொத்துவரி பொது சீராய்வுக்கான அறிவிப்புகளை, விரைவு தபால் சேவை மூலம் *(Speed Post Service)* சார்வு செய்வதற்கு, ஒரு அறிவிப்புக்கு ரூ.*15/- (Without GST)* என்ற கட்டண வீதத்தினை இறுதி செய்து, சொத்துவரி உரிமையாளர்களுக்கு சார்வு செய்திட தபால் துறைக்கு பணி ஆணை வழங்கியமைக்கும்,
2) சொத்துவரி பொது சீராய்வு அறிவிப்புகளை, தபால் துறையின் மூலம் "*Book Now Pay Later*"– என்ற சேவையின் அடிப்படையில், அவ்வப்போது சார்வு செய்யப்பட்ட அறிவிப்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, தபால் துறையால் அவ்வப்போது அளிக்கப்படும் செலவின பட்டியினை பெற்று தீர்வு செய்வதற்கும்,

3) 13 லட்சத்திற்கும் மேலாக சொத்துவரி அறிவிப்புகள் தபால் துறை மூலம் சார்வு செய்வதால் ஏற்படும் செலவினத் தொகை, தோராயமாக ரூ. 1,75,00,000/-யை கணக்கு தலைப்பு அஞ்சல் செலவின கணக்கு குறியீடு எண்.220-22-01-00ல் ஒதுக்கீடு செய்து, செலவினம் மேற்கொள்வதற்கும்,

4) மேற்படி சேவைக்காக தபால் துறைக்கு செலுத்தப்பட வேண்டிய சரக்கு மற்றும் சேவை வரிக்கு (GST), தளர்வு பெற, பெருநகர சென்னை மாநகராட்சி மூலம், அரசு சார்ந்த துறையின் நிகழ்வு எனக் குறிப்பிட்டு, சரக்கு மற்றும் சேவை வரி (GST), செலுத்துவதிலிருந்து தளர்வு கோரியதற்கும்,

மேற்கண்ட வரிசை எண்.1 முதல் 4 வரையிலான இனங்களுக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.6.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.69/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

வ.து.ந.க.எண்.ஜி1/4869/2021
முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 21.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.211/2022 **பொருள் எண்.69**

உலக வங்கி, பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் துறை, சொந்த ஆதார வருவாயை அதிகரித்தல், அறிக்கை சமர்ப்பிக்க மூன்று மாத காலக்கெடு, கலந்தாலோசகர் நியமனம் (*M/s Athena Infonomics India Pvt.Ltd.*, நிறுவனம்) கால நீட்டிப்பு கோரி அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது, அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது - அறிக்கைக்கு மன்றத்தின் அனுமதி

அரசால் வெளியிடப்பட்டுள்ள *16.09.2021* தேதியிட்ட அரசாணையில், சென்னை நகர கூட்டு பங்களிப்பு திட்டத்திற்கும் *(Chennai City Partnership Program)* மற்றும் அதற்கென வழங்கப்பட்ட இணை குறியீட்டுகளுக்கும் *(Linked Indicators)* திருத்திய முதனிலை ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. சென்னை நகர கூட்டு பங்களிப்பு திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் *5* ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படவுள்ளது.

மேற்படி திட்டத்தின் ஒரு பொருளாக, பெருநகர சென்னை மாநகராட்சியின் சொந்த வருவாயினை குறிப்பிட்ட சதவீதத்தில் *(increase in GCC own-source revenues (percent))* உயர்த்தப்பட வேண்டும். மேற்படி பொருள் தொடர்பான நிதி பங்கீடு கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

Result Area (US$ Million)	DLI	Responsible Agency	Allocated amount by WB and AIIB (US$ million)	GoTN Counterpart Funding (US$ million)
Improving financial sustainability or urban services ($60 m)	Increased annual own-resource –revenues in GCC (percentage)	GCC/ GoTN	30	13
	Improved financial sustainability of WSS services with user fees increasingly covering O & M cost	CMWSSB/ GoTN	30	13

சொந்த ஆதார வருவாயை மேம்படுத்துவதற்கான செயல்திட்டத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியால் தயாரித்து ஏற்றுக் கொள்ளுவது என்பது இத்திட்டத்தின் அவசியம் என்பதுடன், இப்பணிகள் *2022* ஆம் ஆண்டு மார்ச் *31*ம் தேதிக்குள் முடிக்கப்பட வேண்டும்.

அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் சொந்த ஆதார வருவாயினை *(OSR)* ஆண்டிற்கு குறிப்பிட்ட சதவீதம் உயர்த்துவது குறித்தும், அது தொடர்பான நிதி ஒதுக்கீடு குறித்தும் கீழ்கண்டவாறு (Program Actions and Monitoring – Urban Pillar (Finance & HR) DLI 9) தெரிவிக்கப்பட்டுள்ளது.

Type of DLI	Scalability	Unit of Measure	Total allocated Amount (USD)	As % of Total Financing Amount
Out put	Yes	Text	15,000,000.00	10.00

DLI 9 Percentage increase in GCC's annual OSR

Period	Value	Allocated amount USD & formula
Baseline	No revenue improvement plan, Rs. 1,240 Crores(INR) OSR from 2017/18	

Year 1	(9.1) Preparation and adoption of OSR improvement action plan by GCC Council	1,500,000.00(9.1) to be achieved by March 31, 2022.
Year 2-5	(9.2) Percent increase in OSR over baseline	13,500,000.00(9.2) $ 300,000 for every percent increase in OSR over baseline from 15% upto 60% and an aggregate maximum amount of $13,500,000

DLI 9	Percentage increase in GCC annual OSR
Description	The objective of this DLI is to improve GCC's financial capacity. It incentivizes GCC to improve OSR from various sources including property taxes, user charges, municipal properties, etc. Over the baseline year of FY 2017-18. This DLI is scalable with DLR 9.1 non-scalable and time bound and DLR 9.2 scalable and on-time bound.
Data source/Agency	GCC
IVA	Verification entity
Procedure	This will be verified by the IVA based on review of action plan produced by GCC; and review of audited financial statements of GCC every year.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சொந்த ஆதார வருவாயினை அதிகரிப்பது தொடர்பான அறிக்கையினை *(Augmentation of Own Revenue Source of GCC - Report)* தயாரித்து உலக வங்கிக்கு சமர்ப்பிக்க, *Athena Infonomics India Pvt. Ltd* என்ற நிறுவனம் கலந்தாலோசகராக நியமிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மேற்படி கலந்தாலோசகரால், சொந்த வருவாய் ஆதாரத்தினை மேம்படுத்துவதற்கான செயல் திட்டம் தொடர்பாக *Work Review Presentation* என்ற அறிக்கையினை *28.12.2021* அன்று சமர்ப்பித்துள்ளது.

இந்த சூழ்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் வெள்ள நிவாரணப்பணிகளில் ஈடுபட்டிருந்ததாலும், அதே சமயம் தொடர்ந்து உள்ளாட்சி தேர்தல் தொடர்பான முழுமையாக ஈடுபடுத்தப்பட்டிருந்தாலும் மேற்படி கலந்தாலோசகருடன் வழக்கமான ஒருங்கிணைப்புடன் செயல்பட முடிய வில்லை. இதனால், அடுத்த 5 ஆண்டுகளுக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, தரமான அறிக்கையினை அளிப்பதற்கு, மேலும், மூன்று மாதகாலம் அதாவது *13.06.2022* வரையிலான காலத்திற்கு நீட்டிப்புக் கோரி அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

இந்த நிலையில், உலக வங்கியின் நிதி உதவியினை பெரும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாய் ஆதாரத்தினை அதிகரிப்பது தொடர்பாக, மேற்படி கலந்தாலோசகரால், அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கான பெருநகர சென்னை மாநகராட்சி சொந்த ஆதார வருவாய் அதிகரிப்பது தொடர்பான முழுமையான அறிக்கை *(Final Report)* சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையின்படி, நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பட்சத்தில் உலக வங்கி நிதி உதவி கிடைப்பதற்கான வழி ஏற்படும்.

எனவே, உலக வங்கி நிதி உதவியினை பெறுவதற்கு, மேற்படி கலந்தாலோசகரால் *(M/s. Athena Infonomics India Pvt. Ltd* என்ற நிறுவனம்*)* சமர்ப்பிக்கப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சொந்த ஆதார வருவாய் அதிகரிப்பு தொடர்பான அறிக்கையினை *(Augmentation of Own Revenue Source of GCC - Report)* நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பார்வைக்காகவும், அனுமதிக்காவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.90/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பெருநகர சென்னை மாநகராட்சியின் சொந்த ஆதார வருவாயினை பெருக்குவது தொடர்பாக நியமனம் செய்யப்பட்ட கலந்தாலோசகரால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் பின்வருமாறு:-

சொத்துவரி	
வ.எண்.	பரிந்துரைகள்
1	புவிசார் தகவல் அமைப்பை பயன்படுத்தி, வரிமதிப்பீடு குறைவாக செய்யப்பட்ட இனங்கள் என கண்டறியப்பட்டவைகளை 3 வது நபரைக் கொண்டு வரிமதிப்பீடுகள் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணியினை ஜனவரி 2023 முதல் மார்ச் 2023க்குள் முடிக்கப்பட வேண்டும்.
2	தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திடமிருந்து பெறப்பட்ட விவரங்களில், வணிக உபயோக பகுதிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ள சில இனங்களுக்கு, பெருநகர சென்னை மாநகராட்சியால் குடியிருப்பு இனங்கள் என வரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இவற்றிற்கு, பெருநகர சென்னை மாநகராட்சியால் குடியிருப்பு அல்லாத பகுதி என மறுமதிப்பீடு செய்வதன் மூலம் சொத்துவரி உயர்த்தப்பட வேண்டும். இப்பணியினை பிப்ரவரி 2023க்குள் முடிக்கப்பட வேண்டும்.
3	சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்வதன் மூலம், சொத்துவரி வருவாய் உயர்த்தப்பட வேண்டும்.
4	அலைப்பேசி கோபுரங்கள் மீதான சொத்துவரி விதிப்புகள் மேற்கொண்டு, செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2022 க்குள் சொத்துவரி வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
5	ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை சிறப்பு நிகழ்வாக நிலுவை தொகை வசூல் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

தொழில்வரி	
வ.எண்.	பரிந்துரைகள்
1	நிறுவன பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தொழில்வரி செலுத்தாத இனங்களை கண்டறிந்து தொழில்வரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணியினை ஜூலை 2022 முதல் நவம்பர் 2022க்குள் நடைமுறைப்படுத்த வேண்டும்.
2	புவிசார் தகவல் அமைப்பை பயன்படுத்தி கண்டறியப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 3வது நபரைக் கொண்டு தொழில் வரிமதிப்பீடு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணியினை ஜனவரி 2023 முதல் மார்ச் 2023க்குள் முடிக்கப்பட வேண்டும்.
3	சொத்துவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட இனங்களைக் (குடியிருப்பு அல்லாதவை மற்றும் குடியிருப்பு/குடியிருப்பு அல்லாதவை) கொண்டு தொழில்வரி மதிப்பீடு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணியினை மார்ச் 2023க்குள் முடிக்கப்பட வேண்டும்.
4	தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில்முறை சார்ந்த சங்கங்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தி, அவற்றை வரிமதிப்பீட்டு வலைக்குள் கொண்டு வரப்பட வேண்டும்.

நிறும வரி	
வ.எண்.	பரிந்துரைகள்
1	நிறுவன பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நிறும வரி செலுத்தாத இனங்களை கண்டறிந்து நிறுமவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணியினை ஜூலை 2022 முதல் நவம்பர் 2022க்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

தொழில் உரிமம்	
வ.எண்.	பரிந்துரைகள்
1	மன்றத்தின் அனுமதியுடன் அரசாணை பெற்று தொழில் உரிமம் பெறுவதற்கான விதி முறைகள் தளர்த்தி உரிமங்களை எளிதில் கிடைத்திட வழிவகை மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணியினை ஏப்ரல் 2023க்குள் முடிக்கப்பட வேண்டும்.
2	புவிசார் தகவல் அமைப்பை பயன்படுத்தி கண்டறியப்பட்ட தகவல்களின் அடிப்படையில் உரிமங்கள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணியினை ஜனவரி 2023 முதல் மார்ச் 2023 குள் முடிக்கப்பட வேண்டும்.

விளம்பர கட்டணம்/உரிமம் கட்டணம்	
வ.எண்.	பரிந்துரைகள்
1	விளம்பர கட்டணம் மற்றும் உரிமம் கட்டணம் தொடர்பான புதிய கொள்கைளுக்கு மன்றத்தின் அனுமதியுடன் அரசாணை பெற்று நடைமுறைப்படுத்தலாம். இப்பணியினை அக்டோபர் 2022க்குள் முடிக்கப்பட வேண்டும்.
2	1000 பேருந்து நிழற்குடையில் விளம்பரப்படுத்த தனியாருக்கு ஒப்பந்தம் அளிப்பதன் மூலம் விளம்பர கட்டண வருவாய் உயர்த்தப்பட வேண்டும். இப்பணியினை ஜூலை 2022க்குள் முடிக்கப்பட வேண்டும்.
3	சாலை வழிகாட்டிகள் மற்றும் சாலை திட்டுக்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 8000 மின் கம்பங்களில் விளம்பரம் செய்வதன் மூலம் விளம்பர கட்டண வருவாய் உயர்த்தப்பட வேண்டும்.

வாகன நிறுத்த மேலாண்மை	
வ.எண்.	பரிந்துரைகள்
1	சீர்மிகு நகர திட்டத்தின் மூலம் வாகன நிறுத்தங்களை உருவாக்கி, பராமரித்தல் மற்றும் நிதி பங்கீடு மூலம் வருவாய் மேம்படுத்தப்பட வேண்டும்

நில குத்தகை	
வ.எண்.	பரிந்துரைகள்
1	நிலுவைகளை வசூலிக்க தனி கவனம் செலுத்தி வருவாய் உயர்த்தப்பட வேண்டும்.

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/1530/2021

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 18.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.212/2022 **பொருள் எண்.70**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - மண்டலம்-5, பகுதி-13, கோட்டம்-56, புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி. கிராமம், பிளாக் எண்.20, புல எண்.2252/5-ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தனி நிலத்தில் "B.R.N கார்டன்" திட்டப்பகுதிக்காக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட நில உரிமை மாற்றம் செய்யவும், முன்நுழைவு அனுமதி வழங்கவும் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலர்/மண்டலம்-5 அவர்களின் 18.08.2021 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-5, பகுதி-13, வார்டு-56-ல் உள்ள பி.ஆர்.என்.கார்டன் பகுதியில் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் செயலர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் அரசு சார்ந்த அதிகாரிகள் 19.06.2021- அன்று இவ்விடத்தை கள ஆய்வு செய்யப்பட்டதாகவும், இந்த கள ஆய்வின் அடிப்படையில் பி.ஆர்.என்.கார்டன் திட்டப்பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்புகள் பழுதடைந்த காரணத்தால் அதனை இடித்து விட்டு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக மறு கட்டுமானம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக கட்டப்பட்ட குடியிருப்புகள் மிகவும் சிதிலமடைந்து உள்ளதாகவும் இந்த பி.ஆர்.என்.கார்டன் பகுதியினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் வசம் ஒப்படைக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்நேர்வில் பி.ஆர்.என்.கார்டன் பகுதி சம்மந்தமாக விரிவான அறிக்கையை கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

பி.ஆர்.என்.கார்டன் பகுதி (Bunder Raman Naicker Garden) சுமார் 12,000 ச.மீ பரப்பளவு உடையது. இதில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாகவும் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாகவும் கட்டப்பட்ட குடியிருப்புகள் போக மீதம் உள்ள பகுதியில் பொது மக்கள் மூலமாக ஆக்கிரமிப்பு செய்து குடிசைகள் மற்றும் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக சுமார் 60 வருடங்களுக்கு முன்பு ஒன்பது எண்ணிக்கையிலான (A.B.C.D.E.F.G.H &I-Block) அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளது. இந்த ஒன்பது அடுக்கு மாடி கட்டிடத்தில் தரை தளம் மற்றும் முதல் தளம் (G+1) வீதம் 146 குடியிருப்புகளில் பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் குடியிருந்து வருகின்றனர்.

இதேபோல் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக சுமார் 50 வருடங்களுக்கு முன்பு இரண்டு (A & B - Block) அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளது. இதில் A-Block (G-3)-ல் தரை தளத்தில் பதினாறு குடியிருப்புகள் வீதம் மூன்று மாடி கொண்ட (16 x 4 = 64) 64 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளது. மற்றும் B-Block (G+3)-ல் தரை தளத்தில் எட்டு குடியிருப்புகள் வீதம் மூன்று மாடி கொண்ட (8 x 4 = 32) குடியிருப்புகளாக ஆக மொத்தம் 96 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளது.

வ. எண்	குடியிருப்புகள் விவரங்கள்	மொத்த குடியிருப்புகள் எண்ணிக்கை	குறிப்பு
1.	பெருநகர சென்னை மாநகராட்சி	146	

2.	தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகள்	96	
3.	ஆக்கிரமிப்பு குடிசைகள்	174	
4.	ஆக்கிரமிப்பு குடியிருப்புகள்	32	Permanent Structure
	மொத்தம்	448	

இந்த பி.ஆர்.என்.கார்டன் பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாகவும் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மூலமாகவும் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் அனைத்தும் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட காரணத்தினாலும், பழுதடைந்த காரணத்தினாலும், மற்றும் இயற்கையின் மூலம் ஏற்பட்ட மாற்றங்கள் காரணத்தினால் அக்கட்டிடத்தில் விரிசல்களும் மற்றும் மரங்களும் வளர்ந்து உள்ளது. இதனால் இக்கட்டிடமானது மிகவும் சிதிலமடைந்து ஆபத்தை ஏற்படுத்தும் அபாயகரமானதாகவும் உள்ளது. மேலும், இக்கட்டிடத்தில் வசிக்கும் குடியிருப்பு வாசிகளுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் வாழ்வதற்கு தகுதியற்ற நிலையில் பேராபத்து ஏற்படும் வகையில் உள்ளது.

மேலும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி, செயற்பொறியாளர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களின் 05.07.2021 நாளிட்ட கடிதத்தில், பி.ஆர்.என்.கார்டனில் உள்ள கட்டிடம் மற்றும் இடத்தை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திடம் ஒப்படைக்கும்படி கோரப்பட்டதை தொடர்ந்து இதன் பொருட்டு உரிய மேல் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநரின் 14.09.2021 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-5, வார்டு எண்.56-ல் அமைந்ததுள்ள சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி நகர் கிராமம், புல எண்.2252/5, மொத்த வீஸ்தீரணம் 2.70 ஏக்கர் விஸ்தீரணத்தில் 2.35 ஏக்கர் பரப்பளவில் """"B.R.N கார்ட்ன்"" திட்டப்பகுதியில் குடியிருப்புகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், இப்புலத்தில் 5 கிரவுண்டு 652 ச.அடி நிலமானது மாநகராட்சி தீர்மானம் எண்.590/03 நாள்.20.10.2003-ன்படி வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டது. மேற்காணும் திட்டப்பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமான 2 பிளாக்குகளில் 96 குடியிருப்புகளுக்கு, அடுத்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 7 பிளாக்குகளில் 146 (G+1) அடுக்குமாடி குடியிருப்புகளும் உள்ளது.

மேற்படி, திட்டப்பகுதி பழுதடைந்து சிதிலமடைந்த நிலையில் உள்ளதால், இத்திட்டப்பகுதியின் சட்டமன்ற உறுப்பினர் (துறைமுகம் தொகுதி) அவர்களால் பல முறை ஆய்வு மேற்கொள்ளப்பட்டதின் தொடர்ச்சியாக கடந்த 19.06.2021 சனிக்கிழமை அன்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் ஊரக தொழில்துறை அமைச்சர், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அதிகாரிகள் மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் இணைந்து ஆய்வு நடத்தப்பட்டு இத்திட்டப்பகுதியில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளையும், பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் 7 பிளாக்குகளில் அமைந்துள்ள 146 குடியிருப்புகளையும் இடித்து விட்டு "B.R.N கார்ட்ன்" திட்டப்பகுதியில் வாரியத்தின் மூலம் (PMAY) பிரதம மந்திரியின் அவாஸ் யோஜனா திட்டத்தில் "அனைவருக்கும் வீடு" (HFA) வழங்கும் திட்டத்தின் கீழ் மறுகட்டுமானம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதனடிப்படையில் சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி. நகர் கிராமம், புல எண்.2252/2-ல் மாநகராட்சி (தனி) வகைப்பாடு கொண்ட 2.35 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தினை வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்திட அரசாணை (நிலை) எண்.35 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2)

துறை நாள்.17.02.1997-ன்படி கிரவுண்டு ஒன்றுக்கு (2400 சதுர அடிக்கு) ரூ.10,000/- என்கின்ற அடிப்படையில் பெற்று கொண்டு, மேற்படி "மாநகராட்சி தனி" நிலத்தினை வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் மேற்கண்ட பி.ஆர்.என்.கார்டன் திட்டப்பகுதியில் கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளில் அவ்விடத்தில் வசித்துவரும் 146 குடும்பங்கள் அடங்கிய பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப்பணியாளருக்கு எவ்வித பங்களிப்பு முன்பணத்தொகை கோராமல் குடியிருப்பு ஒதுக்கீடு செய்ய இசைவு தெரிவிக்குமாறும், மேலும் அரசாணை எண்.1862 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.26.09.1979-ன்படி மேற்படி திட்டப்பகுதியில் புதியதாக கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளில் பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப்பணியாளருக்கு 25 சதவீதம் குடியிருப்பு ஒதுக்கீடு செய்யுமாறு மேலும் இந்நிலத்திற்கு மனை ஒன்றுக்கு ரூ.10,000/- என்ற கிரைய அடிப்படையில் நிலக்கிரயத்தொகை செலுத்த இசைவினை தெரிவிக்குமாறு, 25.10.2021 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநரின் 11.02.2022 நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம், வ.உ.சி நகர் கிராமம், பிளாக் எண். 20, புல எண்.2252/5-ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் "B.R.N.கார்டன்" திட்டப்பகுதியில் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கையில் 25% குடியிருப்புகள், அரசாணை எண்.1862, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.26.09.1979-ன்படி, அத்திட்டப்பகுதியிலோ அல்லது வேறொரு திட்டப்பகுதியிலோ பெருநகர சென்னை மாநகராட்சியின் 4-ஆம் தர தூய்மை பணியாளர்களுக்கு வாரியத்தில் வழங்கப்படும் எனவும், மேலும் ஏனைய ஆக்கிரமிப்புதாரர்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படும் திட்டப்பகுதிக்கான பயனாளிகளின் பங்குத் தொகையினை மாநகராட்சியே ஏற்க வேண்டும் எனவும், மேலும் மேற்காணும் புலங்களில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை மனை ஒன்றுக்கு ரூ.10,000/- வீதம் என்ற கிரய அடிப்படையில் நிலக்கிரயத்தொகையினை பெற்றுக் கொண்டு வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்திடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் மண்டலம்-5, வார்டு-56, பி.ஆர்.என்.கார்டன் திட்டப்பகுதியில் குடியிருந்து வரும் பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப்பணியாளர்கள் ஒவ்வொருவரும் செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகை (ம) பெருநகர சென்னை மாநகராட்சியால் செலுத்தப்பட வேண்டிய மொத்த பங்களிப்பு தொகை விவரத்தினை தெரிவிக்குமாறு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநரிடம் 10.05.2022 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களின் 24.05.2022 நாளிட்ட, கடிதத்தில், அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் (HFA) திட்டம் செயல்படுத்திட திட்ட அறிக்கையினை தயார் செய்து மத்திய அரசிடம் ஒப்புதல் பெற்ற பிறகு பணிகள் துவங்கப்பட்டு திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதால் மேற்கோரப்பட்ட விவரங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்கு பிறகு தெரிவிக்கப்படும் என்றும் மேற்காணும் புலங்களில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான B.R.N. கார்டன் திட்டப்பகுதி நிலத்தினை மனை ஒன்றுக்கு ரூ.10,000/- வீதம் என்ற கிரய அடிப்படையில் நிலக்கிரயத் தொகையினை பெற்றுக் கொண்டு வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்திடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

எனவே, மண்டலம்-5, வார்டு-56, புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி. கிராமம், பிளாக் எண்.20, புல எண்.2252/5-ல் 1 ஹெக்டேர் 9 ஏர்ஸ் 25.5 சதுர மீட்டர் மொத்த விஸ்தீரணத்தில் 2.35 ஏக்கர் பரப்பளவு கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான (தனி) நிலத்தினை B.R.N கார்டன் திட்டப்பகுதிக்காக அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் பொருட்டு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு அரசாணை எண்.35 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.17.02.1997-ன்படி மனை ஒன்றுக்கு ரூ.10,000/- என்ற கிரய அடிப்படையில் நில கிரயத்தொகை

பெற்றுக் கொண்டு நில உரிமை மாற்றம் செய்வதற்கும், அவசர அவசியம் கருதி அவ்விடத்தில் வாரியத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள, கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு, முன் நுழைவு அனுமதி வழங்குவதற்கு நிலைக்குழு வரிவிதிப்பு (ம) நிதி மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

நிபந்தனைகள்:-

1. மேற்படி திட்டப்பகுதியில் அடங்கியுள்ள சாலைகள், பொது கழிப்பிடங்கள் மற்றும் திறந்த வெளி நிலங்கள் (பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள்) போன்றவைகளை தானப்பத்திரம் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உரிய முறையில் வாரியம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
2. இத்திட்டப்பகுதி பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுபாட்டின் கீழ் சாலைகள், மருத்துவ மனைகள், பள்ளிக்கூடங்கள், பொது கழிப்பிடங்கள் மற்றும் அலுவலகங்கள் போன்றவைகள் இருந்தால் அவைகள் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுபாட்டிலேயே இருக்கும்.
3. இத்திட்டப்பகுதியில் கட்டப்படவுள்ள குடியிருப்புகளில் 25 விழுக்காடு பெருநகர சென்னை மாநகராட்சி 4-ஆம் தர சிப்பந்திகளான துப்பரவு பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இதனை உறுதி செய்த பின்னரே இந்நிலம் வாரியத்திற்கு ஒப்படைக்கப்படும்.
4. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் செலுத்த கோரிய மொத்த பயனாளிகளின் பங்களிப்பு தொகையானது அரசால் நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் மட்டுமே செலுத்த இயலும்.

"24.6.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.70/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

க.துந.க.எண்.பி1/0882-03/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *14.06.2022*நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.213/2022 **பொருள் எண்.71**

ஒப்பம்- கட்டடத்துறை - மண்டலம்-5,வார்டு-*53*, *CB* சாலையில் உள்ள *CHS* புதிதாக தரைத்தளம் + 3 தளங்கள் உடன் கூடிய 16 வகுப்பறைகள் படிகட்டுகள், கழிப்பறைகள் கட்டும் பணிக்கு திருவாளர் S. வள்ளி, அவர்களுக்கு அவசரம் மற்றும் அவசியம் கருதி ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கி பணியை ஆரம்பித்ததற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம்-5,வார்டு-53, *CB* சாலையில் உள்ள *CHS* புதிதாக தரைத்தளம் + 3 தளங்கள் உடன் கூடிய *16* வகுப்பறைகள் படிகட்டுகள், கழிப்பறைகள் கட்டும் பணி
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	*G.O.(MS) No.61 - Municipal Administration & Water Supply (MC.I) Department* நாள் *28,04,2022*
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2021 -2022ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ. 3,82,00,000.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ 3,27,90,875.79
	(ஆ) எதிர்பாரா செலவு (2.5%)	ரூ. 8,18,401.60
	(இ) தரக்கட்டுப்பாடு (1.0%)	ரூ. 3,27,908.76
	(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் (1.0%)	ரூ. 3,27,908.76
	(உ) சரக்கு மற்றும் சேவை வரி 12%	ரூ. 39,34,905.09
	bkh¤j«	ரூ. **3,82,00,000.00**
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1. பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர், நாள் 31.03.2022 *2*- தி இந்து , நாள்31.03.2022
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	05.05.2022
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	சிங்கார சென்னை *2.0*
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	மூன்று (e-Tender) ஒப்பங்கள் இணையத்தளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது
11	ஒப்பந்ததாரர் தகுதி வகுப்பு சான்று இணைத்துள்ளாரா-?	ஆம்

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 05.05.2022 அன்று மூன்று ஒப்பங்கள் *e-Tender* மூலமாக பெறப்பட்டன. தொழிற்நுட்ப ஒப்பம்(*Technical Bid)* திறக்கப்பட்டதில் கீழ்கண்ட மூன்று ஒப்பந்ததாரர்கள் கலந்துக்கொண்டனர்.

1. திருவாளர் S. .வள்ளி.

2. PTM Projects PVT Ltd.

.3. மாடர்ன் இன்ஜினீயர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிடெட்,

இதில் தகுதியில்லாத காரணத்தால் திருவாளர். மாடர்ன் இன்ஜினீயர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிடெட், அவர்களது ஒப்பமானது நிராகரிக்கப்பட்டது.

மேலும் நிபந்தனைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர்கள் என்று கீழ்கண்டுள்ள ஒப்பந்ததாரர்கள் கண்டறியப்பட்டு 18.05.2022 அன்று நிதி ஒப்பம் *(Financial Bid)* திறக்கப்பட்டது அதன் விவரம் பின்வருமாறு :

வ. எண்.	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி	2021-2022 பணியின் அலுவலக மதிப்பு (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	*PTM Projects PVT Ltd.*	3,27,90,875.79	3,43,64,837.83	(+) 4.80% அதிகம்
2	S. .வள்ளி.	3,27,90,875.79	3,37,74,602.06	(+)3.00% அதிகம்

மேற்கண்டுள்ளவாறு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். S. .வள்ளி., அவர்களின் ஒப்பத் தொகை 2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலை பட்டியலின்படி பணியின் மதிப்பு தொகையான ரூ.3,27,90,875.79/-யைவிட (+)3.00% அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ. 3,37,74,602.06/- ஆகும். ஒப்பந்ததாரருக்கு விலைக்குறைப்பு செய்ய 18.05.2022 அன்று கடிதம் அனுப்பபட்டது. மேலும், விலை குறைப்பு செய்ய சம்மதம் என தெரிவித்து (+)2.99% அதிகம் என தெரிவித்து 20.05.2022 அன்று கடிதம் அளித்துள்ளார்.

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் விவரம்

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி	2021-2022 பணியின் அலுவலக மதிப்பு (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	S. வள்ளி,	3,27,90,875.79	33771322.98	(+) 2.99% அதிகம்

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த திருவாளர். S. வள்ளி, அவர்களின் ஒப்பத் பணித்தொகை ரூ.3,37,71,322.98/- (ரூபாய் மூன்று கோடியே முப்பத்தி ஏழு இலட்சத்து எழுபத்தோறாயிரத்து முந்நூற்று இருபத்தி இரண்டு மற்றும் தொண்ணூற்று எட்டு பைசா மட்டும்) 2021-2022ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டின் விலைப்பட்டியலை ஒப்பிடுகையில் (+)2.99% அதிகமாக உள்ளது, மேலும் 12% சதவீத சரக்கு மற்றும் சேவை வரி ரூ.40,52,558.76/-ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.3,78,23,881.74/- க்கு (ரூபாய் மூன்று கோடியே எழுபத்தெட்டு இலட்சத்து இருபத்தி மூன்றாயிரத்து எண்ணூற்றி எண்பத்தியொன்று மற்றும் எழுபத்தி நான்கு பைசா மட்டும்), மதிப்புள்ள இப்பணிக்கு திருவாளர். S. வள்ளி, அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

CCMC ACT, 1919பிரிவு 80-ன் படி ரூபாய் ஒரு கோடிக்கு மேல் உள்ள ஒப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு உள்ளது. மேலும், இந்த பணிக்கு சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது.

இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணிஏற்பு கடிதம் வழங்கப்பட்டது.

எனவே, மண்டலம்-5,வார்டு-53, *CB* சாலையில் உள்ள *CHS* புதிதாக தரைத்தளம் + *3* தளங்கள் உடன் கூடிய *16* வகுப்பறைகள் படிகட்டுகள், கழிப்பறைகள் கட்டும் பணிக்கு திருவாளர். *S.* வள்ளி, அவர்களுக்கு 2021-2022 ஆண்டின்அலுவலக மதிப்பீட்டை விட (+)2.99%க்கு அதிகமான தொகையான ரூ.3,37,71,322.98/- மற்றும் 12 சதவீத சரக்கு மற்றும் சேவை வரி ரூ.40,52,558.76/-ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.3,78,23,881.74/- க்கு (ரூபாய் மூன்று கோடியே எழுபத்தெட்டு இலட்சத்து இருபத்தி மூன்றாயிரத்து எண்ணூற்றி எண்பத்தியொன்று மற்றும் எழுபத்தி நான்கு பைசா மட்டும்)க்கு பணி ஏற்பு கடிதம் வழங்கியதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

> *"23.06.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.73/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"
>
> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.71/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

மஅ2,நக.எண். சி1/1724/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.214/2022 **பொருள் எண்.72**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-2 - கோட்டம்-15 முதல் 22 வரை - தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின்கீழ் (NULM) கோட்ட அலுவலகம், பகுதி அலுவலகம், மண்டல அலுவலகம், பொதுக்கழிப்பிடம் தூய்மை பணி, சாலைப்பணி, பூங்கா பணி மற்றும் லாரி நிலையம் ஆகிய இடங்களில் பணிபுரியும் மொத்தம் 85 பணியாளர்களின் பணிக்காலம் 07.06.2022 அன்று முடிவடையவுள்ளது - இந்த பணியாளர்களின் பணிக்காலத்தினை 08.06.2022 முதல் 07.06.2023 வரை பணிநீடிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-2ல் (மணலி) பகுதி 4 மற்றும் 5 வார்டு 15 முதல் 22 வரை 43.93 சதுர கி.மீ பரப்பளவுள்ள 8 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 10 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1157 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும் மண்டலம்-2 சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகரமயமாக்குதலுக்கு பின்னர் நாளக்கு நாள் இம் மண்டலத்தின் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது. மண்டலம்-2 (மணலி) வார்டு-15 முதல் 22 வரை உள்ள பகுதிகளில் தோராயமாக 60 மெட்ரிக் டன் குப்பைகள் தினந்தோறும் சேகரிக்கப்படுகிறது. வார்டு 15 முதல் 22 வரை 8 வார்டுகளில் துப்புரவு பணிகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு 232 பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே.) அவர்களின் 10.03.2021 நாளிட்ட குறிப்பில், மண்டலம்-2ல் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தனியார் மயமாக்கப்படுள்ளதால், மண்டலங்களில் மேற்கொள்ளப்படும் பல்வேறு பணிகளுக்கு கீழ்கண்டவாறு 113 பணியாளர்களை ஒதுக்கீடு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவிக்கப்பட்டது.

வ. எண்	பணிபுரியும் இடம்	பணியாளர்களின் எண்ணிக்கை
1.	கோட்ட அலுவலகம்	7 நபர்கள்
2.	பகுதி அலுவலகம்	4 நபர்கள்
3.	மண்டல அலுவலகம்	10 நபர்கள்
4.	பொதுக்கழிப்பிடம் பராமரிக்க	54 நபர்கள்
5.	சாலைப்பணியாளர்கள்	19 நபர்கள்
6.	RRC	9 நபர்கள்
7.	அவசர பணிக்கு	10 நபர்கள்
	மொத்தம்	113 நபர்கள்

ஆனால், மண்டலம்-2ல் தற்காலிக பணியாளர்கள் எவரும் நியமிக்கப்படாததால், சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 840/2021 நாள். 20.11.2021ன்படி, நிரந்தர துப்புரவு பணியாளர்கள் -9 நபர்கள், NMR துப்புரவு பணியாளர்கள் -19 நபர்கள் போக மீதம் 85 பணியாளர்கள் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ்(NULM) பணி தொடங்கும் நாளியிலிருந்து 6 மாத காலத்திற்கு பணிபுரிய ஆணைப்பெறப்பட்டது. இதன் அடிப்படையில், 08.12.2021 முதல் பணி தொடங்கப்பெற்று 07.06.2022 உடன் பணியாளர்களின் பணிக்காலம் முடிவடையுள்ளது. எனவே, அப்பணியாளர்களின் பணிக்காலத்தினை 08.06.2022 முதல் 07.06.2023 வரை பணிநீடிப்பு செய்ய நிர்வாக அனுமதி பெற வேண்டியுள்ளது.

மண்டலம்-2ல் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ்(NULM) பணிபுரியும் பணியாளர்களின் விவரங்கள் கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

வ.எண்	பணிபுரியும் இடம்	தற்போது பணிபுரியும் மற்றும் பணி நீட்டிப்பு செய்ய வேண்டிய பணியாளர்களின் எண்ணிக்கை
1.	கோட்ட அலுவலகம் (வார்டு -15 முதல் 22 வரை)	8 நபர்கள்
2.	பகுதி அலுவலகம் 4 மற்றும்5	4 நபர்கள்
3.	மண்டல அலுவலகம் கம்பியில்லா தந்தி பிரிவு- 3 நபர்கள் House Keeping - 7 நபர்கள் (தரைதளம், 1வது மாடி, 2வது மாடி)	10 நபர்கள்
4.	அவசர பணிக்கு (மண்டல அலுவலகம் தட்டச்சு பணி)	10 நபர்கள்
5.	பொதுக்கழிப்பிடம் தூய்மை பணி	43 நபர்கள்
6.	சாலைப்பணி	5 நபர்கள்
7.	பூங்கா பணி	3 நபர்கள்
8.	லாரி நிலையம்	2 நபர்கள்
	மொத்தம்	85 நபர்கள்

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் நடவடிக்கைகள், ஆர்.ஓ.சி.சி2/16317/2021, நாள்: 14.07.2021. , துப்புரவு பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.410/- என வரிசை எண்.64ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம்-2, பகுதி-4 மற்றும் 5 வார்டு -15 முதல் 22 வரை பகுதிகளில் கோட்ட அலுவலகம், பகுதி அலுவலகம், மண்டல அலுவலகம், பொதுக்கழிப்பிடம் தூய்மை பணி, சாலைப்பணி, பூங்கா பணி மற்றும் லாரிநிலையம் ஆகிய இடங்களில் பணிபுரியும் மொத்தம் 85 நபர்களை தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின்கீழ் NULM மூலம் 08.06.2022 முதல் 07.06.2023 வரை பணிபுரிய பணிநீடிப்பு செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட பணியாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம் 85 பணியாளர்களுக்கு 08.06.2022 முதல் 07.06.2023 வரை ரூ.410 x 85 நபர்கள் x 365 நாட்கள் = ரூ.1,27,20,250/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஏழு இலட்சத்து இருபதாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) கணக்கு குறியீடு 40 - 41 - 03, கணக்கு தலைப்பு எண் எண்.210 - 100 - 601 (Payment to Casual Staff Conservancy Works) கீழ் மேற்கொள்ளவும், மேற்கண்ட தொகையினை நிதி ஆலோசகர் மூலம் ஒதுக்கீடு செய்யவும்,
3. மேற்படி, ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று, திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் பணியாளர்கள் நியமிக்கப்படும் போது, மேற்கண்ட பணிகளுக்கு தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் (NULM) கீழ் நியமிக்கப்படும் பணியாளர்கள் பணியிலிருந்து விலக்கி கொள்வதற்கும்,
4. மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.410/- என்பது 2021 - 2022 ஆம் ஆண்டு அரசினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம், எதிர்வரும் காலங்களில் 2022-2023 ஆம் ஆண்டிற்கான தினக்கூலி ஊதியம் உயர்த்தி அரசினால் நிர்ணயம் செய்யப்படின் உயர்த்தி வழங்கிய தினக்கூலி ஊதியத்தை நிர்ணயம் செய்து வழங்க சிறப்பு அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"21.06.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.40/2022, நாள்.21.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.75/2022 நாள்.24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

மஅ2.ந.க.எண். C1/1479 / 2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.215 / 2022 **பொருள் எண்.73**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-2 (மணலி) பகுதி 4 மற்றும் 5க்கு உட்பட்ட பகுதிகளில் மக்காத குப்பைகள் தரம் பிரிக்கம் RRC மையத்திற்கு தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் 18 NULM பணியாளர்களை 01.05.2022 முதல் 31.10.2022 வரை நியமிக்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-2ல் (மணலி) பகுதி 4 மற்றும் 5 வார்டு 15 முதல் 22 வரை 43.93. சதுர கி.மீ பரப்பளவுள்ள 8 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 10 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1157 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும் மண்டலம்-2 பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகரமயமாக்குதலுக்கு பின்னர் நாளுக்கு நாள் இம் மண்டலத்தின் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது. மண்டலம்-2 (மணலி) வார்டு-15 முதல் 22 வரை உள்ள பகுதிகளில் தோராயமாக 60 மெட்ரிக் டன் குப்பைகள் தினந்தோறும் சேகரிக்கப்படுகிறது. வார்டு 15 முதல் 22 வரை 8 வார்டுகளில் துப்புரவு பணிகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு 232 பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டலம்-2, வார்டு 15 முதல் 22 வரை உள்ள 8 வார்டுகளில் 9 எண்ணிக்கை கொண்ட RRC மையங்கள் உள்ளன. இம்மையங்களில் தனியார் நிறுவனத்திடமிருந்து (Chennai Enviro Solution Pvt.Ltd) பெறப்படும் மக்காத குப்பைகளில் இருந்து துணி, செருப்பு, தர்மா கோல், பிளாஸ்ட் கவர், மின்சாதன பொருட்கள், மற்றும் கைப்பை என தரம் பிரித்து அவற்றை மறு சுழற்சிக்காக Insulator plantக்கு அனுப்பவும், தனியார் நிறுவனத்திடமிருந்து பெறப்படும் குப்பைகளின் அளவினை முறையாக கணக்கீடு செய்வதை கண்காணிக்கவும், அவ்வாறான கணக்கினை சரியாக பதிவேட்டில் பதிவு செய்யவும் மற்றும் சுகாதார கேடு ஏற்படாத வகையில் மையத்தினை தூய்மையாக பராமரிக்கவும், சென்னை மாநகராட்சி சார்பாக பணியாளர்கள் எவரும் இல்லாததால், பணிகளில் தேக்க நிலை ஏற்படும் நிலை உள்ளது. எனவே, ஒரு RRC மையத்திற்கு தலா 2 நபர்கள் வீதம் 9 மையத்திற்கு 18 நபர்கள் தேவைப்படுகிறார்கள். வார்டு 15 முதல் 22 வரை உள்ள வார்டுகளில் உள்ள RRC மையங்கள் விவரம் கீழ்கண்டவாறு

வார்டு எண்	குப்பை தரம் பிரிக்கும் மையம்	குப்பை தரம் பிரிக்க தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை
15	மணலி புது நகர் 150 அடி சாலை (Burial Groud)	2
16	MRB நகர்	2
17	கத்தாகுழி	2
18	பாரதியார் தெரு	2
19	கொசப்பூர் (Near 100 bed hospital)	2
20	முல்லை கார்டன்	2
21	சபாபதி கார்டன்	2
22	கருணாநிதி தெரு	2
22	வேலு தெரு	2
	மொத்தம்	18

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை. C2/16371/2021 நாள் 14.07.2021 ன்படி துப்புரவு பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு உதியம் ரூ.410/- என வரிசை எண் 64ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் 01.05.2022 முதல் 31.10.2022 வரை 6 மாத காலத்திற்கு ரூ.13,57,920/- (ரூபாய் பதிமூன்று இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து இருபது மட்டும்) (18நபர்கள்Xரூ.410X184நாட்கள்) ஆகும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் (National Urban Livelihood Mission - NULM) குழுக்கள் அமைத்து அதன் மூலமாக RRC மையத்திற்கு பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-2 (மணலி) , பகுதி 4 மற்றும் 5க்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள RRC மையத்திற்கு, 18 பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் (National Urban Livelihood Mission - NULM) குழுக்கள் அமைத்து அதன் மூலமாக பணியமர்த்த நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட பணிக்காக ஆகும் செலவு தொகை ரூ.13,57,920/- (ரூபாய் பதிமூன்று இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து இருபது மட்டும்) (18நபர்கள்Xரூ.410X184நாட்கள்) நிதிஆலோசகர் மூலம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு பெற நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. இப்பணிக்கான தொகையை கணக்கு குறியீட்டு எண். 40-41-03, கணக்கு தலைப்பு எண். 210-100-601 கீழ் மேற்கொள்ளவும்,
4. மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.410/- என்பது 2021 – 2022 ஆம் ஆண்டு அரசினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம், எதிர்வரும் காலங்களில் 2022-2023 ஆம் ஆண்டிற்கான தினக்கூலி ஊதியம் உயர்த்தி அரசினால் நிர்ணயம் செய்யப்படின் உயர்த்தி வழங்கிய தினக்கூலி ஊதியத்தை நிர்ணயம் செய்து வழங்க சிறப்பு அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "21.06.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.41/2022, நாள்.21.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"
>
> "24.6.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.76/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

க.துநக.எண்.பி1/0882-01/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *17.06.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.216/2022 **பொருள் எண்.74**

ஒப்பம்- கட்டடத்துறை - மண்டலம்-4,வார்டு-*45*, *CHS* கணேசபுரத்தில் புதிதாக தரைதளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளத்துடன் படிகட்டுகள், கழிப்பறைகள்வசதியுடன் கூடிய 12 வகுப்பறைகள் கட்டும் பணிக்கு திருவாளர். மாடர்ன் இன்ஜினீயர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிடெட், அவர்களுக்கு அவசரம் மற்றும் அவசியம் கருதி ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கி பணி ஆரம்பித்தற்கு பின்னேற்பு அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம்-4,வார்டு-45, CHS கணேசபுரத்தில் புதிதாக தரைதளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளத்துடன் படிகட்டுகள், கழிப்பறைகள் வசதியுடன் கூடிய *12* வகுப்பறைகள் கட்டும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	*G.O.(MS) No.61 - Municipal Administration & Water Supply (MC.I) Department* நாள் *28.04.2022*
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டிலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2021 -2022ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ. 2,43,20,000.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ 2,08,82,849.03
	(ஆ) எதிர்பாரா செலவு (2.5%)	ரூ. 5,13,552.11
	(இ) தரக்கட்டுப்பாடு (1.0%)	ரூ. 2,08,828.49
	(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் (1.0%)	ரூ. 2,08,828.49
	(உ) சரக்கு மற்றும் சேவை வரி 12%	ரூ. 25,05,941.88
	மொத்தம்	ரூ.**2,43,20,000.00**
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1. பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர், நாள் 31.03.2022 *2.* தி இந்து , நாள்31.03.2022
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	05.05.2022
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	சிங்கார சென்னை *2.0*
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	மூன்று (e-Tender) ஒப்பங்கள் இணையத்தளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது.
11	ஒப்பந்ததாரர் தகுதி வகுப்பு சான்று இணைத்துள்ளாரா-?	ஆம்

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 05.05.2022 அன்று மூன்று ஒப்பங்கள் *e-Tender* மூலமாக பெறப்பட்டன. 06.05.2022 அன்று தொழிற்நுட்ப ஒப்பம் *(Technical Bid)* திறக்கப்பட்டதில் கீழ்கண்ட மூன்று ஒப்பந்ததாரர்கள் கலந்துக் கொண்டனர்.

1. திருவாளர், அண்ணாமலை கன்ஸ்ட்ரக்ஸன்,
2. மாடர்ன் இன்ஜினீயர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிடெட்,
3. திரு. *A*.கண்ணன்,

மேற்கண்ட ஒப்பத்தில் திரு. *A*.கண்ணன், அவர்களது ஒப்பமானது நிபந்தனைகளுக்கு உட்படாததால் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது.

மேலும், நிபந்தனைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர்கள் என்று கீழ்கண்டுள்ள ஒப்பந்ததாரர்கள் கண்டறியப்பட்டு 18.05.2022 அன்று நிதி ஒப்பம் *(Financial Bid)* திறக்கப்பட்டது அதன் விவரம் பின் வருமாறு :

வ. எண்.	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி	2021-2022 பணியின் அலுவலக மதிப்பு (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	அண்ணாமலை கன்ஸ்ட்ரக்ஸன்	2,08,82,849.04	2,29,71,133.94	(+) 10.00%அதிகம்
2	மாடர்ன் இன்ஜினீயர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிடெட்,	2,08,82,849.04	1,98,40,794.87	(-)4.99% குறைவு

மேற்கண்டுள்ளவாறு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர், மாடர்ன் இன்ஜினீயர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிடெட், அவர்களின் ஒப்பத் தொகை 2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலை பட்டியலின்படி பணியின் மதிப்பு தொகையான ரூ.2,08,82,849.04/-யைவிட (-)4.99% குறைவாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,98,40,794.87/- ஆகும். ஒப்பந்ததாரருக்கு விலைக்குறைப்பு செய்ய 19.05.2022 அன்று கடிதம் அனுப்பபட்டது. மேலும், விலை குறைப்பு செய்ய சம்மதம் இல்லை என 23.05.2022 அன்று கடிதம் அளித்துள்ளார்.

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் விவரம்

ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள்	2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலை	ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள தொகை	2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம்
மாடர்ன் என்ஜினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்பரேட்டிவ் சொசைட்டி லிமிடெட்	ரூ.2,08,82,849.04/-	ரூ.*1,98,40,794.87/-*	*(-)4.99%* குறைவு

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பபுள்ளி அளித்த திருவாளர். மாடர்ன் என்ஜினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்பரேட்டிவ் சொசைட்டி லிமிடெட், அவர்களின் ஒப்பத் பணித்தொகை ரூ.1,98,40,794.87/- (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து நாற்பதாயிரத்து, எழுநூற்று தொண்ணூற்று நான்கு மற்றும் எண்பத்தி ஏழு பைசா மட்டும்) 2021-2022ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டின் விலைப்பட்டியலை ஒப்பிடுகையில் (-)4.99%

குறைவாக உள்ளது, மேலும் 12% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.23,80,895.38/-ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.2,22,21,690.25/-க்கு (ரூபாய் இரண்டு கோடியே இருபத்தி இரண்டு இலட்சத்து இருபத்தி ஓராயிரத்து அறுநூற்று தொண்ணூறு மற்றும் இருபத்தி ஐந்து பைசா மட்டும்), மதிப்புள்ள இப்பணிக்கு திருவாளர். மாடர்ன் என்ஜினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்பரேட்டிவ் சொசைட்டி லிமிடெட் அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

CCMC ACT, 1919பிரிவு 80-ன் படி ரூபாய் ஒரு கோடிக்கு மேல் உள்ள ஒப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு உள்ளது. மேலும், இந்த பணிக்கு சிங்கார சென்னை *2.0* திட்டத்தின் கீழ் அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது.

இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணிஏற்பு கடிதம் வழங்கப்பட்டது.

எனவே, மண்டலம்-4,வார்டு-45, CHS கணேசபுரத்தில் புதிதாக தரைதளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளத்துடன் படிகட்டுகள், கழிப்பறைகள் வசதியுடன் கூடிய *12* வகுப்பறைகள் கட்டும் பணிக்கு கீழ்கண்ட குறைந்த ஒப்ப புள்ளி அளித்த மாடர்ன் என்ஜினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்பரேட்டிவ் சொசைட்டி லிமிடெட் அவர்களுக்கு, 2021-2022 ஆம் ஆண்டுஅலுவலக மதிப்பீட்டை விட (-)4.99%குறைவான தொகையான ரூ.1,98,40,794.87/- மற்றும் 12%சரக்கு மற்றும் சேவை வரி ரூ.23,80,895.38/-ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.2,22,21,690.25/- க்கு (ரூபாய் இரண்டு கோடியே இருபத்தி இரண்டு இலட்சத்து இருபத்தி ஓராயிரத்து அறுநூற்று தொண்ணூறு மற்றும் இருபத்தி ஐந்து பைசா மட்டும்)க்கு பணி ஏற்பு கடிதம் வழங்கி பணி ஆரம்பித்தற்கு, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"23.06.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.69/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.77/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

கதுநக.எண்.பி 1/0882-05/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *17.06.2022*நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.217/2022 **பொருள் எண்.75**

ஒப்பம்- கட்டடத்துறை - மண்டலம்-6,வார்டு-*70*, பெரம்பூர் மாதவரம் நெடுஞ்சாலையில் புதியதாக சென்னை பெண்கள் மேல்நிலை பள்ளி மற்றும் சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம் கட்டும் பணிக்கு திருவாளர். மாடர்ன் இன்ஜினீயர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிடெட், அவர்களுக்கு அவசரம் மற்றும் அவசியம் கருதி ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம்-6,வார்டு-70, பெரம்பூர் மாதவரம் நெடுஞ்சாலையில் புதியதாக சென்னை பெண்கள் மேல்நிலை பள்ளி மற்றும் சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம் கட்டும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	*G.O.(MS) No.61 - Municipal Administration & Water Supply (MC.I) Department*நாள் *28.04.2022*
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டிலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2021 -2022ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ. 3,55,60,000.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ 3,04,97,525.00
	(ஆ) எதிர்பாரா செலவு (2.5%)	ரூ. 7,56,224.47
	(இ) தரக்கட்டுப்பாடு (1.0%)	ரூ. 3,04,975.25
	(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் (1.0%)	ரூ. 3,41,572.28
	(உ) சரக்கு மற்றும் சேவை வரி 12%	ரூ. 36,59,703.00
	bkh¤ j «	**ரூ.3,55,60,000.00**
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1. பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர், நாள் 31.03.2022 2. தி இந்து , நாள்31.03.2022
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	05.05.2022
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	சிங்கார சென்னை *2.0*
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	இரண்டு (e-Tender) ஒப்பங்கள் இணையத்தளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது
11	ஒப்பந்ததாரர் தகுதி வகுப்பு சான்று இணைத்துள்ளாரா-?	ஆம்

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 05.05.2022 அன்று இரண்டு ஒப்பங்கள் *e-Tender* மூலமாக பெறப்பட்டன. 06.05.2022 அன்று தொழிற்நுட்ப ஒப்பம் *(Technical Bid)* திறக்கப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்கள் கலந்துக்கொண்டனர்.

1. திருவாளர். S. வள்ளி
2. மாடர்ன் இன்ஜினீயர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிடெட்,

மேலும், நிபந்தனைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர்கள் என்று கீழ்கண்டுள்ள ஒப்பந்ததாரர்கள் கண்டறியப்பட்டு 18.05.2022 அன்று நிதி ஒப்பம் *(Financial Bid)* திறக்கப்பட்டது . அதன் விவரம் பின் வருமாறு :

வ. எண்.	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி	2021-2022 பணியின் அலுவலக மதிப்பு (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	S. வள்ளி	3,04,97,523.94	3,14,12,449.66	(+) 3.00%அதிகம்
2	மாடர்ன் இன்ஜினீயர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிடெட்,	3,04,97,523.94	2,98,87,573.46	(-)2.00% குறைவு

மேற்கண்டுள்ளவாறு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். மாடர்ன் இன்ஜினீயர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிடெட், அவர்களின் ஒப்பத் தொகை 2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலை பட்டியலின்படி பணியின் மதிப்பு தொகையான ரூ.3,04,97,523.94/-யைவிட (-)2.00% குறைவாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.2,98,87,573.46/- ஆகும். ஒப்பந்ததாரருக்கு விலைக்குறைப்பு செய்ய 18.05.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. மேலும், விலை குறைப்பு செய்ய சம்மதம் இல்லை என 20.05.2022 அன்று கடிதம் அளித்துள்ளார்.

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் விவரம்

ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள்	2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலை	ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள தொகை	2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம்
மாடர்ன் என்ஜினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்பரேட்டிவ் சொசைட்டி லிமிடெட்	ரூ. 3,04,97,523.94/-	ரூ.*2,98,87,573.46/-*	(-)2.00% குறைவு

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பபுள்ளி அளித்த திருவாளர். மாடர்ன் என்ஜினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்பரேட்டிவ் சொசைட்டி லிமிடெட், அவர்களின் ஒப்பத் பணித்தொகை ரூ. 2,98,87,573.46/-(ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து ஐநூற்றி எழுபத்தி மூன்று மற்றும் நாற்பத்தாறு பைசா மட்டும்) 2021-2022ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டின் விலைப்பட்டியலை ஒப்பிடுகையில் (-)2.00% குறைவாக உள்ளது, மேலும், 12% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.35,86,508.81/-ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.3,34,74,082.27/-க்கு (ரூபாய் மூன்று கோடியே முப்பத்தி நான்கு இலட்சத்து எழுபத்தி நான்காயிரத்து எண்பத்தி இரண்டு மற்றும் இருபத்தேழு பைசா மட்டும்) மதிப்புள்ள இப்பணிக்கு திருவாளர்கள்.மாடர்ன் என்ஜினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்பரேட்டிவ் சொசைட்டி லிமிடெட் அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

CCMC ACT, 1919பிரிவு 80-ன் படி ரூபாய் ஒரு கோடிக்கு மேல் உள்ள ஒப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு உள்ளது. மேலும், இந்த பணிக்கு சிங்கார சென்னை *2.0* திட்டத்தின் கீழ் அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது.

இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணிஏற்பு கடிதம் வழங்கப்பட்டது.

எனவே, மண்டலம்-6,வார்டு-70, பெரம்பூர் மாதவரம் நெடுஞ்சாலையில் புதியதாக சென்னை பெண்கள் மேல்நிலை பள்ளி மற்றும் சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம் கட்டும் பணிக்கு குறைந்த ஒப்ப புள்ளி அளித்த மாடர்ன் என்ஜினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்பரேட்டிவ் சொசைட்டி லிமிடெட் அவர்களுக்கு, 2021-2022 ஆம் ஆண்டுஅலுவலக மதிப்பீட்டை விட (-)2.00% குறைவானதொகையான ரூ. 2,98,87,573.46/-மற்றும் 12%சரக்கு மற்றும் சேவை வரி ரூ.35,86,508.81/-ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.3,34,74,082.27/- க்கு (ரூபாய் மூன்று கோடியே முப்பத்தி நான்கு இலட்சத்து எழுபத்தி நான்காயிரத்து எண்பத்தி இரண்டு மற்றும் இருபத்தேழு பைசா மட்டும்)க்கு பணி ஏற்பு கடிதம் வழங்கி பணி ஆரம்பித்தற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

> *"23.06.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.70/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.78/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

க.து.ந.க.எண்.பி 1/0882-06/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.06.2022நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.218/2022 **பொருள் எண்.76**

ஒப்பம்- கட்டடத்துறை - மண்டலம்-6, வார்டு-70, M.H.சாலை பெரம்பூர்(வடக்கு) அமைந்துள்ள சென்னை மாநகராட்சி பள்ளியை புதுப்பிக்கும் பணிக்கு திருவாளர். S. வள்ளி, அவர்களுக்கு அவசரம் மற்றும் அவசியம் கருதி ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கி பணி ஆரம்பித்தற்கு பின்னேற்பு அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம்-6, வார்டு-70, M.H.சாலை பெரம்பூர்(வடக்கு) அமைந்துள்ள சென்னை மாநகராட்சி பள்ளியை புதுப்பிக்கும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	G.O.(MS) No.61 - Municipal Administration & Water Supply (MC.I) Department நாள் 28.04.2022
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2021 -2022ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ. 2,73,93,500.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ 2,34,89,769.00
	(ஆ) எதிர்பாரா செலவு (2.5%)	ரூ. 5,86,975.62
	(இ) தரக்கட்டுப்பாடு (1.0%)	ரூ. 2,34,897.69
	(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் (1.0%)	ரூ. 2,63,085.41
	(உ) சரக்கு மற்றும் சேவை வரி 12%	ரூ. 28,18,772.28
	மொத்தம்	ரூ.2,73,93,500.00
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1. பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர், நாள் 31.03.2022 2. தி இந்து , நாள்31.03.2022.
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	05.05.2022
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	சிங்கார சென்னை 2.0
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	நான்கு (e-Tender) ஒப்பங்கள் இணையத்தளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது
11	ஒப்பந்ததாரர் தகுதி வகுப்பு சான்று இணைத்துள்ளாரா-?	ஆம்

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 05.05.2022 அன்று நான்கு ஒப்பங்கள் *e-Tender* மூலமாக பெறப்பட்டன. 06.05.2022 அன்று தொழிற்நுட்ப ஒப்பம்(*Technical Bid)* திறக்கப்பட்டதில் கீழ்கண்ட நான்கு ஒப்பந்ததாரர்கள் கலந்துக்கொண்டனர்.

1., மாடர்ன் இன்ஜினீயர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிடெட்

2.திருவாளர், அண்ணாமலை கன்ஸ்ட்ரக்ஸன்,

3.திரு, *R*.சதிஸ்,

4. திரு S.வள்ளி,, ,

மேற்கண்ட ஒப்பத்தில் திரு *R*.சதிஸ், அவர்களது ஒப்பமானது நிபந்தனைகளுக்கு உட்படாததால் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது.

மேலும், நிபந்தனைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர்கள் என்று கீழ்கண்டுள்ள ஒப்பந்ததாரர்கள் கண்டறியப்பட்டு 18.05.2022 அன்று நிதி ஒப்பம் *(Financial Bid)* திறக்கப்பட்டது .அதன் விவரம் பின் வருமாறு

வ. எண்.	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி	2021-2022 பணியின் அலுவலக மதிப்பு (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	S.வள்ளி	2,34,89,764.66	1,99,68,648.94	(-)14.99% குறைவு
2	அண்ணாமலை கன்ஸ்ட்ரக்ஸன்	2,34,89,764.66	1,97,31,402.31	(-) 16.00% குறைவு
3.	மாடர்ன் இன்ஜினீயர்ஸ் கன்ஸ்ட்ரக்ஸன் கோ ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிடெட்,	2,34,89,764.66	2,11,40,788.19	(-)10.00% குறைவு

மேற்கண்டுள்ளவாறு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர், அண்ணாமலை கன்ஸ்ட்ரக்ஸன் அவர்களின் ஒப்பத் தொகை 2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலை பட்டியலின்படி பணியின் மதிப்பு தொகையான ரூ.1,97,31,402.31/-யைவிட (-)16.00% குறைவாகும், ஆனால் *Performance* சான்று இணைக்கப்பட்டதில் பணியிணை முடிக்கப்படாமல் இருந்துள்ளமையால் குறைந்த ஒப்பபுள்ளி குறிப்பிட்டுள்ள போதிலும் ஒப்பம் பெறுவதற்கு தகுதியில்லையென கருதப்படுகிறார்,

திருவாளர் S.வள்ளி, அவர்களின் ஒப்பத் தொகை 2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலை பட்டியலின்படி பணியின் மதிப்பு தொகையான ரூ. 2,34,89,764.66/-யைவிட (-)14.99% குறைவாகும், இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,99,68,648.94/- ஆகும், ஒப்பந்ததாரருக்கு விலைக்குறைப்பு செய்ய 18.05.2022 அன்று கடிதம் அனுப்பபட்டது, மேலும், விலை குறைப்பு செய்ய சம்மதம் இல்லை என 20.05.2022 அன்று கடிதம் அளித்துள்ளார்,

ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள்	2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலை	ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள தொகை	2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம்
திருவாளர் S.வள்ளி	ரூ. 2,34,89,764.00/-	ரூ.*1,99,68,648.94/-*	(-)14.99%குறைவு

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பபுள்ளி அளித்த திருவாளர் S.வள்ளி, அவர்களின் ஒப்பத் பணித்தொகை ரூ.**1,99,68,648.94/-** (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்றியொன்பது இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து அறுநூற்றி நாற்பத்தெட்டு மற்றும்

தொண்ணூற்றி நான்கு பைசா மட்டும்) 2021-2022ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டின் விலைப்பட்டியலை ஒப்பிடுகையில் (-)14.99% குறைவாக உள்ளது, மேலும் 12% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.23,96,237.87/-ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.2,23,64,886.81/-க்கு (ரூபாய் இரண்டு கோடியே இருபத்தி மூன்று இலட்சத்து அறுபத்தி நான்காயிரத்து எண்ணூற்றி எண்பத்தி ஆறு மற்றும் எண்பத்தியொரு பைசா மட்டும்) மதிப்புள்ள இப்பணிக்கு திருவாளர் S.வள்ளி, அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், திருவாளர் S.வள்ளி, அவர்கள் (-)14.99% ஒப்ப சதவீதம் கோரியுள்ளதால், கூடுதல் பாதுகாப்பு தொகை (மன்ற தீர்மான எண் 576/2013 நாள் 29.08.2013ன்படி) ஒப்ப ஏற்பு ஆணை வழங்கும் சமயத்தில் 2% ரூ.3,99,373/- (மூன்று இலட்சத்து தொண்ணூற்றி ஒன்பதாயிரத்து முன்னூற்றி எழுபத்தி மூன்று மட்டும்) செலுத்தப்படவேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

CCMC ACT, 1919பிரிவு 80-ன் படி ரூபாய் ஒரு கோடிக்கு மேல் உள்ள ஒப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு உள்ளது, மேலும், இந்த பணிக்கு சிங்கார சென்னை *2.0* திட்டத்தின் கீழ் அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது,

இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திருவாளர் S.வள்ளி, அவர்களுக்கு பணிஏற்பு கடிதம் வழங்கப்பட்டது

எனவே, மண்டலம்-6, வார்டு-*70*, M.H.சாலை பெரம்பூர்(வடக்கு) அமைந்துள்ள சென்னை மாநகராட்சி பள்ளியை புதுப்பிக்கும் பணிக்கு குறைந்த ஒப்ப புள்ளி அளித்ததிருவாளர் S.வள்ளி, அவர்களுக்கு 2021-2022ஆண்டின்அலுவலக மதிப்பீட்டை விட (-)14.99%க்கு குறைவான தொகையான ரூ,**1,99,68,648.94/-** மற்றும் 12%சரக்கு மற்றும் சேவை வரி ரூ.2396237.87/-ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.2,23,64,886.81/-க்கு (ரூபாய் இரண்டு கோடியே இருபத்தி மூன்று இலட்சத்து அறுபத்தி நான்காயிரத்து எண்ணூற்றி எண்பத்தி ஆறு மற்றும் எண்பத்தியொரு பைசா மட்டும்)க்குபணி ஏற்பு கடிதம் வழங்கி பணி ஆரம்பித்தற்கு, நிலைக்குழு (பணிகள்) மற்றும்நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது,

> *"23.06.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.71/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.79/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

கதுநக.எண்.பி 1/0881-07/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.06.2022நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.219/2022 **பொருள் எண்.77**

ஒப்பம்- கட்டடத்துறை - மண்டலம்-5, வார்டு-53, CB சாலையில் உள்ள சென்னை உயர்நிலை பள்ளி மற்றும் சென்னை துவக்கப்பள்ளியில் மதிய உணவு கூடம் மற்றும் மேம்படுத்தும் பணிக்கு திருவாளர். G.VENGATESAN, அவர்களுக்கு அவசரம் , அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம்-5, வார்டு-53, CB சாலையில் உள்ள சென்னை உயர்நிலை பள்ளி மற்றும் சென்னை துவக்கப்பள்ளியில் மதிய உணவு கூடம் மற்றும் மேம்படுத்தும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	G.O.(MS) No.61 - Municipal Administration & Water Supply (MC.I) Department நாள் 28.04.2022
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2021 -2022ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ. 72,33,000.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 62,09,347.12
	(ஆ) எதிர்பாரா செலவு (2.5%)	ரூ. 1,54,334.15
	(இ) தரக்கட்டுப்பாடு (1.0%)	ரூ. 62,093.54
	(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் (1.0%)	ரூ. 62,093.54
	(உ) சரக்கு மற்றும் சேவை வரி 12%	ரூ.7,45,121.65
	மொத்தம்	ரூ. 72,33,000.00
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	1. பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர், நாள்12.05.2022 2. முரசொலிநாள்:10.05.2022
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	24.05.2022
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	சிங்கார சென்னை 2.0
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து **30** நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	மூன்று (Re-Tender) ஒப்பங்கள் இணையத்தளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது
11	ஒப்பந்ததாரர்தகுதிவகுப்பு சான்று இணைத்துள்ளாரா-?	ஆம்

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 24.05.2022 அன்று மூன்று ஒப்பங்கள் Re-Tender மூலமாக பெறப்பட்டன, ஒப்பம் திறக்கப்பட்டு இந்த மூன்று ஒப்பந்ததாரர்களும் ஒப்ப நிபந்தனைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர்கள் என்று அறியப்பட்டது

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம் பின் வருமாறு :

வ எ ண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி	2021-2022 பணியின் அலுவலக மதிப்பு (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	K.S.K ENGINEERS	62,09,347.12	63,95,627.53	(+) 3.0% அதிகம்
2	S. VALLI	62,09,347.12	64,26,674.27	(+)3.50% அதிகம்
3	G.VENKATESAN	62,09,347.12	58,99,500.70	(-)4.99% குறைவு

இவர்களில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்.G.VENKATESAN, அவர்களின் ஒப்பத் தொகை 2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலை பட்டியலின்படி பணியின் மதிப்பு தொகையான ரூ. 62,09,347.12 /-யைவிட (-) 4.99% குறைவாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ. 58,99,500.70 /- ஆகும்.

ஒப்பந்ததாரருக்கு விலைக்குறைப்பு செய்ய 25.05.2022 அன்று கடிதம் அனுப்பபட்டது. மேலும், விலை குறைப்பு செய்ய சம்மதம் இல்லை என 27.05.2022 அன்றுகடிதம் அளித்துள்ளார். .குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் விவரம்

ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள்	2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலை	ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள தொகை	2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம்
G.VENKATESAN	ரூ. 62,09,347.12	ரூ. 58,99,500.70	(-)4.99%

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்ப புள்ளி அளித்த திருவாளர்.G.VENKATESAN அவர்களின் ஒப்பத் பணித்தொகை ரூ. ***58,99,500.70*** (ரூபாய் ஐம்பத்து எட்டு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பது ஆயிரத்து ஐநூறுமற்றும் ஏழுபது பைசா மட்டும்) 2021 - 2022ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டின் விலைப்பட்டியலை ஒப்பிடுகையில் (-)4.99% குறைவாக உள்ளது, மேலும் 12% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.7,07,940.08ஐசேர்த்து ஆக மொத்தம் ரூ.66,07,440.78க்கு (ரூபாய் அறுபத்தி ஆறு இலட்சத்து ஏழு ஆயிரத்து நாறூற்றி நாற்பது மற்றும் எழுபத்தி எட்டு பைசா மட்டும்), மதிப்புள்ள இப்பணிக்கு திருவாளர். G.VENKATESANஒப்ப அனுமதி வழங்கலாம் என கருதப்படுகிறது .

CCMC ACT, 1919 பிரிவு 80-ன் படி ரூபாய் ஒரு கோடிக்கு மேல் உள்ள ஒப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு உள்ளது. மேலும், இந்த பணிக்கு சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது.

இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திருவாளர். G.VENKATESAN அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கி பணியினை துவக்கலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே ,மண்டலம்-*5*, வார்டு-*53*, *CB* சாலையில் உள்ள சென்னை உயர்நிலை பள்ளி மற்றும் சென்னை துவக்கப்பள்ளியில் மதியம் உணவு கூடம் மற்றும் மேம்படுத்தும் பணிக்கு திருவாளர். *G.VENKATESAN* அவர்களுக்கு 2021-2022 ஆண்டின் அலுவலக மதிப்பீட்டை விட (-) 4.99% குறைவான தொகையான ரூ.***58,99,500.70*** மற்றும் 12%சரக்கு மற்றும் சேவை வரி ரூ.7,07,940.08ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.66,07,440.78/- க்கு (ரூபாய் அறுபத்தி ஆறு இலட்சத்து ஏழு ஆயிரத்து நாநூற்றி நாற்பது மற்றும் எழுபத்தி எட்டு பைசா மட்டும்)க்கு, ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கியதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"23.06.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.72/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.80/2022 நாள்.24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

க.து.ந.க..எண்.பி1/1115/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.06.2022நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.220/2022 **பொருள் எண்.78**

ஒப்பம்- கட்டடத்துறை - மண்டலம்-9,வார்டு-125,லூப் சாலையில் புதியதாக மீன் அங்காடி கட்டும் பணிக்காக திருவாளர் Abbundu Interior & Constructions அவர்களுக்கு அவசரம் மற்றும் அவசியம் கருதி ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கி பணி துவங்கியதற்கு பின்னேற்பு அனுமதி

1	பணியின் பெயர்	மண்டலம்-9, வார்டு-125, லூப் சாலையில் புதியதாக மீன் அங்காடி கட்டும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	அரசணை (D) எண்.13,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MCI) துறை நாள்: 10.01.2022
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய்த்துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2020-2021ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ. 9,97,00,000.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 7,97,70,372.95
	(ஆ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் (1.0%)	ரூ. 7,97,703.73
	(இ) சரக்கு மற்றும் சேவை வரி 12%	ரூ. 95,72,444.75
	(ஈ) தமிழ்நாடு மின் வாரிய கட்டணம்	ரூ. 1,50,000.00
	(உ) சிறுமேற்பார்வை கட்டணம்	ரூ. 13,95,981.53
	(ஊ) பெரிய மேற்பார்வை கட்டணம்	ரூ. 55,83,926.11
	(எ) ஆலோசனைதாரர் கட்டணம்	ரூ. 15,95,407.46
	(ஏ) இதர செலவினங்கள்	ரூ. 8,34,163.48
	மொத்தம்	ரூ. 9,97,00,000.00
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	THE HINDU நாள்.12.01.2021(English) தி இந்து நாள் ,12.01.2022
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	24.03.2022
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி (Infrastructure and Amenities Fund)
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	ஒரு (e - Tender) ஒப்பம் இணையத்தளம் மூலம் பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்காக ஒப்பம் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 24.03.2022 அன்று ஒரு ஒப்பம் (e-Tender) பெறப்பட்டது, M/s.Abbundu Interior & Constructions மட்டும் ஒப்பத்தில் பங்கேற்றார்.

தொழில்நுட்ப ஒப்பம் ஆய்வு (Technical Bid) செய்யப்பட்டு M/s.Abbundu Interior & Constructions அவர்கள் இந்த ஒப்பம் வழங்க தகுதியான நபர் என்று கருதப்பட்டு நிதி ஒப்பம் 30.04.2022 அன்று திறக்கப்பட்டது.

M/s.Abbundu Interior & Constructions அவர்கள் 2020-2021 ஆம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டுத் தொகையான 7,97,70,372.85 யைவிட (+) 7.50% அதிகமாகும். இதற்கு ஒப்பந்ததாரருக்கு விலைக்குறைப்பு செய்ய 01.04.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. மேலும், விலைக்குறைப்பு செய்ய சம்மதம் தெரிவித்து 04.04.2022 அன்று கடிதம் அளித்தார். அதில் 2020-2021 ஆம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டின் தொகையான ரூ.7,97,70,372.85/- யைவிட (+) 7.00 அதிகமாக தெரிவித்தார். மேலும், விலைகுறைப்பு செய்ய 04.04.2022ல் கேட்கப்பட்டதற்கு 07.04.2022ல் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என்று தெரிவித்துள்ளார்.

அதன் விவரங்கள்

ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்.	மதிப்பீட்டில் பணியின் தொகை 2020-2021 ஆம் ஆண்டின் அலுவலக விலை	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை (12% GST) தவிர்த்து விலைக் குறைப்பிற்கு பிறகு	2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம்	ஒப்பந்ததார்ர் அளித்த இறுதி தொகை GST 12% சேர்த்து
M/s.Abbundu Interior & Constructions	ரூ.7,97,70,372.85	ரூ.8,53,54,298.95	(+) 3.88%	ரூ.9,55,96.814.82

எனவே, மேற்கண்ட பணிக்கு ஒப்பம் அளித்த ஒப்பந்தாரரான திருவாளர். M/s.Abbundu Interior & Constructions அவர்களின் ஒப்பம் தொகையான ரூ.8,53,54,298.95 (எட்டு கோடியே ஐம்பத்தி மூன்று இலட்சத்து ஐம்பத்தி நான்காயிரத்து இருநூற்று தொண்ணூற்று எட்டு மற்றும் தொண்ணூற்று ஐந்து பைசா மட்டும்)

2021-2022ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டின் விலைப்பட்டியலை ஒப்பிடுகையில் (+) 3.88% அதிகமாக உள்ளது. மேலும் 12% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,02,42,515.87 சேர்த்து ஆக மொத்தம் ரூ.9,55,96.814.82 (ஒன்பது கோடியே ஐம்பத்தி ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து எண்ணூற்று பதினான்கு மற்றும் எண்பத்தி இரண்டு பைசா மட்டும்) இதற்கு ஒப்புதல் வேண்டி முதன்மை செயலர்/ஆணையர் அவர்களுக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

இக்கோப்பில், முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 30.05.2022 நாளிட்ட குறிப்பில் மேலும், விலைக்குறைப்பு செய்ய அறிவுறுத்தியுள்ளார். விலைக்குறைப்பு செய்வதற்கு ஒப்பந்ததாரரன திருவாளர். M/s.Abbundu Interior & Constructions அவர்களுக்கு 01.06.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. இதனை தொடர்ந்து மேலும் ஒப்பந்தாரர் அவர்கள் பொருட்களின் விலை மற்றும் வேலையாட்களின் சம்பள உயர்வினால் விலை குறைப்பு செய்ய இயலாது என குறிப்பிட்டு திருவாளர். M/s.Abbundu Interior & Constructions அவர்கள் ஏற்கெனவே விலை குறைப்பு செய்த தொகையான 8,53,54,298.95 (+ 7.00% அதிகம்) 01.06.2022 தேதி அன்று கடிதம் அளித்துள்ளார்.

இந்த விலை குறைப்பு 2020-21ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் (+) 7.00% அதிகமாகும். மேலும், 2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் (+) 3.88% அதிகமாகும்.

CCMC ACT, 1919 பிரிவு 80-ன்வடி ஒரு கோடிக்கு மேற்பட்ட தொகையுள்ள ஒப்பத்திற்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு உள்ளது.

எனவே, மண்டலம்-9, வார்டு-125, லூப் சாலையில் நவீன மீன் அங்காடி கட்டும் பணிக்கு ஒப்பந்ததாரர் M/s.Abbundu Interior & Constructions அவர்களுக்கு 2020-2021ஆம் ஆண்டு அலுவலக மதிப்பீட்டைவிட (+) 7.00% அதிகமான தொகையான ரூ. 8,53,54,298.95 /- மற்றும் 12%

சரக்கு மற்றும் சேவை வரி ரூ.*1,02,42,515.87/-* சேர்த்து ஆக மொத்தம் ரூ. *9,55,96,814.82* (ஒன்பது கோடியே ஐம்பத்தி ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து எண்ணூற்று பதினான்கு மற்றும் எண்பத்தி இரண்டு பைசா மட்டும்)க்கு அவசரம் மற்றும் அவசியம் கருதி ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கி பணி துவங்கியதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"23.06.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.86/2022, நாள்.23.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

> *"24.6.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.81/2022 நாள் 24.6.2022ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண்ஈ1/11743/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 04.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.221/2022 **பொருள் எண்.79**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திருமதி.மு.மஞ்சுளா, உதவி செயற்பொறியாளர் அவர்கள் - மன்றத்தின் பின்னேற்புகுட்பட்டு 18.05.2022 அன்று தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி அளித்து ஆணை வழங்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி.

கண்காணிப்பு பொறியாளர், மழைநீர்வடிகால் துறை அவர்களின் 08.04.2022 நாளிட்ட குறிப்பில், பெருநகர சென்னை மாநகராட்சி மழைநீர் வடிகால் துறையில் உதவி செயற்பொறியாளராக பணிபுரியும் திருமதி.மு.மஞ்சுளா அவர்கள் தன்விருப்ப ஓய்வு வேண்டி சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களுக்கு 18.02.2022 அன்று கடிதம் அளித்துள்ளதாகவும், தனியர் வகித்துவரும் பதவி வகுப்பு – 2 ன் கீழ் வருவதால் 18.05.2022 அன்று தன் விருப்ப ஓய்வில் செல்ல முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் அனுமதியும் மற்றும் மன்றத்தின் அனுமதியும் வேண்டி கோரப்பட்டுள்ளது.

அரசாணை எண்.181 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள். 06.10.2009 ன்படி உதவி செயற் பொறியாளர் பதவியில் ஓய்வு பெற மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

திருமதி.மு.மஞ்சுளா, அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி கட்டடத்துறையில் 16.08.2010 அன்று உதவிபொறியாளராக பணியில் சேர்ந்து, 15.10.2018 அன்று உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று முதன்மை தலைமை பொறியாளார் (பொது) அலுவலகத்தில் பணிபுரிந்து 03.09.2022 அன்று மழைநீர் வடிகால் துறைக்கு பணியிடமாறுதல் செய்யப்பட்டு 18.05.2022 பணிபுரிந்து வந்துள்ளார்.

தனியர், பெருநகர சென்னை மாநகராட்சி கட்டடத்துறையில் 16.08.2010 அன்று உதவிபொறியாளராக பணியில் சேர்ந்து அப்பதவியில் சேர்ந்த நாள். 16.08.2010 அன்று முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு பின்னர், 17.08.2012 அன்று தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

திருமதி.மு.மஞ்சுளா, அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் 16.08.2010ல் பணியில் சேர்ந்து தற்போது 18.05.2022 வரை 11 வருடங்கள் 6 மாதங்கள் தகுதிகால பணியாக உள்ளது. மேலும், 18.07.1969 அன்று பிறந்த தனியர் தற்போது தன் விருப்ப ஓய்வு மனு அளித்த நாள்வரை தனியர் 52 வயதினை கடந்துள்ளார். தனியர் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த நாள்முதல் இது நாள் வரை பணியாற்றிய துறைகள்/மண்டலங்களின் விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை

வ. எண்	பதவி	காலம்	ஊதியம் வழங்கப்பட்ட துறைகள்/மண்டலம்	மாற்றுப்பணி அடிப்படையில் பணிபுரிந்த துறைகள் / மண்டலங்கள்
1.	உதவி பொறியாளர்	16.08.2010 முதல் 27.08.2010 வரை	கட்டடத்துறை	கட்டடத்துறை
		28.08.2010 முதல் 22.03.2011 வரை		மழைநீர் வடிகால் துறை
	உதவி பொறியாளர்	23.03.2011 முதல் 19.02.2011 வரை	கட்டடத்துறை	மண்டலம்-9 (ப-மண்டலம் -6)
		19.02.2011 முதல் 29.02.2012 வரை		மண்டலம் -02

2.	உதவி பொறியாளர்	01.03.2012 முதல் 13.05.2015 வரை	மண்டலம் -14	-
3.	உதவி பொறியாளர்	14.05.2015 முதல் 03.08.2016 வரை	திட்டம் வடிவமைப்பு (ம) பயிற்சித்துறை	தலைமைபொறியாளர் (பொது)
4.	உதவி செயற்பொறியாளர்	03.08.2016 முதல் 15.10.2018 வரை		
5.	உதவி செயற்பொறியாளர்	15.10.2018 முதல் 03.09.2021 வரை	முதன்மை தலைமை பொறியாளர் (ம) தலைமைபொறியாளர் (பொது)	-
6.	உதவி செயற்பொறியாளர்	03.09.2021 முதல் இந்நாள் வரை	மழைநீர் வடிகால் துறை	-

மேற்படி தனியர், காலங்களில் பணிபுரிந்த மண்டலங்களில் / துறைகளில் தணிக்கைத்தடை மற்றும் நேர்செய்யப்படாத விவரங்கள் முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை எனவும், விழிப்புக்குழுமம் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் மாநில இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும், கண்காணிப்புத்துறையில் தனியரின் மீது விசாரணை ஏதும் நிலுவையில் எனவும் விவரங்கள் மழைநீர் வடிகால் துறையிலிருந்து பெறப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர், விழிப்புக்குழுமம் அவர்களின் 03.03.2022 நாளிட்ட அறிக்கையில் திருமதி.மு.மஞ்சுளா, உதவி செயற்பொறியாளர், அவர்களின் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்தில் திருமதி.மு.மஞ்சுளா, உதவி செயற்பொறியாளர், அவர்கள் உறுப்பினர் இல்லை என தெரிவித்து சம்மந்தப்பட்ட சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்திலிருந்து சான்றிதழ் பெறப்பட்டுள்ளது-

இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும், கண்காணிப்புத்துறை, தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று 18.03.2022 நாளிட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 30.03.2022 நாளிட்ட அறிக்கையில் தனியரின் மீது தணிக்கைத்தடைகள் ஏதும் இல்லை என சான்று அளிக்கப்பட்டு 2020 – 2021 (ம) 2021-2022 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் வெளியிடப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மழைநீர் வடிகால் துறையில் பணிபுரிந்த காலத்திற்கான நேர்செய்யப்படாத முன்பணம் ஏதும் நிலுவையில் இல்லை என்ற விவரம் தலைமை கணக்கு அலுவலர்(கட்டடம்) அவர்களிடமிருந்து கடிதம் பெறப்பட்டுள்ளது. தணிக்கை தடை முன்பண நிலுவை ஒழுங்கு நடவடிக்கைக்கான இன்மை சான்று வழங்கப்பட்டு 2020 – 2021 (ம) 2021-2022 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் வெளியிடப்படவில்லை. மேலும், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என பொதுத்துறை ஈ13 இருக்கையில் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், திருமதி. மு. மஞ்சுளா அவர்கள் 14.4.2022 அன்று அளித்த உறுதி மொழி பத்திரத்தில் 2020-2021 ஆம் ஆண்டு முதல் 2021-2022 ஆம் ஆண்டுகளில் பணியாற்றிய காலங்களுக்கு தணிக்கைத்தடை அறிக்கைகள் வெளியிடப்படாததால் தணிக்ககைத்தடை அறிக்கைகள் வெளியாகும் போது தன் மீது தணிக்கைத்தடை இருப்பின் அதற்கு பொறுப்பாக்கி அதற்கான தொகையினை பங்களிப்பு ஓய்வூதிய திட்டம்(CPS) இறுதி தொகையில் பிடித்தம் செய்து கொள்ளவும், இந்நிகழ்வில் தனக்கு வழங்கவிருக்கும் ஓய்வுகால பணப்பயன்களில் மிகையாக வழங்கப்பட்டது என தெரியவரின் அத்தொகையை பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் ஒரே தவணையில் செலுத்தி விடுகிறேன் என்று உறுதியளிக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

மேலே கண்டுள்ள விவரங்களில் அடிப்படையில், மழைநீர் வடிகால் துறையில் உதவி செயற்பொறியாளராக பணிபுரியும் திருமதி.மு.மஞ்சுளா, அவர்கள் பணிபுரிந்த காலத்தில் தணிக்கைத் தடைகள், முன்பணம் நிலுவை மற்றும் அவரது செயல்பாடுகளினால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஆகியவை ஏதேனும் இருப்பின் பின்னர் தெரியவரும்பட்சத்தில், அவற்றிற்கு தனியரை முழுப்பொறுப்பாக்கி, அத்தொகை முழுவதும் அன்னாருக்கு வழங்கப்படும் புதிய ஓய்வூதிய காப்பீட்டு திட்டம் (CPS) இறுதி தொகையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு திருமதி.மு.மஞ்சுளா, உதவி செயற்பொறியாளர், மழைநீர் வடிகால் துறை அவர்களை 18.05.2022 பிற்பகல் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 18.05.2022 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி தனியரை *18.05.2022* அன்று தன் விருப்ப ஓய்வில் செல்ல ஆணை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஏற்கனவே, மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு திருமதி.மு.மஞ்சுளா, உதவி செயற்பொறியாளர், மழைநீர் வடிகால் துறை அவர்களை 18.05.2022 அன்று தன் விருப்ப ஓய்வில் செல்ல முதன்மை செயலர் / ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டமைக்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண்.ஈ2/5933/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.222/2022 **பொருள் எண்.80**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி -பொதுத்துறை - பொது சுகாதாரத்துறை - மண்டலம்-3 (மாதவரம்) - டாக்டர் A. பிரபாவதி, மண்டல நல அலுவலர் அவர்கள் 01.03.2022 அன்று பிற்பகல் தன்விருப்ப ஓய்வில் செல்ல விடுவிக்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-3 (மாதவரம்) பொது சுகாதாரத்துறையில் மண்டல நல அலுவலராக பணிபுரியும் டாக்டர் A. பிரபாவதி அவர்கள் தன்னுடைய உடல் நலக்குறைவு மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக தன்விருப்ப ஓய்வில் செல்ல 02.12.2021 அன்று தம்மை விடுவிக்குமாறு கோரி சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களுக்கு மனு சமர்ப்பித்திருந்தார்.

டாக்டர் A. பிரபாவதி அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியில், 19.04.1995 அன்று மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டு சுகாதாரத்துறை, மண்டலம் -3 (புதிய மண்டலம் 6) பணியில் சேர்ந்து பணிபுரிந்து வந்தார். பின்னர், உதவி சுகாதார அலுவலராக பதவி உயர்வு பெற்று 09.07.1999 அன்று முற்பகல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வந்த நிலையில், தனியரின் விருப்பத்தின் பேரில், உதவி சுகாதார அலுவலர் பதவியிலிருந்து 19.05.2015 அன்று மருத்துவ அலுவலராக பதவியிறக்கம் பெற்றுள்ளார். பின்னர் மீண்டும் 08.01.2020 பிற்பகல் முதல் மண்டல நல அலுவலராக பதவி உயர்வு பெற்று மண்டலம்-3ல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 19.04.1995 அன்று பணிவரன்முறை செய்யப்பட்டு, 19.04.1997 அன்று தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியருக்கு 09.07.1999 அன்று மண்டல நல அலுவலர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. அரசாணை எண்.583-ன் படி, தனியருக்கு Time Bound Promotion-ற்கான ஊதியம் 19.05.2015 முதல் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

திருமதி. A. பிரபாவதி (பணியாளர் எண். 132289), மண்டல நல அலுவலர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றிய துறைகள் மற்றும் மண்டலங்கள் விவரங்கள் பின்வருமாறு :

வ.எண்	பதவி	காலம்	மண்டலம் / துறை
1	மருத்துவ அலுவலர்	19.04.1995 முதல் 08.07.1999	மண்டலம்-6 (பழைய மண்டலம்-3) சுகாதாரத்துறை
2	உதவி சுகாதார அலுவலர்	09'07.1999 முதல் 12.07.2010	மண்டலம்-6 (பழைய மண்டலம்-4) சுகாதாரத்துறை
3	உதவி சுகாதார அலுவலர்	13.07.2010 முதல் 19.05.2011	மண்டலம்-8 (பழைய மண்டலம்-5) சுகாதாரத்துறை
4	மண்டல நல அலுவலர்	20.05.2011 முதல் 26.07.2015	பொது சுகாதாரத்துறை தலைமையிடம்
5	மருத்துவ அலுவலர்	27.07.2015 முதல் 08.01.2020	மண்டலம்-6, சுகாதாரத்துறை
6	மண்டல நல அலுவலர்	23.03.2019 முதல் 01.05.2020	மண்டலம்-2, மண்டல நல அலுவலர்(பொ)
7	மண்டல நல அலுவலர்	26.04.2017 முதல் 01.03.2022 வரை	மண்டலம்-3, சுகாதாரத்துறை

மேற்படி தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர் அவர்களின் கடிதத்தில், தனியர் மீது விழிப்பு குழுமத்தில், விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்புத்துறை அவர்களின் கடிதத்தில், தனியர் மீது எவ்வித விசாரணைகளும் குறிப்புகளும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-2, மண்டலம்-3, மண்டலம்-6, மண்டலம்-8, மற்றும் பொது சுகாதாரத்துறை, ஆகிய மண்டலங்கள்/ துறைகளிலிருந்து மண்டல அலுவலர்கள் மற்றும் உதவி கணக்கு அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து பல்வேறு நாளிட்ட கடிதங்கள் மற்றும்குறிப்புகளின்படி, மேற்படி தனியர் மீது நிலுவையிலுள்ள தணிக்கைத்தடைகள், முன்பணங்கள், மற்றும் ஒழுங்கு நடவடிக்கை விவரங்கள் பெறப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு,

வ. எண்	மண்டலம் / துறை	பதவி	ஒழுங்கு நடவடிக்கை	முன்பண நிலுவை	தணிக்கைத் தடை	நிதி இழப்பீடு
1	மண்டலம்-6 (பழைய மண்டலம்-3) சுகாதாரத்துறை 19.04.1995 முதல் 08.07.1999	மருத்துவ அலுவலர்	ஏதுமில்லை	ஏதுமில்லை	ஏதுமில்லை	-
2	மண்டலம்-6 (பழைய மண்டலம்-4) சுகாதாரத்துறை 09'07.1999 முதல் 12.07.2010	உதவி சுகாதார அலுவலர்	ஏதுமில்லை	ஏதுமில்லை	1999 - 2000 பத்தி எண் 63	12640
					2003 - 2004 பத்தி எண் 58	54096
3	மண்டலம்-8 (பழைய மண்டலம்-5) சுகாதாரத்துறை 13.07.2010 முதல் 19.05.2011	உதவி சுகாதார அலுவலர்	ஏதுமில்லை	ஏதுமில்லை	ஏதுமில்லை.	-
4	பொது சுகாதாரத்துறை தலைமையிடம் 20.05.2011 முதல் 26.07.2015	மண்டல நல அலுவலர்	ஏதுமில்லை	ஏதுமில்லை	ஏதுமில்லை	-
5	மண்டலம்-6, சுகாதாரத்துறை 27.07.2015 முதல் 08.01.2020	மருத்துவ அலுவலர்	ஏதுமில்லை	ஏதுமில்லை	ஏதுமில்லை	
6	மண்டலம்-2, மண்டல நல அலுவலர்(பொ) 23.03.2019 முதல் 01.05.2020	மண்டல நல அலுவலர்	ஏதுமில்லை	ஏதுமில்லை	ஏதுமில்லை	-
7	மண்டலம்-3, சுகாதாரத்துறை 26.04.2017 முதல் 06,06,2021 வரை	மண்டல நல அலுவலர்	ஏதுமில்லை	ஏதுமில்லை	வருடம் / பத்தி எண்	
					2017-2018 / 35, 39	நிதி இழப்பீடு ஏதும் இல்லை
					2017-18 / 30	ரூ.10,72,000/-
					2018-19 / 20	நிதி இழப்பீடு ஏதும் இல்லை
மொத்தம்						ரூ.11,38,736/-

மேற்படி தனியர் மண்டலம்-3 மற்றும் 6ல் தனியர் பண ஈடுபாடு உள்ள தணிக்கை பத்தியில் ரூ-11,38,736/- (ரூபாய் பதினொரு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து எழுநூற்று முப்பத்தி ஆறு மட்டும்)ற்கான எழுப்பப்பட்ட தணிக்கைதடை நீக்கம் செய்யப்படாமல் நிலுவையில் உள்ள தணிக்கைத்தடைகளோடு பண ஈடுபாடு அல்லாத தணிக்கைத்தடைகளையும் நீக்கம் செய்யப்பட வேண்டும்.

மேலும், 2018-19 ஆம் ஆண்டு பத்தி எண். 30ல் உள்ள தணிக்கை பத்தியில் ரூ-10,72,000/- (ரூபாய் பத்து லட்சத்து ஏழுபத்து இரண்டாயிரம் மட்டும்)ற்கான எழுப்பப்பட்ட தணிக்கைதடை குறித்த கோப்பு பொது சுகாதாரத் துறைக்கு நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டு, இக்கோப்பு தொடர்பாக, பொது சுகாதாரத்துறையில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிய அனுப்பப்பட்ட துப்புரவு அலுவலர் / சுகாதார ஆய்வாளர் (25 நபர்கள்) மண்டலம்-3ல் 2 சுகாதார அலுவலர் 29.09.2011 முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டு 08.02.2013 நாள்

வரை சென்னை மாநகராட்சியில் பெறப்பட்டுள்ள முழு ஊதியத்தினை உணவு பாதுகாப்பு துறையிலிருந்து பெற மண்டல நல அலுவலர்கள் தனியர்கள் பெற்ற ஊதிய விவரம் கோரி 1 முதல் 15 வரை உள்ள மண்டலங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான பணி நடைமுறையில் உள்ளது.

டாக்டர். A.பிரபாவதி, மண்டல நல அலுவலர்-3, மண்டலம்-3 அவர்களின் உறுதிமொழியில், தன்விருப்ப ஓய்வு பெற்ற பின்னர் தமக்கு வழங்கப்படும் பணிக்கால பயன்களான ஓய்வூதியம் மற்றும் துறை வழி பணப்பயன்கள் மிகையாக வழங்கப்பட்டிருப்பது பின்னர் தெரியவரின், அத்தொகையினை ஒரே தவணையில் செலுத்தி விடுவேன் அல்லது எனக்கு வழங்கப்படும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம் எனவும், மேலும், தனியர் மீது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படுத்தும் தணிக்கைத்தடைகள் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவந்தால், அல்லது இதன் மீதான தணிக்கைத்தடைகள் நீக்க தவறும் நிலையில், அதற்கான முழுப்பொறுப்பேற்று அதற்குண்டான தொகையினையும் தனியரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம் என 20 ரூபாய் முத்திரைத் தாளில் உறுதி மொழி அளித்துள்ளார்.

மேலும், குறிப்பாக தணிக்கைத் தடையில் குறிப்பிடப்பட்டுள்ள முழுத் தொகையினையும் (ரூ.11,38,736/-), ஓய்வூதிய பணப்பயன்களில் பணிக்கொடையில் பிடித்தம் செய்து கொள்ளலாம் என ரூ.20ற்கான முத்திரைத் தாளில் உறுதி மொழி அளித்துள்ளார்.

நிதி ஆலோசகர் அவர்களின் 25.02.2022 நாளிட்ட குறிப்பில், தனியர் 1995 – 1996 முதல் 2019 - 2020 ஆம் ஆண்டு வரை பணிபுரிந்து காலத்திற்கு தனிப்பொறுப்பில் ரூ.11,38,736/- உள்ளடக்கிய 7 தணிக்கைத்தடை பத்திகள் தனிபொறுப்பில் உள்ளது எனவும், 2020–2021 மற்றும் 2021–2022 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையால் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத்தடை பத்திகள் தனியரை சார்ந்தது என பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர், மண்டலம்-3, 30.04.2022 நாளிட்ட குறிப்பில், டாக்டர் A. பிரபாவதி, மண்டல நல அலுவலர், மண்டலம்-3 (மாதவரம்) அவர்களை 01.03.2022 அன்று பிற்பகல் தன்விருப்ப ஓய்வில் செல்ல மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு ஆணை பெற்று தருமாறு கோரி கோப்பு பெறப்பட்டது.

தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 59 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 26 ஆண்டுகள் 10 மாதங்கள் 13 நாட்கள் ஆகும். தனியரின் பிறந்த நாள் - 26.12.1962. அரசு பணிவிதிகளின்படி தனியர் வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.12.2022 ஆகும். (60-வயது முதிர்வு ஓய்வு கணக்கீட்டின் படி). தனியருக்கு ஊதியமில்லா பணிக்காலம் ஏதுமில்லை.

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை நாள்: 07.10.1991ன்படியும், அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள்: 11.12.1995ன்படியும், தனியர் 26 ஆண்டுகள் 10 மாதங்கள் 13 நாட்கள் பணிநிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளார்.

தன்விருப்ப ஓய்வில் செல்ல தமிழ்நாடு அரசின் அடிப்படை விதி 56 (3)ன்படி பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(e) Notice of voluntary retirement given by a Government servant shall be accepted by the appointing authority, subject to the following conditions being satisfied namely:-

(iv) that no dues which cannot be recovered from his Death – cum - Retirement Gratuity are pending to be recovered from the Government servant concerned:

தனியர் வகித்து வரும் மண்டல நல அலுவலர் பதவி வகுப்பு II-ன் கீழ் வருவதால், இப்பதவியில் உள்ளவர்களை ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் டாக்டர் A. பிரபாவதி, மண்டல நல அலுவலர், மண்டலம்-3 அவர்கள் தன்விருப்ப ஓய்வு கோரி 02.12.2021 அன்று விண்ணப்பித்துள்ளதினை தொடர்ந்தும், நிதி ஆலோசகர் அவர்களின் அறிக்கையின் அடிப்படையிலும், தனியர் மீது முன்பண ஈடுபாடு **ரூ.11,38,736/-** (ரூபாய் பதினொறு இலட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து எழுநூற்றி முப்பத்தி ஆறு மட்டும்) தொகை நீக்கம் செய்யப்படாமல் நிலுவையில் உள்ள தணிக்கைத்தடைகளோடு பண ஈடுபாடு அல்லாத தணிக்கைத்தடைகளையும் நீக்கம் செய்யப்பட வேண்டும் என்கிற நிபந்தனைக்குட்பட்டும், 2020-21 மற்றும் 2021-22 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையால் வெளியிடப்படாத நிலையில், தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர் தனியர் மீது தணிக்கைத்தடைகள் இருப்பது தெரியவரும் பட்சத்தில் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், மற்றும் தனியர் மீதான தணிக்கைத்தடைகள் நீக்க தவறும் நிலையில், அதற்கு தனியரை பொறுப்பாக்கி அதற்குண்டான தொகையினை தனியரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை 01.03.2022 அன்று பிற்பகல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் பின்னேற்புக்குட்பட்டு ஆணை வழங்கப்பட்டது.

தற்போது தனியர் மீது நிலுவையிலுள்ள தணிக்கைத்தடைகள் பத்திகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

வ. எண்	மண்டலம் / துறை	பதவி	தணிக்கைத் தடை	நிதி இழப்பீடு	நீக்கம் செய்யப்பட்ட பத்திகளின் விவரம்
1	மண்டலம்-6 (பழைய மண்டலம்-4) சுகாதாரத்துறை 09'07.1999 முதல் 12.07.2010	உதவி சுகாதார அலுவலர்	1999 - 2000 பத்தி எண் 63	12640	உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, தொ.க.எண்.6/2016/ஈ2/2021, நாள்.04.10.2021ல் உள்ளபடி நீக்கம் செய்யப்பட்டுள்ளது
			2003 - 2004 பத்தி எண் 58	54096	உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, தொ.க.எண்.6/2016/ஈ2/ 2016, நாள்.26.09.2016ல் உள்ளபடி நீக்கம் செய்யப்பட்டுள்ளது
2	மண்டலம்-3, சுகாதாரத்துறை 26.04.2017 முதல் 06,06,2021 வரை	மண்டல நல அலுவலர்	வருடம் / பத்தி எண்		
			2017-2018 / 35, 39	நிதி இழப்பீடு ஏதும் இல்லை	
			2017-18 / 30	ரூ.10,72,000/-	உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.06.06.2022ல் உள்ளபடி நீக்கம் செய்யப்பட்டுள்ளது (பொறுப்பு நீக்கம்)
			2018-19 / 20	நிதி இழப்பீடு ஏதும் இல்லை	
மொத்தம்				ரூ.11,38,736/-	

எனவே, டாக்டர் *A*. பிரபாவதி, மண்டல நல அலுவலர், மண்டலம்-*3* அவர்கள் 01.*03.2022* அன்று பிற்பகல் தன்விருப்ப ஓய்வு செல்ல சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்கு, நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண்.ஈ1/16110/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.223/2022 **பொருள் எண்.81**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.R.சுபாஷ், செயற்பொறியாளர், அவர்கள் 30.06.2022 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.

வட்டார துணை ஆணையர்(தெற்கு) அவர்களின் 23.05.2022 நாளிட்ட கடிதத்தில், திரு.R.சுபாஷ், செயற்பொறியாளர், மண்டலம்-13 அவர்கள் 30.06.2022 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளதால், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல மன்றத்தின் அனுமதி கோரியுள்ளார். தனியரின் பிறந்த தேதி 07.06.1962 ஆகும்.

திரு.R.சுபாஷ், அவர்கள் முதன்முதலாக சென்னை மாநகராட்சியில் 30.06.1993 அன்று உதவி பொறியாளர் பணியில் சேர்ந்தார். தனியர் முதன்முதலாக உதவி பொறியாளராக பணியில் சேர்ந்த நாளான 30.06.1993 முதல் அப்பதவியில் பணிவரன்முறைபடுத்தப்பட்டும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டும் பணிப்பதிவேடு தொகுதி-1, பக்கம் 7 மற்றும் 13ல் பதியப்பட்டுள்ளது. மேலும் தனியர் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்ற நாளான 06.02.2009 முதல் பணிவரன்முறை மற்றும் உறுதியாக்கம் செய்யப்பட்டு பணிப்பதிவேடு தொகுதி-2, பக்கம்-8ல் பதியப்பட்டுள்ளது. பின்னர் தனியர் 04.05.2015 அன்று செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று அப்பதவியில் பணிவரன் முறை செய்யப்பட்டு இந்நாள் வரை பணிபுரிந்து வருகிறார்,

தனியரின் பிறந்த தேதி 07.06.1962 ஆகும். தனியர் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த நாள் 30.06.1993 முதல் 30.06.2022 வரை 29 வருடங்கள் பணிபுரிந்துள்ளார். மேலும், தனியர் பணியில்சேர்ந்த நாள் முதல் பணியாற்றிய துறை / வட்டார அலுவலகங்கள் / மண்டலங்கள் விவரங்கள் பின்வருமாறு:

வரிசை எண்.	பதவி	துறை / மண்டலம்	பணிபுரிந்த காலம்
1.	உதவி பொறியாளர்	பழைய மண்டலம்-7, புதிய மண்டலம்-9	30.06.1993 முதல் 02.07.2000 வரை
2.	உதவி பொறியாளர்	பழைய மண்டலம்-9, புதிய மண்டலம்-13	02.07.2000 முதல் 24.09.2007 வரை
3.	உதவி பொறியாளர்	பழைய மண்டலம்-5, புதிய மண்டலம்-8	24.09.2007 முதல் 06.02.2009 வரை
4.	உதவி செயற்பொறியாளர்	இயந்திர பொறியியல் துறை	06.02.2009 முதல் 14.02.2011 வரை
5.	உதவி செயற்பொறியாளர்	பழைய மண்டலம்-4, புதிய மண்டலம்-6	15.02.2011 முதல் 09.09.2012 வரை
6	உதவி செயற்பொறியாளர்	மண்டலம்-11	10.09.2012 முதல் 30.04.2015 வரை
7	செயற்பொறியாளர்	மத்திய வட்டார அலுவலகம்	04.05.2015 முதல் 15.09.2015 வரை

8.	செயற்பொறியாளர்	மண்டலம்-10	16.09.2015 முதல் 26.10.2016 வரை
9	செயற்பொறியாளர்	மண்டலம்-7	27.10.2016 முதல் 22.02.2019 வரை
10	செயற்பொறியாளர்	மண்டலம்-9	22.02.2019 முதல் 01.07.2.019 வரை
11	செயற்பொறியாளர்	மண்டலம்-8	02.07.2019 முதல் 03.10.2019 வரை
12	மண்டல அலுவலர்(பொ)	மண்டலம்-8	03.10.2019 முதல் 16.10.2.019 வரை
13	செயற்பொறியாளர் (பொ)	மண்டலம்-11	17.10.2019 முதல் 18.06.2020 வரை
14	செயற்பொறியாளர் (பொ)	மண்டலம்-5	19.06.2020 முதல் 23.06.2020 வரை
15	செயற்பொறியாளர்/ மண்டல அலுவலர்(பொ)	மண்டலம்-12	24.06.2020 முதல் 17.08.2020 வரை
16	செயற்பொறியாளர் (பொ)	மண்டலம்-13	17.08.2020 முதல் 18.07.2021 வரை
17	செயற்பொறியாளர்	மண்டலம்-13	19.07.2021 முதல் இந்நாள்வரை

மேற்கண்ட அட்டவணையின்படி தனியர் பணிபுரிந்த துறை /மண்டலங்களில் பெறப்பட்ட விவரங்களின்படி இவர்மீது தணிக்கை தடைகள், ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண நிலுவை ஏதும் இல்லை எனவும். தணிக்கை தடைகள் ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண நிலுவை இருப்பது பின்னர் தெரியவரின், தனியரை அவற்றிற்கு பொறுப்பாக்கி அவரது ஓய்வூதிய பணப்பயன்களிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம் என்ற நிபந்தனைக்குட்படுத்தி, அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது. மேற்படி, அட்டவணையில் வரிசை எண். 6ல் உதவி செயற் பொறியாளர் பதவியில் 30.04.2015 அன்று மண்டலம் 11லிருந்து பிற்பகல் முதல் விடுக்கப்பட்டு 01.05.2015 அன்று மே தினம் 02.05.2015 மற்றும் 03.05.2015 சனி மற்றும் ஞாயிறு அரசு விடுமுறை நாட்கள் முடித்து 04.05.2015 அன்று முற்பகல் தனியர் உதவி செயற்பொறியாளர் பதவியிலிருந்து செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று மத்திய வட்டார அலுவலகத்தில் பணியில் சேர்ந்தார்.

நிதி ஆலோசகர் அவர்களின் 18.03.2022 நாளிட்ட குறிப்பின்படி, தனியர்மீது கீழ்கண்டவாறு 12 தணிக்கைத்தடை பத்திகள் நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :-

வரிசை எண்.	மண்டலம் / துறைகள்	ஆண்டு	பத்தி எண்	தணிக்கைக் குப்படுத்தப்பட்டத் தொகை	தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம்	தனியரை பொறுப்பாக்கும் தொகை
1	பு.ம.13 ப.ம.9	2000/2001	42	-	-	-

2	பு.ம.13 ப.ம.9	2003/2004	34 இணைப்பு -5 வ.எண். 2,3,4	-	-	-
3	மண்டலம் -11	2013-14	5 வ.எண்.6	-	-	-
4	மண்டலம் -11	2014-15	46 வ.எண்.1	-	-	-
5	மண்டலம் -7	2016-2017	29(எ)	381000	3	127000
6	மண்டலம் -7	2016-2017	36(2)	3491	3	1164
7	மண்டலம் -7	2016-2017	36(4)	3622	3	1207
8	மண்டலம் -7	2016-2017	36(7)	1340	3	447
9	மண்டலம் -7	2016-2017	36(11)	4273	3	1424
10	மண்டலம் -7	2016-2017	36(12)	2459	3	820
11	மண்டலம் -7	2018-2019	47	-	-	-
12	மண்டலம் -7	2018-2019	48	-	-	-
	மொத்தம்		**12**	**396185**	**/**	**132062**

மேற்படி, நிதி ஆலோசகர் குறிப்பிட்டுள்ள 12 தணிக்கை தடை பத்திகளில், பெருநகர சென்னை மாநகராட்சி இணை இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கைக்துறையினரால் 24.03.2022, 29.03.2022 மற்றும் 24.06.2022 நாளிட்ட குறிப்பில் மேற்படி 12 பத்திகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

தனியரது 19.05.2022 நாளிட்ட உறுதிமொழி கடிதத்தின்படி, தனியர் ஓய்வு பெற்ற பின்னர், அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கால பயன்களான ஓய்வூதியம் மற்றும் இதர பணப்பயன்கள் மிகையாக இருப்பது பின்னர் தெரியவந்தால், அத்தொகையினை அன்னாருக்கு வழங்கப்படும் ஓய்வூதிய பணப்பயன்களான பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம் எனவும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர், விழிப்பு துறையிலிருந்தும் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்ற விவரம் பெறப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்க 28.04.2022 நாளிட்ட கடிதத்தில், திரு.R.சுபாஷ், செயற்பொறியாளர் அவர்கள் கூட்டுறவு சங்கத்தில் தற்போது உறுப்பினராக இல்லை என சான்றளிக்கப்பட்டுள்ளது.

திரு.R.சுபாஷ் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் ஓய்வு பெறும் நாள் வரை தணிக்கை தடைகள், ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண நிலுவை ஏதுமில்லை என்பதற்கான சான்றும், தனியரை பொறுப்பாக்கும் முன்பண நிலுவை ஏதுமில்லை என்பதற்கான சான்றும் சம்மந்தப்பட்ட அலுவலரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

துணை ஆணையர் அவர்களின் 10.06.2022 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையில் ஒழுங்கு நடவடிக்கை 10(a) விதியின் கீழ் தனியரிடம் விளக்கம் கேட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு நிலுவையில் உள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் செயற்பொறியாளர் பதவியானது வகுப்பு-2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவியில் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றத்தின் வசம் உள்ளது.

எனவே, 2020-2021,2021-2022 மற்றும் 2022-23ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை தடைகள் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் வெளியிடப்படவில்லை என்பதால், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர் தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது தெரியவரும் பட்சத்தில் தனியரை முழு பொறுப்பாக்கி, அன்னாருக்கு வழங்கப்படும் ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்

என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியர் மீது 10 (a) விதியின் கீழ் விளக்கம் கேட்டு வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு எவ்வித குந்தகமின்றி, திரு.R.சுபாஷ், செயற்பொறியாளர், மண்டலம்-13 அவர்களை 30.06.2022 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண்.ஈ1/18973/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.224/2022 **பொருள் எண்.82**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திருமதி. L. வெண்மதி, தலைமை கணக்கு அலுவலர் (நிர்வாகம்) அவர்கள் - 30.06.2022 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.

நிதிஆலோசகர் அவர்களின் 30.05.2022 நாளிட்ட குறிப்பில், பெருநகர சென்னை மாநகராட்சி, மத்திய கணக்கு குழுமத்தில் பணிபுரியும் திருமதி. L. வெண்மதி, தலைமை கணக்கு அலுவலர் (நிர்வாகம்) அவர்கள் 30.06.2022 அன்று வயது முதிர்வு காரணமாக ஓய்வில் செல்ல, மன்றத்தின் அனுமதி பெற வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திருமதி. L. வெண்மதி, தலைமை கணக்கு அலுவலர் (நிர்வாகம்) பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் 03.07.1982 முதல் அடிப்படை சுகாதார பணியாளராக பணியமர்த்தப்பட்டு, பின்னர் 15.09.1982 முதல் ஒரே ஊதியம் (ம) ஊதியகட்டில் நுண்ணோக்கியாளராக பதவி மாற்றம் செய்யப்பட்டு, அப்பதவிகளில் முறையே 03.07.1982 (ம) 15.09.1982ல் பணிவரன்முறைபடுத்தப்பட்டுள்ளார். பின்னர், 21.03.1986 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்று அப்பதவியில் 17.03.1988 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. பின்னர் 19.09.1995 முற்பகல் முதல் உதவியாளராக பதவி உயர்வு பெற்று அப்பதவியில் 19.09.1995 பணிவரன்முறை செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து 24.09.2008 முற்பகல் முதல் கண்காணிப்பாளராக பதவி உயர்வு பெற்று 24.09.2008 அன்று பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. பின்பு 23.10.2013 முதல் நிர்வாக அலுவலராக பதவி உயர்வு பெற்று, 23.10.2013 அன்று பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. பின்பு 04.03.2016 உதவி கணக்கு அலுவலராக பதவி உயர்வு பெற்று 04.03.2016 அன்று உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 23.11.2017 முதல் தலைமை கணக்கு அலுவலராக பதவி உயர்வு பெற்று 23.11.2017 உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

தனியர், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியில் நியமனம் செய்யப்பட்ட 03.07.1982 முதல் வயது முதிர்வு ஓய்வு பெறும் 30.06.2022 வரை 39 ஆண்டுகள் 11 மாதங்கள் 27 நாட்கள் பணிபுரிந்து வருகிறார். மேலும், தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் இது நாள் வரை பணியில் இருந்துள்ள காலத்திற்கு தனியரை பொறுபாக்கிய தணிக்கை தடைகள், ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் முன்பண நிலுவை பெற வேண்டி கீழ்கண்ட மண்டலங்கள் மற்றும் துறைகளுக்கு குறிப்பு அனுப்பி மண்டலங்கள்/துறைகளின் அறிக்கைகள் பெறப்பட்டன அதன் விவரங்கள் அட்டவணையில் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

அட்டவணை

வ. எண்.	தனியர் பணிபுரிந்த காலங்கள்	பதவி	துறைகள் மற்றும் மண்டலங்கள்
1.	03.07.1982 முதல் 21.03.1986 பிற்பகல் வரை	அடிப்படை சுகாதார பணியாளர் மற்றும் நுண்ணோக்கியாளர்	பொது சுகாதாரம் பூச்சி தடுப்புத்துறை (மலேரியா)
2.	21.03.1986 பிற்பகல் முதல் 24.10.1990 முற்பகல் வரை	இளநிலை உதவியாளர்	மத்திய கணக்கு குழுமம்
3	24.10.1990 முற்பகல் முதல் 19.09.1995 முற்பகல் வரை	இளநிலை உதவியாளர்	பழை மண்டலம்-6 புதிய மண்டலம்-9

4	19.09.1995 முதல் 31.05.1996 வரை 01.06.1996 & 02.06.1996 சனி, ஞாயிறு அரசு விடுமுறை, 03.06.1996 மற்றும் 04.06.1996 தற்செயல் விடுப்பு	உதவியாளர்	பழைய மண்டலம் - 7 புதிய மண்டலம் - 9
5	05.06.1996 முற்பகல் முதல் 31.12.1998 பிற்பகல் வரை	உதவியாளர்	இயந்திர பொறியியல் துறை - பணியிடம் (விழிப்பு குழுமம்)
6	01.01.1999 முற்பகல் முதல் 24.05.1999 பிற்பகல் வரை	உதவியாளர்	இயந்திர பொறியியல் துறை - பணியிடம் (பி.டெப்போ)
7	24.05.1999 பிற்பகல் முதல் 09.08.1999 பிற்பகல் வரை	உதவியாளர்	பேருந்து சாலைகள் துறை
8	10.08.1999 முற்பகல் முதல் 24.09.2008 முற்பகல் வரை	உதவியாளர்	மத்திய கணக்கு குழுமம்
9	24.09.2008 முற்பகல் முதல் 23.11.2009 முற்பகல் வரை	கண்காணிப்பாளர்	பொது சுகாதாரத்துறை
10	23.11.2009 முற்பகல் முதல் 22.10.2013 பிற்பகல் வரை	கண்காணிப்பாளர்	மின் துறை (பணியிடம் இ.டி.பி.செல்)
11	23.10.2013 முற்பகல் முதல் 04.03.2016 முற்பகல் வரை	நிர்வாக அலுவலர்	மண்டலம் -2 கணக்கு அலுவலர்(பொ) பணியிடம் (ப.க.கு மாவட்ட குடும்ப நலத்துறை
12	04.03.2016 பிற்பகல் முதல் 23.11.2017 பிற்பகல் வரை	உதவி கணக்கு அலுவலர்	மத்திய கணக்கு குழுமம் பணியிடம் (ப.க.கு. மாவட்ட குடும்ப நலத்துறை)
13	23.11.2017 பிற்பகல் முதல் நாளது தேதி வரை	தலைமை கணக்கு அலுவலர்	மத்திய கணக்கு குழுமம்

மேற்படி, அட்டவணையில் தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் இது நாள் வரை பணியில் இருந்துள்ள காலத்திற்கு தனியரை பொறுப்பாக்கிய தணிக்கை தடைகள், ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் முன்பண நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்க 19.04.2022 நாளிட்ட அறிக்கையில் தனியர் " உறுப்பினர் இல்லை " எனவும், தனியர் செலுத்த வேண்டிய நிலுவை தொகை ஏதும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் இன்றைய தேதியில் விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என, விழிப்பு அலுவலர் அவர்களால் 26.04.2022 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி நுலகத்தில் தனியர் " உறுப்பினர் இல்லை " என 27.04.2022 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமதி. L. வெண்மதி, தலைமை கணக்கு அலுவலர் (நிர்வாகம்) அவர்களின் 21.05.2022 நாளிட்ட உறுதி மொழி பத்திரத்தில், அன்னார் கடந்த 03.07.1982 முதல் அடிப்படை சுகாதார பணியாளர் மற்றும் நுண்ணோக்கியாளராக சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்து தற்போது தலைமை கணக்கு அலுவலராக (நிர்.) பணிபுரிந்து 30.06.2022 அன்று வயது முதிர்வு ஓய்வு

பெறுகிறேன் எனவும், ஓய்வுக்கு பின்னர் அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கால பயன்களான ஓய்வூதியம் மற்றும் துறை வழி பணப்பயன்கள் மிகையாக இருப்பது பின்னர் தெரியவந்தால் அத்தொகையினை ஓரே தவணையில் செலுத்திவிடுவேன் அல்லது தனக்கு வழங்கப்படும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்துகொள்ளலாம் என உறுதியளித்துள்ளார்.

நிதிஆலோசகர் அவர்கள் 04.06.2022 நாளிட்ட கடிதத்தில், திருமதி. L. வெண்மதி, தலைமை கணக்கு அலுவலர் (நிர்வாகம்) அவர்களுக்கு 2014-2015 முதல் 2019-2020 வரை கீழ்க்கண்ட அட்டவணையின் படி தணிக்கை தடை பத்திகள் மற்றம் தணிக்கை உட்படுத்தப்பட்ட தொகை ரூ.1,84,608/- ஆகும் எனவும், அத்தொகையில் தனியரை மற்றும் பொறுப்பாக்கும் தொகை ரூ. 92,304/- என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ எண்.	மண்டலம்/ துறை	ஆண்டு	பத்தி எண்	தணிக்கைக்குட் படுத்தப்பட்ட தொகை ரூ.	தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம்	திருமதி. L. வெண்மதி, தலைமை கணக்கு அலுவலரை பொறுப்பாக்கும் தொகை ரூ.
1	மருத்துவ சேவைகள்துறை	2014 -2015 (அ)	29	184608	2	92304
2	மருத்துவ சேவைகள்துறை	2014 -2015 (அ)	47	-	-	-
3	மருத்துவ சேவைகள்துறை	2014 -2015 (கு)	22	-	-	-
4	மருத்துவ சேவைகள்துறை	2015 -2016 (அ)	37	-	-	-
5	மத்திய கணக்கு குழுமம்	2019-2020	15	-	-	-
6	மத்திய கணக்கு குழுமம்	2019-2020	27	-	-	-
மொத்தம்			**6**	**184608**		**92304**

மேலும், 2020-2021 ஆம் ஆண்டு முதல் தனியர் ஓய்வு பெறும் நாள் வரையிலான மேற்படி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத்தடை பத்திகள் தனியரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அன்னரின் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனவும், தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, கூட்டுபொறுப்பில் தனியருக்கு மட்டும் ரூ.92304/- உள்ளடக்கிய 6 தணிக்கை தடை பத்திகள் நிலுவையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியர், தற்போது வகிக்கும் பதவி 1Aன் வகுப்பு கீழ் வருவதால், தனியர் வயது முதிர்வு காரணமாக 30.06.2022 ஒய்வில் செல்ல மன்றத்தின் அனுமதி பெற வேண்டும்.

எனவே, தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, கூட்டுபொறுப்பில் தனியருக்கு மட்டும் ரூ.92304/- உள்ளடக்கிய 6 தணிக்கை தடை பத்திகள் நிலுவையில் உள்ளதால், ரூ.92304/-னையும், நிபந்னைக்குப்பட்டும் மற்றும் 2020-2021, 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையால் வெளியிடப்படும், தணிக்கை அறிக்கையில் தனியர் மீது தணிக்கையில் குறிப்பிடும் முன்பணம் நிலுவைகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி நிதி இழப்பீடுகள் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில்,

அதற்கும் தனியரை முழுப்பொறுப்பாக்கி அதற்குண்டான தொகையினையும் தனியரின் இறப்பு - ஓய்வு பணிக்கொடையிலிருந்து (DCRG) மற்றும் ஓய்வூதிய பணப்பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், திருமதி. L. வெண்மதி, தலைமை கணக்கு அலுவலர் (நிர்வாகம்) அவர்கள் வயது முதிர்வு காரணமாக 30.06.2022 ஓய்வில் செல்ல நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண்.ஈ1/16641/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.225/2022 **பொருள் எண்.83**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.M.வஜ்ரவேலு, உதவி கணக்கு அலுவலர், (பொதுத்துறை ஓய்வூதியம்) அவர்கள் 30.06.2022 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.

நிதி ஆலோசகர் அவர்களின் 28.05.2022 நாளிட்ட குறிப்பில், பெருநகர சென்னை மாநகராட்சியில், மத்திய கணக்கு குழுமத்தில் பணிபுரியும் திரு.M.வஜ்ரவேலு, உதவி கணக்கு அலுவலர், (பணிபுரியும் இடம் பொதுத்துறை (ஓய்வூதியம்) அவர்கள், 30.06.2022 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற உள்ளதால், தனியர் வகுப்பு நிலை-II அலுவலர் என்பதால், அன்னாரை வயது முதிர்வு காரணமாக ஓய்வில் செல்ல மன்றத்தின் அனுமதி வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திரு.M.வஜ்ரவேலு, உதவி கணக்கு அலுவலர், (பொதுத்துறை ஓய்வூதியம்) அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் தொகுப்பாளர் மற்றும் எழுத்தாளராக 23.04.1990 அன்று பணியில் சேர்ந்து பணிவரன்முறைபடுத்தப்பட்டு, 23.04.1992 அன்று தகுதிகாண் பருவம் முடித்துள்ளார். பின்னர், 18.10.2012 முற்பகல் முதல் கண்காணிப்பாளராக பதவி உயர்வு பெற்று, அப்பதவியில் 18.10.2012 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து 26.08.2019 முதல் நிர்வாக அலுவலராக பதவி உயர்வு பெற்று அப்பதவியில் 26.08.2019 பணிவரன்முறை செய்யப்பட்டு, இதனை தொடர்ந்து 11.08.2021 பிற்பகல் முதல் உதவி கணக்கு அலுவலராக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகிறார்.

தனியர், பெருநகர சென்னை மாநகராட்சி பணியில் நியமனம் செய்யப்பட்ட 23.04.1990 முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறும் 30.06.2022 வரை 32 ஆண்டுகள் 02 மாதங்கள் 08 நாட்கள் பணிபுரிந்துள்ளார். மேலும், தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் இது நாள் வரை பணியில் இருந்துள்ள காலத்திற்கு தனியரை பொறுப்பாக்கிய தணிக்கை தடைகள், ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் முன்பண நிலுவை பெற வேண்டி கீழ்கண்ட மண்டலங்கள் மற்றும் துறைகளுக்கு குறிப்பு அனுப்பி மண்டலங்கள்/துறைகளின் அறிக்கைகள் பெறப்பட்டன அதன் விவரங்கள் அட்டவணையில் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

அட்டவணை

வ. எண்.	காலங்கள்	பதவி	துறை
1.	23.04.1990 முதல் 18.10.2012 வரை	தொகுப்பாளர் மற்றும் எழுத்தர்	மருத்துவ சேவைகள் துறை
2..	18.10.2012 முதல் 26.08.2019 வரை	கண்காணிப்பாளர்	பொதுத்துறை
3.	26.08.2019 முதல் 11.08.2021 பிற்பகல்	நிர்வாக அலுவலர்	புதிய மண்டலம்-10
4.	11.08.2021 பிற்பகல் முதல் இன்று வரை	உதவி கணக்கு அலுவலர்	பொதுத்துறை (ஓய்வூதியம்)

மேற்படி, அட்டவணையில் தனியர் பணியாற்றிய மண்டலங்கள் மற்றும் துறைகளில் தனியர் மீது முன்பணம் நிலுவைகள், தணிக்கை தடைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் எதுவும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்க 26.04.2022 நாளிட்ட அறிக்கையில் தனியர் "உறுப்பினர் இல்லை" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் இன்றைய தேதியில் விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என, விழிப்பு அலுவலர் அவர்களின் 27.04.2022 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி நூலகத்தில் தனியர் "உறுப்பினர் இல்லை" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனயரின் 08.06.2022 நாளிட்ட உறுதி மொழி பத்திரத்தில், தான் கடந்த 23.04.1990 முதல் தொகுப்பாளர் மற்றும் எழுத்தராக சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்து தற்போது உதவி கணக்கு அலுவலர் (பொதுத்துறை.ஓய்வூதியம்) பணிபுரிந்து 30.06.2022 அன்று வயது முதிர்வு ஓய்வு பெறுகிறேன் எனவும், ஓய்வுக்கு பின்னர் தனக்கு வழங்கப்படும் பணிக்கால பயன்களான ஓய்வூதியம் மற்றம் துறை வழி பணப்பயன்கள் மிகையாக இருப்பது பின்னர் தெரியவந்தால் அத்தொகையினை ஓரே தவணையில் செலுத்திவிடுவேன் அல்லது தனக்கு வழங்கப்படும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்துகொள்ளலாம் என உறுதியளிக்கிறேன் எனவும் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.M.வஜ்ரவேலு, உதவி கணக்கு அலுவலர் (பொதுத்துறை.ஓய்வூதியம்) அவர்கள் வயது முதிர்வு காரணமாக 30.06.2022 அன்று ஓய்வு பெற உள்ளார். தனியர் தற்போது வகிக்கும் பதவி நிலை – IIனை சார்ந்தது ஆகும். நிலை-II பதவியில் ஓய்வு பெறும் அலுவலர்களின் ஓய்விற்கான அனுமதிக்கு மாமன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டும்.

மேலும், 2020-2021, 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையால் வெளியிடப்படும், தணிக்கை அறிக்கையில் தனியர் மீது தணிக்கையில் குறிப்பிடும் முன்பணம் நிலுவைகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி நிதி இழப்பீடுகள் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில், அதற்கும் தனியரை முழுப்பொறுப்பாக்கி அதற்குண்டான தொகையினை தனியரின் இறப்பு - ஓய்வு பணிக்கொடையிலிருந்து (DCRG) மற்றும் ஓய்வூதிய பணப்பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, திரு.M.வஜ்ரவேலு, உதவி கணக்கு அலுவலர் (பொதுத்துறை.ஓய்வூதியம்) அவர்கள் 30.06.2022 அன்று பிற்பகல் வயது முதிர்வு காரணமாக ஓய்வில் செல்ல நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

பொ.து.ந.க.எண்.ஈ2/15092/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.226/2022 **பொருள் எண்.84**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மன்றத் துறை - திரு. இராஜசேகர், மன்றச் செயலாளர் அவர்கள் 30.06.2022 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந-3) துறை, அ.ஆ.(நிலை) எண்.137, நாள்.08.10.216ல், பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத் துறையில் சென்னை மாநகராட்சி பொதுப் பணி விதிகள் 1970-ன், கீழ் *"IB"* வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ள மன்றச் செயலாளர் பணியிடத்தினை, *"IA"* வகையில் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பணியிடங்களுக்கு இணையாக தரம் உயர்த்தியும், அதன்படி அப்பணியிடத்திற்கான ஊதிய விகிதத்தை ரூ.15600-39100+ தர ஊதியம் 5400 யிலிருந்து ரூ. 15600-39100 + தர ஊதியம் 6600/- என்ற நிலைக்கு உயர்த்தியும், அவ்வாறு உயர்த்தப்படுகிற ஊதிய விகிதத்தை தற்பொழுது மன்றச் செயலாளராக பணியாற்றும் திரு. பா. இராஜசேகர் அவர்களுக்கு நடைமுறைப்படுத்தவும், ஆணை வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண். 001/2020, நாள்.02.01.2020ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி சட்ட அலுவலராக நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்ட திரு. பா. இராஜசேகர், மன்றச் செயலாளர் அவர்களுக்கு தமிழ்நாடு ஓய்வூதிய விதி 1978, துணை விதி-27 ன் படி கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 5 ஆண்டுகள் (பணப்பயனின்றி) தொழிற்கல்வி பயின்ற தனியருக்கு ஓய்வூதியக் காலத்திற்கு கூடுதல் பணிக்காலமாக எடுத்துக் கொள்ள, அனுமதி அளித்து ஆணையர் அவர்களின் 24.01.2020 நாளிட்ட செயல்முறை ஆணையிடப்பட்டுள்ளது.

The Tamil Nadu Pension Rules-1978-ல்

"27". Addition to qualifying service in special circumstances:

1. Any person appointed to a service or post and who retires from service on or after the 1st July 1960 may add to his service qualifying for superannuation pension (but not for any other class of pension) the actual period not exceeding one-fourth of the length of his service or the actual period by which his age at the time of recruitment exceeds thirty years or a period of five years, whichever is less, if the service or post is one.
   a) For which post-graduated research or specialist qualification or experience in scientific, technological or professional fields is prescribed not merely as desirable but as obligatory qualification: and
   b) For which the age of recruitment prescribed in the service rules applicable to the service or post concerned is above thirty years." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. பா. இராஜசேகர் அவர்கள் 22.03.1999 அன்று பிற்பகல் உதவி சட்ட அலுவலராக பணியில் சேர்ந்தார். பின்னர், கூடுதல் சட்ட அலுவலராக 10.11.2006 முதல் பணிபுரிந்து, 29.12.2012 முதல் மன்றச் செயலாளராக பதவி உயர்வு பெற்று தொடர்ந்து இந்நாள் வரை மன்றத் துறையில் பணிபுரிந்து வருகிறார்.

பொதுத்துறையின் 22.12.2021 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு மேற்காண் மன்றச் செயலாளர் அவர்கள் 30.06.2022 அன்று வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார். தனியரின் பிறந்த தேதி 07.06.1962, தனியர் பணியில் சேர்ந்த நாள் 22.03.1999, வயது முதிர்வு ஓய்வு நாள். 30.06.2022 ஆகும். தனியரின் பணிக்கால விவரம் பின்வருமாறு:

வ. எண்	அலுவலரின் பெயர்	பதவி/ துறை	பணிபுரிந்த காலம்	பணிவரன் முறைப்படுத்தப்பட்ட நாள்	தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்த நாள்
1	திரு. பா. இராஜசேகர்	உதவி சட்ட அலுவலர்/ சட்டக்குழுமம்	22.03.1999 பி.ப. முதல் 09.11.2006 பி.ப. வரை (SR.Pg.No.6)	22.03.1999 பி.ப. (SR.Pg.No.11)	22.03.2001 பி.ப. (SR.Pg.No.11)
2		கூடுதல் சட்ட அலுவலர் / சட்டக்குழுமம்	10.11.2006 மு.ப. முதல் 03.01.2013 மு.ப. வரை (SR.Pg.No.12 & 23)	-	09.11.2008 பி.ப. (SR.Pg.No.19)
3		மன்றச் செயலாளர்/ மன்றத் துறை	03.01.2013 மு.ப. முதல் இந்நாள் வரை (SR.Pg.No.23)	03.01.2013 (SR.Pg.No.11) vol-II	03.01.2015 (SR.Pg.No.16) vol-II

விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 29.01.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 03.02.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் உதவி சட்ட அலுவலர், கூடுதல் சட்ட அலுவலர், மன்றச் செயலாளர் (பொ) மற்றும் மன்றச் செயலாளராக பணிபுரிந்த காலங்களில் 1998 – 1999 ஆம் ஆண்டு முதல் 2019 – 2020 ஆம் ஆண்டுகள் வரையிலான தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கையின்படி, நிலுவை ஏதும் இல்லை எனவும், 2020-2021 முதல் 2022-2023 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் வெளியிடப்படவில்லை என்றும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத் தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனவும், மேலும், தனியர் பணியாற்றிய காலத்தில், தனியர் மீது ஏதேனும் தணிக்கைத் தடை பத்திகள் எழுப்பட்டிருப்பது பின்னர் தெரியவரின் அப்பத்திக்கு தனியரே முழுப் பொறுப்பாவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் 04.02.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் சங்கத்தின் உறுப்பினர் இல்லை என சான்று அளிக்கப்பட்டுள்ளது.

முதுநிலை சட்ட அலுவலர், சட்டகுழுமம் அவர்களின் 18.02.2022 நாளிட்ட கடிதத்தில், திரு. பா. இராஜசேகர், உதவி சட்ட அலுலவர் மற்றும் கூடுதல் சட்ட அலுவலர் மற்றும் மன்றச் செயலாளராக (பொ) ஆகிய பதவிகளில் சட்டக்குழுமத்தில் 22.03.1999 முதல் 02.01.2013 வரையிலான பணிபுரிந்த காலத்திற்கு தனியரின் மீது தணிக்கைத் தடை, முன்பணம், ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என சான்றளித்துள்ளார்.

தனியரின் 12.05.2022 நாளிட்ட கடிதத்தில், தனக்கு வழங்கப்படும் ஓய்வுக்கால பணப்பயன்கள் மிகையாக வழங்கப்பட்டது என பின்னர் தெரியவரின், அத்தொகையினை, உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் உடன் நிகழ்வு தணிக்கைச் சான்று பெற்றப்பின் பிடித்தம் செய்ய வேண்டிய தொகை ஏதேனும் இருப்பின், அத்தொகையினை ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம் என ரூ.20/- முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

மன்றச்செயலாளர், மன்றத்துறை அவர்களின்13.05.2022 நாளிட்ட கடிதத்தில், திரு. பா. இராஜசேகர், மன்றச் செயலாளர் அவர்களை 30.06.2022 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல மன்றத்தின் அனுமதி பெற்று தரக் கோரி கோப்பு பெறப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந,3) துறை, நாள்.06.10.2009ன்-படி மன்றச்செயலாளர் பதவியானது வகுப்பு *I-A*ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றத்தின் வசம் உள்ளது.

ஆகவே, மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், திரு. பா. இராஜசேகர், மன்றச் செயலாளர், மன்றத் துறை அவர்களின், *2020-2021, 2021-2022* மற்றும் *2022-2023* ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையால் வெளியிடப்படவில்லை எனவும், தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர் தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டு அத்தொகையினை அவரது ஓய்வூதிய பணிக்கொடை/ அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, தனியரை *30.06.2022* அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண். ஈ1/011499/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.227/2022 **பொருள் எண்.85**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மின்துறை - திரு.எம்.பரந்தாமன், கண்காணிப்பு பொறியாளர் (மி) அவர்கள் 31.05.2022 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி.

கண்காணிப்பு பொறியாளர்(மின்சாரம்) அவர்களின் 07.04.2022 நாளிட்ட குறிப்பில், பெருநகர சென்னை மாநகராட்சி, மின்துறை தலைமையிடத்தில், கண்காணிப்பு பொறியாளராக 27.10.2021 அன்று பணியமர்த்தப்பட்டு மாற்றுபணி அடிப்படையில் வட்டார அலுவலக (மத்தியம்) பணிபுரியும் திரு.எம்.பரந்தாமன், கண்காணிப்பு பொறியாளர் (மி) அவர்கள் 31.05.2022 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வு பெற உள்ளதாக தெரிவித்து மன்றத்தின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

திரு.எம்.பரந்தாமன், கண்காணிப்பு பொறியாளர்(மி) (மாற்றுபணி அடிப்படையில் வட்டார அலுவலகம் (மத்தியம்) அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் உதவி மின் பொறியாளராக 23.01.1991 அன்று பணியில் சேர்ந்து 23.01.1991ல் பணிவரன்முறைபடுத்தப்பட்டு, 22.01.1993-ல் உதவி பொறியாளர்(மின்சாரம்) பதவியில் தகுதிகாண் பருவமும் முடித்துள்ளார். பின்னர் 12.09.2006 பிற்பகல் முதல் உதவி கோட்ட மின் பொறியாளராக பதவி உயர்வு பெற்று 12.09.2006ல், உறுதியாக்கம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. பின்னர், 03.08.2012 பிற்பகல் முதல் கோட்ட மின் பொறியாளராக பதவியில் சேர்ந்து அந்த பதவியில் 03.08.2012ல் உறுதியாக்கம் மற்றும் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. தொடந்து 14.09.2015 பிற்பகல் முதல் மண்டல அலுவலர் பதவியில் பணிவரன்முறை முறைப்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது தற்போது 27.10.2021 முதல் கண்காணிப்பு பொறியாளராக (மின்சாரம்) பதவி உயர்வு பெற்று மாற்றுப்பணி அடிப்படையில் வட்டார அலுவலகத்தில் (மத்தியம்) பணிபுரிந்து வருகிறார். தனியரின் பிறந்த தேதி 21.05.1962 ஆகும்

தனியர், பெருநகர சென்னை மாநகராட்சி பணியில் 23.01.1991 அன்று பணியமர்த்தப்பட்டு 08.04.2022 அன்று 31 ஆண்டுகள், 02 மாதம், 16 நாட்கள் பணிபுரிந்து வருகிறார். மேலும் , தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் இது நாள் வரை பணியில் இருந்துள்ள காலத்திற்கு தனியரை பொறுப்பாக்கிய தணிக்கைத் தடை மற்றும் முன்பண நிலுவை பெற வேண்டி கீழ்கண்ட மண்டலங்கள் மற்றும் தனியர் பணிபுரிந்த துறைகளுக்கு குறிப்பு அனுப்பி மண்டலங்களிலிருந்து அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் அட்டவணை 1ல் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது:-

அட்டவணை -I

வ. எண்	பணிபுரிந்த காலம்	பதவி	பழைய மண்டலம்	புதிய மண்டலம்
1.	23.01.1991 முதல் 15.12.1999 வரை	உதவி மின் பொறியாளர்	மின்துறை / தலைமையிடம்	
2.	15.12.1999 முதல் 11.09.2006 வரை	உதவி மின் பொறியாளர்	பழைய மண்டலம் - 5	புதிய மண்டலம் - 8
3.	12.09.2006 முதல் 10.03.2008 வரை	உதவி கோட்ட மின் பொறியாளர்	பழைய மண்டலம் - 5	புதிய மண்டலம் - 8
4.	10.03.2008 முதல் 19.08.2011 வரை	உதவி கோட்ட மின் பொறியாளர்	பழைய மண்டலம் - 7	புதிய மண்டலம் - 9
5.	20.08.2011 முதல் 03.08.2012 வரை	உதவி கோட்ட மின் பொறியாளர்	பழைய மண்டலம் - 4	புதிய மண்டலம் - 6

6.	03.08.2012 முதல் 13.10.2014 வரை	கோட்ட மின் பொறியாளர்	மின்துறை/ தலைமையிடம்	
7.	14.10.2014 முதல் 14.09.2015 வரை	கோட்ட மின் பொறியாளர்	மின்துறை/ தலைமையிடம் (மண்டல அலுவலர்(பொ) மண்டலம் - 8	
8.	14.09.2015 முதல் 18.02.2019 வரை	மண்டல அலுவலர்	-	புதிய மண்டலம் - 8
9.	18.02.2019 முதல் 04.09.2019 வரை	மண்டல அலுவலர்	-	புதிய மண்டலம் - 7
10.	05.09.2019 முதல் 01.07.2020 வரை	மண்டல அலுவலர்	-	புதிய மண்டலம் - 10
11.	01.07.2020 முதல் 27.10.2021 வரை	மண்டல அலுவலர்	-	புதிய மண்டலம் - 6
12.	27.10.2021 முதல் இதுநாள் வரை	கண்காணிப்பு பொறியாளர் (மி)	மின்துறை/ தலைமையிடம் பணிமாற்று அடிப்படையில் வட்டார அலுவலகம் (மத்தியம்)	

துறைகள் / மண்டல அலுவலர்களின் பல்வேறு நாளிட்ட கடிதங்களில், தனியர் உதவி மின் பொறியாளர், உதவி கோட்ட மின் பொறியாளர், கோட்ட மின் பொறியாளர், மண்டல அலுவலர், கண்காணிப்பு பொறியாளர் (மி) ஆக துறைகள் / மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை மற்றும் முன்பண நிலுவை ஏதும் நிலுவையில் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்க 28.01.2020 நாளிட்ட அறிக்கையில் தனியர் " உறுப்பினர் இல்லை" எனவும், தனியர் செலுத்த வேண்டிய நிலுவை தொகை ஏதும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் இன்றைய தேதியில் விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என, விழிப்பு அலுவலர் அவர்களின் 29.03.2022 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 08.03.2022 நாளிட்ட கடிதத்தில், திரு.எம்,பரந்தாமன், கண்காணிப்பு பொறியாளர்(மி) மாற்றுபணி அடிப்படையில் வட்டார அலுவலகம் (மத்தியம்) அவர்கள் உதவி மின் பொறியாளர், உதவி கோட்ட மின் பொறியாளர், கோட்ட மின் பொறியாளர், மண்டல அலுவலர், கண்காணிப்பு பொறியாளர் (மி) ஆக துறைகள் / மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கைகளின்படி இணைக்கப்பட்டுள்ள அட்டவணை-II்ல் கண்டுள்ளவாறு 8 தணிக்கைத்தடை பத்திகள் கூட்டுப்பொறுப்பு தொகை ரூ.24,74,696/-ம் மற்றும் தனிப்பொறுப்பில் தொகை ரூ.13,41,872/- நிலுவையில் உள்ளது எனவும், மேற்கண்ட தணிக்கைத்தடை பத்திகளை நீக்கம் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2020 - 2021, 2021 - 2022 மற்றும் 2022 - 2023 ஆம் ஆண்டுகளுக்கான உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனவும், தனியர் மண்டலம் மற்றும் துறைகளில் பணிபுரிந்த காலங்களில் பணியில் சேர்ந்த நாள் முதல் ஓய்வு பெறும் நாள் வரை தணிக்கை தடைகள், ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண நிலுவை எதுமில்லை என்பதற்கான சான்று மண்டல அலுவலர் / துறைத் தலைவரிடமிருந்து பெற்று கோப்பில் இணைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை-II ல்

வ. எண்	மண்டலம் / துறைகள்	ஆண்டு	பத்தி எண்	தணிக்கைக்குட் படுத்தப்பட்டத் தொகை ரூ.	தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம்	திரு.எம்.பரந்தாமன் கண்காணிப்பு பொறியாளர்(மி) பொறுப்பாக்கும் தொகை ரூ.
1.	பு மண்டலம் -9 (ப.ம-7)	2011-12 வ.எண்.3 (ம) 4	62	155590	-	155590
2.	மின்துறை	2012-13	23 இ.எ II (2012-13) வ.எ.2	2000	1	2000
3		2014-15	8 பகுதி III வ.எ.2	1050	1	1050
4	மண்டலம் - 8	2015-16 த/அ	16	1203625	17	70801
5		2018-19 த/அ	51 இணைப்பு 9 வ.எண்.27	252011	1	252011
6	மண்டலம் - 7	2018-19 த/அ	12	-	-	-
7	மண்டலம் - 9	2018-19 த/அ	19 இணைப்பு 3ல்	860420	1	860420
8		2019-20 த/அ (வ.எ.7ல் கண்டுள்ள படி)	78 தொடர் பத்தி			
மொத்தம்			**8 பத்திகள்**	**24,74,696**	**-**	**13,41,872**

மேற்படி, வரிசை எண் 2, 2012-2013 (23 இ.எ.II (2012 - 2013) வ.எண். 2 ரூ.2000/- செலுத்துச்சீட்டு எண்.04-2022-23/007/1991, நாள்.07.04.2022, சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டது. வரிசை எண் 3 மின்துறை 2014-15 (வ.எண்.1 - 22 வரை) (8 பகுதி II வ.எ.2 ரூ.1050/-) அனைத்தும் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. தொ.க.எண்.6/ ஈ1/2020,நாள்.17.03.2020 நகல் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது. 2015- 2016 வரிசை எண். 4, பத்தி எண். 16 தொ.க.எண். 6/ஈ1/2021, நாள் 23.03.2022, வரிவசூலித்தற்கு உதவி வருவாய் அலுவலரை பொறுப்பாக்கி மண்டல அலுவலர் திரு.எம்.பரந்தாமனை பொறுப்பு நீக்கம் செய்யலாம் என இணை இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது மேலும், வரிசை எண்.5 உள்ள பத்தி நீக்கம் செய்யப்பட்டுள்ளது. வரிசை எண். 6 கண்டுள்ள பத்தி (பணப்பொறுப்பு இல்லை) என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், வரிசை எண். 7 மற்றும் 8ல், மண்டலம் - 9ல், 2018-19 த/அ 19 இணைப்பு 3 மற்றும் 2019-20 த/அ (வ.எ.7ல் கண்டுள்ளபடி) 78 தொடர் பத்தி ரூ.8,60,240/.ற்கு கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் (இணை ஆணையர் (வ (ம) நி) அவர்களின் 26.02.2020 நாளிட்ட கடிதத்தில் திரு.எம் பரந்தாமன் அவர்கள் ஓய்வு பெறவிருப்பதால் தனியரால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து தேர்தல் செலவினத்திற்கும் அசல் பட்டிகள் (Original Bills are available in Election Section) கிடைக்கப் பெற்றுள்ளதால் பட்ஜெட் ஒதுக்கீடு பெற்றதும் தனியரால் செலவிடப்பட்ட தொகையினை நேர்செய்யப்படும் என்பதை தெரிவித்துள்ளார். மேலும், வரிசை எண் 1, 7 மற்றும் 8 இத்தணிக்கை தடை நீக்கம் செய்ய தனியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு.எம்.பரந்தாமன், கண்காணிப்பு பொறியாளர்(மி) மாற்றுப்பணி அடிப்படையில் வட்டார அலுவலகம் (மத்தியம்) அவர்கள் 05.04.2022 நாளிட்ட உறுதிமொழி பத்திரத்தில் தான் கடந்த 23.01.1991 முதல் உதவி மின் பொறியாளராக சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்து, தற்போது கண்காணிப்பு பொறியாளராக பணிபுரிந்து 31.05.2022 அன்று வயது முதிர்வு ஓய்வு பெறுகிறேன் எனவும், ஓய்வுக்கு பின்னர் தனக்கு வழங்கப்படும் பணிக்கால பயன்களான ஓய்வூதியம் மற்றும் துறை வழி பணப்பயன்கள் மிகையாக இருப்பது பின்னர் தெரியவந்தால் அத்தொகையினை ஓரே தவணையில் செலுத்திவிடுவேன் அல்லது தனக்கு வழங்கப்படும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்துகொள்ளலாம் என உறுதியளிக்கிறேன் எனவும் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியரின் 07.04.2022 நாளிட்ட கடிதத்தில், கண்காணிப்பு பொறியாளராக பணிபுரிந்து 31.05.2022 ஓய்வு பெற உள்ள நான் புதிய மண்டலம் 9 பழைய மண்டலம் 7ல் பணிபுரிந்த காலத்தில் 2011ஆம் ஆண்டில் நடைப்பெற்ற பொதுத் தேர்தலில் நிதி இழப்பு தொடர்பாக எழுப்பப்பட்டதணிக்கைத் தடை 2011-2012 ஆண்டு பத்தி எண்.62, மற்றும் 2018-19 பத்தி எண் 19 இணைப்பு 3 மற்றும் 2019-2020 பத்தி எண் 78 தொடர் பத்தி தொடர்ச்சியாக 2011 2012ல் தெரிவிக்கப்பட்ட தொகை ரூ.1,55,590 /-சேர்த்து 2018 -2019ல் மற்றும் 2019-2020ல் மொத்தமாக ரூ. 8,60,420/- என தெரிவித்துள்ளார். எனவே, இவை அனைத்தும் ஓரே பத்தி என தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், 2012 -2013 பத்தி எண் 23ற்கான தொகை ரூ.2000/- சென்னை மாநகராட்சி கருவூலத்தில் 07.04.2022 அன்று செலுத்தப்பட்டது என தெரிவித்துள்ளார்.

இதன் தொடர்பாக, கண்காணிப்பு பொறியாளர்(மி) அவர்களின் 09.04.2022 நாளிட்ட குறிப்பில் தனியர் (Motor Vehicle) வாங்கியதற்கான முன்பணம் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் பெறப்பட்ட வீட்டு மனைக்கான தவணைத் தொகை ஆகியவை முழுவதுமாக தனியர் செலுத்தியுள்ளார் என்று 09.04.2022 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக உறுதிமொழி அளித்துள்ளார்.

இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை அவர்களின் 26.04.2022 நாளிட்ட கடிதத்தில், மேற்படி அட்டவணை II வரிசை எண். 7 மற்றும் 8ல், மண்டலம் - 9ல், 2018 -19 த/அ 19 இணைப்பு 3 மற்றும் 2019 -20 த/அ (வ.எ.7ல் கண்டுள்ளபடி) 78 தொடர் பத்தி ரூ.8,60,240/- தனியரை பொறுப்பு நீக்கம் செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண். 163 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.3) துறை, நாள். 31.05.2022ன் படியும் மற்றும் முதன்மை செயலர் / ஆணையர் அவர்களன் 31.05.2022 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திரு.எம்.பரந்தாமன் கண்காணிப்பு பொறியாளர்(மின்சாரம்) அவர்களை 31.05.2022 பிற்பகல் வயது முதிர்வு ஓய்வு காரணமாக, மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி பணியிலிருந்து 31.05.2022 பிற்பகல் விடுவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில், ஏற்கனவே மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு, திரு.எம்.பரந்தாமன் கண்காணிப்பு பொறியாளர்(மின்சாரம்) அவர்களை 31.05.2022 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கபட்டமைக்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

பொ.து.ந.க.எண்.ஈ1/15426/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.228/2022 **பொருள் எண்.86**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம் -15ல் பணிபுரியும் திரு.P.மாயவன், உதவி செயற் பொறியாளர்(மின்சாரம்) அவர்கள் 31.05.2022 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி.

வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் 17.05.2022 நாளிட்ட குறிப்பில், திரு.P.மாயவன், உதவி செயற் பொறியாளர்(மின்சாரம்) அவர்கள் 31.05.2022 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல, மன்றத்தின் அனுமதி பெற முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் ஒப்புதல் வேண்டி கோப்பு சமர்ப்பித்துள்ளார்.

திரு.P.மாயவன், உதவி செயற் பொறியாளர்(மின்சாரம்) அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.05.2022 ஓய்வு பெறவுள்ளார். தனியர் தற்போது வகிக்கும் பதவி நிலை – II ஆகும். நிலை II பதவியில் ஓய்வு மன்றத்தின் அனுமதி பெற வேண்டும்.

திரு.P.மாயவன், உதவி செயற் பொறியாளர்(மின்சாரம்) அவர்கள் முதன் முதலில் சென்னை மாநகராட்சியில் 07.10.1985 அன்று பழைய மண்டலம் -9, (புதிய மண்டலம் 13ல்) உதவி மேற்பார்வையாளராக பணியில் சேர்ந்து 07.10.1985ல் பணிவரன்முறைபடுத்தப்பட்டு 07.10.1987 அன்று தகுதிகாண்பரும் முடித்துள்ளார். பின்னர் 23.06.1995 அன்று இளநிலை பொறியாளர்(மின்சாரம்)ஆகவும், 28.04.2002 அன்று உதவி பொறியாளராக பதவி மாற்றம் செய்யப்பட்டார். பின்னர் 27.10.2014 அன்று உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்)ஆகவும் பதவி உயர்வு பெற்று இப்பதவிகளில் பணிவரன்முறைபடுத்தப்பட்டும் மற்றும் தகுதிகாண்பருவம் முடித்துள்ளார்.

தனியரின் பிறந்த தேதி 15.05.1962 ஆகும். தனியர் பெருநகர சென்னை மாநகராட்சி பணியில் 07.10.1985ல் பணியமர்த்தப்பட்டு 31.05.2022 வரை 36 வருடங்கள் 07 மாதங்கள் 24 நாட்கள் ஆகும். தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் இது நாள் வரை பணியில் இருந்துள்ள காலத்திற்கு தனியரை பொறுப்பாக்கிய தணிக்கைத் தடை மற்றும் முன்பண நிலுவை பெற வேண்டி கீழ்கண்ட மண்டலங்கள் மற்றும் தனியர் பணிபுரிந்த துறைகளுக்கு குறிப்பு அனுப்பி மண்டலங்களிலிருந்து அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் அட்டவணை 1ல் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது:-

அட்டவணை -I

வ. எண்	பணிபுரிந்த காலம்	பதவி	பழைய மண்டலம்	புதிய மண்டலம்
1	07.10.1985 முதல் 22.06.1995 வரை	உதவி மேற்பார்வை பொறியாளர்	பழைய மண்டலம் - 9	புதிய மண்டலம் -13
2	23.06.1995 முதல் 27.04.2002 வரை	இளநிலை பொறியாளர் (மின்சாரம்)	பழைய மண்டலம் - 9	புதிய மண்டலம் -13
3	28.04.2002 முதல் 12.03.2013 வரை	உதவி பொறியாளர் (மின்சாரம்)	புதிய மண்டலம் -13	
4	13.03.2013 முதல் 26.02.2014 வரை	உதவி பொறியாளர் (மின்சாரம்)	புதிய மண்டலம் -12	
5	27.02.2014 முதல் 20.02.2019 வரை	உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்)	புதிய மண்டலம் -14	

6	21.02.2019 முதல் தற்போதை வரை	உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்)	புதிய மண்டலம் -15

துறைகள் / மண்டல அலுவலர்களின் பல்வேறு நாளிட்ட கடிதங்களில், தனியர் உதவி மேற்பார்வையாளர், இளநிலை பொறியாளர் (மின்சாரம்), உதவி பொறியாளர் (மின்சாரம்) மற்றும் உதவி செயற் பொறியாளர்(மின்சாரம்) ஆக துறைகள் / மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை மற்றும் முன்பண நிலுவை ஏதும் நிலுவையில் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்க 10.02.2020 நாளிட்ட அறிக்கையில் தனியர் " உறுப்பினர் இல்லை" எனவும், தனியர் செலுத்த வேண்டிய நிலுவை தொகை ஏதும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் இன்றைய தேதியில் விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என, விழிப்பு அலுவலர் அவர்களின் 10.05.2022 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 22.02.2022 நாளிட்ட கடிதத்தில், திரு.P.மாயவன், உதவி செயற் பொறியாளர்(மின்சாரம்) அவர்கள் உதவி மேற்பார்வை பொறியாளர், இளநிலை பொறியாளர்(மின்சாரம்), உதவி பொறியாளர்(மின்சரம்) மற்றும் உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) ஆக மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கைகளின்படி இணைக்கப்பட்டுள்ள அட்டவணை-II ல் கண்டுள்ளவாறு 4 தணிக்கைத்தடை பத்திகள் தனிப்பொறுப்பு தொகை ரூ.8,78,000/-ம் நிலுவையில் உள்ளது. மேற்கண்ட தணிக்கைத்தடை பத்திகளை நீக்கம் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2020 - 2021, 2021 - 2022 மற்றும் 2022 - 2023 ஆம் ஆண்டுகளுக்கான உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும். மேலும், தனியர் மண்டலம் மற்றும் துறைகளில் பணிபுரிந்த காலங்களில் பணியில் சேர்ந்த நாள் முதல் ஓய்வு பெறும் நாள் வரை தணிக்கை தடைகள், ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண நிலுவை ஏதுமில்லை என்பதற்கான சான்று மண்டல அலுவலர் / துறைத் தலைவரிடமிருந்து பெற்று கோப்பில் இணைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை-II ல்

வ. எண்	மண்டலம் / துறைகள்	ஆண்டு	பத்தி எண்	தணிக்கைக்குட்படுத்தப்பட்டத் தொகை ரூ.	தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம்	திரு.P.மாயவன், உதவி செயற் பொறயாளர் (மி) பொறுப்பாக்கும் தொகை ரூ.
1	மண்டலம் 14	2016-2017 (த.கு)	43	-	-	-
2		2017-2018 (த.கு)	63	-	-	-
3		2018-2019	29(I)	-	-	-
4	மண்டலம் 15	2019-2020	38(அ) வ.எண். 10,11 (ம)12	6,90,000	1	6,90,000
5			38(ஆ) வ.எண். 2	1,88,000	1	1,88,000
	மொத்தம்		**4**	**8,78,000**	**2**	**8,78,000**

இணை இயக்குநர்(மு.கூ.பொ) பெருநகர சென்னை மாநகராட்சித் தணிக்கை அவர்களின் 26.02.2020 நாளிட்ட கடிதத்தில் மேற்படி அட்டவணை II்ல் வரிசை எண் 1 மற்றும் 2ல் கண்டுள்ள பத்திகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மண்டல அலுவலர்-14 அவர்களின் 10.03.2022 நாளிட்ட கடிதத்தில், மேற்படி, அட்டவணை II்ல் வரிசை எண் 2ல் கண்டுள்ள பத்தி எண் 29(I) நிலுவையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த பத்தி பொறுத்தவரை தனியர் மீது எந்த பணம் பொறுப்பு ஏதும் இல்லை.

மேற்படி, அட்டவணை II்ல் வரிசை எண் 2019-2020 ஆண்டிற்கான பத்தி எண் 38(அ) வ.எண். 10,11 (ம)12 தொகை ரூ.6,90,000 ஆகும். இப்பத்தி 2014 ஆம் ஆண்டில் தென் சென்னை பாராளுமன்ற தேர்தல் பணிக்காக முண்பணமாக பெறப்பட்டது. இம்முண்பணம் தொகையை நேர் செய்ய மண்டல அலுவலர் 15 அவர்கள் மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களுக்கு 27.07.2015 மற்றும் 2019லும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்நாள் வரை நேர் செய்யப்படவில்லை.

பகுதி கணக்கு அலுவலர், மண்டலம் 15 அவர்களின் 08.03.2022 நாளிட்ட குறிப்பில் மண்டலம் 15ல், 2019 ஆண்டு தேர்தல் பணிக்காக முன்பணம் ரூ. 1,88,000/- மற்றும் கோவிட் 19 பெருந்தொற்று பணிக்காக பெற்ற முன்பணம் தொகை ரூ.26,39,041/- தனியரை பொறுப்பாக்கும் விதமாக நிலுலையில் உள்ளது என தெரிவித்துள்ளார்.

மேற்படி, பகுதி கணக்கு அலுவலர், மண்டலம் 15 அவர்கள் தெரிவித்துள்ள 2019 ஆண்டு தேர்தல் பணிக்காக முன்பணம் ரூ.1,88,000/- நேர் செய்ய மாவட்ட ஆட்சியர் காஞ்சிபுரம் அவர்களுக்கு வட்டார துணை ஆணையர்(தெற்கு) அவர்களின் மூலமாக கடிதம் 31.10.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், தனியரின் 20.05.2022 நாளிட்ட கடிதத்தில் கோவிட்-19 பெருந்தொற்று பணிக்காக முன்பணம் தொகையான ரூ.26,39,041/- நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு வட்டார துணை ஆணையர்(தெற்கு) அவர்களின் அனுமதிப் பெற்று நேர் செய்ய கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

திரு.P.மாயவன், உதவி செயற் பொறியாளர்(மின்சாரம்) அவர்கள் 13.05.2022 நாளிட்ட உறுதி மொழி பத்திரத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியில் 07.10.1985 அன்று உதவி மேற்பார்வையாளராக சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்தேன் என்றும், 31.05.2022 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல இருப்பதாலும் ஓய்வு பெற்ற பின்னர் அன்னாரின் வழங்கப்படும் பணிக்காலப் பயன்களான ஓய்வூதியம் மற்றும் துறை வழி பணப்பயன்கள் மிகையாக இருப்பது பின்னர் தெரியவந்தால், அத்தொகையினை ஒரே தவணையில் செலுத்திவிடுவேன் அல்லது அன்னாருக்கு வழங்கப்படும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம் என உறுதியளிக்கிறேன் எனவும் சம்மதம் தெரிவித்து உறுதிமொழி அளித்துள்ளார்..

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், 2020-21, 2021-22 மற்றும் 2022-2023 வரை உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையினரால் மேற்கொள்ளபடவிருக்கும் தணிக்கை அறிக்கையில் தனியர் மீது தணிக்கையில் குறிப்பிட்ட முன்பணம் நிலுவைகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி நிதி இழப்பீடுகள் மற்றும் அதன் பின்னர் வருங்காலங்களில் ஏற்படவிருக்கும் நிதி இழப்பீடுகள் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அதற்கும் தனியரை முழுப்பொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் திரு.P.மாயவன், உதவி செயற் பொறியாளர்(மின்சாரம்) அவர்களை, பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 27.05.2022 நாளிட்ட ஆணையின் படி மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி பணியிலிருந்து 31.05.2022 பிற்பகல் முதல் விடுவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில், எற்னவே மன்றத்தின் பின்னேற்குட்பட்டு திரு.P.மாயவன், உதவி செயற் பொறியாளர்(மின்சாரம்) அவர்களை 31.05.2022 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஒய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டமைக்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண்.ஈ2/2286/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.229/2022 **பொருள் எண்.87**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரியும் - டாக்டர். எம்.எஸ். ஹேமலதா, பெருநகர மருத்துவ அலுவலர் (பொ) அவர்களுக்கு மண்டல மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தவும் மற்றும் தகுதிக்காண் பருவம் முடித்தவராக அறிவிக்கவும் அனுமதி.

பெருநகர மருத்துவ அலுவலர், மருத்துவ சேவைகள் துறை அவர்களின் *06.01.2022* நாளிட்ட கடிதத்தில், டாக்டர். எம்.எஸ். ஹேமலதா, அவர்கள் 09.11.1989 அன்று மருத்துவ அலுவலர் பணி நியமனம் பெற்று இரண்டு வருடத்திற்குள் *Department Test in the Tamil Nadu Medical code* மற்றும் *The Account Test for Executive Officer* ஆகிய இரண்டு துறை தேர்வுகளையும் 1991ஆம் வருடம் நவம்பர் மாதத்தில் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், மேற்கண்ட அலுவலர் தேர்ச்சி பெற்றதற்கான முடிவுகளை காலம் தாழ்த்தி *Tamil Nadu Public Service Commission Bulletin*-ல் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு வெளியிடப்பட்டுள்ளது என்றும்,

அட்டவணை - I

S. No	Name	Date of Appointment of Medical Officer	Departmental Exam details	Date of Examination	Remarks
1	Dr. M.S. Hemalatha	09.11.1989 FN	Departmental Test in the Tamil Nadu Medical Code (Reg no.025359)	Nov-91	TNPSC Bulletin No.4, Dt: 07.02.1992 & TNPSC Bulletin No.24, Dt: 16.11.1995
			The Account Test for Executive Officer (Reg. No. 05191)	04.11.1991	TNPSC Bulletin No.5, Dt: 16.02.1992 & TNPSC Bulletin No.14, Dt: 01.07.1993

மேலும், மேற்கண்ட அலுவலர் இரண்டு வருட காலத்திற்குள் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளதால் தனியருக்கு வழங்கப்பட்ட ஊதிய உயர்வுகளை பிடித்தம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை எனவும்,

இந்நிலையில், டாக்டர். எம்.எஸ். ஹேமலதா, மண்டல மருத்துவ அலுவலர், தண்டையார்பேட்டை மருத்துவ மண்டலம் - 04 அவர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலராக (கூடுதல் பெருநகர மருத்துவ அலுவலர்/ இணை இயக்குநர்) பதவி உயர்வு பெற்று 28.02.2020 அன்று பணியில் சேர்ந்து, தற்போது பெருநகர மருத்துவ அலுவலர் (பொறுப்பாக) பணிபுரிந்து வருகிறார் எனவும், டாக்டர். எம்.எஸ். ஹேமலதா அவர்களுக்கு மண்டல மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவிகளில் பணிவரன்முறைப்படுத்த நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்றுத் தருமாறு கோரி கோப்பு பெறப்பட்டது.

மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரியும் மேற்காண் அலுவலரின் பணிக்கால விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	பெயர்	பதவியின் பெயர்	இப்பதவியில் பணியில் சேர்ந்த நாள்	இப்பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்பட்ட/ செய்ய வேண்டிய நாள்	இப்பதவியில் தகுதிக்காண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்ட நாள்
1	டாக்டர். எம். எஸ். ஹேமலதா	மருத்துவ அலுவலர்	09.11.1989	09.11.1989	17.02.1992
		மண்டல மருத்துவ அலுவலர்	12.04.2017	12.04.2017	-
		மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர்	28.02.2020	28.02.2020	-

மேலும், ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ3/49369/2012, நாள்.24.11.2012ன்படி., பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு.2ன் கீழ் வரும் பதவிகளுக்கு பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்க உரிய அதிகார பங்களிப்பு நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் வசம் உள்ளது.

ஆகவே, தனியருக்கு மண்டல மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுலவராக கீழ்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி பணிவரன்முறைப்படுத்தவும் மற்றும் தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்.	பெயர் மற்றும் பணிபுரியும் இடம்	பணியில் சேர்ந்த நாள்	விடுப்பு துய்த்த விவரம்	பதவி உயர்வு பெற்ற பதவிகளின் பெயர்	இப்பதவியில் பணியில் சேர்ந்த நாள்	இப்பதவியில் பணிவரன்முறை செய்ய வேண்டிய நாள்	இப்பதவியில் தகுதிக்காண் பருவம் முடித்த நாள்.
1.	டாக்டர். எம். எஸ். ஹேமலதா	09.11.1989	-	மண்டல மருத்துவ அலுவலர் (வகுப்பு II)	12.04.2017	12.04.2017	-
				மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் (வகுப்பு IB)	28.02.2020	28.02.2020	27.02.2022

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

பொ.துநக.எண்.ஈ2/2522/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.230/2022 **பொருள் எண்.88**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - 01.04.2021 மைய நாளாகக் கொண்டு துணை பெருநகர மருத்துவ அலுவலர் / துணை இயக்குநர் (மண்டல மருத்துவ அலுவலர்) பதவியில் ஏற்பட்டுள்ள 2021-2022 ஆம் ஆண்டிற்கான மருத்துவ அலுவலர் பதவியிலிருந்து துணை பெருநகர மருத்துவ அலுவலர் / துணை இயக்குநர் பதவி உயர்வு வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையில் துணை பெருநகர மருத்துவ அலுவலர் / துணை இயக்குநர் (மண்டல மருத்துவ அலுவலர்) பதவியில் அனுமதிக்கப்பட்ட பணியிடம் 15 ஆகும். மன்றத் தீர்மான எண்.282/2016, நாள். 19.02.2016 ன்படி மண்டல மருத்துவ அலுவலர் பதவியின் பெயரினை துணை பெருநகர மருத்துவ அலுவலர் / துணை இயக்குநர் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இப்பதவியின் மைய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் முதல் நாள் ஆகும்.

அட்டவணை - I

1.	பதவி உயர்வுக்கான பதவியின் பெயர்	துணை பெருநகர மருத்துவ அலுவலர் / துணை இயக்குநர் (மண்டல மருத்துவ அலுவலர்) வகுப்பு - II		
2.	மைய நாள்	01.04.2021		
3.	ஊதிய விகிதம்	ரூ.15,600 – 39,100/- + தர ஊதியம் ரூ.5700/- New Pay Matrix Rs.56900 – 180500 (Level 23)		
4.	காலிப்பணியிட விவரம்	1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் (அ) தற்காலிக பணியிடம் (ஆ) நிரந்தர பணியிடம் 2.தற்போது துணை பெருநகர மருத்துவ அலுவலர் / துணை இயக்குநராக பணிபுரிபவர்கள் 3. காலிப்பணியிடங்களில் எண்ணிகை 1. டாக்டர். எம். தேவிகா, ZMO, ம - 15, வயது முதிர்வு ஓய்வு நாள்.31.08.2018 2. டாக்டர். எம்.வி.மாலதி, ZMO, ம - 14, வயது முதிர்வு ஓய்வு நாள்.29.02.2020 3. டாக்டர். மங்கையர்கரசி, ZMO, ம - 8, வயது முதிர்வு ஓய்வு நாள்.31.03.2020 4. டாக்டர். எஸ். பானுமதி, ZMO, ம - 2, ACMO பதவி உயர்வு நாள்.17.08.2020 5. டாக்டர். V. சம்யுக்தா, ZMO, ம - 14, ம.அ. பதவிக்கு நிரந்தரமாக பதவியிறக்கம் நாள்.27.07.2021 6. டாக்டர். A.S. ராணிபாண்டியன், ZMO, ம - 2, ம.அ. பதவிக்கு நிரந்தரமாக பதவியிறக்கம் நாள்.15.03.2022	- - - - -	15 00 15 09 06

		4. அரசாணை எண்.103, பணியாளர் (ம) நிர்வாக சீர்த்திருத்தத் (எஸ்) துறை நாள்: 09.10.2014ன்படி எதிர்பாராமல் ஏற்பட கூடிய காலிப்பணியிட ஒதுக்கீடு 40%. 5. நிகர காலிப்பணியிடம்	- -	0 06
5.	கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா? இல்லையெனில் காரணம்.	2019 - 2020 (ம) 2020 – 2021 ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியலானது முதன்மைச் செயலர்/ ஆணையர் அவர்களின் பொ.து.நக.எண்.ஈ2/20214/2021, 16.09.2021 நாளிட்ட சுற்றறிக்கை மூலம் "**இன்மைப் பட்டியல்**" வெளியிடப்பட்டது.		

அரசாணை எண்.161, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்: 28.08.1998ன்படி துணை பெருநகர மருத்துவ அலுவலர் / துணை இயக்குநர் (மண்டல மருத்துவ அலுவலர்) பதவிக்காக வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகள் பின்வருமாறு:

அட்டவணை - II

Name of the Post / Scale of Pay	Method of Appointment	Qualification
Deputy City Medical Officer / Deputy Director (Zonal Medical Officer) (Scale of Pay Rs.15600 -39100 Grade Pay Rs.5700) 7th Pay Commission (56900 – 180500 Level 23)	(1) Promotion from the cadre of the post of Medical Officer / Assistant Surgeon or Anaesthetist.	(A) Must have put in not less than 5 Years of Service in one or more categories as Medical Officer / Assistant Surgeon or Anaesthetist in the Greater Chennai Corporation and (B) A pass in Account Test for Executive Officers and Medical Code Test conducted by the Tamil Nadu Public Service Commission.
	(2) Direct Recruitment	(A) M.B.B.S. degree preferably with a post graduate degree or diploma in Gynaecology or any other equivalent degree or diploma of any University or Institution recognised by the University Grants Commission. (B) A Certificate in Family Planning Administration issued by the All India Institute of Hygiene or any other recognised institution; and (C) Must have practical experience in the field of Family Planning and Maternity and Child Health for a period of not less than 5 years.
	(3) Deputation from any department or any institution under the control of the State Government.	Must have put in not less than 2 years of approved service in a post in a department or institution under the control of the State Government. Which is similar in status and responsibilities to the post of Zonal Medical Officer (Deputy City Medical Officer / Deputy Director) in Greater Chennai Corporation.

பொதுத்துறையின் 16.09.2021 நாளிட்ட சுற்றறிக்கையில், 2019-2020 மற்றும் 2020-2021ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியல் "இன்மைப்பட்டியல்"ஆக வெளியிடப்பட்டது. பொதுத்துறையின் 07.12.2021 நாளிட்ட சுற்றிக்கையில், 2021 - 2022 ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியலை 01.04.2021 மைய நாளாகக் கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்க தகுதிவாய்ந்த அலுவலர்களின் விவரங்கள் கோரப்பட்டது.

இதனை தொடர்ந்து, மருத்துவ சேவைகள் துறையில், மருத்துவ அலுவலர்களின் தற்காலிக மூப்புநிலைப் பட்டியல் சுற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

அட்டவணை - III

வ. எண்	பணியாளர் எண்	மருத்துவ அலுவலரின் பெயர்	ஊதியம் பெறும் மண்டலம்	விருப்பம் / விருப்பமின்மை		பிறந்த தேதி	பணியில் சேர்ந்த நாள்	பணியிலிருந்து ஓய்வு பெறும் நாள்	குறிப்பு
1	162303	டாக்டர். V. சம்யுக்தா	ம-13	-	-	01.05.1963	09.11.1989	30.04.2023	துணை பெருநகர மருத்துவ அலுவலர் பதவியிலிருந்து மீண்டும் மருத்துவ அலுவலராக 27.08.2021 அன்று பதவியிறக்கம் செய்யப்பட்டுள்ளதால் தனியரை தெரிவுப்பட்டியலில் சேர்க்க இயலாது.
2	195108	டாக்டர். S. ஈஸ்வரி	ம-12	-	NW	19.08.1971	06.10.2007	31.08.2031	விருப்பமின்மை கடிதம் - 21.09.2021
3	192080	டாக்டர். S. சுதா	ம-8	-	NW	31.07.1972	06.10.2007	31.07.2032	விருப்பமின்மை கடிதம் - 24.09.2021
4	192017	டாக்டர். R. மலர்	ம-9	-	NW	20.10.1964	06.10.2007	31.10.2024	விருப்பமின்மை கடிதம் - 25.09.2021
5	192160	டாக்டர். J. பிரின்சி	ம-1	-	NW	13.11.1972	06.10.2007	30.11.2032	விருப்பமின்மை கடிதம் - 25.09.2021
6	195180	டாக்டர். J. மும்தாஜ்	ம-10	-	NW	10.04.1967	06.10.2007	30.04.2027	விருப்பமின்மை கடிதம் - 23.09.2021
7	195117	டாக்டர். கீதா யுவராஜ்	ம-9	-	NW	20.08.1969	06.10.2007	31.08.2029	விருப்பமின்மை கடிதம் - 07.10.2021
8	192151	டாக்டர். R. தனலட்சுமி	ம-5	-	NW	30.07.1977	06.10.2007	31.07.2037	விருப்பமின்மை கடிதம் - 22.09.2021
9	195171	டாக்டர். R. கிருத்திகா	ம-10	-	NW	03.08.1972	06.10.2007	31.08.2032	விருப்பமின்மை கடிதம் - 28.09.2021
10	192044	டாக்டர். V. சாய்சுதா	ம-4	-	NW	01.04.1970	06.10.2007	31.03.2030	விருப்பமின்மை கடிதம் - 15.11.2021

11	192198	டாக்டர். A. தென்றல்	ம-4	W	-	14.01.1975	06.10.2007	31.01.2035	விருப்ப கடிதம் - 15.11.2021
12	195055	டாக்டர். C.T. சாந்தி	ம-10	W	-	20.05.1974	06.10.2007	31.05.2034	விருப்ப கடிதம் - 29.10.2021
13	192053	டாக்டர். S. மீனாட்சி	ம-9	-	NW	26.06.1974	06.10.2007	30.06.2034	விருப்பமின்மை கடிதம் - 28.09.2021
14	195126	டாக்டர். A.S. ராணிபாண்டியன்	ம-8	-	-	28.11.1965	06.10.2007	30.11.2023	துணை பெருநகர மருத்துவ அலுவலர் பதவியிலிருந்து மீண்டும் மருத்துவ அலுவலராக 14.03.2021 அன்று பதவியிறக்கம் செய்யப்பட்டுள்ளதால் தனியரை தெரிவுப்பட்டியலில் சேர்க்க இயலவில்லை
15	192142	டாக்டர். B. கற்பகவள்ளி	ம-13	-	NW	21.02.1975	06.10.2007	28.02.2035	விருப்பமின்மை கடிதம் - 20.09.2021
16	195073	டாக்டர். ஸ்ரீ லஷ்மி	ம-4	W	-	22.07.1977	06.10.2007	31.07.2037	விருப்ப கடிதம் - 29.11.2021
17	192124	டாக்டர். B. வசந்தி	ம-5	W	-	09.03.1968	06.10.2007	31.03.2028	விருப்ப கடிதம் - 29.09.2021
18	192090	டாக்டர். ரத்னலதா	ம-9	-	NW	02.03.1963	06.10.2007	31.03.2023	விருப்பமின்மை கடிதம் - 25.09.2021
19	192035	டாக்டர். ஜெபகனி கிருஷ்டெல்லா	ம-5	-	NW	04.06.1976	06.10.2007	30.06.2036	விருப்பமின்மை கடிதம் - 25.09.2021
20	195190	டாக்டர். C.H. விஜயா	ம-9	-	NW	21.06.1963	14.11.2007	30.06.2023	விருப்பமின்மை கடிதம் - 28.09.2021
21	195206	டாக்டர். சமீராதபசம்	ம-10	-	NW	18.02.1974	15.11.2007	28.02.2034	விருப்பமின்மை கடிதம் - 09.10.2021
22	195260	டாக்டர். அகிலா அய்யப்பன்	ம-10		NW	07.06.1971	14.11.2007	30.06.2031	விருப்பமின்மை கடிதம் - 07.10.2021
23	195313	டாக்டர். ரஞ்சினிகுமாரி	ம-5		NW	29.03.1975	20.11.2007	31.03.2035	விருப்பமின்மை கடிதம் - 24.09.2021
24	195270	டாக்டர். N. சியாமளா	ம-10			05.03.1975	21.11.2007	31.03.2035	Unauthorised Absent – பணித்துறப்பிற்கான கோப்பு மேல்நடவடிக்கையில் உள்ளது
25	195538	டாக்டர். B. கௌரி ராஜேஸ்வரி	ம-7	W		21.11.1974	02.01.2008	30.11.2034	விருப்ப கடிதம் - 04.10.2021

26	195396	டாக்டர். M. சசிகலா	ம-13		NW	23.12.1974	26.12.2007	31.12.2034	விருப்பமின்மை கடிதம் - 10.10.2021
27	195420	டாக்டர். N. கிருஷ்ணவேனி	ம-13		NW	03.02.1972	02.01.2008	28.02.2032	விருப்பமின்மை கடிதம் - 21.09.2021
28	195529	டாக்டர். A. சோபியா சகாயராணி	ம-5		NW	03.03.1975	26.12.2007	31.03.2035	விருப்பமின்மை கடிதம் - 02.12.2021
29	**196357**	**டாக்டர். K. கற்பகம்**	**ம-9**	**W**		**22.06.1970**	**26.12.2007**	**30.06.2030**	**விருப்ப கடிதம் - 27.10.2021**
30	195494	டாக்டர். K.L வெண்ணிலா செல்வி	ம-8		NW	08.03.1968	31.12.2007	31.12.2028	விருப்பமின்மை கடிதம் - 24.09.2021
31	195485	டாக்டர். E. ஷீபா	ம-6		NW	20.10.1975	24.01.2008	31.10.2035	விருப்பமின்மை கடிதம் - 29.09.2021
32	195510	டாக்டர். R. பூங்குழலி	ம-10		NW	05.12.1971	26.12.2007	31.12.2031	விருப்பமின்மை கடிதம் - 29.09.2021
33	194414	டாக்டர். பிரபா சுரேஷ்	ம-6		NW	22.11.1968	15.04.2008	30.11.2028	விருப்பமின்மை கடிதம் - 30.09.2021
34	195725	டாக்டர். D. சாந்தகுமாரி	ம-4		NW	05.09.1974	27.03.2008	30.09.2034	விருப்பமின்மை கடிதம் - 23.09.2021
35	194512	டாக்டர். A. தனலட்சுமி	ம-13		NW	12.06.1979	18.08.2008	30.06.2039	விருப்பமின்மை கடிதம் - 22.10.2021
36	194521	டாக்டர். லைலஜா G.S. பிளவர்	ம-10		NW	30.07.1962	18.07.2008	31.07.2022	விருப்பமின்மை கடிதம் - 07.10.2021
37	198333	டாக்டர். J. ஹரிபிரியா	ம-6		NW	20.03.1978	18.07.2008	31.03.2038	விருப்பமின்மை கடிதம் - 25.10.2021
38	194540	டாக்டர். P. கலைசெல்வி	ம-12		NW	25.11.1974	18.07.2008	30.11.2034	விருப்பமின்மை கடிதம் - 20.09.2021
39		டாக்டர். சுபஸ்ரீ	ம-10			01.06.1980	23.07.2008	31.05.2040	**LLP**
40	198324	டாக்டர். R. ஆர்த்தி	ம-6		NW	08.01.1980	28.07.2008	31.01.2040	விருப்பமின்மை கடிதம் - 07.10.2021
41	198389	டாக்டர். D. சுதா	ம-9		NW	26.11.1982	18.12.2008	30.11.2042	விருப்பமின்மை கடிதம் - 11.10.2021
42	198502	டாக்டர். T. சுப்பிரியா	ம-9			09.05.1982	18.12.2008	31.05.2042	டாக்டர். T. சுப்ரியா அவர்கள் அரசு ஸ்டான்லி மருத்துவ கல்லூரியில் M.D., SPM (Community Medicine) 2020 – 2023 வரை மூன்றாண்டு காலம்

									பயில்வதற்கும் 31.05.2020 அன்று சென்றுள்ளார்
43	198398	டாக்டர். T.S. சுப்புலட்சுமி	ம-9		NW	21.05.1976	18.12.2008	31.05.2036	விருப்பமின்மை கடிதம் - 01.10.2021
44	**198763**	**டாக்டர். தேவலட்சுமி**	**ம-5**	**W**		**29.07.1968**	**23.02.2009**	**31.07.2028**	**விருப்ப கடிதம் - 27.09.2021** டாக்டர். தேவலட்சுமி அவர்கள் அரசிடமிருந்து வயது தளர்வாணை பெற கோப்பு மேல்நடவடிக்கையில் உள்ளது
45	198781	டாக்டர். R. உஷா தேவி	ம-13		NW	06.04.1974	23.02.2009	30.04.2034	விருப்பமின்மை கடிதம் - 19.09.2021
46	198825	டாக்டர். M. நர்மதா	ம-13		NW	26.08.1982	06.04.2009	31.08.2042	விருப்பமின்மை கடிதம் - 22.09.2021
47	198816	டாக்டர். மோகனலட்சுமி	ம-4		NW	03.07.1978	23.02.2009	31.07.2038	விருப்பமின்மை கடிதம் - 25.10.2021
48	198790	டாக்டர். K. சிவசங்கரி	ம-10		NW	12.07.1982	26.02.2009	31.07.2042	விருப்பமின்மை கடிதம் - 30.09.2021
49	198754	டாக்டர். ஜெசிமா ஹைதல் அலி	ம-8		NW	21.05.1973	23.02.2009	31.05.2033	விருப்பமின்மை கடிதம் - 23.10.2021
50	198772	டாக்டர். கங்கா	ம-10		NW	16.03.1974	02.03.2009	31.03.2034	விருப்பமின்மை கடிதம் - 26.09.2021
51	**198899**	**டாக்டர். ஜோதிலட்சுமி** ***(In G.O.Ms. No368, P&AR Dept., dt.18.10.93 2(iv)of 2, it is instructed as follow;- "Mere calling for the explanation of a Governement servant under Rule 10(a) of the said rules need not be treated as a bar for promotion on***	**ம-5**	**W**		**21.08.1976**	**29.03.2010**	**31.08.2036**	**விருப்ப கடிதம் - 08.10.2021** டாக்டர். ஜோதிலட்சுமி, மருத்துவ அலுவலர் அவர்கள் பணியில் ஒழுங்கீனம் மற்றும் உயர் அதிகாரிகளின் ஆணையை மதிக்காதது தொடர்பாக, பெருநகர சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு

		that score alone. This would equally apply to promotion to ordinary posts and 'selection category posts, as well as to recruitment by transfer from one service to another.")							மற்றும் மேல்முறையீடு) விதிகள் துணை விதி 10(a) ன் காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டு விளக்கம் கோரப்பட்டுள்ளது
52	**195743**	**டாக்டர். M. ஸ்ரீதேவி**	**ம-4**	**W**		**01.05.1970**	**05.05.2010**	**31.05.2030**	**விருப்ப கடிதம் - 23.09.2021**
53	196464	டாக்டர். ராஜலட்சுமி (Disciplinary action has been taken against Dr.Rajalakshmi, Medical officer under Greater Chennai Corporation (Classification, control & appeal) Rules 1970 under sec., (10(b))vide proceeding of the DC(H), G.D.C.No.E2/48866/2015,dt. 16.10.2018	ம-8			02.03.1977	01.11.2010	31.03.2037	**Unauthorised Absent – ஒழுங்கு நடவடிக்கை கோப்பு நிலுவையில் உள்ளது**
54	196455	டாக்டர். S. ஜெயந்தி	ம-9		NW	22.02.1979	07.09.2010	28.02.2039	விருப்பமின்மை கடிதம் - 07.10.2021
55	196437	டாக்டர். K. உஷா	ம-9		NW	11.01.1971	07.09.2010	31.01.2031	விருப்பமின்மை கடிதம் - 27.11.2021
56		டாக்டர். V.G. சோபனா தங்கம்	ம-10			06.05.1978	13.09.2010	31.05.2038	**Unauthorised Absent – ஒழுங்கு நடவடிக்கைக்கான கோப்பு மேல்நடவடிக்கையில் உள்ளது**
57	196544	டாக்டர். A.J. ஜீனத் பேகம்	ம-10			26.04.1981	30.12.2010	30.04.2041	**Unauthorised Absent – ஒழுங்கு நடவடிக்கைக்கான கோப்பு மேல்நடவடிக்கையில் உள்ளது**

58	196633	டாக்டர். S. காயத்திரி தேவி	ம-10			11.04.1982	15.02.2011	30.04.2042	**Unauthorised Absent - ஒழுங்கு நடவடிக்கைக்கான கோப்பு மேல்நடவடிக்கையில் உள்ளது**
59	196615	டாக்டர். T. விஜயலட்சுமி	ம-5			10.12.1983	24.12.2010	31.12.2043	**Unauthorised Absent – ஒழுங்கு நடவடிக்கைக்கான கோப்பு மேல்நடவடிக்கையில் உள்ளது**
60	**195242**	**டாக்டர். S. மெலிட்டா பானு**	**ம-6**	**W**		**05.12.1985**	**24.11.2011**	**31.12.2045**	**விருப்ப கடிதம் - 29.09.2021** டாக்டர். S. மெலிட்டா பானு, மருத்துவ அலுவலர் அவர்கள் துறைத் தேர்வுகளை காலம் தாழ்த்தி தேர்ச்சி பெற்றதற்கு அரசிடமிருந்து தளர்வாணை பெற கோப்பு மேல்நடவடிக்கையில் உள்ளது.
61	211220	டாக்டர். M.K. தேவிகா பிரியதர்ஷினி	ம-10		NW	16.06.1985	15.04.2013	30.06.2045	விருப்பமின்மை கடிதம் - 28.09.2021
62	212835	டாக்டர். V. சங்கீதா	ம-10		NW	18.10.1984	14.05.2013	31.10.2044	விருப்பமின்மை கடிதம் - 27.09.2021
63	212755	டாக்டர். A.S. சாகிதா பேகம்	ம-8		NW	01.12.1977	26.04.2013	31.12.2037	விருப்பமின்மை கடிதம் - 30.09.2021
64	213064	டாக்டர். C. பிரியா	ம-5		NW	23.09.1980	20.08.2013	30.09.2040	விருப்பமின்மை கடிதம் - 23.11.2021
65	220953	டாக்டர். G. லீனா	ம-6		NW	24.11.1981	19.09.2014	30.11.2041	விருப்பமின்மை கடிதம் - 01.10.2021
66	220980	டாக்டர். T. வசந்தகுமாரி	ம-7			05.08.1980	22.10.2014	31.08.2040	**LLP**
67	221001	டாக்டர். T.A. சிந்துஜா	ம-1		NW	19.09.1989	15.09.2014	30.09.2049	டாக்டர். T.A. சிந்துஜா அவர்கள் 2020-2022 ஆம் கல்வியாண்டில் நூங்கப்பாக்கத்தில் உள்ள Kanchi Kamakoti Child Trust Hospital-ல்

									மருத்துவ மேற்படிப்பு (DNB Peadiatrics) பயில்வதற்கும் 24.06.2020 அன்று சென்றுள்ளார்.
68	220864	டாக்டர். M. பிரேமா	ம-13		NW	02.06.1971	15.09.2014	30.06.2031	**RESIGNATION ON 24.11.2021**
69	220855	டாக்டர். S. சியாமளா	ம-8		NW	28.01.1983	15.09.2014	31.01.2043	விருப்பமின்மை கடிதம் - 07.10.2021
70	220971	டாக்டர். S. தேவிகலா	ம-6		NW	07.02.1984	15.09.2014	28.02.2044	விருப்பமின்மை கடிதம் - 01.10.2021
71	220873	டாக்டர். S. பிரியங்கா	ம-10		NW	18.08.1985	15.09.2014	31.08.2045	விருப்பமின்மை கடிதம் - 30.09.2021
72	221128	டாக்டர். C. சந்தியாராணி	ம-5		NW	19.10.1984	01.10.2014	31.10.2044	விருப்பமின்மை கடிதம் - 22.11.2021
73	**220944**	**டாக்டர். M. விஜயலட்சுமி**	**ம-9**	**W**		**19.07.1986**	**15.09.2014**	**31.07.2046**	**விருப்ப கடிதம் - 07.10.2021**
74	220882	டாக்டர். R.M சுபாஷினி	ம-1		NW	26.05.1981	15.09.2014	31.05.2041	விருப்பமின்மை கடிதம் - 30.09.2021
75	221306	டாக்டர். R. காயத்திரி	ம-7		NW	04.09.1988	15.09.2014	30.09.2048	விருப்பமின்மை கடிதம் - 25.10.2021
76	220962	டாக்டர். G. விஜி	ம-6		NW	15.06.1985	15.09.2014	30.06.2045	விருப்பமின்மை கடிதம் - 30.09.2021
77	**221093**	**டாக்டர். R.M. கீதா**	**ம-1**	**W**		**04.03.1982**	**15.09.2014**	**31.03.2042**	**விருப்ப கடிதம் - 30.09.2021**
78	220891	டாக்டர். J. இவேஞ்சிலின் கஸ்தூரி	ம-8		NW	11.05.1986	15.09.2014	31.05.2046	விருப்பமின்மை கடிதம் - 24.09.2021
79	220935	டாக்டர். K. சுலோச்சனா	ம-7		NW	24.09.1983	15.09.2014	30.09.2043	விருப்பமின்மை கடிதம் - 27.09.2021

மேலும், மருத்துவ அலுவலர்களின் பணிமூப்பு பட்டியலினை அனைத்து மருத்துவ மண்டலத்திற்கும் சுற்றுக்கு விடப்பட்டதில், 1 முதல் 15 மருத்துவ மண்டல அலுவலகத்திலிருந்து ஆட்சேபனை ஏதும் இல்லை என இன்மை சான்று பெறப்பட்டுள்ளது.

மேற்படி அட்டவணை – II-ல் வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி 01.04.2021 மைய நாளாக கொண்டு பணி மூப்பின் அடிப்படையில் துணை பெருநகர மருத்துவ அலுவலர்/ துணை இயக்குநர் பதவிக்கான 7 பணியிடங்களுக்கான தெரிவுப்பட்டியல் தயாரித்து 7 மருத்துவ அலுவலர்களின் விவரங்களை கொண்ட பதிவுருத்தாள், பரிந்துரைபட்டி, அமைந்த படிவம், பணிப்பதிவேடுடன் இணைத்து அனுப்பப்படுகிறது என பெருநகர மருத்துவ அலுவலர் அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர மருத்துவ அலுவலர், மருத்துவ சேவைகள் துறை அவர்களின் 21.04.2022 நாளிட்ட கடிதத்தில், துணை பெருநகர மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வந்த அலுவலர்கள் 01.04.2021 முதல் தற்போது வரை வயது முதிர்வு ஓய்வு, தன் விருப்ப ஓய்வு, இறப்பு மற்றும் பணித்துறப்பில் யாரும் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. டாக்டர்.A.S.ராணி

பாண்டியன், துணை பெருநகர மருத்துவ அலுவலர் (வ.எண்.14) அவர்கள் மருத்துவ அலுவலர் பதவிக்கு 14.03.2022 அன்று பதவியிறக்கம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை துணை பெருநகர மருத்துவ அலுவலர் / துணை இயக்குநர் பதவி வகுப்பு *II*ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கி பணி நியமனம் செய்யும் அதிகார பங்களிப்பு பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே,

அ. துணை பெருநகர மருத்துவ அலுவலர்/ துணை இயக்குநர் பதவியில், 01.04.2021 மைய நாளுக்கு முன் ஏற்பட்ட 4 காலிப்பணியிடங்களும், பட்டியல் ஆண்டில் 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில், பதவியிறக்கம் செய்ததால் ஏற்பட்ட 2 காலிப்பணியிடம் ஆக மொத்தம் 6 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்காக, 01.04.2021ஐ மைய நாளாகக் கொண்டு பின்வரும் 6 மருத்துவ அலுவலர்களின் பெயர்களை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள பின்வரும் தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வேண்டியும்,

அட்டவணை - *IV*

வ. எண்	மூப்புப் பட்டியல் வ.எண்	மருத்துவ அலுவலர்களின் பெயர்கள்	பிறந்த தேதி	பணியில் சேர்ந்த நாள்	ஓய்வு பெறும் நாள்	தற்போது பணிபுரியும் மண்டலம்
1	11	டாக்டர்.A. தென்றல்	14.01.1975	06.10.2007	31.01.2035	மண்டலம்-5
2	12	டாக்டர். C.T. சாந்தி	20.05.1974	06.10.2007	31.05.2034	மண்டலம் - 10
3	16	டாக்டர்.C. ஸ்ரீ லஷ்மி	22.07.1977	06.10.2007	31.07.2037	மண்டலம் - 4
4	17	டாக்டர். B. வசந்தி	09.03.1968	06.10.2007	31.03.2028	மண்டலம்-5
5	25	டாக்டர். B. கௌரி ராஜேஸ்வரி	21.11.1974	02.01.2008	30.11.2023	மண்டலம்-7
6	29	டாக்டர். K. கற்பகம்	22.06.1970	26.12.2007	30.06.2030	மண்டலம்-9

ஆ. துணை பெருநகர மருத்துவ அலுவலர்/ துணை இயக்குநர் பதவியில் உள்ள 6 காலிப்பணியிடங்களை மேற்கண்ட (அட்டவணை-*VI*) தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள நபர்களை கொண்டு ரூ.15600 – 39100 + தர ஊதியம் ரூ.5700/- (நிலை-*23*, *56900*-180500) என்ற ஊதிய விகிதம் மற்றும் அனுமதிக்கப்பட்டுள்ள இதர படிகளுடன், துணை பெருநகர மருத்துவ அலுவலர் / துணை இயக்குநராக பதவி உயர்வு வழங்கவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு நியமனக்குழுவின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

பொ.து.ந.க.எண்.இ9/18240/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.231/2022 **பொருள் எண்.89**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம்-8 - திரு.ட்டி.ஆர்.குமரேசன், உதவியாளர், பணி எண்.219925, வருவாய்த்துறை அவர்கள் தேர்தல் பணியில் ஈடுபட்ட போது, கொரோனா நோய் தொற்று ஏற்பட்டு எதிர்பாராத விதமாக 04.05.2021 அன்று காலமானார் - மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து - அரசாணையின்படி, ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) வழங்குவதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.ட்டி.ஆர்.குமரேசன், உதவியாளர், வருவாய்துறை, மண்டலம்-8 அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கடந்த 19.03.2014 அன்று பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வந்த நிலையில், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 பணியில் ஈடுபட்டு, கொரோனா நோய் தொற்று ஏற்பட்டு, எதிர்பாராத விதமாக 04.05.2021 அன்று காலமானார்.

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9 அவர்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ள 22.04.2020 நாளிட்ட செய்தி குறிப்பு எண்.048 அறிக்கையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா தொற்று நோய் போராட்டத்தில் முன் நின்று பணிபுரியும் அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவத்துறையைச் சார்ந்த பணியாளர்கள், காவல்துறை மற்றும் பிற அரசுத் துறையைச் சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்பின் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள், எவருக்கேனும் இந்நோய் தொற்று ஏற்பட்டு, எதிர்பாராதவிதமாக இறப்பு ஏற்படுமானால் அன்னாரின் குடும்பத்திற்கு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு ஓமந்தூரார் மருத்துவ கல்லூரி மருத்துவமனையின் 21.06.2021 நாளிட்ட மருத்துவ அறிக்கையில், திரு.ட்டி.ஆர்.குமரேசன், உதவியாளர், மண்டலம்-8 அவர்கள் கொரோனா நோய் தொற்று காரணமாக ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி 04.05.2021 அன்று அதிகாலை 03.25 மணியளவில் காலமானார் என மருத்துவ அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது, *"Thiru.Kumaresan, 54 Yrs old male OP No.14306, IP No.31571 was brought to OPD at Government Omandurar Medical College on 14.04.2021 came with chief complaints of fever and body pain for 1 week, breathlessness for 2days. K/C/O Systemic hypertension on regular medications. RT PCR swab done for COVID done at Omandurar Medical College on 26.04.2021 (ICMR 263095050) which was found to be negative.*

On examination, Patient's SPO2 was 95% with 15 litres NRM. Patient vitals PR 114/min, BP 150/95mm Hg. ***CT chest was taken which showed COVID pattern 40% lung involvement****. Patient was started and treated as per the protocol on steroids, anticoagulants, antibiotics and supportive care. On 16/4/2021, patient got desaturated to 83%. Hence patient was connected to CPAP.*

On 25.04.2021 patient had hemoptysis. Chest XRAY was done which showed isolated emphysema with pneumomedistinum for which pulmonologist opinion was sought and managed conservatively. Patient was maintaining saturation till 03.05.2021.

On 04.05.2021 at 01.30 AM, patient desaturated and became drowsy with poor response to painful stimuli. Patient went in for sudden cardiac arrest. Immediate cardiopulmonary resuscitation was started according to ACLS protocol. In spite of all resuscitative measures

patient could not be revived and was declared dead on 04.05.2021 at 03.25AM." என மருத்துவ அறிக்கை பெறப்பட்டது.

திரு.ட்டி.ஆர்.குமரேசன் அவர்களுக்கு உதவியாளர்(இறப்பு) பதவியில் *19.03.2014* அன்று பணிவரன்முறையும், *19.03.2016* அன்று தகுதிகாண் பருவம் வழங்கப்பட்டுள்ளது. தனியரின் பிறந்த தேதி *06.01.1966* வயது முதிர்வு ஓய்வு நாள் *31.01.2026* ஆகும்.

மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர், மண்டலம்-*8* அவர்களின் *14.07.2021* நாளிட்ட குறிப்பில், மேற்படி பணியாளரின் வாரிசுதாரரும், மனைவியுமான திருமதி.கே.தமிழ்செல்வி அவர்களின் குடும்பத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி வேண்டி முன்மொழிவுகள் மற்றும் படிவங்கள் இணைத்து சமர்ப்பிக்கப்பட்டது.

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் *10.08.2021* நாளிட்ட கடிதத்தில் கொரோனா தொற்று காரணமாக மேற்படி இறந்த பணியாளரின் மனைவியுமான திருமதி.கே.தமிழ்ச்செல்வி அவர்களுக்கு நிவாரண நிதி வேண்டி அரசுக்கு *11.08.2021* அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

அரசின் நேர்முக கடித எண்.*23830/*நிதி/முபொநிநி/*2022*, நாள்*17.05.2022*, மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.*3*) துறை, அரசாணை (ப) எண்.*149*, நாள் *11.05.2022* வாயிலாக ரூபாய்.*25,00,000/-* (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) *17.05.2022* நாளிட்ட காசோலை எண்.*396364*, பெறப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் ஆணையர் அவர்களின் பெயரில் *31.05.2022* அன்று செலுத்தப்பட்டுள்ளது. (இரசீது எண்.*05/2022-23/0364651*).

எனவே, அரசின் *17.05.2022* நாளிட்ட கடிதத்தின் அடிப்படையில் மேற்படி இறந்த பணியாளர் திரு.ட்டி.ஆர்.குமரேசன், அவர்களின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி.கே.தமிழ்செல்வி அவர்களின் குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண தொகை ரூபாய்.*25,00,000/-* (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண்.இ7/14819/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.232/2022 **பொருள் எண்.90**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திருமதி. மேரி விமலா, நகர சுகாதார செலிலியர், சீதாலட்சுமி மகப்பேறு மருத்துவமனை, கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் கோருதல் - அரசின் உத்தரவு பெறஅனுமதி.

ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் 29.10.2021 நாளிட்ட கடிதத்தில், திருமதி. மேரி விமலா, நகர சுகாதார செவிலியர் (நிலை-III), சீதாலட்சுமி மகப்பேறு மருத்துவமனை, கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்கள், நீண்ட காலமாக கோவை மாநகரிலேயே தங்கியிருந்து பணியாற்றியதாகவும், சென்னையில் உள்ள தனது குடும்பத்தாருடன் நேரில் இருந்து கவனிக்க வேண்டிய சூழ்நிலை மற்றும் தனது உடல் நிலையையும் சீர்ப்படுத்திக்கொள்ள வேண்டிய ஓர் அவசர அவசியமும் ஏற்பட்டுள்ளதால், கருணை கூர்ந்து தனக்கு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் வழங்கி உதவிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இதன்தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள நகர சுகாதார செவிலியர் காலிப்பணியிடம் குறித்த விபரத்தினை அனுப்புமாறு தெரிவித்துள்ளார்.

இதன்படி துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 01.12.2021 நாளிட்ட கடிதத்தின் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் நகர சுகாதார செவிலியர் பதவியில் காலிப்பணியிடங்கள் விவரம் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் 08.04.2022 நாளிட்ட கடிதத்தில் திருமதி.மேரிவிமலா, நகர சுகாதார செவிலியர் (நிலை-III), சீதா லட்சுமி மகப்பேறு மருத்துவமனை, கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களை பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒரு வழி பணியிட மாறுதல் வேண்டியுள்ள விண்ணப்பத்தை ஏற்று கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத்தில் தீர்மானம் எண்.566, நாள்.31.12.2021 அன்று நிறைவேற்றப்பட்டு அதன் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியினை பொறுத்தவரையில், மருத்துவ சேவைகள் துறையின் வாயிலாக சென்னை மாவட்டத்தின் மக்கள் தொகை கட்டுப்படுத்த தேவையான மருத்துவப்பணிகளில் ஈடுபடுதல், குழந்தைகள் மற்றும் பிரசவ கால தாய்மார்களுக்கும் நோய் தடுப்பு ஊசி போடுதல், குழந்தைகளுக்கு போலியோ தடுப்பூசி மற்றும் சொட்டு மருந்து வழங்குவது போன்ற அவசர கால மருத்துவப் பணிகளை செய்வதற்கு நகர சுகதார செவிலியர் பதவியில் பணிபுரிபவர்களின் பங்கு மிகவும் அவசியமாக உள்ளது.

மேற்படி பதவிக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறையில் *(Govt. of India Scheme (GOI), Urban Revamping Scheme (URS), 100%* அரசின் மான்யமாகவும், *India Population Project V Scheme (IPPV)* என்ற திட்டத்தின் படி 2 பங்கு அரசிடமிருந்து மான்யமாகவும், சென்னை மாநகராட்சியின் ஒரு பங்கு ஊதியமாக வழங்கப்படுகிறது. இப்பதவியில் 332 பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நகர சுகாதார செவிலியர் தேவை அதிகமாக உள்ளது. எனவே மேற்படி கோயம்பத்தூர் மாநகராட்சியிலிருந்து மாறுதல் கோரியுள்ள நகர சுகாதார செவிலியர் அவர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் வழங்கலாம் என கருதப்படுகிறது.

ஒரு நகராட்சி அல்லது மாநகராட்சி பணியின் அலுவலர் மற்றொரு நகராட்சிக்கோ அல்லது மாநகராட்சிக்கோ மாறுதல் பெற விரும்பினால், அரசு கடித எண்.27274/மா.ந.க.96-1, நாள்.08.07.1996ன் படி கீழ்கண்ட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

1. ஒரு நகராட்சி அல்லது மாநகராட்சி பணியில் அலுவலர் மற்றொரு நகராட்சிக்கோ அல்லது மாநகராட்சிக்கோ மாறுதல் பெற விரும்பினால் அவர் பணிபுரியும் அந்த நகராட்சி / மாநகராட்சி ஆணையருக்குத்தான் தனது மனுவினை அனுப்ப வேண்டும் .
2. சம்மந்தப்பட்ட ஆணையர் அவர்கள் இந்த மனுவை பரிசீலித்து அன்னாரை விடுவிக்கும் மன்றத்தீர்மானம் நிறைவேற்றி தீர்மான நகலுடன் மாற்றம் கோரும் நகராட்சி அல்லது மாநகராட்சி ஆணையருக்கு அந்த மனுவினை அனுப்பி வைக்க வேண்டும்.
3. மாறுதல் கோரப்பட்டுள்ள நகராட்சி அல்லது மாநகராட்சியின் ஆணையர் அங்கு பணியிடம் காலி இருந்து, அவரை எடுத்துக்கொள்ளலாம் எனக்கருதினால் அதற்கான மன்றத்தீர்மானம் நிறைவேற்றி, அந்த நகலுடன் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு எடுத்துக்கொள்ளும் நகராட்சி/ மாநகராட்சி அனுப்பி வைக்க வேண்டும் . நகராட்சி நிர்வாக இயக்குநர் அவைகளை பரிசீலித்து தனது குறிப்புகளுடன் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
4. எனினும் ஒரு மாநகராட்சியிலிருநது மற்றொரு மாநகராட்சிக்கு மாற விரும்பினால் இரண்டு மாநகராட்சிகளும் தீர்மானம் நிறைவேற்றிய பின்னர், எடுத்துக்கொள்ளும் மாநகராட்சி இதற்கானசெயற்குறிப்புடன் அரசுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
5. மாறுதல் வேண்டுபவர்கள் நகராட்சிக்கோ, மாநகராட்சிக்கோ மாறுதல் வேண்டி விண்ணப்பம் கொடுத்து அதன் நகலை அரசுக்கு அனுப்பக்கூடாது.
6. மாறுதல் விரும்பும் நபரை ஒரு நகராட்சியோ, மாநகராட்சியோ எடுத்துக்கொள்ள விரும்பவில்லை என்றால் அல்லது பணியிடம் காலியில்லையென்றால் அலுவலர் பணியாற்றும் ஆணையருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். பணியாளருக்கு ஆணையரே தக்க பதிலை அளிக்க வேண்டும். அரசுக்கு அனுப்பத் தேவையில்லை.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நகர சுகாதார செவிலியர் பதவியில் 332 காலிப்பணியிடங்கள் உள்ள நிலையிலும், மேற்படி பதவியில் பணிபுரிய ஆட்கள் தேவையுள்ள நிலையிலும், கோயம்புத்தூர் மாநகராட்சியால் மன்றத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையிலும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 08.07.1996 நாளிட்ட அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு திருமதி.மேரிவிமலா, நகர சுகாதார செவிலியர், சீதாலட்சுமி மகப்பேறு மருத்துவ மனை, கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களை ஒரு வழி பணியிட மாறுதல் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாறுதல் பெற அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழுவின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

பொ.து.ந.க.எண்.ஈ3/12516/2022
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 04.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.233/2022 **பொருள் எண்.91**

அயற்பணி - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் - மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும்.

அரசாணை (வா) எண். 1581, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 20.04.2022, அரசாணை (வா) எண். 949, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 17.03.2022ன்படி, கீழ்க்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்.	பெயர் (ம) பதவி	அரசாணை எண். மற்றும் நாள்	அயற்பணியில் சேர்ந்த நாள்
1.	திரு. நூ.ஷே. முஹம்மது அஸ்லம், மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் (ம) உடைமை), பெருநகர சென்னை மாநகராட்சி	அரசாணை (வா) எண். 1581, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 20.04.2022	21.04.2022 மு.ப.
2.	திரு. ந. சுரேஷ், மாவட்ட வருவாய் அலுவலர்/ மண்டல அலுவலர், மண்டலம்-10, பெருநகர சென்னை மாநகராட்சி	அரசாணை (வா) எண். 949, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 17.03.2022	26.04.2022 மு.ப.

"இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது".

* * * * * *

பொ.து.ந.க.எண்.ஈ2/19056/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.234/2022 **பொருள் எண்.92**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - பொது சுகாதாரத் துறை - டாக்டர். T. ஆண்டாள், மருத்துவ அலுவலர், மண்டலம் - 1 அவர்கள் 30.06.2022 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.

நகராட்சி நிர்வாகம் ஆணையர் அவர்களின் 16.09.2008 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, டாக்டர். T. ஆண்டாள், மருத்துவ அலுவலர் அவர்களை திருவொற்றியூர் நகராட்சி (பொது மருத்துவமனை) பணியமர்த்தி 18.09.2008 அன்று முற்பகல் பணியில் சேர்ந்தார். தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 18.09.2008 அன்று பணிவரன்முறைப்படுத்தியும், 26.09.2010 அன்று தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின் 24.11.2012 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு II-ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், வயது முதிர்வு ஓய்வு செல்ல அனுமதிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி, மன்றத்திற்கு பங்களிக்கப்பட்டுள்ளது.

பொதுத்துறையின் 22.12.2021 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு மேற்காண் மருத்துவ அலுவலர் அவர்கள் 30.06.2022 அன்று வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார். தனியரின் பிறந்த தேதி 10.06.1962, தனியர் பணியில் சேர்ந்த நாள் 18.09.2008, வயது முதிர்வு ஓய்வு நாள். 30.06.2022 ஆகும். தனியரின் பணிக்கால விவரங்கள் பின்வருமாறு:

வ.எண்	வகித்த பதவி	துறை/ மண்டலம்	பணிபுரிந்த காலம்
1	மருத்துவ அலுவலர்	மண்டலம் - 1 (திருவொற்றியூர் நகராட்சி)	18.09.2008 முதல் 24.10.2011 வரை
2		மண்டலம் - 1 (திருவொற்றியூர் மாநகராட்சி)	25.10.2011 முதல் இந்நாள் வரை

நிதி ஆலோசகர் அவர்களின் 12.01.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் மருத்துவ அலுவலராக துறை/ மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 2008 - 2009 முதல் 2019 - 2020 ஆம் ஆண்டுகள் வரையிலான தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கைகளின்படி நிலுவை ஏதுமில்லை எனவும், 2020 - 2021, 2021 - 2022 மற்றும் 2022 - 2023 ஆகிய ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையால் வெளியிடப்படவில்லை, அவைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத்தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில், தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனவும், மேலும், தனியர் ஓய்வு பெறும் நாள் வரை பணியாற்றிய காலத்தில், தனியர் மீது ஏதேனும் தணிக்கைத் தடை பத்திகள் எழுப்பப்பட்டிருப்பது பின்னர் தெரியவரின் அப்பத்திக்கு தனியரே முழுப் பொறுப்பாவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் 10.06.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் சங்கத்தின் உறுப்பினர் இல்லை என சான்று அளிக்கப்பட்டுள்ளது.

செயலாளர், திருவொற்றியூர் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன நாணய கடன் சங்கத்தின் 10.06.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை என சான்று அளிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 13.06.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்கு அலுவலர் அவர்களின் 13.06.2022 நாளிட்ட கடிதத்தில், தனியருக்கு 18.09.2008 முதல் இன்று வரை பணி செய்த காலத்தில் முன்பண நிலுவை இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

தனியரின் 13.06.2022 நாளிட்ட உறுதிமொழி பத்திரத்தில், தனியர் 30.06.2022 வரை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஏதேனும் வகையில் நிதி இழப்பீடு, முன்பணம் தீர்வு செய்யாமை, தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ நிதி இழப்பீடு ஏற்படுத்தியது பின்னர் தெரியவரின் அத்தொகையை எனது ஓய்வூதிய பங்களிப்பு தொகையில் (CPS) பிடித்தம் செய்து கொள்ள ரூ 20/. முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

மண்டல அலுலவர், மண்டலம் – 1 அவர்களின் 16.06.2022 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட அலுவலரை 30.06.2022 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல மன்றத்தின் அனுமதி பெற்று தரக் கோரி கோப்பு பெறப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், டாக்டர். T. ஆண்டாள், மருத்துவ அலுவலர், மண்டலம் - 1 அவர்களின், 2020-2021, 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையால் வெளியிடப்படவில்லை எனவும், தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர் தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டு அத்தொகையினை அவரது ஓய்வூதிய பணிக்கொடை/அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, தனியரை 30.06.2022 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ.8.வ.து.ந.க.எண்.ஆர்1/2000/2022

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 24.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.235/2022 **பொருள் எண்.93**

பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - மண்டலம்- 8இன் பழைய வார்டு- 101, புதிய வார்டு 102, செனாய் நகர் (அம்மா அரங்கம்) கலையரங்கத்தின் வருவாயை பெருக்க மற்ற நிகழ்ச்சிகளுடன் குடும்ப நிகழ்ச்சிகளையும் நடத்த அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 8இன் பழைய வார்டு- 101 மற்றும் புதிய வார்டு 102 இல் சென்னை - 30 செனாய் நகர் 8வது குறுக்கு தெருவில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான அம்மா அரங்கத்தை முழுவதும் பயன்படுத்த வேண்டும் என மாமன்ற உறுப்பினர், மாமன்றக் கூட்டத்தில் கோரிக்கை எழுப்பியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மாமன்ற உறுப்பினரின் வேண்டுகோளினை ஏற்று அனைத்து அரங்கங்களிலும் உணவு தயார் செய்யும் இடம் மற்றும் உணவு பரிமாறும் இடம் ஆகியவை புதியதாக கட்டுவதற்கு மாநகராட்சியின் கட்டிடத் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், அம்மா அரங்கத்திற்கு உணவு தயார் செய்யும் இடம், உணவு பரிமாறும் இடம் ஆகியவை முழுமையாக கட்டப்பட்டு மாநகராட்சி மண்டலம்- 8இன் வசம் இதுவரை ஒப்படைக்கப்பட வில்லை என்றும், ஒப்படைத்த பின்னர் தற்போதுள்ள வாடகையினை குறைத்து அனைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கும் கொண்டுவர வேண்டும் எனக் கோரினார்.

அம்மா அரங்கத்தின் கட்டிட அளவுகள்

விவரம்	Sq.mt	Sq.ft	தன்மை
மொத்த நில அளவு	12,446.35	1,33,973	
கீழ்தளம்	1847.80	19,890	கார் நிறுத்துமிடம்
தரை தளம்	1847.80	19,890	A/c Hall
இடைப்பட்ட தளம்	398.17	4,286	
முதல் தளம்	1,847.80	19,890	Non A/c Hall
மொத்தம்	5,943.86	63,956	
Note: excluding kitchen building			

தற்போது இந்த அரங்கத்திற்கு நடைமுறையில் உள்ள வாடகை கட்டண விவரம்

Sl.No.	Subject	Only Auditorium and Basement parking Rent –Amount			For First Floor only (Non A/c Hall)	
		Full Day	12 Hours	4 Hours	Full Day	Half Day
1	Rent (for Public)	2,50,000/-	1,75,000	30000/-	59,490/-	29,475/-
2	Cleaning Charges	15,000/	15,000	2500/-	7500/-	3500/-
3	P.A. System	15,000/-	10,000	5000/-	3000/-	2000/-
4	E.B. Charges	30,000/-	15,000	5000/-	7500/-	4000/-
	Sub Total	310000	215000	42500	77490	38975
5	GST (Sl.No.1 to 4)	18 % GST				
	18 % GST	55800	38700	7650	13948	7016
	Total	**365800**	**253700**	**50150**	91438	45991
6	**Caution Deposit (Refundable)**	**20000**	**20000**	**20000**	10000	10000

தற்போது சொத்து வரி மறு நிர்ணயம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவ்வாறு மறு நிர்ணயம் செய்யும் சூழ்நிலையில் சென்னை - *30*, செனாய் நகர், 8வது குறுக்கு தெருவில், உள்ள அம்மா அரங்கம் அமைந்துள்ள இடத்தின் வணிக பயன்பாட்டிற்கான அடிப்படை தெருக் கட்டணம் ரூ. 11.25ஆகும். எனவே அடிப்படைத் தெருக் கட்டணம் ரூ.4.50லிருந்து ரூ. 11.25 என உயரும் சூழ்நிலையில் பின்வருமாறு வாடகை கணக்கிடப்படுகிறது.

$$\left\{\frac{\text{63, 956 சதுர அடி } X \text{ ரூ. 11.25 } (New\ BSR)\ X12 \text{ மாதம்}}{\text{40 நிகழ்ச்சிகள்}} = \right\} \text{வாடகை}$$

மேலும், இவ்வரங்கத்தில் உணவு தயார் செய்யும் இடம் கூடுதலாக கட்டிடத் துறை மூலம் கட்டப்பட்டு மின்தூக்கி வசதியுடன் இணைப்பு பாலமும் கட்டப்பட்டுள்ளது. அதனுடைய அளவுகள் பின்வருமாறு:

கீழ்தளம் 146.20 சதுர மீட்டர்

முதல் தளம் 146,20 சதுர மீட்டர்

இணைப்பு பாலம் 51. 88 சதுர மீட்டர்

மொத்தம் 344.28 சதுர மீட்டர்

ஏற்கனவே இருந்து வரும் பிரதான கட்டிடத்தின் மொத்த பரப்பளவுடன் உணவு தயார் செய்யும் கட்டிடத்தின் பரப்பளவையும் (= 5,943.86 + 344.28 = 6288.14 சதுர மீட்டர்கள் (அ) 67685.54ச.அடி) சேர்த்துக் கணக்கிட்டால் மொத்த பரப்பளவு. **முழுமையாக 67686 சதுர அடிகள்,**

புதிய அடிப்படைத் தெருக் கட்டணத்தின்படி முழுகட்டிடத்திற்கான வாடகை கட்டணம்

Sl.No.	Subject	Shenoy Nagar Auditorium (A/c Hall) and Mandapam Full floor - Rent amount	
		Full Day (6.00 a.m to 6.00 a.m NEXT DAY) or 2 p.m to 2p.m)	* Half day (6.00 a.m to 02.00 p.m or 2 p.m to10.00 p.m
1	Rent (for Public)	228440	114220
2	Cleaning Charges	15000	7500
3	P.A. System	15000	7500
4	E.B. Charges	30000	15000
	Sub Total	288440	144220
5	GST (Sl.No.1 to 4)		
	18 % GST	51920	25960
	Total	**340360**	**170180**
6	**Caution Deposit (Refundable)**	**20000**	**20000**

ஏற்கனவே உள்ள வாடகை கட்டணத்திற்கும் தற்போது தெரிவித்த வாடகை கட்டணத்திற்கும் உள்ள வேறுபாடு பின்வருமாறு:

வ.எண்	பொருள்	Shenoy Nagar Auditorium (A/c Hall) and Mandapam Full floor - Rent amount - Full day	Half day Rent
1	முந்தைய மன்றத் தீர்மானத்தின்படி ஏற்கனவே வசூலிக்கப்படும் வாடகை கட்டணம் *(as per resolution)*	3,65,800-00	253700-00
2	திருத்தப்பட்ட வாடகை கட்டணம் *(as per revised new basic street rate)*	3,40,360-00	170180-00

மேலும், இந்த அம்மா அரங்கத்தின் தரைதளம் நீங்கலாக முழு கட்டிடம் (அல்லது) முதல் தளம் நீங்கலாக முழு கட்டிடம் (மொத்த பரப்பளவு 67686 – 19890 = 47796) அதற்கான முழு நாள் வாடகை கட்டணம் *(47796 x 11.25 x 12 / 40 = 161312 (New BSR)* (முழுமையாக ரூ.1,61,320/-) *GST 18%* - ரூ.29038/- ஆக மொத்தம் ரூ. 190358/- மற்றும் முன் வைப்புத் தொகை ரூ.20,000/- என்றும், அரை நாள் வாடகை கட்டணம் ரூ.80660/- *GST* - ரூ. 14519/- ஆக மொத்தம் ரூ. 95179/- மற்றும் முன்வைப்புத் தொகை ரூ. 20,000/- என்றும் நிர்ணயிக்கலாம்.

மாநகராட்சியின் அரங்கம் மற்றும் சமுதாய நலக் கூடங்களுக்கான பயன்பாட்டு நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் பின்வருமாறு:

1. சமையல் செய்யும் வசதி முழுமையாக ஏற்படுத்தும் வரை திருமணம் குடும்ப நிகழ்ச்சி / வரவேற்பு போன்ற குடும்ப நிகழ்ச்சிகள் மற்றும் பிற சுபநிகழ்ச்சிகளான பிறந்த நாள்/ காதணி விழா/மஞ்சள் நீராட்டு விழா/ நிச்சயதார்த்தம் / வளைகாப்பு போன்ற நிகழ்ச்சிகளுக்கு மட்டும் (உணவு பொருட்கள் வெளியிருந்து வரவழைத்து உணவருந்த) அனுமதிக்கலாம்.
2. முகூர்த்த தினங்கள் தவிர இதர நாட்களில் வணிக நோக்கத்துடன் செயல்படும் நிகழ்ச்சிகளான புத்தக கண்காட்சி, மகளிர் சுயதொழில் கைவினைப் பொருட்கள் கண்காட்சி போன்ற நிகழ்ச்சிகளுக்கு வழங்கலாம்.
3. மத்திய அரசு / மத்திய அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் இதர பொது துறை நிறுவனங்களால் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வாடகை தொகையில் *50* சதவிகிதம் சலுகையுடன் இதர கட்டணங்கள் செலுத்துவதற்கு சலுகை வழங்கலாம்.
4. அரசு /அரசு பொதுத் துறை நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வாடகை தொகை தவிர்த்து இதர கட்டணங்கள் மட்டும் செலுத்துவதற்கு சலுகை வழங்கலாம்.
5. சென்னை மாநகராட்சியின் பள்ளிகளுக்கான உள்விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்த அனுமதி வழங்கலாம்.
6. தனியார் நிறுவனங்களின் ஆலோசனை கூட்டங்கள் நடத்த அனுமதி வழங்கலாம் (உரிய வாடகையுடன்)
7. சமுதாய நலக்கூடங்கள் பொதுமக்களின் சுப நிகழ்ச்சிகளுக்கு அதிகபட்சமாக *3* நாட்களுக்கு வழங்கலாம் என்ற நிபந்தனையை தளர்வு செய்து முகூர்த்த தினங்கள் தவிர இதர நாட்களில் நடத்தவுள்ள நிகழ்ச்சிகளுக்கு *3* நாட்களுக்கு மேலும் அனுமதி வழங்கலாம்.
8. பெருநகர சென்னை மாநகராட்சி பணியில் இருக்கும் ஊழியர் மற்றும் ஊழியரின் வாரிசுதாரர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் குடும்ப நிகழ்ச்சிகளுக்கு (விதிமுறைகளுக்குட்பட்டு) வாடகையில் 75 விழுக்காடு சலுகை வழங்கப்பட அனுமதிக்கலாம்.
9. மேற்குறிப்பிட்டபடி சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு வாடகையில் 75% விழுக்காடு சலுகை உள்ளது குறித்து அனைத்து துறைக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட வேண்டும்.
10. கீழ்தளத்தில் உள்ள *Smart Bikes Mobility Pvt. Ltd.*, என்ற நிறுவனத்தின் மின்சாரம் மற்றும் சாதாரண இரண்டு சக்கர வாகனங்கள் பணிமனையாக பயன்படுத்தி கொள்வதை வேறொரு இடத்திற்கு மாற்ற உடனடியாக செயற்பொறியாளர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட அறிவுறுத்த வேண்டும்.
11. அரங்கத்தின் மேடை மரத்தினால் செய்யப்பட்டது என்பதால் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளில் யாகம் (அ) ஹோமத் தீ பற்றாத வகையில் பாதுகாப்புடன் அனைத்து குடும்ப நிகழ்ச்சிகளையும் நடத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் வழங்கலாம்..

இந்நிலையில் மாமன்ற உறுப்பினர் 102 அவர்கள் தற்போதைய வாடகை அதிகளவில் இருப்பதாலும் குறைந்த எண்ணிக்கையிலான நிகழ்ச்சிகளே பதிவு செய்யப்படுவதாலும்,

மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட வழிவகை உண்டாகிறது என்றும், எனவே அம்மா அரங்கத்தின் வருவாயை பெருக்க பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்க வாடகை கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்தார்.

இப்பொருள் குறித்து கடந்த 17.06.2022 அன்று மாண்புமிகு மேயர் மற்றும் துணை மேயர் அவர்களின் ஆய்வு கூட்டத்திலும் மாமன்ற உறுப்பினர் அவர்கள் வலியுறுத்தினார்.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில், இப்பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான அம்மா அரங்கம் சென்னையின் பிரதான பகுதியில் உள்ளது, இங்கு நிலத்தின் வழிகாட்டி மதிப்பு மற்றும் இதர இனங்களும் மிகவும் அதிக மதிப்பு வாய்ந்தவையாகும். மேலும் இந்த அரங்கம் முழுமையாக குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது. இருக்கைகள் மற்றும் உள்ளரங்குகள் அனைத்தும் மிகவும் அழகுற வடிவமைக்கப்பட்டுள்ளன. நிகழ்ச்சிக்கு பயன்படுத்தப்படும் மின்சாரம் மற்றும் குளிர்சாதன இயந்திரத்திற்கு பயன்படுத்தப்படும் மின்சாரம் , பராமரிப்பு செலவு மற்றும் இதரசெலவுகள் அனைத்தும் மிகவும் அதிக தொகை பிடிக்கக்கூடிய ஒன்றாகும். இந்நிலையில் தற்போது நிர்ணயிக்கப்படும் தொகையினை விட குறைத்து வாடகைக்கு விடும் சூழ்நிலையில் எதிர்காலத்தில் மாநகராட்சிக்கு மிகுந்த வருவாய் இழப்பை ஏற்படுத்துவதுடன் தணிக்கைத் தடைக்கும் உள்ளாக வேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே, வாடகை குறைப்பு என்பதைத் தவிர்த்து அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வாடகையின் அடிப்படையில் மட்டுமே அனுமதி வழங்குவதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.

*** * * * * ***

S.P.D.C.No B1/00898/2022

முதன்மைச் செயலர்/ஆணையாளர் அவர்களின் 24.06.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.236/2022 **பொருள் எண்.94**

Greater Chennai Corporation- Special Project Department – Pedestrian Plaza Parking Management System – Designation of Theyagaraya Road (Pedestrian Plaza) in Div 136, Zone 10 as Premium Road for Parking- Divert Parking Traffic from On-street to MLP at Thanikachalam Road Junction- To increase parking collection both on-street and at MLP – For Approval.

One of the initiatives under Smart City Mission in Chennai is the On-Street Parking Management System (PMS), which has been implemented on Theyagaraya Road Pedestrian Plaza (Division 136, Zone 10). Similarly, the Multi-Level Parking (MLP) Facility at Thanikachalam Road junction has been in operations since February 2021 on Public Private Partnership (PPP) mode. The work was awarded to M/S Toorq Media Service Private Ltd.

At present, the on-street parking on Theyagaraya road can cater to 98 cars and over 300 two-wheelers at full capacity. The MLP facility can accommodate 222 ECS (Equivalent Car Space) and 513 two-wheelers at full capacity. Both the options levy Rs. 20/hour for four-wheelers and Rs.5/hour for two-wheelers. Hence, there is traffic congestion and excessive demand for parking on-street, while the MLP facility remains under-utilized. During May 2022, the total collection from MLP for the month was only Rs. 1,16,175.

Previously, while obtaining Council Resolution to implement PMS in Chennai, the service provider was authorized to collect Rs. 40/hour as premium charges for 4-wheelers and Rs.10/hour as premium charges for 2-wheeler, vide Special Officer, Council Resolution no. 649/2017, dated 06.10.2017. Further, the lack of incentive to park at MLP and the traffic congestion at Theyagaraya Road were placed for discussion at the Parking Cell meeting held on 07.07.2021. After consideration, it was suggested that Theyagaraya Road (Pedestrian Plaza) be designated as a “premium” parking zone and the traffic be diverted to park in the MLP.

Futher, in a joint review meeting with the Greater Chennai Police (Traffic) regarding the enforcement of parking management it was further decided that the premium parking rates be implemented immediately. It was suggested to keep the premium rate for 4-wheelers at Rs.60/hr and for 2-wheelers at Rs.15/hr. Additionally, one side of the Pedestrian Plaza on Theyagaraya Road would also be notified as ‘No Parking’.

Hence,

1. To approve the implementation of premium parking rates of Rs.60/hour for four-wheelers and Rs.15/hour for two-wheelers for one side of Theyagaraya Road (Pedestrian Plaza) with immediate effect.
2. For the current resolution to supersede Special Officer, Council Resolution no. 649/2017, dated 06.10.2017.

Sl. No.1 & 2 above Council approval is requested, through Standing Committee (Taxation and Finance)

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.

****

G.D.C.No.E2/5932/2019

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *24.06.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.237/2022 **பொருள் எண்.95**

Establishment – Greater Chennai Corporation – General Department – 2022-2023 - Panel preparation for the post of Law Officer – For Approval.

G.O.(Ms) No.269, Rural Development & Local Administration Department, dated: 14.02.1980, the Government have passed orders for the formation of a separate Legal Cell in the Corporation of Madras and sanction is accorded to the creation of Corporation Legal Advisers which are as follows:

Table-1

S. No.	Name of the Posts	No. of Posts
1	Law Officer	One
2	Assistant Law Officer	Two

G.O.(Ms) No.1372, Rural Development & Local Administration Department, dated: 09.09.1980, the Government has approved the proposals pending classification of the Law Officer Post as Class I-B in Corporation of Madras and to fill up the post of Law Officer and Assistant Law Officer.

G.O.(Ms) No.121, Municipal Administration & Water Supply (MC-1) Department, dated: 25.02.1985, it was requested to place the draft rules before the Council of Madras Corporation, obtain and forward its views to Government. Based on the forwarded views of the Corporation Council, the Government has confirmed the draft rules and these rules may be called the Madras Corporation Legal Service Rules,1985 and the Post of Law Officer has been classified as“I-B”.

The staff position of the Senior Law Officer, Law Officer and Assistant Law Officer in the Legal Cell of the Greater Chennai Corporation are as follows:

Table-2

S. No.	Name of the Post	G.O. No. for Post Allotment	Sanction Strength	Existing Position	Vacant Position
1	Senior Law Officer	G.O.(Ms)No.132, MAWS(MC-3) Dept., Dt: 13.12.2018	1	1	0
2	Law Officer	G.O.(Ms)No.269, RDLA Dept., Dt: 14.02.1980	1	-	1
3	Assistant Law Officer	G.O.(Ms)No.269, RDLA Dept., Dt: 14.02.1980 & G.O.No.1, MAWS Dept., dt: 22.05.1998 & G.O.(Ms.)No.63, MAWS Dept., dt: 26.02.1999	12	2	10

G.O.Ms.No.129, Municipal Administration & Water Supply Department, dated:25.02.1985, that the rules of appointment and qualification for the post of Law Officer specified in column (2) & (3) of the Table below as per the Madras Corporation Legal Service Rules, 1985 are as follows:

Table-3

Name of the Post / Scale of Pay	Method of Appointment	Qualification
(1)	(2)	(3)
Law Officer (Level – 25 Rs.59300 – 187700 vide G.O.Ms. No.303, Finance (Pay Cell) Dept., Dt.11.10.2017) (Old Pay Rs.15600 – 39100 + GP Rs.6600) (Class – IB)	a) By Direct Recruitment; or	1. Must be an Advocate enrolled on the rolls of the Bar Council of Tamil Nadu; or any other Bar Council in India; 2. Must have an experience of not less than ten years practice in the Bar; and 3. Must possess adequate knowledge of Tamil.
	b) By Promotion from the Assistant Law Officer	1. Must have served as Assistant Law Officer in the Legal Cell of the Corporation of Madras; and 2. Must have a total experience of not less than ten years as a practicing Advocate and as an Assistant Law Officer in the Legal Cell of the Corporation of Madras.

The crucial date to prepare the panel for the post of Law Officer is every year of 1st April. For considering, by promotion for the post of Law Officer the feeder category is Assistant Law Officer.

Since, there is no vacancy in the post of Law Officer from 2006, no panel has been prepared for the post of Law Officer during the panel year from 2006-2007 to 2018 - 2019. Hence, a 'Nil panel' has to be published for the above period.

Since, Thiru. Jacob Rajan Babu, Law Officer has been promoted as Senior Law Officer on 25.01.2019 for the year 2019-2020, panel have to be prepared for this period in the crucial date on 01.04.2019.

Due to administrative reasons, Assembly election and prevention of Covid-19 related work were carried out, and Government Order No. 516, Department of Personnel Administrative Reform (PER-M) Department, dated 03.06.1982, 'Nil Panel' are to be issued for the year 2019-2020, 2020 - 2021 and 2021-2022 is required to prepare a panel list with vacancies for 2022 - 2023.

The Law Officer Post in Greater Chennai Corporation is classified under Class I-B. As per the G.O.Ms.No.181, Municipal Administration and Water Supply Department, dated 06.10.2009, the delegation of powers to approve the panel for the post of Law Officer is Council.

